
கல்கி

KALKI 9-7-72 45 காசு




படுசுட்டியான குடும்பம்!
எல்லோரும் என்னோட
ஜான்ஸன்ஸ்* எப்பவும்
உபயோகிக்கிறாங்க!
குழந்தைகளுக்கு உகந்தது,
உங்களுக்கும் சிறந்தது.
Johnson's
baby
powder




கல்கி


பொருளடக்கம்


பரிதாபி ஆனி, 26 ● ஜூலை 9, 1972

சிறுகதைச் சிறப்பு மலர்



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


இந்தச் சின்ன நாய் கடிச்சதுக்கே இப்படி கத்துறியே....... நாளைக்கு அந்த ஐயா வச்சிருக்கிற நாய் வந்து கடிச்சா என்ன ஆகிறது ?
டெல்லி
16 கோடி புது வரிகள்
தமிழக அரசு
விவசாயிகள்
மின்சாரக் கட்டண உயர்வு


பல்கலைக் கழகம்
டாக்டர் பட்டம் ஸ்டாக் இல்லை
*டாக்டர், கலைஞர் கருணாநிதி போல் பல கருணாநிதிகள் தோன்ற வேண்டும்" என்று கவர்னர்

கல்கி

மலர் 31
இதழ் 50

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

வன்முறைகள் வேண்டாம்

ஆட்சியாளர்களிடம் பல அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன. சட்டம் இயற்றும் அதிகாரம், வரி போடும் அதிகாரம், வரிப் பணத்தைச் செலவிடும் அதிகாரம், போலீஸ் அதிகாரம் — இப்படிப் பலப்பல. இவை அதிகமாக ஆக, மக்களின் சுதந்திரங்களும் உரிமைகளும் குறைந்து கொண்டே போகும். இது அறிஞர்களும் அனுபவமும் கூறும் உண்மை. இவ்வதிகாரம் அனைத்தையும் மக்களின் பொது நலனுக்காகவே உபயோகப்படுத்த வேண்டும். ஆட்சி புரிபவர்கள் தங்கள் கட்சி பலத்தினால் பதவிக்கு வந்தாலும், பதவிக்கு வந்தபின், அவர்கள் தங்கள் கட்சிக்கு மட்டும் பிரதிநிதிகள் அல்ல, எல்லா மக்களுக்குமே பிரதிநிதிகள். அந்த முறையில் தான் அவர்கள் தங்களைக் கருதி நாட்டின் விவகாரங்களை நடத்த வேண்டும். இது ஜனநாயகப் பண்பு. நீதி மன்றங்களில் நீதி வழங்கும்போது நீதி வழங்கப்பட்டுள்ளது என்பதை மற்றவரும் உணரும் வண்ணம் வழங்க வேண்டும் என்பது போல, அதிகாரங்களை உபயோகப்படுத்துவதிலும் பாரபட்சமின்றி நடந்து கொள்ள வேண்டும். மக்கள் பீதிக்குள்ளாகாமல் அவரவர் அலுவல்களில் ஈடுபடும் வண்ணம் அரசாள வேண்டும்.

இந்த ஜனநாயக முறைச் சூழ்நிலை வேகமாக நமது மாநிலத்தில் மறைந்து கொண்டு வருகிறது. வன்முறைகளும், அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் அணிகளும், பேரணிகளும், படைகளும் கூட்டமாகச் சென்று கோஷமிடுவதும், அதிகாரத்தைத் தாங்களே மேற்கொண்டு மக்களிடையே பீதியை உண்டு பண்ணுவதும், இவற்றைத் தூண்டி விடுவது போலவே பொறுப்பு வகிக்கும் அமைச்சர்கள் உணர்ச்சிப் பெருக்குடன் ஆவேசமாகப் பேசுவதும் நமது மாநிலத்தில் சமீப காலத்தில் அதிகரித்துவிட்டன.

ஆட்சியாளர்களின் கொள்கைகளையோ, கருத்துக்களையோ ஆதரிக்காதவர்களும், அரசின் நடவடிக்கைகளால் மக்களின் நலன் பாதிக்கப்படுகிறது என்று கருதும் தனிப்பட்டவரும் பத்திரிகையாளரும் அவற்றை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவர்கள். மாற்றுக் கருத்துக்களைக் கண்ணியமான முறையில் எடுத்துச் சொல்லும் உரிமை அவர்களுக்கு உண்டு. இதற்காக அவர்கள் மீது காய்வதோ பாய்வதோ, ஜனநாயகமுறைக்கு முரணானது. கம்யூனிஸ்டு நாடுகளிலும் ராணுவ ஆட்சி நடைபெறும் நாடுகளிலும்தான் ஒரே கட்சி, ஒரே ஆட்சி, ஒரே கருத்து போன்ற நிலைகள் உண்டு. அங்கெல்லாம் மாற்றுக் கருத்தை நசுக்கித் தள்ளிவிடுவார்கள். மாற்றுக் கருத்தைச் சகித்துக் கொள்ளும் தன்மையும், பண்பும் என்ன காரணத்தாலோ நம் மாநில ஆட்சியாளர்களிடம் குன்றிவிட்டன என்பதை வருத்தத்துடன் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

பாரத நாட்டின் ஒரு பகுதிதான் தமிழ் நாடு. அரசியல் சட்டப்படி மாநிலங்களுக்குத் தங்கள் விவகாரங்களில் மத்திய அரசு தலையிடாத வண்ணம் பல சுதந்திரங்கள் உள்ளன. அமைதியும் பாதுகாப்பும் இவற்றில் அடங்கியவை. இவை சீரழிந்து விட்டாலோ, சீரழிந்துவிடும் என்ற பயம் பரவலாக இருந்தாலோ, மாநில விவகாரமாயினும், தலையிட்டு, நிலைமையைச் சீராக்க மத்திய அரசுக்குப் பொறுப்பு உண்டு. சாதாரண நிலைமையில் மாநில சுதந்திரங்களையோ, உரிமைகளையோ குறைக்க அரசியல்வாதிகளோ, பத்திரிகையாளர்களோ, தனிப்பட்டவர்களோ விரும்ப மாட்டார்கள். ஆனால் மத்திய அரசாங்கத்தின் கவனம் சிறிது இந்தப் பக்கம் திரும்பினால் கூடப் பாதகமில்லை என்று அனுபவமிக்க அறிஞர்கள் இன்று கருதுகிறார்கள். இது, தமிழ் நாட்டின் அமைதி குன்றிய நிலைமையும், ஆட்சியாளர்களின் சகிப்புத் தன்மை வற்றிவிட்ட நிலைமையும் எந்த அளவுக்கு அறிஞர்களிடையே கவலையை உண்டாக்கியுள்ளன என்பதைக் குறிக்கிறது. உடனடியாக மக்களிடையே பீதியை அகற்றி, நம்பிக்கையை நிலைநாட்ட வேண்டியது அவசியம். அரசினர் இதைச் செய்யக் கடமைப்பட்டவர்கள்.

தமிழ் நாட்டிலே...

தீரன்

வெட்டும் பகட்டும்

அத்தியாவசியத் தொழில்களைத் தவிர மற்றனைத்திலும் மின்சார வெட்டு அறிவிக்கப்பட்டுள்ள இந்தச் சமயத்தில் தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்ட சில விழாக்களுக்குச் செய்யப்பட்டிருந்த மின்விளக்கு ஒளி அலங்காரங்கள் பற்றி 'ஷாக்' அடிக்கும் செய்திகள் கிடைக்கின்றன. ஒரு வேளை தமிழக முதல்வரின் 'ஒளி (கண்) வழங்குவிழா' என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டார்களோ? இப்படி நாம் இதைப் பற்றிச் சந்தேகப்படும்போதே 'மின்வெட்டுத்தாக்கு' என்ற தொடருக்கு வேறோர் இடத்தில் வேறொரு சமயத்தில் முதல்வர் கூறியுள்ள விளக்கமும் நம் கவனத்துக்கு வருகிறது.

'மின்வெட்டும் வேகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் வன்முறைச் சம்பவங்களுக்குத் தமிழக அரசைப் பொறுப்பாளியாக்கிக் குறை கூறுவது நல்லதல்ல.'

—என்று முதல்வர் கூறுவதானது மற்றொரு வகையான 'மின்வெட்டும்' இங்கு அமுலில் இருக்கிறதோ என்ற எண்ணத்தை நம்முள் உண்டாக்குகிறது. சமீபத்தில் மின்வெட்டு அமுலானபின் சென்னை அருகே நடைபெற்ற ஒரு விழாவுக்குப் பல நூறு டியூப் விளக்குகள், வண்ண பல்புகளுடன் அலங்காரம் செய்திருந்தார்களாம். அந்த விழாவில் அமைச்சர்களும் கலந்து கொண்டார்களாம். அந்த விழாவின் மின்விளக்கு அலங்காரம் பற்றி உள்ளூர் எதிர்க்கட்சி ஊழியர் ஒருவர், "இதுதான் மின்சாரவெட்டா?" என்று கிண்டலான கேள்வியுடன் ஒரு துண்டுப் பிரசுரம் அச்சிட்டு விநியோகித்தாராம். சென்னை நகரில் அங்கங்கே பிரமாதமான மின்விளக்கு அலங்காரங்களுடன் நடைபெறும் 'கிளார்ட்டான்ஸ்' கலை விழாக்களையும், அதே அளவு மின்விளக்கு அலங்கார ஆடம்பரங்களுடன் நடைபெறும் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட வேறு விழாக்களையும் பார்க்கும்போது துண்டுப் பிரசுரம் அச்சிட்டு வழங்கியவரின் வினவில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகிறது.


கோயில்களும் மந்திரிகளும்

தமிழ் நாட்டில் கடந்த சில ஆண்டுகளாகச் சமய நம்பிக்கை உள்ளவர்கள் புண்படுத்தப் பட்டிருக்கிற அளவு வேறு எவரும் புண்படுத்தப் பட்டதில்லை. ஆலய நிதிகளிலிருந்து எது எதற்கோ பெருந் தொகைகள் வழங்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. ஆலயத்துக்கு வராமலே அந்தப் பாதையைக் கடந்து போகும் அமைச்சர்களுக்கு ஆலயங்களின் வாயில்களில் கோயில் செலவில் பிரம்மாண்டமான வரவேற்பு வளைவுகள் போடப்பட்டு அந்த வளைவுகளில் '**தமிழகத்தின் இதய தெய்வமே வருக!**' என்பது போல் அமைச்சர்களையே தெய்வங்களாக வரவேற்கும் அநாகரிக வாசகங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. முன்பு ஓர் அமைச்சர் கோயில் உபரி நிதிகளிலிருந்து 'இதைச் செய்வேன், அதைச் செய்வேன்' என்று பேசினார். இப்போது ஓர் அமைச்சர் திருக்குளங்களை எல்லாம் நீச்சல் குளங்களாக மாற்றி அமைக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். உளறலுக்கு உச்சவரம்பே கிடையாதா என்ன? வசதி உள்ள கோயில்களின் உபரி நிதியை மதில் இடிந்தும், கோபுரம் பழுதுபட்டும் சிதைந்த நிலையில் உள்ள ஏழைக் கோயில்களுக்குப் பயன்படுத்தி அவற்றைச் செப்பனிடுவதே முறை.

ஏழைக் கோயில்கள் பல இடிந்து விழும் நிலையிலிருக்கும்போது வருமானமுள்ள நாலைந்து கோயில்களின் உபரி நிதியும் அரசியல்வாதிகளால் முறைகேடான விதத்தில் செலவிடப்படுவதைத் தடுத்தே ஆக வேண்டும். அவ்வப்போது கோயில்களைப் பழித்தும் தெய்வ நிந்தனை செய்தும் பேசத் தயங்காத நம் மந்திரிகள் கோயில் தொடர்புடைய பணம், பதவிகளிலும் அதே புறக்கணிப்பு மனப்பான்மையைக் கடைப்பிடித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?


திருக்குறளும் பெரியாரும்

தமிழ் நாடு அரசு குறள் வழி நடப்பதாகக் கூறிக் கொள்கிறது. பஸ்களில் எல்லாம் குறள் எழுதியிருக்கிறது. பல்கலைக் கழகங்களில் எல்லாம் குறள் ஆராய்ச்சிக்கு இலட்சக் கணக்கில் பணம் ஒதுக்கியிருக்கிறது. குறள் முக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் பொருந்துகிற நூல் என்று தமிழ் அறிஞர்கள் உத்தரவாதம் அளித்துள்ளனர். குறளைப் பற்றி ஆயிரக்கணக்கில் விமரிசன நூல்கள், விரிவுரை, விளக்கவுரை நூல்கள் வந்துள்ளன;





திரு கே.எம். மாமன் மாப்பிள்ளை
ஹிந்துஸ்தான் வர்த்தக
சங்கத் தலைவர்



திரு சித்ரா நாராயணசாமி
தென்னிந்திய தொழில்
வர்த்தக சங்கத் தலைவர்



திரு பி. மருதைப் பிள்ளை
தென்னிந்திய சர்க்கரை
ஆலைகளின் சங்கத் தலைவர்

வாழ்த்துகிறோம்

அண்மையில் புதிய பதவிகளில் நியமனம் பெற்றுள்ள இந்த ஐவரையும் பாராட்டுகிறோம். அவர்களது தலைமைப் பதவி காலம் நாட்டுக்குப் பயனுள்ளதாக அமைய வாழ்த்துகிறோம்.



திரு பி. வி. கே. அச்சன்
திருச்சி கனரக மின்
தொழிற்சாலை ஜெனரல் மானேஜர்



திரு அனில் கே. ஸேத்
கிராமபோன் கம்பெனி
மானேஜிங் டைரக்டர்

வந்து கொண்டிருக்கின்றன. சில ஆண்டுகளுக்குமுன் சங்கராச்சாரியார் குறளைப் பற்றிச் சொன்னதைத் தவறாகப் புரிந்து கொண்டு ஆத்திரத்தோடு வெகுண்டெழுந்தார்கள் தமிழ் வல்லுநர்கள். அந்தக் கோபக்காரத் தமிழ் அறிஞர்களுக்கு ஒரு புதிய செய்தி இதோ:

"திருக்குறள் பல நூற்றாண்டுகளுக்குமுன் எழுதப்பட்டது. வேகமாக முன்னேறி வரும் இன்றைய நிலைமுறைக்கு அது பொருந்தாது"– ஜூன் 16ல் உதகையில் ஈ.வெ.ரா. கூறியது.

'தமிழ் காட்டுமிராண்டி மொழி' என்று ஈ. வெ. ரா. கூறியபோது தமிழறிஞர்கள் எப்படி வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டார்களோ, அப்படியே இப்போதும் இருந்து விடுவார்கள் போலிருக்கிறது. தமிழ் மொழி, திருக்குறள், கடவுள்கள், எல்லாரையும் எல்லாவற்றையும் தாராளமாகத் தூற்றுவதற்குச் சிலருக்கு மட்டும் இங்கே ஸ்பெஷல் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது போலும்!

வெள்ளி சைக்கிள் விழா


சைக்கிள் வரியையோ, எதையோ ரத்து செய்ததைப் பாராட்டுவதற்கு அடையாளமாக உடல் வலிமை மிக்க தி.மு.க. மேயர் ஒருவருக்கு 'வெள்ளி சைக்கிள்' ஒன்றைச் செய்து அன்பளிப்பாக வழங்கினார்களாம். பொது வாழ்வில் பதவியில் உள்ளவர்கள் ஒரு நிறுவனரீதியாக அமுல் செய்யும் நன்மைகளுக்குப் பிரதியாக அன்பளிப்புக்களைப் பெறுவது என்று ஆகிவிட்டால் அப்புறம் லஞ்சங்களை எல்லாம்கூட அன்பளிப்பு என்ற பெயரிலேயே கொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

எங்காவது வீட்டு வரியை ரத்துசெய்தால் வீடு அன்பளிப்பு, கார் வரியைக் குறைத்தால் கார் அன்பளிப்பு, நிலவரியை ரத்துசெய்தால் நிலம் அன்பளிப்பு என்று ஒவ்வொரு வரியை ரத்துச் செய்வதற்கும் ஓர் அன்பளிப்பு வழங்குவதென்று தயாராகிவிட்டால் அப்புறம் அதற்கு முடிவே இல்லை. ஒரு கவுன்ஸில் நிறைவேற்றிய தீர்மானத்தை அமுல் நடத்தினால் அதற்காக அந்தக் கவுன்ஸிலின் தலைவருக்குத் தனிப்பட்ட முறையில் பொதுமக்களில் சிலர் கூடி அன்பளிப்புத் தர முன்வருவதும், தனிப்பட்ட முறையில் அவர் அதைப் பெற்றுக் கொள்வதும் நல்ல முன் மாதிரியாக அமையாது.

பத்திரிகை கொளுத்தும் 'பண்பாளர்'களுக்கு!

பெட்டிக் கடைகளிலிருந்து சிலர் காசு கொடாமல் பத்திரிகைகளைப் பறித்துக் கொண்டு போய்க் கொளுத்தியதாக அறிகிறோம். பாவம், ஏழைப் பெட்டிக் கடைக்காரர்கள் என்ன செய்வார்கள்? அவசியம் கொளுத்தத்தான் வேண்டுமென்றால் தயவு செய்து காசு கொடுத்துப் பத்திரிகைகளை வாங்கி அக் காரியத்தைச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

கல்கி நிர்வாகி


வதந்தி
அந்தம்மா குழாயைத் திறக்கச் சம்மதிச்சா உன் வீட்டிலே பிடிச்சிருக்கும் நெருப்பை அணைக்க முயலலாம்!
ஆகா! நீர் இப்படிப் பேசலாமா? நேற்று வரை தரமான ஆசாமியாய் இருந்தீரே!
முதல்வர் பற்றி துப்பறியும் இலாக்கா!
ரகசியக் குறிப்புகள்.
நானும் என் பங்குக்கு பஸ்ஸைக் கொஞ்சம் உடைச்சு வைக்கிறேன்!
டிரைவரய்யா! ஸ்டிரைக் பண்ணிட்டு சும்மா உட்கார்ந்திருந்தா எப்படி?
பெட்ரோல் டாங்கியில் போடு!
வண்டியை ஓட்டறேன்னு டிரைவர் சொல்லிட்டா! முன் எச்சரிக்கையா டயரில் ஆணியைச் செருகி வைக்கிறேன்!
பஸ்ஸின் சாவி என்கிட்டே தானே!
என் பயணம் போச்சு!
பொது மக்கள்
தொழிற் சங்கங்களில் தி.மு.க கட்சி

அன்பார்ந்த நேயர்களுக்கு

கல்கி பத்திரிகையின் தரமான தமிழ்ப் பணி தனது முப்பத்திரண்டாவது ஆண்டின் தொடக்கத்தில் இருக்கிறது. இன்னும் இரண்டே வாரங்களில் உங்கள் அபிமானப் பத்திரிகைக்கு முப்பத்தோராண்டுகள் நிறைவெய்துகிறது.

ஆண்டு முடியக் காத்திராமல் இரண்டு வாரங்கள் முன்னதாகவே உங்களுடன் பேச நான் அவசரப்படுவதற்கு முக்கிய காரணங்கள் உண்டு.

எனது அருமை நண்பரும் இப்பத்திரிகையின் ஆரம்பம் முதல் பதிமூனு ஆண்டுகள் இதன் ஆசிரியராகப் பணியாற்றியவருமான திரு கிருஷ்ணமூர்த்தியின் வாழ்க்கை வரலாற்றினை எழுதுமாறு திரு 'சுந்தா' அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த நற்செய்தியைக் கல்கி நேயர்களுடன் பகிர்ந்து கொள்ள நான் அவசரப்பட்டதில் வியப்பில்லை அல்லவா?

'கல்கி' திரு ரா. கிருஷ்ணமூர்த்தியின் சாதனைகளைச் சம வயதினர் மிக நன்றாக அறிவார்கள். நாட்டுப் பணி, இலக்கியப் பணி, சமூகப் பணி, கலைப் பணி என்று பலவாறாக அவரது சேவைகளைப் பகுத்துப் பார்த்து ஒவ்வொன்றையும் குறித்து ஒரு நூல் எழுதலாம். அந்த அளவுக்குப் பயனுள்ள, மேன்மையான சுவாரஸ்யமான, தூய்மையான வாழ்க்கை அவருடையது. ஆகவே திரு எம். ஆர். எம். சுந்தரத்துக்கு ('சுந்தா') நான் விடுத்துள்ள கோரிக்கை சுலப சாத்தியமாக நிறைவேற்றக் கூடியதல்ல என்பது விளங்கும். ஆயினும் இந்தப் பெரிய பொறுப்பை ஏற்று அனைவரும் மெச்சும் விதமாக அவர் செய்து முடிப்பார் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது.

'கல்கி'யுடனும் 'கல்கி' போற்றிய ரசிகமணி டி. கே. சி.யுடனும் நெருங்கிப் பழகியவர் 'சுந்தா'. 'கல்கி' அளித்த ஊக்கத்தினால் எழுத்துக் கலையைப் பயின்று தனியானதொரு பாணியில் கட்டுரைகள் வடித்துச் சிறப்புற்றவர். 'கல்கி'யின் வாழ்க்கை வரலாற்றினை எழுதும் வாய்ப்புத் தமக்குக் கிட்டியதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறார் சுந்தா. அண்மையில் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ள அவர் அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு இதையே தமது முழு நேர வேலையாக ஏற்று மகிழ்ச்சியுடன் உழைக்கவிருக்கிறார். இந்தப் பணிக்கு வேண்டிய உதவிகளையும் வசதிகளையும் கல்கி நிறுவனம் செய்து தருகிறது. அத்துடன் 'கல்கி' அவர்களின் எண்ணிலா நண்பர்களின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது.

கல்லூரிகள் இம்மாத ஆரம்பத்தில் திறந்து விட்டன. மாணவர்கள் புதிய உற்சாகத்துடன் புதிய வகுப்பறைகளுக்குச் செல்கிறார்கள். அவர்களுடைய மகிழ்ச்சிக்குப் பரீட்சையில் தேறி மேல் வகுப்புக்குப் போவது ஒரு காரணம்; மற்றொரு காரணம் கல்கியில் திரு நா. பார்த்தசாரதி எழுதும் **'சத்திய வெள்ளம்'** ஆரம்பமாவதாகும்.

மாணவருலகப் பிரச்னைகளையே மையமாகக் கொண்டு எழுதப்படும் 'சத்திய வெள்ளம்' ஆரம்பமாகும் நாள் கல்லூரிகள் திறந்து வகுப்புக்கள் ஆரம்பமாகும் நாளுடன் ஒத்துப் போகவேண்டும் என்று நான் விரும்பினேன். எனவேதான் கல்கி ''ஆண்டு மலர்'' இரு வாரங்களுக்கு முன்னதாகவே உங்கள் கரங்களை அலங்கரிக்கிறது.

இன்றைய மாணவருலகில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவிகிதத்தினர் லட்சிய வேட்கை கொண்டவர்கள்தாம். ஆனால் அவர்களின் லட்சியப் பிடிப்பு நழுவி விடும்படியாக விளக்கெண்ணெய் தடவுகிற சில விஷமிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இருப்பினும் சத்திய வெள்ளம் பொய்ம்மையையும் சிறுமையையும் இருந்த இடம் தெரியாமல் அடித்துச் செல்லும் என்பதை விறுவிறுப்பான சுவாரஸ்யமான, நல்லதொரு நாவல் வாயிலாக வெளிப்படுத்துகிறார் திரு நா. பார்த்தசாரதி. அண்மையில் சாகித்ய அகாதமி பரிசு பெற்றுப் பெருமையுற்ற திரு நா. பார்த்தசாரதி கல்கி நேயர்களுக்கு நன்கு அறிமுகமானவர். பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அவர் கல்கியில் எழுதினாலும் அவரது முந்தைய எழுத்தை இன்னும் பசுமையாக நினைவில் வைத்துப் போற்றும் வாசக அன்பர்கள் சத்திய வெள்ளத்தையும் மனமகிழ்ந்து வரவேற்பார்கள்.

இந்த இதழில் மூன்று சிறப்புச் சிறுகதைகள் இடம் பெறுகின்றன. எழுதி எழுதிப் புண்பட்ட கரம் ஒன்று: 'ஆர்வி'. புதுமைப் படைப்புக்களை உருவாக்கத் துடிக்கும் இளம் கரம் மற்றொன்று: 'சுஜாதா'. இடையில் இனிய மென்குரல் ஒன்றும் கேட்கிறது: 'குயிலி'. வருகிற வாரங்களில் கல்கியில் சிறுகதைகளுக்கு முன்னெப்போதையும்விட அதிக முக்கியத்துவம் தர உத்தேசித்துள்ளேன்.

இம்மலரில் இடம் பெறும் நெடுங்கதை, ர. சு. நல்லபெருமாள் எழுதியது. இவரது 'போராட்டங்கள்', 'கல்லுக்குள் ஈரம்' ஆகிய நாவல்களைப் படித்தவர்கள் அவர் எழுத்து இடம் பெற்றுள்ள பக்கத்துக்குத் தாவப் பரபரப்பார்கள்.

எல்லாவற்றையுமே படித்து ஆனந்தியுங்கள். விடைபெறுகிறேன். வணக்கம்.

சதாசிவம்

ஏழையின் சிரிப்பு

‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்றார் அண்ணா.

இன்று ஏழைகள் சிரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்! தமிழகம் முழுவதிலும் உள்ள ஏழைகள் சிரிக்கா விட்டாலும் சென்னையில் சேரிவாசிகள் மனமகிழ்ந்து சிரிக்க ஆரம்பித்திருப்பது நிச்சயம்.

காரணம், அவர்களுக்குப் புதிய, நல்ல குடியிருப்புக்கள் தோன்றியிருப்பதே. சுகாதார வசதிகளுடன் கூடிய, காற்றோட்டமுள்ள அழகிய இல்லங்கள் இவை. இதுகாறும் குடிசைகளில் வாழ்ந்து வந்த மக்கள் சிறிது சிறிதாக மாடிக் கட்டடங்களுக்கு இடம் மாறுகிறார்கள். மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?

ஏழைகளுக்காக இந்த அருமையான நற்பணியைச் செய்துள்ள தி. மு. க. அரசைப் பாராட்டுகிறோம். குடிசை மாற்று வாரியத்தின் தலைவரான திரு அரங்கண்ணலை விசேஷமாக வாழ்த்துகிறோம். இந்த நற்பணியை மாநிலத்தின் பிற முக்கிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கத் திட்டம் இருக்கிறது. வரவேற்க வேண்டிய விஷயம்.

இப்பணிக்கு மத்திய சர்க்காரின் நிதி உதவி கிடைத்ததா, கிடைக்கப் போகிறதா அல்லது முழுக்க முழுக்க ராஜ்ய சர்க்காரின் சாதனையா என்பது பற்றி ஒரு சர்ச்சை எழுந்துள்ளது. எந்த அரசானாலும் செலவாவது என்னவோ மக்களின் வரிப் பணம்தான்! அது நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது இந்தத் திட்டத்தில் என்பதே முக்கியம். தமிழக அரசின் இச் சாதனையை வாழ்த்துவோம்; மத்திய அரசின் உதவி கிடைத்தால் வரவேற்போம்!

குடிசை மாற்று வாரியத்தின் நற்பணி காரணமாக இன்னும் சில ஆண்டுகளில் சென்னையில் சேரிகளே இராது என்று கூறப்படுகிறது. சேரிகளே இல்லாதிருக்க வேண்டுமானால் புதிது புதிதாகக் குடிசைகள் தோன்றுவதையும் சேரிகள் உருவாவதையும் தடுக்க வேண்டும். வேலை வாய்ப்பைக் கருதியே ஏழைமக்கள் தலைநகர் நோக்கி வருகிறார்கள்; சேரிகளைத் தோற்றுவிக்கிறார்கள். இதைத் தவிர்க்க அவ்வேழைகளுக்குத் தமிழகத்தின் பிற சிறிய நகரங்களிலும் வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்ய வேண்டும். எல்லாத் தொழிலகங்களும் சென்னை போன்ற பெரிய நகரங்களின் சுற்று வட்டாரத்திலேயே அமையாமல் சிறிய நகரங்களில் தோன்ற ஊக்கமும் உற்சாகமும் தருவது அவசியம். கிராம மக்கள் இச்சிறு தொழிலகங்களில் பணியாற்றிவிட்டுத் தங்கள் தங்கள் கிராமத்துக்கே திரும்பிவிட வசதியாக இருக்கும். ராஜாஜி நீண்ட நாட்களாக வலியுறுத்திவரும் கருத்து இது.


மற்றொன்று: சென்னையில் குடிசைகள் அறவே இல்லாமல் போய்விட்டாலும், சந்துபொந்துகளில், புறாக் கூண்டுகளில் வசிப்பது போல் ஒண்டுக் குடித்தனம் நடத்தப்படும் இடங்கள் இருக்கவே செய்யும். இவற்றைச் சேரிகள் என்று நாம் கருதக்கூடிய காலம் வெகுதூரத்தில் இல்லை. அந்த நாளையும் நினைவில் கொண்டு இப்போது முதற்கொண்டே சிந்திக்கவும் திட்டங்கள் வகுக்கவும் வேண்டும்.

மாதம் பதினைந்து ரூபாய் வாடகையில் ஏழை மக்களுக்கு நல்ல குடியிருப்பு வழங்குகிறது குடிசை மாற்றுவாரியம். ஆனால் நாற்பத்து மூன்று ரூபாய்க்குக் குறைந்து வாடகைக்கு விட்டால் நஷ்டமே என்றும் தெரிய வருகிறது. இந்த இருபத்தெட்டு ரூபாய் நஷ்டத்தை (ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூ. 336 நஷ்டம்) வரி கொடுக்கும் மக்கள்தான் ஏழைகளுக்கு உதவும் பொருட்டுத் தாங்குகிறார்கள். இத்தகைய தியாகத்தின் அடிப்படையில் எழுப்பப்படும் கட்டடங்கள் சிறிதுகூடக் குறை கூற முடியாதபடி உறுதியாக அமைவதில் கவனம் வேண்டும். வீட்டு வசதி வாரியத்தின் கட்டடங்கள் பற்றி அவ்வப்போது புகார்கள் எழுவது போல் இதிலும் முணுமுணுப்புக்குக் காரணம் இருந்துவிடக் கூடாது. திரு அரங்கண்ணல் இவ்விஷயத்தில் விழிப்புடன் இருப்பார் என்று நம்புகிறோம்.



[இராம. அரங்கண்ணல்]

வீடு கிடைத்ததால் மலர்ந்துள்ள ஏழையின் சிரிப்பு மறையாமல் இருக்க தி. மு. க. அரசின் மது பற்றிய கொள்கை மாறுவது மிகவும் அவசியம்.



அனைத்தும் நாமே

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்


ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள் எல்லாவற்றையும் ஒன்ருகப் பார்க்க வேண்டும் என்று சொல்லிவிட்டார். ஆனால் உலகத்தில் வேறு வேருகத் தெரிகிற எல்லாப் பிராணிகளையும் நாமாக எப்படிப் பார்ப்பது என்று குழப்பமாக இருக்கிறது.

ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்று மூன்று அவஸ்தை (நிலை)களுண்டு. சாதாரணமாக விழித்துக் கொண்டிருப்பது ஜாக்ரம்; கனுக் காண்பது ஸ்வப்னம்; ஒன்றும் தெரியாமல் தூங்குவது ஸுஷுப்தி. இந்த மூன்று அவஸ்தைகளிலும் ஒருவனே இருக்கிருன். கனுக் கண்டவனும் விழித்துக் கொண்டவனும் ஒருவனே. ஆனால், கனுக் கண்டபொழுது நடக்கிறவைகளுக்கும், விழித்துக் கொண்டபின் நடக்கின்றவைகளுக்கும் முன்னுக்குப்பின் சம்பந்தமே இல்லை. கனவில் வேறேவிதமான நடவடிக்கைகள் இருக்கின்றன. விழித்துக் கொண்டபோது வேறேவிதமான நடவடிக்கைகள் இருக்கின்றன. அவஸ்தை வேறுபட்டபோதிலும், மனேபாவம் வேறுபட்டாலும் இரண்டிலும் ஒருவனே இருப்பதுபோல், வேறு வேறு மனேபாவம் கொண்ட பல பிராணிகளிடத்தில் இருப்பவன் ஒருவனே; அவன் நாமே என்று தெளிய வேண்டும்.

ஓர் அவஸ்தையில் நமக்கு சாந்த குணம் இருக்கிறது. மற்ருேர் அவஸ்தையில் கோபம் இருக்கிறது. ஆனாலும் இரண்டு அவஸ்தையிலும் இருப்பவன் ஒருவனே என்பது அநுபவத்தில் தெரிகிறது. அவஸ்தாபேதங்களில் நம் முகம், கைகால் எல்லாவற்றின் போக்கும் மாறி, தேகங்கூட வேருக இருக்கிறது. இது விவகார உலகத்தில். ஸ்வப்பன உலகத்திலோ கேட்கவே வேண்டாம். நம் ஒரு மனஸிலிருந்தே பல பேருடைய ரூபங்கள் கனவில் உண்டாகின்றன. நாம் செய்யக்கூடாதென்று நினைத்திருக்கிற காரியங்களையெல்லாம் கனவில் செய்வதாகக் காண்கிறேம். அவஸ்தாபேதங்களில் ஒன்றுக்கொன்று விரோதமான காரியங்களைச் செய்தாலும், வேறு வேறு விதமான தேகமும் மனஸும் இருந்தாலும் எல்லா அவஸ்தைகளிலும் இருப்பவன் ஒருவனே என்பது தெரிகிறது. நமக்கு ஜன்னி பிறந்தால் அதற்குமுன் நாம் செய்த காரியங்களுக்கு விரோதமாகச் செய்கிறேம். நாம் ஒரு புஸ்தகம் எழுதியிருந்தால் அதைக் கிழித்துவிடுகிறேம். எழுதியவனும் கிழித்தவனும் ஒரே பேர்வழி. இந்த உலகமும் ஒரு கனவு என்று கொண்டால், உலக வாழ்வும் ஒரு ஜுரத்தில் வந்த ஜன்னி என்று தெரிந்து கொண்டால், உண்மையில் எல்லாம் ஒன்று என்று உணர்வோம். மற்றொருவன் நாம் எழுதிய புஸ்தகத்தைக் கிழித்தால் அவனும் நாம்தான் என்று உணர்வோம். விவகார உலகத்தில் எழுதியவனும் கிழிப்பவனும் வெவ்வேறு தேகத்தில் இருப்பதனுல் உள்ளேயிருப்பவன் வேருகிவிட மாட்டான். எல்லாவற்றுக்குள்ளேயும் இருப்பது ஒன்றுதான். ஒருவன் நம்மை அடித்தால் வேறொருவன் நம்மை அடிப்பதாக நினைப்பது தப்பு. நாமே நம்மை அடித்துக் கொள்ளுகிறேம் என்பதுதான்



சத்தியம். ஜகத் முழுவதும் இந்த மாதிரி பார்க்கும் மனேபாவத்தைப் பழக்கிக் கொள்ள வேண்டும். எல்லாம் ஒன்றானால் தானும் பிறரும் வேறு வேருக இருக்க முடியாது. இந்த நிலையில் ஜகத்தும் கூட அறியப்படுகின்ற வஸ்துவன்று. அறிபவனுகிய தானே அது என்ற அநுபவம் வந்துவிடும். இப்பொழுது கை நாமாகத் தோன்றுகிறது. கால் நாமாகத் தோன்றுகிறது. உடம்பு நாமாகத் தோன்றுகிறது. இதுபோல் உலகனைத்தும் நாமாகிவிட வேண்டும். அப்படிப்பட்ட ஞானம் ஒருவனுக்கு அநுபவத்தில் வந்தால் அவன் சண்டாளனுயிருந்தாலும் அவன்தான் பண்டிதன். ஆசார்யாள் இதை மனீஷா பஞ்சகத்தில் எடுத்துச் சொல்கிறர்.



சத்திய வெள்ளம்

கதைமுகம்..

இன்னும் சில நாட்களில் நம்முடைய இந்திய சுதந்திரத்திற்கு இருபத்தைந்து வயது நிறையப் போகிறது. அந்நியர்களிடமிருந்து விடுதலை பெற்றுக் கால்நூற்றாண்டு முடியப் போகிறது என்றாலும் நமக்காக நம்மிடையில் நம்மவர்களிடம் இருந்தே நாம் பெற வேண்டிய விடுதலைகள் இன்னும் பல உள்ளன. மகாத்மா காந்தியும், ஜவாஹர்லால் நேருவும், சுபாஷ் சந்திர போஸும் தொடங்கிய போராட்டங்கள் முடிந்து விட்டதுபோல் தோன்றுகின்றன. ஆனால் இன்னும் அவை முடியவில்லை. அதிகார ஆணவம், பதவி வெறி, சுயநல நஞ்சு, வறுமைப் பிடி ஆகியவற்றிலிருந்து கோடிக்கணக்கான மக்கள் இங்கே இன்னும் விடுதலை பெறத் துடித்துக் கொண்டிருப்பது உண்மை.

பணமே அதிகாரமாகவும் செல்வமாகவும் இருந்த காலம் மாறி அதிகாரமே பணமாகவும் செல்வமாகவும் இருக்கிற காலம் இப்போது கண்ணெதிரே மிகவும் பச்சையாகத் தெரிகிறது. இவற்றை எதிர்த்து நேற்றும் இன்றும் போராட்டங்கள் நிகழ்ந்தன, நிகழ்கின்றன. நாளையும் நிகழலாம். அதிர்ஷ்டவசமாக இன்றைய போராட்டங்கள் இளைஞர்களின் கரங்களில் வந்து விட்டன. தொழிலாளிகளின் கரங்களிலும் விவசாயிகளின் கரங்களிலும் அறிவாளிகளின் நினைவிலும் அவை வந்திருப்பதே ஒரு பெரிய மாறுதலாகும். 'மூத்த பொய்கள் யாவும் தகர்ப்பராம்'– என்று மகாகவி பாரதி வேறோர் இடத்தில் கூறியபடி மூத்த பொய்களை எல்லாம் தகர்க்கும் தார்மீகக் கோப

நா. பார்த்தசாரதி



மும் ஆவேசமும் செயல் திறனுமுள்ள இளைஞர்களை இன்று நம் மாணவ சமூகத்தில்தான் பார்க்கிறோம்.

இன்றைய இளைஞர்கள் எதையும் சுற்றி வளைத்து நினைப்பதில்லை. நேராக நினைக்கிறார்கள். நேராகப் புரிந்து கொள்கிறார்கள். நேராகப் பேசுகிறார்கள். 1940க்கும் 52க்கும் இடையே இங்கு இருந்த இளைஞர்களின் மனநிலை வேறு. 52க்கும் 67க்கும் இடையே இருந்த இளைஞர்களின் மனநிலை வேறு. 67க்குப் பின்னர் வரும் இன்றைய இளைஞர்களின் மனநிலை வேறு. இன்றைய இந்திய இளைஞன் தன் நாட்டை விஞ்ஞான சமூக, பொருளாதார வளர்ச்சி பெற்ற உலக நாடுகளோடு ஒப்பிட்டுச் சிந்திக்கும் வாய்ப்புக்களை அதிகமாகப் பெற்றிருக்கிறான். அவன் அளவு கூட அறிவும் சிந்தனையும் விசாலமடையாத எந்த அரசியல்வாதியும் இனி அவனை ஏமாற்றி விட முடியாது. தங்கள் வசதிக்காக அவனைக் கிணற்றுத் தவளையாகவே இருக்கச் செய்ய இப்போது யார் முயன்றாலும் பலிக்காது. தலைமுறை இடைவெளி (ஜெனரேஷன் கேப்) கிணற்றுத் தவளை மனப்பான்மையை எதிர்க்கும் குணம் வேலையில்லாத் திண்டாட்டம். இவை இன்றைய இந்திய இளைஞனின் பிரச்னைகள்.

இந்த மாணவருலகப் பிரச்னைகளோடு வெகு நாட்களுக்கு முன் நீங்கள் 'பொன் விலங்கு' நாவலில் கண்ட அதே மல்லிகைப் பந்தலைச் சில மாறுதல்களோடும், பல வளர்ச்சிகளோடும் இந்த நாவலில் காண்கிறீர்கள்.

இன்றைய மாணவர்கள் கற்கிறார்கள். பலவற்றை அவர்களே கற்பிக்கவும் செய்கிறார்கள். ஆசிரியர்களும், அரசாங்கங்களும், சமூகமும், பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் இன்றைய இளைஞர்களுக்குத் தெரிவிப்பவை தவிர இன்றைய இளைஞர்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியவையே அதிகமாக இருக்கும் என்ற நினைவோடு இந்த நாவலைப் படிக்க வேண்டுகிறேன். -நா. பா.

முதல் அத்தியாயம்

பாண்டியன் விடுதி அறைக்குத் திரும்பும்போது காலை மணி எட்டே முக்கால். சுதந்திர தின பரேடும் கொடியேற்றமும் எட்டரை மணிக்கே முடிந்து விட்டன. என். சி. சி. உடைகளைக் கழற்றி மாட்டிவிட்டு உடுத்திக் கொண்டு வெளியே கிளம்புவதற்கு ஏதாவது கிடைக்குமா என்ற சந்தேகத்தோடு வேஷ்டி சட்டைகளைத் தேடியபோது கைப் பக்கத்தில் சற்றே கிழிந்திருந்த ஒரு கதர் அரைக் கைச்சட்டையும், வேஷ்டியும்தான் பெட்டியில் மீதமிருந்தன. பல்கலைக் கழகத்தின் கிழக்குப் பக்கத்து வாயிலின் அருகே காம்பவுண்டுச் சுவரை ஒட்டிச் சலவைக் கடை வைத்திருக்கும் 'ஹில்டாப் டிரை கிளீனர்ஸில்' கதர்த் துணிகளைக் கிழிப்பதில் மகிழ்ச்சியடைகிற சிலர் நிரந்தரமாக இருப்பதைப் பாண்டியன் அங்கே வந்த நாளிலிருந்து கவனித்திருக்கிறான். இதற்காகச் சென்ற ஆண்டில் அவனும் வேறு சில மாணவ நண்பர்களும் 'ஹில்டாப் டிரை கிளீனர்ஸ்' உரிமையாளர் தங்கப்பனிடம் சண்டைகூடப் போட்டிருந்தார்கள். அந்தச் சண்டை இப்போது நினைவு வந்தது.

காலை ஒன்பதரை மணிக்குச் சைக்கிள் கடை அண்ணாச்சி அவனையும் வேறுசில மாணவர்களையும் வரச் சொல்லியிருந்தார். மல்லிகைப் பந்தல் கல்லூரி பல்கலைக் கழகமாக மாறிய காலத்திலிருந்து அண்ணாச்சி கடை என்பது ஓர் அடையாளமாக — ஓர் இயக்கமாக, ஒரு சார்புள்ள தேசிய மாணவர்களிடையே பெயர் பெற்றிருந்தது. மாணவர்களுடைய நிறைகுறைகள், இயக்கங்கள், போராட்டங்கள், எதுவாயிருந்தாலும் அண்ணாச்சிக்கும் அதில் பங்கு இருக்கும். அண்ணாச்சி ஒரு விநோதமான மனிதர். அவருடைய கடையில் முருகன் படத்துக்கு அருகிலேயே நேரு படமும், விநாயகர் படத்துக்கு அருகிலேயே காந்தி, சுபாஷ்போஸ் படங்களும் இருக்கும். வெள்ளிக்கிழமை வாராந்தர பூஜையின் போது கடவுள்களுக்குச் சூட தீபாராதனை செய்கையில் இந்தத் தலைவர்களின் படங்களுக்கும் சேர்த்தே தீபாராதனை செய்வார் அவர். வெட்டரிவாள் மீசையும், பயில்வான் உடம்புமாக அவரைப் பார்க்கும் போது ஏற்படுகிற பயம் அந்த மீசையின் நடுவே வெண் பற்கள் தெரியச் சிரித்தபடி, ''வாங்க தம்பீ !'' என்று அவர் வரவேற்கும்போது மகிழ்ச்சியாக மாறிவிடும். அண்ணாச்சி கடையின் பின்புறம் மூங்கில் தழிகளால் தென்னோலைத் தடுப்புச் செய்த ஒரு சிலம்பக் கூடமும் உண்டு. அதில் காலை மாலை வேளைகளில் சில மாணவர்களுக்கு அண்ணாச்சி சிலம்பமும் மல்யுத்தமும் சொல்லித் தருவதும் வழக்கம். அண்ணாச்சியின் முழுப் பெயர் என்னவென்று யாருக்கும் தெரியாது. அவருடைய முழுப் பெயர் உக்கிரபாண்டியத் தேவர் என்று பாண்டியன் விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தான். ஆனாலும் அவரை அந்த முழுப் பெயர் சொல்லிக் கூப்பிட்டவர் யாரையும் அவன் பார்த்ததில்லை.

பல்கலைக் கழகத்துக்கு வந்தபின் கடந்த இரண்டாண்டுகளில் அண்ணாச்சி கடைக்கு அவர் கூப்பிட்டனுப்பியும், கூப்பிட்டனுப்பாமலும் அவன் பலமுறை சென்றிருக்கிறான். அங்கே போவதில் மகிழாத மாணவர்களே அவன் வட்டத்தில் கிடையாது. பெயர்தான் சைக்கிள் கடையே தவிர நியூஸ்பேப்பர் வியாபாரம், மலைக் குளிருக்குக் கவசம் போன்ற முரட்டுக் கம்பளிகளை நாள் வாடகைக்குக் கொடுப்பது, வெற்றிலை பாக்கு, சிகரெட், சோடா கலர் போன்ற பெட்டிக் கடைப் பொருள்களின் விற்பனை எல்லாமே அங்கு உண்டு.

அண்ணாச்சி கடைக்குப் போனால் தனக்குப் பிடித்ததும் தன்னைப் பிடித்ததுமாகிய கருத்து ஒற்றுமை உள்ள பல மாணவர்களை அங்கே சந்திக்கலாம் என்று தெரிந்திருந்தும் இன்று மட்டும் அவன் சிறிது தயங்கினான். தயக்கத்துக்குக் காரணம் இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்புதான் பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தேர்தலுக்கு முதற்படியான தமிழ் அசோஸியேஷன், எகனாமிக்ஸ் அசோஸியேஷன், பாட்டனி அசோஸியேஷன் முதலிய முப்பதுக்கு மேற்பட்ட அசோஸியேஷன்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். இனி அந்தப் பிரதிநிதிகள் கூடிப் பல்கலைக் கழக மாணவர் பேரவைக்கு ஒரு தலைவனையும், துணைத் தலைவனையும், ஒரு செயலாளனையும், துணைச் செயலாளனையும் தெரிந்தெடுக்க வேண்டும். அண்ணாச்சியும் மாணவ- நண்பர்களும் தன்னைச் செயலாளனாக நின்று போட்டியிடச் சொல்லி வற்புறுத்துவார்களோ என்ற பயம் தான் அன்று அவர் கடைக்குப் போவதிலிருந்து பாண்டியனைத் தயங்கச் செய்தது. ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு 'ரெஸிடென்ஷியல் யுனிவர்ஸிடியில்' மாணவர் தலைவனாகவோ, செயலாளனாகவோ இருப்பதிலுள்ள சிரமங்களை அந்த இரண்டாண்டுகளில் பாண்டியன் மிக நன்றாகப் புரிந்து கொண்டிருந்தான். அண்ணாச்சிக்கும் பல்கலைக் கழகத்துக்கும் நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லையென்றாலும் அந்தப் பல்கலைக் கழக எல்லையில் தேசிய சக்தி வலுவிழந்து விடாமல் பாதுகாக்கும் ஒரு முரட்டுப் பாதுகாவலராக அவர் விளங்கி வந்தார். பல மாணவர்களைப் பல சந்தர்ப்பங்களில் அண்ணாச்சி காப்பாற்றியிருக்கிறார்; உதவியிருக்கிறார்.

தயக்கத்தோடு தயக்கமாக அறையிலிருந்து புறப்படும்போது இரண்டாண்டுகளுக்கு முன் ஒரு ஜூலை மாதத்து முன்னிரவில் தான் அந்தப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த நாளன்று முதல் முதலாக அண்ணாச்சி கடையில் தஞ்சம் அடைந்து பாதுகாப்புப் பெற்ற பழைய நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டான் பாண்டியன்.

விடுமுறைக்குப் பின் பல்கலைக்கழகம் திறந்து சில நாட்களே ஆகியிருந்தன. பாண்டியன் அன்றுதான் பி. யூ. சி. என்னும் புகுமுக வகுப்பில் இடம் பெற்று நியூ ஹாஸ்டல் பதினெட்டாவது எண்ணுள்ள அறையில் தங்கியிருந்தான். ஹாஸ்டல் ரிஜிஸ்டரில் பதிந்து கொண்டு அவனை அறைக்கு அனுப்புவதற்கு முன் அவனுடைய பேதைமை நிறைந்த முகத்தைப் பார்த்து அன்பும் அநுதாபமும் சுரந்ததாலோ என்னவோ எச்சரித்து அனுப்பினார் வார்டன்:

''தம்பீ! நான் சொல்வதைத் தப்பாக எடுத்துக் கொள்ளாதே. உன்



சத்திய வெள்ளம்

மானமுள்ள எவனும் பிறரை அவமானப் படுத்த மாட்டான். மரியாதை தெரிந்த எவனும் பிறரை அவமரியாதைப் படுத்த மாட்டான். மதிப்பை விரும்புகிற எவனும் பிறரை அவமதிக்கமாட்டான்.

நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். சீனியர் மாணவர்களிடம் சகஜமாகவும் நேச பாவத்துடனும் பழகத் தெரிந்துகொள். 'இந்தப் பல்கலைக் கழகத்திலுள்ள என்ஜினீயரிங், மெடிகல், விவசாயப் பிரிவுகள் உட்பட எதிலும் 'ராகிங்' என்ற பெயரில் புதிய மாணவர்களிடம் பழைய மாணவர்களோ, பழகிய மாணவர்களோ எந்தக் குறும்பு செய்தாலும் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள்' என்று ரிஜிஸ்திரார் கையெழுத்துடன் நோட்டீஸ் போர்டில் அறிக்கை தொங்குகிறது. ஆனால் அந்த அறிக்கையை மதித்து அதன்படியே சீனியர் மாணவர்கள் நடந்து கொள்வார்கள் என்று நீ எதிர்பார்க்கக் கூடாது. மேலும் 'ஓரியண்டேஷன் டே' கொண்டாடுவதற்கு முன் யாரையும் யாரும் எதற்காகவும் கண்டிக்க முடியாது. இதெல்லாம் நீயாகப் பார்த்து அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டும். இரண்டொரு நாளைக்கு வேதனையாகத்



தான் இருக்கும். அப்புறம் எல்லாம் சரியாகிவிடும்....முதலிலேயே ஆத்திரப்பட்டு நீ என்னிடமோ, ரிஜிஸ்திராரிடமோ 'கம்ப்ளெயிண்ட்' செய்தால் நாங்கள் சம்பந்தப்பட்ட சீனியர் மாணவர்களைக் கூப்பிட்டு விசாரிப்போம். ஆனால் அப்படி எங்களிடம் புகார் செய்வதும் உன்னோடு இருக்கும் சீனியர் மாணவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதும் உன் எதிர்காலத்துக்கு நல்லதல்ல. அதன் மூலம் நீ அவர்களை உன் நிரந்தர எதிரிகளாக்கிக் கொண்டு விடுகிறாய்... பார்த்துச் சமாளித்துக்கொள்... சின்ன விஷயங்களைப் பெரிதுபடுத்திக் கொண்டு பின்னால் சிரமப்படாதே... உன் அறையில் ஏற்கெனவே சி. அன்பரசன் என்கிற பி.ஏ. இரண்டாம் ஆண்டு மாணவன் இருக்கிறான்.''

'ராகிங்' பற்றி ஏற்கெனவே ஊரில் சக நண்பர்களிடம் கேள்விப்பட்டிருந்தான் அவன். அப்பாவியான புதிய மாணவர்களும், பயந்த சுபாவமுள்ளவர்களும் 'கூச்சமுள்ளவர்களுமே அதற்குப் பலியாவதுண்டு என்று தன் ஊரிலிருந்து கல்லூரிகளுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் படிக்கப் போய் விடுமுறைக்கு வரும் மாணவர்கள் சொல்லிக் கேள்விப் பட்டிருந்தான் பாண்டியன். இப்போது இந்த வார்டன் அநாவசியமாக அதை மிகைப்படுத்தித் தன்னை எச்சரிப்பதாகத் தோன்றியது அவனுக்கு.

அவனிடம் வார்டன் பதினெட்டாம் நம்பர் அறைக்கான இரண்டாவது சாவியைக் கொடுத்திருந்தார். 'நியூ ஹாஸ்டல்' என்ற அந்த விடுதி மலைச் சரிவில் இருந்தது. அறைக்குள் தன் பெட்டி படுக்கை — பொருள்களை வைத்துவிட்டு அவன் ஊர் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டபோது மாலை மூன்று மணி.

ஆங்கிலப் படங்களில் வருவது போன்று ஐரோப்பிய நாட்டு மலை நகரங்களை நினைவூட்டுவதாயிருந்தது மல்லிகைப் பந்தல். கண்ணாடி கண்ணாடியாக ஏரிகளும், பூத்துக் குலுங்கும் பூங்காக்களும், சுற்றிலும் மேகம் மூடிய நீல மலைகளும், குப்பை கூளங்கள் அடையாத அழகிய தார் ரோடுகளும், காற்றில் வெப்பமே இல்லாத குளிர்ச்சியும் அவனுக்குப் புதுமையாயிருந்தன. ஏரி, ஏரியைச் சுற்றிய சாலைகள், கடை வீதி, நகரம் இவை தவிர பல்கலைக் கழகக் கட்டிடங்களும், விடுதிகளும், பாட்டனி பிரிவைச் சேர்ந்த பொடானிகல் கார்டனும், பூங்காக்களும், நீச்சல் குளமுமாக யுனிவர்ஸிடி காம்பஸின் அறுநூறு ஏக்கர் நிலப் பரப்பிலும் மற்றொரு தனி நகரமே இருப்பதுபோல் தோன்றியது. குளிர் நடுக்கவே இரவில் ஸ்வெட்டரும் கம்பளியும் இல்லாமல் தூங்க முடியாது போலிருந்தது. பிளவர்ஸ் கார்னரில் இருந்த 'உல்லன் ஷாப்' ஒன்றில் கம்பளியும் ஸ்வெட்டரும் வாங்கிக் கொண்டு அறைக்குத் திரும்பினான் பாண்டியன். மலை நகரமாகையினால் சீக்கிரமே இருட்டி விட்டது. அவன் திரும்பியபோது அறை திறந்திருந்தது. விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இரண்டு மூன்று மாணவர்களின் அரட்டைக் குரல்களும் வெடிச் சிரிப்புக்களும், கும்மாளமும் அறையை அதிரச் செய்து கொண்டிருந்தன.

பாண்டியன் அமைதியாக உள்ளே நுழைந்து தன் கட்டிலில் கம்பளி ஸ்வெட்டர் அடங்கிய பொட்டலத்தை வைத்து விட்டுத் திரும்பி இன்னும் தனக்கு அறிமுகமாகாத மற்ற மாணவர்களுக்கு வணக்கம் செலுத்தினான்.

மற்ற மூவரும் பாண்டியனுக்குப் பதில் வணக்கம் செலுத்தாததோடு ஒரு கொசுவைப் பார்ப்பதுபோல் அவனை அலட்சியமாகப் பார்த்தனர். அந்த மூவரில் ஒருவன்தான் சி. அன்பரசனாக இருக்க வேண்டும் என்றும், மற்ற இருவரும் வேறு அறைகளிலிருந்து வந்திருக்க வேண்டும் என்றும் சுலபமாக அநுமானம் செய்ய முடிந்தது. பாண்டியன் இன்னும் நம்பிக்கை இழக்க

வில்லை. சுபாவமாகவே அவர்களிடம் பழக முயன்றான்.

''நான் பாண்டியன். புதுமுக வகுப்பில் புதிதாகச் சேர்ந்திருக்கிறேன்'' — என்று தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டு குலுக்குவதற்காக அவர்களை நோக்கி வலது கையை நீட்டினான் அவன். முதல் மாணவன் தன் பெயர் கலையழகன் என்று சொல்லிக் கை குலுக்கிவிட்டு, இரண்டாமவனையும் மூன்றாமவனையும் பார்த்துக் குறும்புத்தனமாகக் கண்ணடித்து ஏதோ குறிப்புக் காட்டினான். இரண்டாமவன் தன் பெயர் மனோகரன் என்று சொல்லிக்



கைகுலுக்கிவிட்டு அடுத்தவனைப் பார்த்துக் கண்ணடித்துச் சைகை செய்தான். மூன்றாமவன் தன்னை அன்பரசன் என்று அறிமுகம் செய்து கொண்டு குலுக்குவதற்கு நீட்டப்பட்ட பாண்டியனின் கையை அப்படியே பிடித்து இழுத்து அவனை ஒரு பல்டி அடிக்க வைத்தான். நல்ல வேளையாகப் பாண்டியன் உயரமாகவும் பலமுள்ளவனாகவும் இருந்ததால் மோவாய்க் கட்டை தரையில் மோதி உடைபடாமல் பிழைத்தது.

அவ்வளவில் பாண்டியன் விழித்துக் கொண்டான். அவர்கள் தன்னை வம்புக்கு இழுக்கப் போகிறார்கள் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. வார்டன் செய்த எச்சரிக்கையும் நினைவு வந்தது. முடிந்தவரை பொறுத்துப் போவதென்று தனக்குள் முடிவு செய்து கொண்டான் அவன். ஆனால் அவர்களோ அவன் பொறுமையை அளவு கடந்து சோதித்தார்கள்.

அன்பரசன் தன் சட்டைப் பையிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து உடனிருந்தவர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை எடுத்துக்கொண்டு தீப்பெட்டியைப் பாண்டியனிடம் நீட்டி ஒரே தீக்குச்சியில் மூன்று பேருக்கும் பற்ற வைத்து விடும்படி சொன்னான். பாண்டியன் சிரித்துக் கொண்டே அதைச் செய்து முடித்துவிட்டான்.

அன்பரசன் தன்னுடைய சிகரெட்டைப் பாதி புகைத்ததும் பாண்டியனிடம் நீட்டி,

''இந்தா... மீதியை நீ பிடி'' என்று அதிகாரக் குரலில் சொன்னான். பாண்டியன் முகத்தில் சிரிப்பு மறைந்தது. புருவங்கள் கூடி நெற்றி மேடு சுருங்கியது.

''வழக்கமில்லை... நன்றி...''

''இதுவரை இல்லையானால் என்ன? இப்போது வழக்கப்படுத்திக்கொள்.''

''அவசியமில்லை.''

''உன்னிடம் இருக்கும் வழக்கங்கள் எல்லாம் புனிதமானவையும் அல்ல; இல்லாத வழக்கங்கள் எல்லாம் மோசமானவையும் அல்ல. நீ இந்தச் சாக்குத் துணி வேஷ்டியும் கோணிப்பைச் சட்டையும் போடுகிறாய் என்பதால் எங்களைக் காட்டிலும் சிறந்தவனாகிவிட மாட்டாய்'' என்று பாண்டியன் அணிந்திருந்த கதரைக் கிண்டல் செய்தான் அன்பரசன்.

''நான் அப்படிச் சொல்லிக் கொள்ளவில்லையே?'' என்று பாண்டியன் பதில் சொல்லிக் கொண்டிருந்தபோதே அன்பரசன் தன் விரலிடுக்கில் இருந்த பாதிச் சிகரெட்டைப் பலாத்காரமாகப் பாண்டியனின் உதடுகளுக்கிடையே திணிக்க முற்பட்டான். பாண்டியன் அதைப் பறித்து ஜன்னல் வழியே வீசி எறிந்த





தும் அன்பரசன் அடிபட்ட புலிபோல் சீறிக் கொண்டே அறைச் சுவரில் ஒட்டியிருந்த தனக்குப் பிடித்தமான தலைவர் ஒருவரின் படத்தைச் சுட்டிக் காட்டி, ''நீல் டௌன்...'' என்று கூப்பாடு போட்டு அந்தப் படத்துக்கு முன் பாண்டியனை மண்டியிடச் சொன்னான். படத்துக்குக் கீழே மானம், மரியாதை, மதிப்பு என்று மூன்று வார்த்தைகள் எழுதப்பட்டிருந்தன.

''மிஸ்டர் அன்பரசன்! மானமுள்ள எவனும் பிறரை அவமானப்படுத்த மாட்டான். மரியாதை தெரிந்த எவனும் பிறரை அவமரியாதைப் படுத்த மாட்டான். மதிப்பை விரும்புகிற எவனும் பிறரை அவமதிக்க மாட்டான்.''

''நான் உன்னிடம் உபதேசம் கேட்கவில்லை தம்பி! மண்டியிடு என்றால் மண்டியிட வேண்டும்! அவ்வளவு தான்.''

''முடியாது என்றால் முடியாது.''

அவ்வளவில் ஹாஸ்டல் உணவு விடுதி மணி அடித்தது. சீனியர் மாணவர்கள் மூவரும் பாண்டியனை விட்டு விடாமல் ஏதோ சிறைப்பட்ட கைதியை இழுத்துப் போவது போல் உணவு விடுதிக்கு உடன் கூட்டிக் கொண்டு போனார்கள். சாப்பிடும்போதும் ஒரே கலாட்டாவாக இருந்தது. சாப்பிட்டு விட்டு வெளியே வந்ததும் அன்பரசன் தன் கால் செருப்புக்களைக் கழற்றி, ''இந்தா இதை ரெண்டையும் வலது கையில் எடுத்துக் கொண்டு, 'லேக்ரோ'டில் மூன்று தரம் சுற்றி விட்டு வா.

நீ கற்றுகிறாயா இல்லையா என்று பார்க்க நாங்கள் மூன்று பேரும் உன் பின்னாலேயே வருவோம்'' என்று பாண்டியனை அதட்டினான். பாண்டியன் கையில் செருப்புக்களையும் திணித்து விட்டான். மூன்று முரட்டு உருவங்கள் அவனை நெருக்கிப் பிழிந்து விடுவது போல் தொடர்ந்தன. பல்கலைக் கழகக் காம்பவுண்டுக்கு அப்பால் வெளியே மெயின் ரோட்டுக்கு வந்ததும் அந்தச் செருப்புக்கள் இரண்டையும் அப்படியே அன்பரசன் மூஞ்சியில் விசி எறிந்து விட்டு அருகிலிருந்த சைக்கிள் கடைக்குள் புகுந்துவிட்டான் பாண்டியன். முரட்டு மீசையும் பயில்வான் போன்ற தோற்றமுமாகச் சைக்கிள் கடையில் உட்கார்ந்திருந்த அண்ணாச்சியை அடைக்கலம் நாடி நடந்ததைச் சொன்னான் பாண்டியன். சைக்கிள் கடையில் தென்பட்ட படங்களும் அண்ணாச்சியின் சுதேசிக் கோலமும் 'இந்த மனிதர் நமக்கு உதவுவார்' — என்ற நம்பிக்கையைப் பாண்டியனுக்கு அளித்திருந்தன. 'விடுதி அறையில் சுவரிலிருந்த படத்தைக் காட்டி மண்டியிடச் சொன்னார்கள்' என்ற விவரத்தைக் கேட்டதும் அண்ணாச்சியின் கண்கள் சிவந்தன. மீசை துடித்தது.

''ஓகோ!.... இது மேற்படி ஆட்கள் வேலைத்தனம்தான். ஒவ்வொரு வருசமும் நம்ம பையன்களிலே யாராவது ஒருத்தனை இப்படி வம்பு பண்றதே அவங்களுக்கு வழக்கமாப் போச்சு...நீங்க பேசாம இப்பிடி உட்காருங்க தம்பி! இனிமே இதை நான் கவனிச்சுக்கிறேன்'' என்று அவனுக்குப் பதில் கூறிய அண்ணாச்சி கடைப் பையன் ஒருவனைக் கூப்பிட்டு ஏதோ சொல்லி, சைக்கிளில் பறந்தினார். அதற்குள் அன்பரசன் இருபது முப்பது மாணவர்களைக் கட்சி சேர்த்துக்கொண்டு அந்தக் கடையின்மேல் படையெடுப்பது போல் வந்து விட்டான். ஆனால் என்ன ஆச்சரியம்! கடை வாசலில் அண





ணுச்சி நிற்பதைக் கண்டதும் அந்தக் கூட்டம் பெட்டிப் பாம்பாய் அடங்கி விட்டதைப் பாண்டியன் பார்த்தான். ஆவேசமாக வந்த அன்பரசன்,

''அந்தப் பையனை வெளியிலே விட்டுடுங்க. வீணு நீங்க இதிலே சம்பந்தப் படாதீங்க...'' என்று அண்ணுச்சிக்குக் கோரிக்கை விடுத்தான். அண்ணுச்சி மீசையை முறுக்கி விட்டுச் சிரித்துக் கொண்டார்.

''அதுக்கில்லே தம்பீ! ஏதோ படத்தைக் காமிச்சு அதுக்கு முன்னலே மண்டி போட்டுக் கும்புடணுமின்னிங்களாமே; அதை இந்தத் தம்பி மட்டும் தனியாவா செய்யிறது?... கூட வந்து மண்டி போடறதுக்கு இன்னும் கொஞ்சப் பேரை வரச் சொல்லி யிருக்கேன். இருந்து அவங்களையும் கூட்டிக்கிட்டுப் போங்க....'' என்று அண்ணுச்சி சொல்லி முடிப்பதற்குள்ளேயே திமுதிமுதிமுவென்று நானூறு ஐந்நூறு பேரடங்கிய ஒரு பெரிய மாணவர் கூட்டம் அங்கே வந்து அன்பரசன் குழுவினரை வளைத்துக் கொண்டது. பாண்டியனைக் கொடுமைப்படுத்தியதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பின்பே அன்பரசன் குழு அங்கிருந்து தப்ப முடிந்தது. அப்போது மணவாளன் என்ற என்ஜினியரிங் மாணவரை அண்ணுச்சி பாண்டியனுக்கு அறிமுகப்படுத்தி, ''இங்கே இவரைப் போல நம்ம ஆளுங்க நிறைய இருக்காங்க தம்பீ! பயப்படாதீங்க... உங்களை யாரும் எதுவும் பண்ணிட முடியாது...ஆனு அந்தப் பய ரூம்லே இனிமே நீங்க இருக்க வேண்டாம். நம்ம வகை சீனியர் மாணவர் ஒருத்தரையே தன் ரூமுக்கு உங்களை அழைச்சிக்கிட ஏற்பாடு பண்ணறேன்'' என்று சொல்லி உடனே வந்திருந்த மாணவர்கள் மூலம் அதற்கும் ஏற்பாடு செய்து விட்டார் அவர்.

அன்று இரவே அவன் அறை மாறி விட்டான். வார்டனிடம் நடந்ததைச் சொல்ல ஒரு பெரும் மாணவர் கூட்டமே சென்றதால் அவர் அந்த வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. மறுநாள் காலையிலேயே புது மாணவர்களிடையே அவனை ஹீரோ ஆக்கியிருந்தது இந்த நிகழ்ச்சி. இதற்காக அண்ணுச்சிக்கு அவன் பெரிதும் நன்றிக் கடன் பட்டிருந்தான்.

* * *

இப்போது இவ்வளவு காலத்துக்குப் பின் மீண்டும் நினைத்தபோது கூட அந்தப் பழைய சம்பவம் நேற்று நடந்தது போல் நினைவிருந்தது. பி. யூ. சி முடிந்து பி.ஏ. முதலாண்டும் முடிந்து பல்கலைக் கழகமும், ஊரும், நண்பர்களும் நன்ருகப் பழக்கமான நிலையிலும் அன்று அண்ணுச்சி செய்த அந்த உதவியைப் பசுமையாக நன்றியோடு நினைவு வைத்துக் கொண்டிருந்தான் பாண்டியன்.

அவன் அண்ணுச்சி கடைக்குப் போய்ச் சேர்ந்தபோது கொடி யேற்றி முடிந்து எல்லாருக்கும் சுதந்திர தின 'ஸ்வீட்' வழங்கிக் கொண்டிருந்தார் அண்ணுச்சி. சைக்கிள் கடையின் பின் பக்கத்து அறையில் மாணவர்கள், நாலைந்து மாணவிகள் உட்படக் கூட்டமாக அமர்ந்திருந்தனர். பாண்டியன் உள்ளே போய் அமர்ந்தான். பாண்டியனைப் பார்த்ததுமே ஒருவன் ஆரம்பித்தான்.

''இந்த ஆண்டின் மாணவர் பேரவைச் செயலாளர் வந்தாச்சு!''

உடனே ஒரு பெரிய கைதட்டல் ஒலி எழுந்தது. அங்கிருந்த எல்லாரையும் அவனுக்குத் தெரியும். பெண்களில் மட்டும் ஒரே ஒரு புது முகம் — முகம் நிறைய மறைக்கும் கண்ணுடி அணிந்து அமர்ந்திருந்தாள். யாரென்று தெரியாத அவள் அத்தனை பேர் நடுவிலும் வண்ணங்கள் நிறைந்ததொரு பட்டுப் பூச்சி போல் தோன்றிஞள். வந்து அமர்ந்ததுமே அவள் யார் என்று அறியும் ஆவல் இருந்தும் ஒரு பெண்ணைப் பற்றி முந்திக் கொண்டு அவசரப்பட்டு விசாரிப்பது மற்ற மாணவர்களிடையே தன்னைக் கேலிக்கு ஆளாக்கி விடும் என்ற தயக்கத்தில் பேசாமல் இருந்தான் பாண்டியன்.

அண்ணுச்சி உள்ளே வந்து அவனிடம் ஒரு தாளைக் காட்டி, ''எல்லா மாணவர்களும் நீங்கதான் வரணும்னு ஆசைப் படருங்க தம்பீ! இதிலே முன்மொழிபவர் வழிமொழிபவர் எல்லாரும் கையெழுத்துப் போட்டாச்சு. நீங்க கையெழுத்துப் போடவேண்டியதுதான் பாக்கி'' என்று அபேட்சை மனுவை நீட்டினர்.

''என்னலே முடியாது அண்ணுச்சி. எனக்கு இது செகண்ட் இயர். செகண்ட் இயர் தேட் இயர். பூரா படிப்பிலே கவனம் செலுத்தலாம்னு இருக்கேன்.''

''படிப்பிலே நல்லா கவனம் செலுத்துங்க... ஆனு அதோட இதுவும் இருக்கட்டும்.''

''நீதான் இருக்கணும் பிரதர்.''

''உன்னை நம்பி இங்கே ஒரு பெரிய இயக்கமே காத்துக்கிட்டிருக்கு அப்பா! நீயே மாட்டேன்னு எப்படி?''

''இல்லே. தயவுசெய்து என்னை விட்டுடுங்க. நான் எந்த வம்பும் வேண்டாம்னு பார்க்கிறேன்.''

''பிளீஸ் அக்ஸெப்ட் இட் அண்ட் ஸைன்.''

அண்ணாச்சி நாமினேஷன் தாளை அவன் முன் வைத்து, ''நான் இவ்வளவுதான் சொல்லலாம். இனி உங்க பாடு. உங்க நண்பர்கள் பாடு'' என்று சொல்லி விட்டு முன்புறம் கடையைக் கவனிக்கப் போய்விட்டார். தாளில் வழிமொழிபவர்களின் பெயர்களை வரிசையாகப் படித்துக் கொண்டு வந்தவன், 'கண்ணுக்கினியாள்' என்ற பெயரைப் படித்ததும் அது யாராக இருக்கும் என்ற வினா மனத்தில் எழப் பெண்கள் பக்கம் நிமிர்ந்து பார்த்தான். தனக்கு ஏற்கெனவே அறிமுகமான பெண்களின் பெயர்களைத் தவிர மீதமிருந்தவள் அந்தப் புதியவள்தான். அவள் பெயர்தான் கண்ணுக்கினியாளாக இருக்க வேண்டுமென்று பாண்டியன் புரிந்துகொண்டான். அந்தப் பெயருக்கும் அவள் தோற்றத்துக்கும் இருக்கிற பொருத்தத்தை அவன் வியந்து கொண்டிருந்த போதே அதற்குப் பொருத்தமில்லாத ஓர் அதிகப்பிரசங்கித்தனமான காரியத்தை அவள் செய்தாள்.

ஒரு தந்தப் பதுமை துள்ளி எழுந்திருப்பது போல் தன் இடத்திலிருந்து எழுந்து முன் கைகளை அணிசெய்த வளையல்களில் இரண்டைக் கழற்றி,

''மிஸ்டர்! ஒண்ணு இதிலே கையெழுத்துப் போட்டுக் குடுங்க... அல்லது இந்த வளையல்களைக் கையிலே போட்டுக் கொண்டு வெளியில் புறப்படுங்கள்'' என்று அவன் முன் அவள் வளையல்களை எறிந்தபோது ஒரே கைதட்டலும், சிரிப்பொலியும், விசில்களும் எழுந்தன. பாண்டியனுக்கு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருந்தது. அவள் செய்த காரியம் அவனை ஓரளவு அவமானப்படுத்தி விட்டாலும் அவளது அந்தத் துணிச்சல் வியப்புக் கொள்ளக் கூடியதாக இருந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு மறுபேச்சுப் பேசாமல் தலையைக் குனிந்த நிலையிலிருந்து நிமிராமலே அந்தத் தாளில் 'சுபாஷ் சந்திர பாண்டியன் என்னும் எஸ். சி. பாண்டியன், இரண்டாவது ஆண்டு பி.ஏ.' என்பதற்கு நேரே கையெழுத்திட்டு முன்மொழிந்து எழுதியிருந்த மாணவனிடம் அதைக் கொடுத்தான் பாண்டியன். அவன் இணங்கியதைப் பாராட்டும் வகையில் மீண்டும் கரஒலி எழுந்து அடங்கியது. அவளே இப்போது ஒரு குழந்தையின் உற்சாகத்தோடு கை தட்டுவதை அவன் கவனித்தான். அண்ணாச்சியும் உள்ளே வந்து அவனைக் கட்டித் தழுவிப் பாராட்டுத்



நான் டூத் பேஸ்டை உபயோகித்த பிறகு மூடாமல் விட்டு விடுவேன். தினமும் மனைவி திட்டுவாள். நேற்று ஞாபகமாக மூடி வைத்தேன். அப்பொழுதும் திட்டினாள்: ''இன்று நீங்கள் பல் தேய்க்கவே இல்லையா?'' என்று!

டிட்பிட்ஸ் கடிதம் - பாபு

தெரிவித்தார். குழுவின் அப்போதைய மகிழ்ச்சி எல்லையற்றதாயிருந்தது.

சிறிது நேரத்தில் மாணவர்கள் ஒவ்வொருவராகச் சொல்லிக் கொண்டு புறப்பட்டார்கள். மாணவிகளில் கூட இரண்டு மூன்று பேர் போய் விட்டார்கள். பாண்டியனுக்கு நெருக்கமான சில மாணவர்களும், அந்தக் கண்ணுக்கினியாளும், அவளுடைய சக மாணவி ஒருத்தியுமே மீதமிருந்தனர். நண்பன் ஒருவன் பாண்டியனின் காதருகே மெதுவாகச் சொன்னான்:

''ஒருகாலத்திலே மதுரையில் டிராமா கம்பெனி நடத்திய பிரபல கந்தசாமி நாயுடுவின் மகள். மதுரையிலேயே பி.யூ.ஸி. முடித்துவிட்டு நம்ம பல்கலைக் கழகத்தில் ஃபைன் ஆர்ட்ஸ் ஃபேகுல்டியில் 'டிப்ளமா இன் டிராமா' படிக்க வந்திருக்கிறாள். பெயர் கண்ணுக்கினியாள். நம் அண்ணாச்சி, நாயுடு குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவர்.''

''பெயரே நட்சத்திர அந்தஸ்தில்தான் இருக்கிறது'' என்று நண்பனின் காதருகே முணுமுணுத்தான் பாண்டியன். அப்போது அவளே அவனருகில் வந்து, அவன் தேர்தலில் நிற்க இணங்கியதைப் பாராட்டும் வகையில், ''நன்றி'' என்றாள். அவனும் விடவில்லை.

''நீங்கள் கொடுத்திருக்கும் அன்பளிப்பு என்னிடம் பத்திரமாக இருக்கும். அதை எப்போது திருப்பித் தர வேண்டுமோ, அப்போது திருப்பித் தருவேன்!''

''ஓ! வளையல்களைச் சொல்கிறீர்களா?'' அவள் அவன் உள்ளத்தைச் சூறையாடுவது போல் சிரித்தாள். உரையாடலை வேறு பக்கத்தில் திருப்ப விரும்பினான் பாண்டியன். ''இந்த ஊர் குளிர்ப் பிரதேசம். இவ்வளவு பெரிய 'ஸன்கிளாஸ்' இங்கே தேவைப்படாது.''

''இது ஸன் கிளாஸ் இல்லை. கோ... கோ... கிளாஸ். அழகுக் கண்ணாடி. ஒரு ஃபேஷன்.''

''தங்கச்சி ஒரு டிராமாவே ஆடினதாகக் கேள்விப்பட்டேனே?'' என்றார் அண்ணாச்சி.

'' டிராமாவிலேதான் அண்ணன் வழிக்கு வந்தாரு'' என்றான் உடனிருந்த மாணவன்.

பாண்டியன் அவனைக் கேட்டான்.

''இது என்ன ஸப்ஜெக்ட்னு இதிலே வந்து சேர்ந்தீங்க?''

''ஏன்? ரொம்ப நல்ல ஸப்ஜெக்ட்னு ஆசைப்பட்டுத்தான் சேர்ந்திருக்கேன். கல்கத்தாவிலே ரவீந்திர பாரதி சர்வ கலாசாலையிலே இந்த ஸப்ஜெக்ட் ரொம்ப நாளா இருக்கு. அவ்வளவு தூரம் என்னை அனுப்ப அப்பாவுக்கு மனசு இல்லை. இங்கே சேர்த்திருக்காரு.''

'' உங்க நாயினாவுக்கு வாழ்க்கையே இதுதானே அம்மா?'' என்று அண்ணாச்சி கந்தசாமி நாயுடுவைப் பற்றிக் குறிப்பிட்டார்.

''நானும் அவரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கேன்'' என்றான் பாண்டியன்.

அண்ணாச்சி ஒரே உற்சாகத்தில் இருந்தார். '' தம்பீ! அந்தக் காலத்திலே இவங்க நாயினா கம்பெனியிலே சம்பூர்ண மகாபாரத நாடகத்திலே நானு பீமசேனன் வேசம் கட்டியிருக்கேன். அப்ப இந்தக் கண்ணு சின்னப் பாப்பாவா இருந்திச்சு.''

'கண்ணுக்கினியாள்' என்ற முழுப் பெயரை உரிமையோடு 'கண்ணு' என்று செல்லமாக அழைத்ததிலிருந்து அண்ணாச்சிக்கு அந்தக் குடும்பத்தின் மேலிருந்த பாசத்தைப் பாண்டியன் தெரிந்து கொள்ள முடிந்தது. அவள் அழகோ அவனை நேராகவும் ஓரக் கண்களாலும் திரும்பத் திரும்பப் பார்க்கச் செய்தது.

சிறிது நேரத்தில் அவளும் சக மாணவியும் விடைபெற்றுக் கொண்டு விடுதிக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். ஹாஸ்டலிலிருந்து வெளியே சென்று திரும்பும் விதிகள் பெண்கள் பிரிவில் மிகவும் கண்டிப்பானவை. அன்று சுதந்திர தினமாகையால் காலை பதினொரு மணி வரை அனுமதி இருக்கும். பத்தே முக்காலுக்குக் கண்ணுக்கினியாளும் அவள் தோழியும் புறப்பட்டதற்கு அதுதான் காரணம் என்று பாண்டியன் புரிந்து கொண்டான். அவள் போனதும் அண்ணாச்சியை அவன் கேட்டான்:

''அண்ணாச்சி! இதென்ன உங்க நாயுடு 'கண்ணுக்கினியாள்'னு ரொம்பப் பழைய காலப் பேரா வச்சிருக்காரே? ஏதோ சரித்திரக் கதையிலே வர்ர மாதிரியில்ல இருக்கு? இந்த நாள் பேராத் தெரியலியே...?''

''ஆமாங்க தம்பீ! அது நாயினாவோட கிராமத்துக் குலதெய்வமான அம்மன் பேரு! நாயினா செல்லமா 'கண்ணு'ன்னுதான் கூப்பிடுவாரு.''

அவனுக்கும் அவனோடு மீதமிருந்த சில மாணவர்களுக்கும் அண்ணாச்சி பையனை அனுப்பி எதிர் வரிசையிலிருந்த டீக்கடையிலிருந்து தேநீர் வரவழைத்துக் கொடுத்தார். அவர்கள் தேநீர் குடித்துக் கொண்டிருந்த போதே ஓர் ஆள் வந்து, ''சார், ஹேண்ட்பில்ஸ் பத்தாயிரமும் அடிச்சாச்சு'' என்று ஒரு பெரிய பாக்கெட்டைக் கொண்டு வந்து அண்ணாச்சிக்கு முன்னால் வைத்தான். அண்ணாச்சி பாக்கெட்டைப் பிரித்து அவனுடைய தேர்வுக்கு வாக்குகளை வேண்டும் அந்த முதல் நோட்டீஸை அவனிடமே வழங்கினார். அவன் திகைப்பு அடங்குவதற்குள்,

''தம்பீ! மன்னிச்சுக்குங்க. நீங்க சம்மதிப்பீங்கன்னு நம்பி நானும் உங்க சிநேகிதன்மாருங்களுமாகச் சேர்ந்து, முந்தாநாளே நோட்டீஸ், போஸ்டர் எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணிட்டோம்'' என்று சொல்லிச் சிரித்தார் அண்ணாச்சி. (தொடரும்)

•

அன்பே அகிலா!

பூர்வ கதை

பேச்சு வார்த்தை நடத்துவதாகக் கூறிக்கொண்டு கிழக்கு வங்கம் வந்தார் யாஹ்யா கான். சிட்டகாங் துறைமுகத்தில் பாக் துருப்புக்களையும் யுத்த தளவாடங்களையும் கொண்டு வந்து குவிக்கப் போதிய அவகாசம் பெறவே அவ்வாறு நாடகமாடினார் என்பது பின்னால்தான் தெரிந்தது. 'பேச்சு வார்த்தைகள் முறிந்தன' என்று கூறி அவர் இஸ்லாமாபாதுக்கு விமானம் ஏறியதும் வங்க தேசத்தில் பாக் துருப்புக்களின் அட்டூழியம் ஆரம்பமாயிற்று.

அகிலாவின் கிராமத்தைச் சேர்ந்த யுவதிகள் அனைவரும் பாக் சிப்பாய்களால் மானபங்கப்படுத்தப் பட்டனர். அகிலா மட்டுமே லெஃப்டினண்ட் கர்னல் மானிடமிருந்து தப்பி ஓடினாள். பழி வாங்கப் புறப்பட்ட அக்கிராம வாலிபர்கள் வஞ்சகமான முறையில் கர்னல் மானின் சிப்பாய்களால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். இதையறிந்து மனமுடைந்துபோன அகிலா, டாக்காவுக்கு வந்து தன் சித்தப்பா மகன் அசோக்கைச் சந்தித்தாள். அவன் மூலம், தலைமறைவாக இருந்து கொரில்லாப் போர் புரிந்து வரும் முக்தி வாஹினி இளைஞர்களுடன் அவளுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர்களிடம் வீரம் குறைவற இருந்தது; ஆனால் யுத்தத் தளவாடங்கள் இல்லை. அவர்கள் நெருப்பில் விழுந்த ஈசலைப் போல் மடியும் கோரத்தினைக் காணப் பொறுமல் அகிலா பாரதத்திலிருந்து போர்த் தளவாடங்களைப் பெற அவர்கள் முனைய வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினாள். அவளையே தூது அனுப்பினார்கள் முக்தி வாஹினி இளைஞர்கள். அகதி போலக் கிளம்பிச் சென்ற அகிலா, எல்லைப்புறத்தை அடைந்தபோது அங்கு காவலிருந்த கர்னல் மானின் கண்களில் தட்டுப் பட்டுவிட்டாள்.

முன்பொரு முறை தன்னை ஏய்த்துவிட்டுத் தப்பி ஓடிய மான் இன்று மீண்டும் சிக்கியது என்று மகிழ்ந்த கர்னல் மான், வலுக்கட்டாயமாக அவளைத் தன் கூடாரத்துக்குள் இழுத்துச் சென்றான்.


வாய் நாற்றம் உங்களை
விலகி நிற்கச்செய்கிறது
COLGATE
DENTAL CREAM
DCG 4/70 TH
கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம்
வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்...
நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள் !
கால்கேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.
அதன் வியக்கத்தக்க பெப்பர்மின்ட் சுவையினால்— கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!
தூய்மையான இனிய மூச்சுடனே,
வெண்மையான பற்களையும் பெற்றிடவே...
உலகிலேயே அதிக மக்கள்
மற்றெந்த பற்பசையையும்விட,
கால்கேட் பற்பசையையே
வாங்குகிறார்கள்!
கால்கேட் டூத் பிரஷ்

அன்பே அகிலா! 13

அகிலாவுக்கு விடுதலை கிடைத்து விட்டது. அவள் மீது சந்தேகமான குற்றமும் சுமத்தாமல் விடுவித்து விட்டான் சுலைமான். ஆனால் அந்த விடுதலையின் விலை...? கிளம்பிச் செல்ல அனுமதி கிடைத்தும் கூட அகிலா, உடலும் உள்ளமும் குன்றிப் போய் உட்கார்ந்திருந்தாள்.


கதை: குமரன் : சித்திரம்: விஜயா











யாக் ராணுவத்தின் சில ரகசியக் காகிதங்கள் பத்திரம் செய்யப்பட்டிருந்த மேஜைத் திறந்ததில் சுலைமானின் துப்பாக்கியைப் புடவைத் தலைப்பிலும் மறைத்து எடுத்துக் கொண்டு வைராக்கியத் துடன் புறப்பட்டாள் அகிலா. சுலைமானின் கட்டளையைப் பெற்றிருந்த காவலர்கள் அவளைத் தடுக்கவில்லை. பாதுகாப்புப் பகுதியின் முனை முடிவில் சென்று...... வந்ததும்.....


இந்த இடத்தில்
தனி வழி நடக்கிறேன்.
ஒரு சிற்றூரை அடைந்ததும்...
அதோ அடகுக் கடை. இந்த வளையல்களுக்கு என்ன கிடைக்குமோ, பார்க்கலாம்.
PAWN BROKER
விட்டு வைத்திருக்கிறார்கள்!
அடகுக் கடையில்....
முந்நூறு ரூபாய் தருகிறேன்!
அக்கிரமம்! நாலு மடங்குக்குக் குறையாது
வட்டியைக் கழித்துக் கொண்டு தருவதாகச் சொல்கிறேன்,
அந்தப் பேராசைக்காரன் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு பஸ்ஸிலும்....
... பிறகு ரயிலிலும்
புது தில்லியை நெருங்கிக் கொண்டிருந்தது.

தொடரும்....

குடும்பத்தினர் அனைவரும்
திட ஆரோக்கியத்துடன் திகழ

ஃபாஸ்ஃபோமின்



ஃபாஸ்ஃபோமின், விடமின் பி காம்ப்ளெக்ஸ் மற்றும் பல்வேறு கிளிஸரோஃபாஸ்ஃபேட்டுகள் அடங்கிய விடமின் டானிக். அது உங்கள் குடும்பத்தினருக்கு வலிமை, புத்துணர்வு மற்றும் ஆரோக்கியம் அளிக்கிறது. ஃபாஸ்ஃபோமின் சாப்பிடத் தொடங்கினால், களைப்பும் சோர்வும் பறந்துவிடும். ஃபாஸ்ஃபோமின் சக்தியை அதிகரிக்கிறது. பசியைத் தூண்டுகிறது, வலிவைப் பெருக்குகிறது. நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கூட்டுகிறது. குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ உதவுகிறது.



ஃபாஸ்ஃபோமின்...
பழரஸ மணம் கமழும்
பச்சை நிற விடமின்
டானிக்.



SQUIBB® SARABHAI CHEMICALS.

® இந்தச் சின்னம் ஈ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் என்ற ஸ்தாபனத்தின் ரிஜிஸ்டர் செய்யப் பெற்ற ட்ரேட் மார்க் ஆகும். கே.பி.பி.எல். அதை உபயோகிக்கும் லைசென்ஸ் பெற்றவர்கள்.



கதைச் சுருக்கம்

ராஜம்பேட்டை கிட்டாவய்யருக்கு மூன்று பிள்ளைகள்; ஒரு பெண். லலிதா என்று பெயர். அவளுக்கு வரன் தேடிக் கொண்டிருந்தார். சென்னை பத்மாபுரத்தில் இருந்த மாஜி ஸப்-ஜட்ஜ் பத்மலோசன சாஸ்திரியின் பிள்ளை சௌந்தரராகவனுக்குத் தம் பெண்ணைக் கொடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

இதற்கிடையில் உடல் நலம் கெட்டிருந்த தங்கை ராஜம்மாளைப் பார்த்து வர பம்பாய்க்குப் போகும்படியாயிற்று.

ராஜம்மாளும் தன் பெண் சீதாவுக்கு எங்கேயாவது கல்யாணம் ஆகிவிட்டால், கவலையின்றிக் கண்ணை மூடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தாள். முன்பின் அறிமுகமில்லாத வடக்கத்தி ஸ்திரீ ஒருத்தி இரண்டாயிரம் ரூபாயும் இரத்தின ஹாரம் ஒன்றும் அவள் மகள் கல்யாணத்துக்கென்று கொடுத்துச் சென்றாள். அதோடு கத்தியைக் காட்டி அச்சுறுத்தி அவள் கவலையைப் பெருக்கிச் சென்றாள்.

கிட்டாவய்யர் கிராமத்துக்குத் திரும்பும்பொழுது தம் தங்கையையும் அவள் மகளையும் கூட அழைத்து வந்தார்.

சௌந்தர ராகவன் பொருளாதார இலாக்காவில் உத்தியோகம் பெறப் புதுடில்லி சென்றவன், கராச்சி காங்கிரசுக்கும் போய் வந்தான். அங்கே தாரிணி என்பவளைக் காணும் - கண்டு காதல் கொள்ளும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டியது. ஆனால் தாரிணியை மணந்துகொள்ளும் வாய்ப்பைத் தடுத்தவள் அவன் தாயார் காமாட்சி அம்மாள். தாரிணி அவன் மனம் அறிந்து விலகிக் கொண்டாள். பீகார் பூகம்பத்தில் கஷ்டப்பட்டவர்களுக்குச் சேவை செய்யப் போய்விட்டாள். பின்னர் தான் இறந்து விட்டதாகக் கதையும் கட்டிவிட்டாள். பிறகுதான் காமாட்சி அம்மாள் லலிதாவைப் பெண் பார்க்க ராகவனை வற்புறுத்தி ராஜம்பேட்டைக்கு அழைத்து வந்தாள். லலிதாவைப் பெண் பார்க்க வந்தவன் சீதாவைப் பார்த்து விட்டுத் தனக்குச் சீதாவைத்தான் பிடித்திருப்பதாகவும் பணம் காசு இன்றியே மணந்து கொள்வதாகவும் சம்மதம் தெரிவித்து விட்டான்.

லலிதாவின் தாயார் சரஸ்வதி அம்மாளுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. ஆனால் லலிதாவின் தமையன் சூரியநாராயணன் ஒன்றுக்கு இரண்டாக ஒரே பந்தலில் திருமணம் நடக்க வழி செய்தான். தேவபட்டணம் வக்கீல் ஆத்மநாதய்யர் பிள்ளை பட்டாபிராமனும் லலிதாவும் ஏற்கனவே ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தனர் என்ற ரகசியம் அவனுக்குத் தெரிந்திருந்தது. அதைச் சாதகமாகப் பயன்படுத்தி ஒரு பந்தலில் இரு முகூர்த்தங்கள் நடத்த ஏற்பாடாயிற்று. முதல் நாள்வரை சீதாவின் தந்தை துரைசாமி ஐயர் பம்பாயிலிருந்து வரவில்லை. ஆனால் ஒரு தந்தி வந்தது. சீதாவின் கல்யாணத்தை நிறுத்திவிடவும் என்று! அதை மறைத்துச் சீதாவின் திருமணம் நடக்கும்படி செய்துவிட்டான் சூரியா.

இல்லறத்தின் பயனாகக் குழந்தை வசந்தியுடனும் மாமியார் காமாட்சியம்மாளுடனும் புதுக் குடித்தனம் மீண்டும் நடத்தத் தில்லிக்கு வந்தாள் சீதா. சூரியாவும் அவர்களுக்குத் துணையாக வந்தான். அழைத்துச் செல்ல ஸ்டேஷனுக்கு வந்த ராகவன், வேறு ஒரு ரயிலில் தாரிணியைப் பார்த்துவிட்டான். அவளோடு பேச ஓடியவனை முழுவதும் பேச விடாமல் வண்டி நகர்ந்து விட்டது. இச்சம்பவம் சீதாவுக்கும் ராகவனுக்கும் இடையே உள்ள அந்நியோந்நியத்தைக் குலைத்துப் பூசலுக்கு வழி வகுத்துவிட்டது. இருந்தாலும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் குடும்பம் நடந்து வந்தது.

சீதா, சூரியா, ராகவன் மூவரும் ஒருநாள் தாஜ்மகால் பார்க்க ஆக்ராவுக்குப் போனார்கள். அங்கே எதிர்பாராத விதமாகத் தாரிணியைச் சந்தித்தார்கள். தண்ணிலவிலே தாஜ்மகாலைப் பார்க்கத் திட்டம் தீட்டிக் கொண்டு இரவு அங்கே மீண்டும் சென்றார்கள்.

பேச்சுவாக்கில் சூரியா சோஷலிஸக் கொள்கைக்கு ஓர் உருவம் கொடுத்து உணர்ச்சி வசப்பட்டான். கையிலிருந்த தாஜ்மகால் பொம்மையைப் பூமியில் அடித்தான். அது தெறித்தது. ஒரு துண்டு தாரிணியின் நெற்றிப் பொட்டைத் தாக்கியது. ராகவன் ஓடிப் போய் அவளுக்குப் பணிவிடை செய்ய முனைந்தான். அவனது இந்தச் செயல் சீதாவின் மனத்தில் தீயைச் சுட்டது. அவள் பலப் பல கற்பனைகள் புரியலானாள்.

12. சரித்திர நிபுணர்




"ஸ்ரீமதி தாரிணி தேவி அவர்களுக்கு: இன்று தாஜ்மகாலில் என்னால் தங்களுக்கு நேர்ந்த இன்னலைக் குறித்து வருந்துகிறேன். தங்கள் நெற்றியில் காயப்படுத்தி இரத்தம் வருவிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு அணுவளவும் இருந்ததில்லை. அத்தகைய சந்தேகம் தாங்களும் கொண்டிருக்க மாட்டீர்கள். பேசும்போது உணர்ச்சி வேகத்தினால் தூண்டப்பட்டுக் கையில் இருந்த தாஜ்மகால் பொம்மையை வீசி எறிந்தேன். அது சுக்கு நூறாயிற்று. இதைப் பற்றி நான் வருந்தவில்லை. அசல் தாஜ்மகாலும் ஏதேனும் ஒரு காரணத்தினால் இம்மாதிரி நொறுங்கிப் போயிருந்தாலும் அதற்காக நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன். யாரோ ஒரு மௌடீகக் கிழவனுடைய கையில் இந்தப் பெரிய தேசம் ஒரு காலத்தில் சிக்கிக் கொண்டிருந்தது. வயோதிகத்தினால் அறிவு மழுங்கிவந்த நாளில் அந்த அரசன் காதல் என்னும் மூடப் பிரமை காரணமாக ஒரு பெரிய பொம்மை செய்தான். செத்துப் போன தன்னுடைய காதலியின் ஆத்ம திருப்திக்காக என்று எண்ணிக் கோடி கோடி ரூபாய் செலவிட்டு அந்தப் பொம்மையைச் செய்தான். இதைத்தான் 'தாஜ்மகால்' என்னும் உலக மகா அதிசயங்களில் ஒன்று என்பதாக அறிவற்ற, சிந்தனா சக்தி இல்லாத மனித மந்தைகள் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர். வியந்து கொக்கரிக்கின்றனர்! — இது என்னுடைய உறுதியான அபிப்பிராயம்.

ஆனால் எப்போதோ இருந்து இறந்து போன கிழவன் ஷாஜஹான் தாஜ்மகால் கட்டியதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் பேரில் எனக்குக் கோபம் கிடையாது. கோபங்காரணமாக வேண்டுமென்று அந்தப் பொம்மைத் தாஜ்மகாலை நான் எறியவில்லை. அதன் துகள் தங்கள் நெற்றியில் பட்டுக் காயமாகும் என்றாவது, இரத்தம் வரும் என்றாவது கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. இப்படி எதிர்பாராமல் நேர்ந்த காரியத்துக்காக மறுபடியும் தங்கள் மன்னிப்பைக் கோருகிறேன்.

ஆனால் இந்தக் கடிதத்தை முடிப்பதற்கு முன் இன்னொரு விஷயம் சொல்லத்தான் வேண்டும். தங்களைக் காயப்படுத்த விரும்பவில்லை என்று சொன்னேன் அல்லவா? ஆனால் தங்களுடைய நெற்றியில் ஒரு சிறு காயம் பட்டுவிட்டதற்காக அப்படித் தங்களைச் சூழ்ந்து கொண்டு, 'ஆஹா' என்று ஆர்ப்பாட்டம் செய்தார்களே, அவர்களையெல்லாம் தலையில் இரண்டு குட்டுக் குட்டிக் கன்னத்திலும் இரண்டு அறை கொடுக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. என் கையில் பிரம்பு இருந்தால் தலைக்கு நாலு அடி முதுகில் கொடுத்து இழுத்து அப்பால் விட்டிருப்பேன்.

அறிவற்ற நிர்மூடர்கள்! ஒரு சின்ன விஷயத்துக்கு எத்தனை கூச்சல்? எத்தனை குழப்பம்? எவ்வளவு ஆர்ப்பாட்டம்?

பாரத தேசம் சுதந்திரம் பெறுவதற்குள்ளே இந்த நாட்டு மக்கள் எவ்வளவோ மகத்தான கஷ்டங்களைச் சகித்தாக வேண்டும்; லட்சக் கணக்கான ஜனங்கள் உயிரைப் பலி கொடுத்தாக வேண்டும்; கண்ணைத் திறந்து கொண்டு நெருப்பிலே குதித்தாகவேண்டும். சுதந்திரம் அடைந்திருக்கும் வெளி நாடுகளைப் பாருங்கள்! நாட்டைப் பாதுகாப்பதற்காகப் போர் புரிந்து எத்தனை பேர் கையிழந்தும், காலிழந்தும், கண்ணிழந்தும் அங்கஹீனர்களாக வாழ்நாள் முழுவதும் காலம் கழிக்கிறார்கள். முகமெல்லாம் பயங்கரமான காயங்களின் அடையாளங்களுடன் எத்தனை பேர் உயிர் வாழ்கிறார்கள்? இந்த நாட்டில் நாமோ ஒரு சிறு நெற்றிக் காயத்துக்காக, ஒரு துளி ரத்தம் வந்துவிட்டதற்காக இவ்வளவு தடபுடல் படுத்து



ஹ்ரூம்! இப்படிப்பட்ட கோழைகளையும் பயங்கொள்ளிகளையும், ஹிஸ்டீரியா நோயாளிகளையும் வைத்துக் கொண்டு இந்தப் பாரத தேசம் எப்படித் தான் சுதந்திரம் அடையப் போகிறதோ — ஆண்டவனுக்குத்தான் தெரியும்!

இந்த வீர பூமியில் நம்முடைய முன்னோர்கள் இப்படியெல்லாம் இருக்கவில்லை. வீர இராஜபுத்திர நாட்டுக்கு நாளை நீங்கள் போவீர்கள். அங்கே எத்தகைய வீர புருஷர்களும், வீர வனிதைகளும் ஒரு காலத்தில் வாழ்ந்தார்கள். 'கோட்டை விழுந்து விட்டது; எதிரிகள் உள்ளே புகுந்து

விட்டார்கள்' என்று கேட்டதும், தயாராக வளர்த்து வைத்திருந்த பெருந் தீயில் நூற்றுக் கணக்கான நாரீமணிகள் விழுந்து உயிரை விட்ட நாடல்லவா இது? ராணா சங்கிராம சிங் என்று ஒரு மகா வீரன் இருந்தான். அவனுடைய தேகத்தில் போர்க்களத்திலே பெற்ற தொண்ணூற்றாறு காயங்களின் வடுக்கள் இருந்தனவாம்! முத்துக்களும் ரத்தினங்களும் பதித்த ஆபரணங்களைக் காட்டிலும் அந்தக் காயங்களின் வடுக்களையே சிறந்த பூஷணமாக அந்த மகா வீரன் கருதினனும். அப்படிப்பட்ட வீரர்கள் வாழ்ந்த தேசத்தில் இன்றைக்கு ஒரு சிறு காயம் நம்மையெல்லாம் நிலை கலங்கச் செய்து விடுகிறது. பெண்களை மட்டுமல்ல. புருஷர்களைக் கூட 'ஹிஸ்டீரியா'வுக்கு உள்ளாக்கி விடுகிறது!

இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். எங்கள் நாட்டுக் கவி 'நெஞ்சு பொறுக்குதில்லையே!' என்று ஒரு பாடல் பாடியிருக்கிறார். அந்தப் பாரதியார் பாடல் சீதாவுக்குத் தெரியும். பாடச் சொல்லிக் கேளுங்கள்.

இங்ஙனம் சூரியா'',

இந்தக் கடிதத்தை ஆக்ராவிலிருந்து ரஜனிப்பூருக்குச் சென்றுகொண்டிருந்த ரயிலில் வைத்துத் தாரிணி படித்துக் கொண்டிருந்தாள். ஒரு தடவை படித்து இரண்டாந் தடவையும் படித்துவிட்டு அந்தக் கடிதத்தைத் தன்னுடைய கைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினாள்.

இதைப் பார்த்த ராகவன், ''கடிதத்தை இவ்வளவு பத்திரமாக வைத்துப் பூட்டுகிறீர்களே? அது என்ன காதல் கடிதமா?'' என்று கேட்டான்.

''பிதற்றல்!'' என்றாள் தாரிணி. ராகவனுடைய கேள்வியைப் பற்றித் தான் மேல் கண்ட அபிப்பிராயத்தை அவள் தெரிவித்தாள். ஆனால் ராகவன் அதைத் தெரிந்து கொள்ளாதது போல, ''பிதற்றலைப் பெட்டியில் வைத்துப் பூட்டுவானேன்?'' என்றான்.

* * *

அன்று காலையில் தாரிணியும் அவள் தோழியும் வந்து ரயில் ஏறியபோது ஏற்கனவே வண்டியில் ராகவனும் சீதாவும் மட்டும் ஏறியிருப்பதைக் கவனித்தார்கள். தாரிணியின் மனத்தில் ஒரு சந்தேகம் உதித்தது. ''சூரியா எங்கே?'' என்றாள்.

''அவன் வரவில்லை. டில்லிக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்'' என்றான் ராகவன்.

''நேற்றிரவுச் சம்பவத்துக்காக அவரைச் சண்டை பிடித்துத் துரத்திவிட்டீர்களா என்ன?'' என்று தாரிணி கேட்டாள்.

''நாங்கள் ஒன்றும் சண்டை பிடிக்கவில்லை. அவனுக்கே அவமானமாய் இருந்தது போலிருக்கிறது. பிடிவாதமாய்ப் புறப்பட்டுப் போய்விட்டான்'' என்றான் ராகவன்.

சீதா தன்னுடைய அம்மாஞ்சியின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டி, ''அவனுக்கு ஏதோ அவசர ஜோலியாம். ஆக்ராவுக்கு மட்டும் வருவதாகத்தான் முன்னேயே சொல்லியிருந்தான். உங்களுக்கு ஒரு மன்னிப்புக் கடிதம்கூடக் கொடுத்திருக்கிறான்!'' என்று கூறினாள். பிறகு தன் கணவனைப் பார்த்து, ''கடிதத்தை அவரிடம் கொடுங்களேன்!'' என்றாள்.

''வண்டி புறப்படட்டும்; இப்போது என்ன அவசரம் அந்தக் கடிதத்துக்கு?'' என்றான் ராகவன்.

தாரிணி, ''மன்னிப்பாவது, கடிதமாவது? ஒரு சின்ன விஷயத்துக்காக நீங்கள் எல்லாருமாகச் சேர்ந்து அவரைச் சண்டை பிடித்துத் துரத்தி விட்டீர்கள். எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கிறது!'' என்றாள்.

இது சீதாவுக்குத் திருப்தியாயிருந்தது. ஆனால் ராகவன், கோபமாக, ''சின்ன விஷயமா அது? நெற்றியில் பட்டது போல் கண்ணில் பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்? இருந்தாலும் மனிதராய்ப் பிறந்தவர்கள் இவ்வளவு மிருகத்தனமாக நடந்துகொள்ளக் கூடாது!'' என்றான்.

அவனுடைய அபிப்பிராயத்தை நிருபமா ஆதரித்து, ''ஆமாம்; அந்தப் பையன் சுத்தப் பட்டிக்காடாகத்தான் நடந்து கொண்டான்!'' என்றாள்.

''பட்டணங்களில் உள்ளவர்கள் ரொம்ப நாகரிகமாக நடந்துகொள்வதாக உங்களுடைய எண்ணம்போலிருக்கிறது! பட்டணங்களில் வசிப்பவர்கள் எப்படிச் சில சமயம் புலி கரடிகளாகவும், பேய், பிசாசுகளாகவும் மாறுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது!'' என்றாள் தாரிணி.

வண்டி புறப்பட்டுச் சற்று நேரத்துக்கெல்லாம், ''அந்தக் கடிதம் எங்கே?'' என்று தாரிணி கேட்டாள்.

''ஏது? ஏது? அதைப் பார்க்காவிட்டால் உங்களுக்கு மன நிம்மதி ஏற்படாது போலிருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே ராகவன் கடிதத்தை எடுத்துக் கொடுத்தான்.



மயக்குமெழில்
மலர்ச்சி
ப்ரியதர்ஷினி
வாயில்கள் மற்றும்
ஷர்மீளா
செமி-ஃபுல்
வாயில்கள்
சுசித்ரா
எச். டி. வாயில்கள்
புஷ்பாஞ்சலி
வாஷ்-என்-வேர், சாயந்தோய்த்த
கேம்பிரிக் வாயில்கள்
தி தாவண்கெரே காட்டன் மில்ஸ் லிமிடெட்
- பண்டைய மரபை இன்றைய
வடிவாய்ப் படைக்குமிடம்!
தாவண்கெரே
துணிவகைகள்
tam/dcm/2/72 tam

"அது என்ன காதல் கடிதமா ?" என்று ராகவன் கேலியாகப் பேசிய போது, அவர்கள் எல்லாருக்கும் கடிதத்தை முழுதும் படித்துக் காட்டிவிட வேண்டும் என்று தாரிணிக்குத் தோன்றியது. மறுகணமே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். அந்தக் கடிதத்தில் அடங்கியுள்ள விஷயங்களை இவர்கள் புரிந்து கொள்ளவேமாட்டார்கள். மேலும் ஏதாவது பரிகாசமாகப் பேசுவார்கள். இவ்விதம் எண்ணிச் சீதாவைப் பார்த்து, "நீங்கள் மறுபடியும் உங்கள் அம்மாஞ்சியைப் பார்க்கும்போது, 'இவ்வளவு நீளமான மன்னிப்புக் கடிதத்துக்கு அவசியமே இல்லை' என்று நான் சொன்னதாக அவரிடம் தெரியப்படுத்துங்கள்!" என்றாள்.

ஆயிரம் ஆண்டுகளாக வீர புருஷர்களின் இரத்தமும் தீர மாதரசிகளின் கண்ணீரும் சிந்திப் புனிதமான இராஜபுத்திர நாட்டுக்குள் அவர்கள் ஏறியிருந்த ரயில் வண்டி பிரவேசித்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வறண்ட பூமி; அல்லது மொட்டைப் பாறைகள்; ஆங்காங்கே இடிந்த கோட்டைச் சுவர்கள்; சிதைந்த மண்டபங்கள்: பாழடைந்த மசூதிகள்; பசுமை என்பதையே பார்க்க முடியவில்லை. அடர்த்தியான காடுகள் இல்லை; பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற நெல் வயல்கள் இல்லை; பொன்னிறங்கொண்ட கோதுமைப் பயிர்களும் இல்லை. சிற்சில இடங்களில் தானாக மண்டிய முட்புதர்கள் மட்டும் காணப்பட்டன.

"நாம் போகிற வழி நெடுகிலும் இப்படித்தான் இருக்குமா?" என்று சீதா கேட்டாள்.

"இல்லை; ரஜனிபூர் சேர்ந்துவிட்டால் வேறுவிதமா யிருக்கும். ஆனால் அங்கே போய்ச் சேருகிற வரையில் இந்த லட்சணந்தான்: 'சுதந்திரம்,' சுதந்திரம்' என்று அடித்துக் கொள்கிறீர்களே! இராஜபுத்திர வீரர்கள் அந்த நாளில் சுதந்திரத்துக்காகப் போரிட்டதன் பலன்தான் இது! இராஜஸ்தானத்தில் பெரும் பகுதி பாலைவனமாகப் போய் விட்டது!" என்று ராகவன் சொன்னான்.

"இராஜபுத்திரர்கள் சுதந்திரத்துக்காகப் போரிட்டதனால் இராஜஸ்தானம் பாலைவனமாகவில்லை. ஒருவருக்கொருவர் சகோதரச் சண்டையிட்டதினால் இப்படியாயிற்று. அண்ணன் சுதந்திரத்துக்காகச் சண்டை போட்டால் தம்பி எதிராளியோடு சேர்ந்து கொண்டான். எத்தனை ராஜபுத்திரர்கள் மொகலாயர்களுக்கு அடிமையாகி ஏவல் செய்து வாழ்ந்தார்கள்! இந்தியா தேசம் நாசம்



"நீ கேட்ட புடவை வாங்கித் தரலேங்கறதுக் காக இப்படிக் குடங்குடமா கண்ணீர் விடறது உனக்கே நல்லா யிருக்கா பிரேமா ?"

அடைந்தது சகோதரச் சண்டையினால் தான். இதில் வேடிக்கை என்னவென்றால், இவற்றையெல்லாம் சரித்திரத்தில் படித்திருந்தும் நமக்குப் புத்தி வந்தபாடில்லை. இன்னமும் சகோதரச் சண்டைகள் போட்டுக் கொண்டுதான் இருக்கிறோம்" என்றாள் தாரிணி.

"அம்மணி! நீங்கள் என்ன பெரிய சரித்திர நிபுணரைப் போல் பேசுகிறீர்களே!" என்று ராகவன் பரிகாசக் குரலில் கேட்டான்.

"என்ன சொன்னீர்கள் ?" என்று சொல்லிவிட்டு நிருபமா இடியிடி என்று சிரித்தாள்.

அவளுடைய சிரிப்பின் காரணம் என்னவென்று விளங்காமல் ராகவன் திகைத்தான்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்றான்.

"என்ன சொன்னீர்கள்? 'பெரிய சரித்திர நிபுணரைப் போல்' என்று? 'போல்' என்று சொன்னதற்காகத் தான் சிரித்தேன்" என்றாள் நிருபமா.

"அப்படிப் 'போல்' என்ற வார்த்தையில் நகைச்சுவை என்ன இருக்கிறது? எனக்கு விளங்கவில்லையே ?"

"உங்களுக்கு விஷயம் தெரியாதென்று இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. தாரிணியைப் பழைய தேசசேவிகை தாரிணி என்றே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது. பீஹார் பூகம்பத்துக்குப் பிறகு அவள் காலேஜில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்று இப்போது யுனிவர்சிடி உதவிச் சம்பளம் பெற்றுச் சரித்திர ஆராய்ச்சி

சீக்கிரம் போகும்!



ஒரு தபாலாபீஸில் ஒருவன் இருபது பைசா ஸ்டாம்ப் கேட்டான். அங்கிருந்த குமாஸ்தா இருபது பைசா வீர சாவர்க்கரின் ஸ்டாம்பை எடுத்துக் கொடுத்தார்.

"இதை ஒட்டினால் போதுமா? கடிதம் ரொம்ப அவசரம். சீக்கிரம் போய்ச் சேரணும்" என்றான்.

உடனே குமாஸ்தா அந்த ஸ்டாம்பைத் திரும்பி வாங்கிக்கொண்டு இருபது பைசா நாட் விமான ஸ்டாம்ப் கொடுத்தார்! —பி. ஆர். ராஜாராம்.

செய்து வருகிறாள். இது உங்களுக்குத் தெரியுமென்று எண்ணியிருந்தேன். பின்னே எதற்காக என்னையும் இழுத்துக் கொண்டு ஊர் ஊராக அலைகிறாள் என்று நினைத்தீர்கள்? தற்போது இராஜஸ்தானத்துச் சரித்திரத்தில் விசேஷ ஆராய்ச்சி நடைபெறுகிறது!''

நிருபமா இவ்விதம் சொன்னதும் ராகவனுடைய உள்ளம் ஒரே ஒரு நிமிஷத்தில் என்னவெல்லாமோ கற்பனை செய்யத் தொடங்கியது. ஆச்சரியத்தில் மூழ்கிப் போனான். ஆஹா! படிப்பின் மேல் உள்ள ஆசையினால் அல்லவா இவள் கல்யாணத்தை வெறுத்திருக்கிறாள்? இந்த உண்மையை நம்மிடம் முன்னமேயே தெரிவித்திருக்கக்கூடாதா? தெரிவித்திருந்தால் இவளுடைய படிப்புக்கு நாம் குறுக்கே நின்றிருப்போமா? படிப்பு முடியும் வரையில் காத்திருந்திருக்கலாமே? — என்று அவன் மனம் எண்ணமிட்டது.

தாரிணி பி. ஏ. பட்டம் பெற்றுச் சரித்திர ஆராய்ச்சி செய்து வருகிறாள் என்னும் செய்தியைச் சொல்லிவிட்டு நிருபமா படுத்துத் தூங்கிப் போனாள். தாரிணியிடம் அவளுடைய காலேஜ் வாழ்க்கையைப் பற்றி ராகவன் பல கேள்விகள் கேட்டான். அவளோ பராமுகத்துடன் ஏனோதானோவென்று பதில் சொல்லி வந்தாள். சற்றுநேரத்துக்கெல்லாம் ராகவனும் தூங்கிவிட்டான்.


பிறகு தாரிணி சீதாவின் அருகில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு, ''உங்கள் அம்மாஞ்சி சூரியாவைப் பற்றிச் சொல்லுங்கள். அவர் எப்போதுமே இப்படித்தான் படபடப்பாயிருப்பாரா?'' என்று கேட்டாள்.

முந்தைய சம்பாஷணையின் போதெல்லாம் சீதாவுக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் கோபம் வளர்ந்து வந்தது. முதல் நாள் தாரிணியைச் சந்தித்தது முதல், நிருபமா — ராகவன் — தாரிணி சம்பாஷணைகளைக் கேட்டதிலிருந்தும் தன்னுடைய சொந்த ஊகத்தினாலும் அவள் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டிருந்தாள். ராகவனும் தாரிணியும் பழைய சிநேகிதர்கள் என்பது நிச்சயம். பத்மாபுரத்தில் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் பேசிய வம்புப் பேச்சுக்களில் ஏதோ உண்மை இருக்கத்தான் வேண்டும். ராகவனுக்குத் தாரிணியின் மேல் இன்னும் அபிமானம் இருந்தது என்பதும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்தது. தான் இருக்கும் போது இதையெல்லாம் அவர்கள் காட்டிக் கொள்வதை நினைத்து நெஞ்சம் கொதித்தது. சீச்சீ! என்ன வெட்கங்கெட்ட ஸ்திரீ இவள்! நம்மை எதற்காக இப்படித் தொடர்ந்து வருகிறாள்? வேறு எங்கேயாவது போய்த் தொலைவதுதானே? சூரியாவும் நிருபமாவின் கணவனும் இந்தக் கோஷ்டியில் சேர்ந்து கூட்டமாக இருந்தபோது ஒரு மாதிரி கலகலப்பாக இருந்தது. இப்போது அவர்களும் இல்லை; அதனால் கலகலப்பும் இல்லை. இந்த மாதிரி நேரும் என்று தெரிந்திருந்தால், இந்தப் பிரயாணத்துக்கு வரவில்லையென்றே சொல்லியிருக்கலாம். இப்பொழுதுதான் என்ன! 'அவள் வந்தால் நான் வரவில்லை. அவளையே அழைத்துக் கொண்டு போங்கள். நான் டில்லிக்குத் திரும்பிப் போகிறேன்' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டியதுதான்... இவ்விதம் எண்ணி எண்ணிப் பல முறை பேசுவதற்குச் சீதாவின் உதடுகள் துடித்தன. ஆனால் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. அப்படிச் சொன்னால் அதன் பலன் என்ன ஆகுமோ என்று உள்ளத்தின் ஒருபகுதி அஞ்சியது.

இத்தகைய மன நிலையில் சீதா இருந்தபோது தாரிணி அவளிடம் நெருங்கி உட்கார்ந்து, ''சூரியாவைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்றதும், சீதாவுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. ''சூரியாவைப் பற்றி இப்போது என்ன விசாரணை வேண்டிக் கிடக்கிறது? என்னைப்போல் அவனும் ஓர் அசடு; அநாதை!'' என்றாள்.

''சகோதரி! ஏன் இவ்வளவு வெறுப்பாகப் பேசுகிறாய்? என் நெற்றியில் காயப்படுத்தி விட்டதற்காகச் சூரியா ரொம்பவும் மனம் நொந்து எழுதியிருக்கிறார். உத்தம குணம் படைத்தவர். ஆனால் கொஞ்சம் படபடப்புக்காரர் என்று தோன்றுகிறது. காயம் சரியாய்ப் போய்விட்டது. என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று உன்னிடம் சொல்லியனுப்ப விரும்பினேன். உனக்கு அவரைப் பற்றிப் பேச இஷ்ட

A cool idea on gracious living



Live with an elegant table Rallifan. Chic, streamlined. With the famous Rallifan quality built into every feature: whisper-silent operation, greater cooling power, excellent after-sales service. And a 2-year guarantee.

You're cooler with a

Rallifan

A product of the Ralli Group

மில்லையென்றால், வேண்டாம்!'' என்றாள் தாரிணி.

இதைக் கேட்டதும் சீதாவின் மனம் மாறிவிட்டது. ''இல்லை, இல்லை. எனக்கு வெறுப்பு ஒன்றுமே இல்லை. சூரியா உத்தமமான பிள்ளைதான்; அவ்வளவு ஒன்றும் படபடப்பாக அவன் பேசுவதும் கிடையாது. என் மாமா குடும்பத்திலேயே சூரியாதான் நிதானத்துக்கும் பொறுமைக்கும் பெயர்போனவன். நேற்று அவன் படபடப்பாகப் பேசியதும் தாஜ்மகால் பொம்மையை வீசி எறிந்து உடைத்ததும் எனக்கே ஆச்சரியமா யிருந்தது. பாவம்!' அவனுக்கு என்ன மனக் கஷ்டமோ? மொத்தத்தில் அதிர்ஷ்டக் கட்டை; இல்லாவிட்டால் இப்படி வந்து திண்டாடுவானேன்? படித்துப் பாஸ் செய்து எவ்வளவோ நல்ல நிலைமைக்கு வந்திருக்கலாம்!'' என்றாள்.

''அதிர்ஷ்டக்கட்டை என்று எதனால் சொல்கிறாய்?'' என்று தாரிணி கேட்க, சீதா கொஞ்சங் கொஞ்சமாகச் சூரியாவின் கதையைச் சொன்னாள். அவனுடைய தகப்பனார், தமையன், அம்மா, தங்கை ஆகியவர்களைப் பற்றிச் சொன்னாள். தமையனோடும் ஊராரோடும் அவனுக்கு நேர்ந்த தகராறுகளைப் பற்றியும் விரிவாகச் சொன்னாள். ஆனால் தன்னுடைய பிறப்பு, வளர்ப்பு, கல்யாணம் — இவற்றைக் குறித்து மட்டும் எதுவும் சொல்லவில்லை.

13. ரஜனிபூர் ஏரி

ரஜனிபூர் சமஸ்தானத்தின் திவான் ஸர் கே. கே. ஆதிவராகாச்சாரியாருக்குப் புத்திக் கூர்மையுள்ள வாலிபர்களிடம் பொதுவாக அபிமானம் உண்டு. சௌந்தரராகவன் இங்கிலாந்துக்குப் பிரயாணம் செய்தபோது கப்பலில் அவரைச் சந்தித்துப் பழக்கம் செய்துகொண்டான். ராகவனுடைய புத்திக் கூர்மையும் சாதுர்யமான சம்பாஷணையும் திவான் ஆதிவராகாச்சாரியாரின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அதோடு புதுடில்லி செக்ரட்டேரியட்டில் உத்தியோகம் பார்ப்பவர்களில் எத்தனை பேரைத் தெரிந்திருக்கிறதோ, அவ்வளவுக்குப் புருஷார்த்தம் கைகூடுவது எளிதாகும் என்ற நம்பிக்கையும் ஸர் ஆதிவராகாச்சாரியாருக்கு இருந்தது. அவருக்குச் சந்தான பாக்கியத்தைப் பகவான் பரிபூரணமாக அளித்திருந்தார். பெரிய உத்தியோகப் பதவிகளை வகிக்கத் தகுந்தவர்களாக அவருக்குப் புதல்வர்களும் மாப்பிள்ளைகளும் பலர் இருந்தார்கள்.

இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்ததும் ரஜனிபூருக்கு ஒரு தடவை வர வேண்டும் என்றும் வரும்பொழுது மனைவியையும் அழைத்துவர வேண்டும் என்றும் ஆதிவராகாச்சாரியார் சௌந்தர ராகவனிடம் சொல்லி யிருந்தார். அந்த அழைப்புக்கு இணங்க இப்போது சௌந்தர ராகவன் சீதாவுடன் திவான் மாளிகைக்குச் சென்றான். தாரிணியும் அவளுடைய தோழியும் வேறு ஜாகைக்குச் சென்றார்கள்.

துரதிர்ஷ்டவசமாக அச்சமயத்தில் திவான் ஆதிவராகாச்சாரியார் முக்கியமான ராஜாங்கக் காரியமாக வெளியூருக்குப் போயிருந்தார். எனினும் ராகவனுடைய தந்தையைப் பார்த்துவிட்டு அவனையும் அவனுடைய மனைவியையும் கவனித்துக் கொள்ளும்படியாகத் தம்முடைய புதல்விகளிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தார். அவர்கள் அவ்விதமே ராகவனையும் சீதாவையும் வரவேற்றார்கள்.

ஆதிவராகாச்சாரியாரின் புதல்விகளான பாமா, தாமா இருவரும் இங்கிலாந்து சென்று திரும்பியவர்கள். ஆங்கில நாகரிகத்தில் முழுகியவர்கள். ஒருத்தி ஒல்லியாயும் உயரமாயும் இருந்தாள். இன்னொருத்தி குட்டையாயும் பருமனாயுமிருந்தாள். இரண்டு பேரும் தலை மயிரை 'பாப்' செய்து கொண்டிருந்தார்கள். இருவரும் உதட்டில் சிவப்புப் பசை தடவிக் கொண்டுதான் வெளியில் புறப்படுவார்கள். எப்போதும் இங்கிலீஷில்தான் பேசுவார்கள். அதுவும் ஆங்கில நாவலாசிரியர் வோட்ஹவுஸின் கதாபாத்திரங்கள் பேசுகிற இங்கிலீஷ் நடையைக் கையாண்டு பேசுவார்கள். பியானோ வாத்தியத்தில் இங்கிலீஷ் சங்கீதம் வாசிக்கவும், 'பால்ரூம் டான்ஸ்' ஆடவும் கற்றுக்கொண்டு திறமையும் பெற்றிருந்தார்கள்.

அப்படிப்பட்டவர்களிடையே அகப்பட்டுக் கொண்டு சீதா ரொம்பவும் விழித்தாள். அவர்கள் சீதாவிடம் முதலில் இங்கிலீஷில் ஏதாவதுகேட்பார்கள். சீதா ஒன்றும் புரியாமல் திகைப்பதைக் கண்டு தட்டுத் தடுமாறித் தமிழில் அதையே சொல்வார்கள். அவர்கள் இங்கிலீஷ்காரிகளைப் போல் ஆங்கில வார்த்தைகளை உச்சரித்துப் பேசியபடியால் சீதாவுக்குத் தெரிந்திருந்த கொஞ்சம் நஞ்சம் இங்கிலீஷும் அங்கே பயன்படவில்லை. ஆகையால் குளத்துத்

தண்ணீரிலிருந்து எடுத்துக் கொதிக்கின்ற சட்டுவத்தில் போடப்பட்ட மீனைப்போல் சீதா அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டுதத்தளித்தாள்.

சீதாவுடன் பழகினைதக் காட்டிலும் ராகவனுடன் அவர்கள் சரளமாகப் பேசிப் பழகினார்கள். ராகவனும் அவர்களுடன் உற்சாகமாகப் பேசினான். அவன் அப்போது வீசிய நகைச்சுவைத் துணுக்குகளையும் ஹாஸ்ய சிலேடைகளையும் கேட்டு அவர்கள் இடிஇடி என்று சிரித்தார்கள். இதெல்லாம் சீதாவுக்கு ஓரளவு அருவருப்பாயிருந்தாலும் அவனுக்குக் கோபமோ, ஆத்திரமோ ஏற்படவில்லை. அந்தப் பெண்கள் இருவரும் அவ்வளவு அழகாயில்லை என்பதுதான் இதற்குக் காரணமோ, அல்லது அவர்கள் விஷயத்தில் ராகவனுக்குக் கொஞ்சமும் மதிப்புக் கிடையாது என்பது சீதாவின் உள்மனத்துக்குத் தெரிந்திருந்ததோ, நாம் சொல்ல முடியாது.



இடையிடையே சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் ராகவன் சீதாவிடம் தனியாக அந்தப் பெண்களின் அவலட்சணத்தைப் பற்றியும் குரங்குச் சேஷ்டைகளைப் பற்றியும் சொல்லி வந்தான். "ஆனாலும் இவர்களிடம் நீ கற்றுக் கொள்ள வேண்டியது நிரம்ப இருக்கிறது. புதுடில்லியில் சமூக வாழ்க்கை நடத்துவதற்குச் சிற்சில நடைஉடை பாவனைகள் அவசியம்!" என்று ஒரு தட்டை ராகவன் சொன்னான்.

"இவர்களிடம் நான் என்ன கற்றுக் கொள்ள வேண்டுமாம்? உதட்டில் சிவப்புப் பசை தடவிக் கொள்ளவா?" என்று சொல்லிவிட்டுச் சீதா சிரித்தாள்.

"ஆமாம்; அதுகூடத்தான் கற்றுக் கொள்ள வேண்டும். 'லிப்ஸ்டிக்' உபயோகிப்பதில் பிசகு என்ன இருக்கிறது? நம்முடைய நாட்டில் நாம் வெற்றிலை போட்டுக் கொள்ளவில்லையா? அதனால் உதடு சிவப்பதில்லையா? கதாநாயகிகளின் உதடுகளைப் பல முத்துக்கும் கோவைப் பழத்துக்கும் மாதுளை மொட்டுக்கும் ஒப்பிட்டுக் கவிகள் வர்ணித்தால் மட்டும் 'ஆஹா' என்று பிரமாதப்படுத்துகிறோமே?" என்றான் ராகவன்.

"அதெல்லாம் இயற்கையாக இருக்க வேண்டும்" என்றாள் சீதா.


"இயற்கையாவது, மண்ணாங்கட்டியாவது? இயற்கையாக இருந்தால், ஆப்பிரிக்கா தேசத்துக் காட்டு மிராண்டிகளைப் போல் இருக்க வேண்டியதுதான். வகிடு எடுத்துத் தலை வாரிக் கொள்வதும், நெற்றியில் பொட்டிட்டுக் கொள்வதும் கண்ணுக்கு மை தீட்டிக் கொள்வதும், கைக்கு மருதாணி இட்டுக் கொள்வதும் இயற்கையா? காதிலும் மூக்கிலும் தொளையிட்டு நகை போட்டுக் கொள்வதுதான் இயற்கையா? எல்லாவித அழகும் அலங்காரமும் செயற்கையில் சேர்ந்ததுதான்!" என்று ராகவன் அடித்துப் பேசியபோது, சீதாவினால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக "அலங்காரத்துக்கும் ஒரு அளவு வேண்டும். தாரிணியைப் பாருங்கள்; அவளும் இங்கிலீஷ் படித்துப் பட்டம் பெற்றவள்தானே? அவள் 'லிப்-ஸ்டிக்' தடவிக் கொள்கிறாளா?" என்று சொல்லி வைத்தாள்.

"சில பேருக்குப் பிறவியிலேயே அழகு உண்டு: அவர்கள் ஒரு அலங்காரமும் செய்து கொள்ளாவிட்டாலும் நன்றாயிருப்பார்கள். அந்த மாதிரி எல்லாரும் இருக்க முடியுமா? புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்டது போலாகும்!" என்று சொன்னான் சௌந்தரராகவன்.

சீதாவுக்குத் தாரிணியின் பேச்சை எதற்காக எடுத்தோம் என்று இருந்தது.

இந்தியாவில் உள்ள சுதேச சமஸ்தானங்களின் தலைநகரங்களுக்குள்ளே

மிருகங்களும் விளையாடுகின்றன !



○ மிருகங்களுக்கு ஒலிம்பிக் பந்தயங்கள் இல்லை. ஆனால் அவையும் பிரமாதமான சாம்பியன்கள் தாம்!

○ ஒரு புலி ஹைஜம்ப் இருபது அடி தாண்டும்! உலகத்திலேயே வெகு வேகமாக ஓடக்கூடிய ஜீவன் சிறுத்தைப் புலி (Cheetah)தான். ஒரு மணிக்கு 80 மைல் வேகத்தில் மின்னலென்ன ஓடிச்செல்லும். ஆனால் உலக ரிகார்டு ஏற்படுத்திய மனிதர் மணிக்கு 26 மைல் வேகமே ஓடுவார்.

○ பத்தடி உயர ஹர்டில் போட்டியில் மான்கள் சாம்பியன்கள்.

○ பறக்கும் அணில்கள் ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்துக்கு ஐம்பதிலிருந்து அறுபது அடி தூரம் வரை தாண்டிவிடும்.

○ புலியை 'வெயிட் லிப்டிங்' சாம்பியனாகச் சொல்லலாம். அதன் எடையை விட இரண்டு மடங்கு அதிக கனம் உள்ள பசுவை எளிதாக இழுத்துச் செல்லும்.

○ முதுமலைக் காட்டில் ஒரு புலிக்கும் காட்டெருமைக்கும் (பைஸன்) சண்டை தொடர்ந்து இரண்டு நாட்கள் நடந்தது!

○ மூன்று நான்கு டன் எடையுள்ள யானை மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் ஓடும்.

○ வுட்காக் (woodcock) என்ற பறவை தொடர்ந்து 1500 மைல்கள் விடாமல் பறந்து ரிகார்டு கண்டிருக்கிறது. ஹிமாலயத்திலிருந்து நீலகிரி மலைக்கு நிற்காமல் பறந்து வந்து விடுகின்றன. ஆதாரம்: Games in the animal world by M. A. Badshaw

தகவல்: பி. எஸ். எம்.

ரஜனிபூர் மிக அழகான ஒரு பட்டணம். மறுநாள் முழுதும் ராகவனும் சீதாவும் அந்தப் பட்டணத்தைச் சுற்றிப் பார்ப்பதில் கழித்தார்கள். ரஜனிபூர் ராஜாவின் பழைய அரண்மனை, புதிய அரண்மனை வஸந்தோத்ஸவத்தைக் கொண்டாடும் பளிங்கு மாளிகை, நந்தவனங்கள், பிராணிக் காட்சிச் சாலைகள், பட்டணத்துக்குச் சற்றுத் தூரத்திலிருந்த பழைய கோட்டை கொத்தளங்கள் — எல்லாவற்றையும் பார்த்துக் களித்தார்கள். ஆனால் ஓர் இடத்திலாவது அதிக நேரம் அவர்கள் நிற்கவில்லை. எந்த இடத்துக்குச் சென்றாலும் ராகவன் நெருப்பில் காலை வைத்துவிட்டவன்போல் அவசரப்பட்டான். ஒன்று விடாமல் எல்லாவற்றையும் பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வத்தினால் சீதாவும் ராகவனுடைய அவசரத்துக்கேற்ப அங்கங்கே பார்க்க வேண்டியதைச் சட்டென்று பார்த்துவிட்டுக் கிளம்பினாள்.

திவானுடைய பங்களாவுக்குச் சாயங்காலம் திரும்பி வந்து கொண்டிருந்த போது, "அவர்கள் இரண்டு பேரையும் இன்றைக்கெல்லாம் காணவேயில்லையே?" என்றாள் சீதா. இப்படிச் சொல்லிவிட்டு ஏன் சொன்னோம் என்று உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

"அதைப் பற்றித்தான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கு டெலிபோன் பண்ணுவதாகச் சொன்னார்கள்; பண்ணவில்லை!" என்றான் ராகவன்.

இவ்விதம் சொல்லி இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் ராகவன் திவானுடைய டிரைவரிடம், "டஹரோ!" என்று கத்தினான். யாரும் தன்னை இவ்விதம் அதட்டிப் பேசி அறியாத அந்த மோட்டார் டிரைவர் சடக்கென்று பிரேக்கைப் போட்டு வண்டியை நிறுத்தியபோது, சீதாவைத் தூக்கிப் போட்டுவிட்டது. விஷயம் என்னவென்று பார்த்ததில், பக்கத்தில் ஒரு வீட்டுக்கு அருகில் டோங்கா வண்டியிலிருந்து தாரிணியும் நிருபமாவும் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

ராகவன் தாரிணியைப் பார்த்து, "இதென்ன நீங்கள் இப்படி ஏமாற்றி விட்டீர்கள்?" என்று கடுமையான குரலில் கேட்டான்.

"ஏமாற்றுவது என்ன? உங்களுடன் ஊர் சுற்றப் போனால் ஒன்றுமே பார்க்க முடியாது. விவாதம் செய்வதற்குத் தான் சரியாயிருக்கும். அதனால்தான் நாங்கள் இருவரும் தனியாகப் போய் வந்தோம்" என்றாள் தாரிணி.

"நாளைக்கும் இப்படிச் செய்வதாகத்தான் உத்தேசமா?" என்று ராகவன் கேட்டான்.

"நாளைக்கு ஏரிக்குப் போவதாயிருந்தால் நாங்களும் வருகிறோம். இங்கே வந்து எங்களை அழைத்துக் கொண்டு போக முடியுமா?" என்றாள் தாரிணி.

"பேஷாக முடியும். ஆனால் இன்று மாதிரி ஏமாற்றிவிடாதீர்கள். எனக்கு ரொம்பக் கோபம் வரும்!" என்றான் ராகவன்.

ராகவன் அன்றைக்கெல்லாம் ஏன் அவ்வளவு பரபரப்பாக இருந்தான் என்னும் விஷயம் சீதாவுக்கு இப்போது நன்கு விளங்கியது. அன்றிரவு அவள் சேர்ந்தாற்போல் அரை மணிக்கு மேல் தூங்கவில்லை. காலையில் படுக்கையை விட்டு எழுந்திருந்தபோது தலையை ஒரே கனமாகக் கனத்தது. இரண்டு பொட்டுக்களிலும் சம்மட்டியால் அடிப்பது போல் வலித்துக் கொண்டிருந்தது. "நான் இன்றைக்கு ஏரி பார்க்க வரவில்லை. டில்லிக்கே திரும்பிப் போய்விட்டாலும் நல்லதுதான்!" என்று ராகவனிடம் சொன்னாள். (தொடரும்)

"ஸைக்கோ ஸாரநாதன்"

பூர்வ கதை

பம்பாயில் நாற்பத்திரண்டு கொலைகள் புரிந்த ஸாரநாதனைப் போலீஸார் அரும்பாடு பட்டுக் கண்டுபிடித்து வழக்குத் தொடுக்கிறார்கள். பானர்ஜி என்ற வழக்கறிஞர் அவன் சித்த ஸ்வாதீனமில்லாதவன் எனத் திறம்பட வழக்காடி மரண தண்டனை பெறாமல் காப்பதோடு சிறைவாசம் அனுபவிக்கும்போதே டாக்டர் குஹாவிடம் சிகிச்சைக்காகப் போய்வர அனுமதியும் பெற்றுத் தருகிறார். ஸைக்கோ ஸாரநாதனே மனோதத்துவ நிபுணர் டாக்டர் குஹாவையே கொன்று விட்டுப் போலீஸாரையும் ஏமாற்றி விட்டுத் தப்பிவிடுகிறான். துறவி வேஷம் போட்டு அமிர்தலிங்கம் என்ற பெயரில் கொடைக்கானலுக்கு வந்து சேருகிறான்.

இதே தருணத்தில் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் (ஸி. ஐ. டி. பிரிவு) நடராஜன் தமது மகனுடன் கொடைக்கானல் வந்து சேருகிறார் ஓய்வு கருதி.

எழுத்தாளர் பத்மநாபனும் தமது குடும்பத்துடன் உல்லாசமாய் விடுமுறையைக் கழிக்க அங்கு வந்து சேர்கிறார்.

கொடைக்கானலில் ஒன்றன் பின் ஒன்றாக இரு துர்மரணங்கள் ஏற்பட்டு விடுகின்றன. நடத்தை கெட்டவளான வனஜாவின் கணவன் தினகரனும் பிரபல நட்சத்திரம் பிரமீளாவின் தாயார் கனகமும் சந்தேகாஸ்பதமான முறையில் இறக்கிறார்கள். ஸைக்கோ ஸாரநாதன் தமிழகத்துக்கு வந்திருக்கலாம் என்று மகாராஷ்டிரப் போலீஸார் அபிப்பிராயம் தெரிவித்திருந்தாலும் அதையொட்டி இங்கு மர்மமான முறையில் இரண்டு மரணங்கள் நிகழ்ந்ததாலும் மக்கள் ஸைக்கோ ஸாரநாதன் கொடைக்கானலுக்குத்தான் வந்திருக்கிறான், மாறு வேடத்தில் வளைய வருகிறான், தன் கொலைத் தொழிலைத் தொடர்கிறான் என்று நம்புகிறார்கள். அவனைப் பிடிக்கவே டி. ஐ. ஜி. நடராஜன் வந்தார் என்றும் ஆனால் தமது கையாலாகாத்தனத்தை வெளிக்காட்டிக் கொள்ள வெட்டி விடுமுறையில் வந்திருப்பதாகச் சொல்கிறார் என்றும் பல்வேறு வதந்திகள் பரவுகின்றன. உல்லாசப் பயணிகளிடையே பீதி பரவுகிறது. ஓட்டல்கள் காலியாகின்றன.

நடராஜன் (டி.ஐ.ஜி.), பத்மநாபன் குடும்பம், அமிர்தலிங்கம் ஆகிய எல்லோருமே தங்கியிருக்கும் பெரிய ஓட்டலின் அதிபர் தனராஜ், வதந்தி காரணமாகத் தம் ஓட்டல் வெறிச்சோடிப் போவது பற்றி நடராஜனிடம் புலம்புகிறார்.

இதன் மத்தியில் எழுத்தாளர் மகள் மீனுவுக்கும், டி. ஐ. ஜி. மகன் ரங்கநாதனுக்கும் இடையில் காதல் வளர்கிறது. இதை உணர்ந்த மீனுவின் தாய் அம்புஜம், ஜாதி வேற்றுமையை மனத்தில் கொண்டு இந்தக் காதலை அரும்பிலேயே கிள்ளியெறிய நினைக்கிறாள். அதற்காகவும், ஸைக்கோவினால் தன் குடும்பத்துக்கு ஆபத்து ஏதும் நேராதிருக்கவும் சென்னை திரும்பிவிடத் துடிக்கிறாள் அம்புஜம்.

ஆனால் மீனு பெற்றோரிடம் ஏதேதோ கூறி வாதாடி, கொடைக்கானல் வாச காலம் குறைந்து போகாமல் காத்துக் கொள்கிறாள். ரங்கனைப் பிரிய அவளுக்கு மனமில்லாததே காரணம்.

ஹோட்டல் பஸ் பத்மநாபன் குடும்பத்தையும், டி-ஐ-ஜி. நடராஜனையும் அவர் மகனையும் வேறு சிலரையும் ஏற்றிக் கொண்டு பேரிஜம் ஏரிக்குப் போகிறது. அந்த உல்லாசப் பயணத்தில் அமிர்தலிங்கமும் (ஸைக்கோ ஸாரநாதன்) கலந்து கொண்டு செல்கிறான்.

கி.ராஜேந்திரன்





22. ''மஞ்சள் பத்திரிகையின் மகிமை!''

பஸ்ஸில் அதிகக் கூட்டம் இல்லை. ஹாப்பி ஹாலிடே ஹோட்டலில் இருந்தவர்களில் பெரும்பாலோர் அறைகளைக் காலி செய்து கொண்டு போய்விட்டதாலும் அந்த பஸ்ஸில் ஹோட்டலில் தங்குபவர்களன்றி வேறு யாரும் ஏற அனுமதிக்கப்படுவதில்லை என்பதாலும் பத்மநாபன், நடராஜன் குடும்பங்கள் தவிர வேறு நாலைந்து பேர்களே இருந்தார்கள். அவர்களில் அமிர்தலிங்கமும் ஒருவன். கழுத்திலிருந்து தொங்கிய நீண்ட ஜபமாலையை நெஞ்சுக்கு நேரே பிடித்துச் சக்கர வட்டமாகச் சுழற்றிக் கொண்டிருந்தான்.

விசுப்பயல், நின்ற நிலையிலிருந்தபடி தன் தலையால் அப்பாவின் இளம் தொந்தியை ஒரு தடவை முட்டித் தாக்கிவிட்டுக் கேட்டான்: ''அப்பா! நாம் எங்கே போகிறோம்? சொல்லு!''

''பேரிஜம்! அங்கே நிறையத் தண்ணி இருக்கு. பெரிய ஏரி!'' என்றார் பத்மநாபன். ''தெரிஞ்சுதா? பேரிஜம்!''

குழந்தையுடன் பேசினாரே ஒழிய, அவர் மனமெல்லாம் நடராஜனிடம் கனகத்தின் மரணம் பற்றிய விவரங்களைக் கேட்டறிய வேண்டும் என்ற எண்ணத்திலேயே ஆழ்ந்திருந்தது.

தகப்பனார் கூறியதைக் கேட்ட விசுப்பயல் சற்று யோசித்தவனாகக் காணப்பட்டான். பின்னர், ''அப்பா! நாம் ஜம் ஜம்முன்னு பேரிஜம் போறோம், இல்லே!'' என்றான்.

குழந்தையுடைய இந்த மழலைக் கவிதை அதைக் கேட்ட அத்தனை பேரையும் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்தியது. கேட்காதவர்கள் சிரிப்பொலியால் ஈர்க்கப்பட்டு, என்ன என்ன என்று கேள்வி போட்டுத் தெரிந்து கொண்டு ரசித்தார்கள்.

''இங்கே இன்னொரு 'ஜம்' இருக்கேடா. அதை மறந்துட்டியே?'' என்றார் பத்மநாபன்.

''அம்புஜம்!'' என்று கூச்சலிடாத குறையாக முந்திக் கொண்டு சொன்னாள் அனசூயா.

கிளுகிளுப்பு உண்டானவனாக விக சிரித்தான். ''ஜம் ஜம்! பேர்ஜம்! அம்புஜம்! ஜம் ஜம்!'' என்று ராகம் போட்டுச் சொன்னான். குழந்தையைப் பாசம் மேலிட வாரி அணைத்துக் கொண்டாள் தாய்.

மகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பி லிருந்து விடுதலை பெற்ற அடுத்த கணம், இதுதான் சமயம் என்று பத்மநாபன் டி. ஐ. ஜி. நடராஜன் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டார். பேச்சுக் கொடுக்கவும் ஆரம்பித்து விட்டார்.

''ஏன் ஸார், திருச்சேறை பற்றிச் சொன்னேனே, போய்ப் பார்த்தீர்களா அவரை?''

நடராஜன் சிரித்தார். ''அது ஒரு காலி டப்பா ஸார்! லொட லொடன்னு பேசுதே ஒழிய வெறும் வெகுளி. நான் போய் என்னை அறிமுகப்படுத்திக்கிட்டதுமே அவருக்குத் தொடை நடுக்கமாப் போச்சு. அப்புறம் விசாரணைக்கு வந்திருக்கிறதாச் சொன்னதும் அழவே ஆரம்பிச்சட்டார்!''

''நிஜமாகவா? கனகத்துக்காகக் கண்ணீர் விட்டு அழுதாரா அவர்? த்சோ, த்சோ!'' என்று அனுதாபப்பட்டார் பத்மநாபன்.

''அவ செத்துப் போனதுக்காக அழலீங்க அவரு! பயத்திலே அழுதுட்டாரு! 'எனக்கும் கனகத்துக்கும் ஸ்நானப் பிராப்திகூடக் கிடையாது சுவாமி! என்னை விட்டுடும்' என்று சொல்லி மன்றாடினாரு!''

''புளுகுறார் ஸார்! என்கிட்டே தீர்மானமாச் சொன்னாரே, பிரமீளா தம்முடைய மகள்தான் என்று!''

''சொல்லி யிருக்கலாம். இதுவும் ஒரு வகை ஸைக்கோ கேஸில் சேர்ந்ததுங்க. பிரமீளா ஒரு பெரிய ஸ்டார். அவளை க்ளாமர் சூழ்ந்துக்கிட்டிருக்கு. அவளோடு தனக்கு ரத்த சம்பந்தமே உண்டுன்னு சொல்லிக்கிடறதிலே ஓர் அசட்டு ஆசை, திருப்தி. நீங்க என்ன பிரமீளா கிட்டப் போய் விசாரிக்கவா போறீங்க, திருச்சேறைதான் உன் அப்பாவான்னு? அந்தத் தைரியத்திலே தான் 'விட்டு' அடிச்சிருக்கார்.''—

''அப்படியானா 'அவர் என்கிட்டே தான் புளுகியிருக்கார்' என்கிறேளா? எதுக்கு ஸார் அப்படிப் போய் சொல்லணும்?''

''அதுதான் சொன்னேனே. மனோ தத்துவ ரீதியிலே அதுவும் ஒரு வியாதி தான். பொய் சொல்வதே காரியம் சில பேருங்களுக்கு. தன்னைப் பத்தி நாலு பேர் உயர்வா எண்ணணும் என்கிற ஆசை. இது தாழ்வு மனப்பான்மையின் விளைவாக எழலாம். 'நேருஜி என்னோட



இந்தக் கரத்தை இரண்டு கைகளாலேயேயும் சேர்த்துப் புடிச்சுக்கிட்டுக் குலுக்கினர்' என்பான். 'அண்ணாதுரை முதுகிலே தட்டிக் கொடுத்துப் பாராட்டினர்' என்பான். இல்லாத போனால் 'வைஜயந்திமாலாவை அவள் சின்னப் பாப்பாவா இருக்கிறபோதிலிருந்தே தெரியும்; நான் போனால் 'வாங்கண்ணு'ன்னு சொல்லி டிபன் காப்பி கொடுக்கும்' என்பான். இதுமாதிரி எத்தனையோ பேர்களை நான் பார்த்துட்டேன். திருச்சேறை உங்களிடம் சொன்னதைக் கேட்டுட்டு, 'அடேயப்பா இந்த ஆளு சின்ன வயசிலே இத்தனை விளையாட்டு விளையாடியிருக்கிறாரா?' என்று நீங்க பிரமிச்சீங்களா இல்லையா? கொஞ்சம் பொறாமைகூட ஏற்பட்டிருக்குமே?''

''வாஸ்தவம்தான்'' என்று கொஞ்சம் வெட்கத்தோடு ஒப்புக்கொண்டார் பத்மநாபன்.

''அந்த உணர்ச்சிகளை உங்களிடம் ஏற்படுத்தியதில் அவருக்கு ஓர் ஆனந்தம், சுகானுபவம் உண்டாகிறது. அவ்வளவுதான். அந்த மனுஷனாலே ஓர் எறும்புக்குக் கூடத் தீங்கு இழைக்க முடியாது. பத்மநாபன்! அனுபவபூர்வமா நான் பேசறேன். மனித மனங்களைப் படித்துப் படித்துப் பழக்கப்பட்டவன் நான்.''

''அப்படியானால் கனகத்தின் துர்மரணத்துக்குக் காரணம்தான் என்ன?''

''அதைக் கண்டுபிடிக்கத்தான் முயற்சி செய்துக்கிட்டிருக்கேன். நீங்க சொல்லுங்க, பிரமீளாவிடம் கனகம் ரொம்பக் கடுமையா நடந்துக்கிட்டாளா?''

''கடுமை என்கிற வார்த்தை போதாதே, அவள் சுபாவத்தை வர்ணிக்க'' என்றார் பத்மநாபன். ''இரண்டு வார்த்தை மகள் பேசு முன் தாய்க்காரி, 'போகலாம் இளம்பு, உம், புறப்படு'ன்னு எட்டுத் தடவை விரட்டுவாள். புதிய மனிதர்களை மகள் சந்திப்பதையே அவள் விரும்பவில்லைபோல் தோன்றியது. யாராவது நெருங்கிப் பழகி, இவளிடம் கொட்டிக் கிடக்கும் பணத்தை அடிச்சுண்டு போயிடப் போறானேன்னு பய்மா இருந்துதோ என்னவோ? மீனாதான் அவளுக்குப் பெயர் வைத்தாள் 'கடுவன் பூனை' என்று. அப்போ நான் இவளைக் கோவிச்சுண்டேன்; ஆனால் மீனா வைச்ச பெயர் பொருத்தமானதுதான். சந்தேகமில்லை.''

''ம்ம்ம்...'' என்று ஏதோ யோசனையில் ஆழ்ந்தார் நடராஜன்.

சற்று நேரம் காத்திருந்த பத்மநாபன் அவர் வாய் திறவாமல் இருக்கவே, பொறுமை இழந்தவராக, ''நீங்க ஹில்டன் ஹோட்டலில் பிரமீளாவின் அறைக்குப்போயிருந்தேன் போலிருக்கே, சோதனை போட. ஏதாவது தடயம் அகப்பட்டதா?'' என்று கேட்டார்.

''பத்மநாபன்! நீங்க டிராமடிக்கா நான் ஏதாவது சொல்லணும்னு எதிர்பார்க்கறீங்க, இல்லையா? கேட்டுக்குங்க, ஒரு துப்பாக்கி அகப்பட்டது.''

''ஆ! துப்பாக்கி! கைத் துப்பாக்கி தானே? யாருடையது? ஒளித்து வைக்கப்பட்டிருந்ததா? எப்படி அதைக் கண்டுபிடிச்சேள்? விரல் ரேகை அடையாளம் அழியாமல் கர்ச்சீப்பை அதன்மேல் போட்டுத்தானே தூக்கினேள்? முன்புறம் துவாரத்தில் பென்சிலை நுழைத்துக்கூட எடுக்கலாம்...''

நடராஜன் சிரித்தார். ''நிறைய டிடெக்டிவ் 'ஃபிக்ஷன்' படிப்பீங்க போல் இருக்கு. உங்களுக்கு ரொம்ப ஏமாற்றமாய்த்தான் இருக்கும். இந்தத் துப்பாக்கி பயன்படுத்தப்படவே யில்லை. ஒரு தோட்டாக்கூட வெடிக்கப்படாமல் புது மெருகு குலையாமல் அப்படியே இருந்தது.''

காற்றுப் போன பலூன் மாதிரி தொய்ந்தார் பத்மநாபன். ''என்ன ஸார் நீங்க! ஆர்வத்தை நெருப்பாக் கிளறி விடறேள், கூடவே தண்ணீரைக் கொட்டி அணைக்கிறேள்.''

''அந்தத் துப்பாக்கி கனகத்துடையது'' என்றார் நடராஜன். ''அவள் பெட்டிக்கடியில் கிடந்தது. லைசென்ஸ் கனகத்தின் பெயரில்தான் வாங்கப்பட்டிருந்தது. வீட்டில் குவிந்து கிடக்கும் செல்வம் கொள்ளை போய் விடுமோ என்கிற பயத்தில் கனகம் ஒரு துப்பாக்கி லைசென்ஸ் வாங்கி வைச்சிருந்தாள் போலத்தோணுது. அவள் இறந்துவிட்டதால் இனி லைசென்ஸ் பிரமீளா பேரில் மாறினால் ஒழிய அது அங்கே இருக்கக் கூடாதுன்னு முடிவு செய்து பறிமுதல் பண்ணிக்கிட்டு வந்துட்டேன்.''

''சரி சரி, அந்த வெடிக்காத துப்பாக்கி பற்றி யாருக்கு என்ன கவலை இப்போ? கனகம் கொலை செய்யப்பட்டாளா? யார் செய்தது? ஊரில் எல்லோரும் சொல்வதுபோல் ஸைக்கோஸாரநாதன்தான் செய்தானா அந்தக் காரியத்தை? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்க.''

''பதில் தெரிஞ்சால் நான் இப்போ உங்களோடு பேரிஜம் வந்துக்கிட்டிருப்பேனா? குற்றவாளியைப் பிடிக்க வாக் அப்பிலே போடுகிற காரியத்தில் ஈடுபட்டிருக்க மாட்டேனா? 'இந்த டி.ஐ.ஜி ஒரு இடியட்'டுன்னு நாலு பேர் சொல்றதைக் கேட்டுக்கிட்டிருக்கணும்னு என் தலையிலே எழுதியிருக்கான், பிரும்மா!''

பத்மநாபனுக்குப் பரிதாபமாக இருந்தது. ''ஏன் ஸார்! நிஜமாகவே ஒரு சாட்சியம் கூட அகப்படவில்லை என்று சொல்றேன்?'' என்று கேட்டார் மிகுந்த பரிவுடன்.

''அகப்படாமே என்ன பத்மநாபன்? நீங்கள் ரொம்ப உசத்தியான பத்திரிகை நடத்தறதாச் சொல்லிக்கறீங்களே; அதனாலே நான் கூறுவது உங்களுக்குப் பிடிக்குமோ என்னமோன்னு தயங்கிக்கிட்டிருக்கேன்.''

''அது என்ன அவ்வளவு யோசிக்க வேண்டிய விஷயம்?''

''மஞ்சள் பத்திரிகையின் மகிமை!''

''என்னது? என்னது?''

''ஆமாம் ஸார்! மஞ்சள் பத்திரிகைகள் ஊரைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குகின்றன என்று நீங்க நினைக்கிறீங்க. ஆனால் அதனாலே போலீஸ் இலாக்காவுக்கு நன்மையும் சில சமயங்களில் ஏற்படுவதுண்டு. உதாரணமா இந்தப் பிரமீளாவை எடுத்துக்குங்க. இவளைப் பார்த்திபன் என்கிற ஒருவனோடு சம்பந்தப்படுத்தி ஒரே ஆபாசமாக எழுதியிருந்தது. 'சிவப்பு விளக்கு' என்கிற பத்திரிகை. அதனாலே பார்த்திபன் இவள் வீட்டுக்கு அடிக்கடி வந்து போய்க்கிட்டிருந்தான் என்பது எனக்கு ஞாபகம் வந்தது.''

''ஐய்யய்யே! நீங்க அந்த மாதிரிப் பத்திரிகைகளெல்லாம் படிப்பேளா ஸார்?''

''என்ன செய்ய? நாங்க போலீஸ் அதிகாரிங்க பல பேருக்குத் தண்டனை வாங்கித் தரோமில்லையா? அதுக்குப் பதிலா எங்களுக்கு இந்த மாதிரி தண்டனைகள் சில விதிக்கப்பட்டிருக்கு!''

''சரி, சிவப்பு விளக்குத் தந்த தகவலின் அடிப்படையில் நீங்க என்ன செய்தேள்?''

''பிரமீளா ஹாப்பி ஹாலிடேயில், என் அறைக்கு வந்துட்டுப் போனதுமே மெட்ராஸுக்கு ஃபோன் போட்டு அந்தப் பார்த்திபன் பற்றிய விவரம் தெரிந்து கொள்ளச் சொன்னேன். ஸ்டுடியோ வட்டாரங்களில் என்னோட ஆட்கள் விசாரிச்சிருக்காங்க. காமிரா மேன் சேகர் என்பவன்தான் அவளைப் பிரமீளாவுக்கு அறிமுகப்படுத்தினானாம். சேகர்கிட்டேயிருந்து பார்த்திபனின் விலாசம் கிடைச்சுது. அங்கே போயிருக்கான் நம்ம ஆள். பார்த்திபன் வீட்டில் இல்லை. வீணில் உல்லாசப் பயணம் போவதாகச் சொல்லிட்டுக் கிளம்பினானாம். எங்கேன்னு சொல்லலியாம். வீட்டிலே இருந்தவங்க இப்படிக் கையை விரிச்சுடவே இரண்டு ஸி.ஐ.டி.ங்க மாறி மாறி டியூட்டி போட்டுக்கிட்டு வீட்டைக் கண்காணிச்சிருக்காங்க. இங்கே பிரமீளா தன் அம்மாவைக் காணோம்னு அழுதாளே, அதுக்கு மறுநாள் பார்த்திபன் டாக்ஸியில் தன் வீட்டு வாசலில் வந்து இறங்கியிருக்கான்...''

''ஸி. ஐ. டி. அவனை உடனே வளைச்சுக் காப்பு மாட்டிட்டார் இல்லையா?''

'' உங்க அவசரத்துக்கு ஏற்பப் போலீஸ் இலாகா செயல்பட முடியாது ஸார்! இங்கே எதற்கும் 'ப்ரொஸீஜர்' உண்டு'' என்று கூறிச் சிரித்தார் நடராஜன்.

''சரி சரி, மேலே சொல்லுங்கள். ஸி.ஐ.டி. விசாரித்திருப்பாரே? என்ன பதில் கிடைத்ததாம்?''

''நான் பங்களூரிலிருந்து வருவதாகக் கூறினானாம். 'அங்கே எந்த ஹோட்டலில் தங்கியிருந்தாய்?' என்று கேட்டதற்குப் 'பெயர் ஞாபகம் இல்லே, ஏதோ ரொம்பச் சின்ன ஹோட்டல், நான் என்ன உட்லண்ட்ஸிலோ அசோகாவிலோ போய்த் தங்க முடியுமா என்ன?' என்று திருப்பிக் கேட்டானாம்.

'' 'உன்னை அங்கே யாராவது அடையாளம் கண்டுகொள்வார்களா?' என்று கேட்டதற்கு, 'போய்ப் பார்த்தால் தான் தெரியும்' என்றானாம். இப்படி இவன் கிருதக்காகப் பேசவே ஸி.ஐ.டி. திரும்பிவிட்டான். இவன் வந்து இறங்கிய டாக்ஸி நம்பரை ஸி.ஐ.டி. ஏற்கெனவே குறிச்சுக்கிட்டிருக்கான். அதைக் கொண்டு டிரைவரைக் கண்டுபிடிச்சு விசாரிச்சிருக்காங்க. 'இந்தக் கிராக்கியைக் காலமே எக்மோரில் பிடிச்சேன்' என்று டாக்ஸி டிரைவர் சொன்னானாம். அவன் கிட்டே யிருந்து வாக்குமூலம்



'' ஆபீசுக்கு வர்றவங்க யாரிடமும் லஞ்சம் கேட்கக் கூடாதுன்னு எங்க ஆபீசர் உத்தரவு. ஹி...ஹி...''

எழுதி வாங்கிக்கிட்டாங்க. பங்களூரிலிருந்து வருகிறவன் எழும்பூரில் எப்படி ரயிலில் வந்து இறங்குவான்?''

''வகையா மாட்டிண்டான்னு சொல்லுங்கோ!''

''டன்னுமில்லே டான்னுமில்லே'' என்று கேலியாகப் பேசினார் நடராஜன். ''இந்த மாதிரி அற்ப சாட்சியங்களை வைச்சுக்கிட்டுக் கொலைக் குற்றத்தை நிரூபிக்க முடியுமா? காமிரர்மேன் சேகரிடம் பார்த்திபனின் புகைப்படம் ஏதாவது கிடைக்குமான்னு பார்க்கச் சொல்லியிருந்தேன். ஒண்ணு அகப்பட்டது. ஸெட்டுக்கு ஸ்டில் ஃபோட்டோகிராபர் வந்திருந்தபோது மூணு பேரும் சேர்ந்து எடுத்துக்கிட்ட படம். ஆளுக்கு ஒரு பிரிண்ட் கொடுத்தாராம் ஃபோட்டோகிராபர். நடுவே பிரமீளாவும் அவளுக்கு இரண்டு பக்கத்திலும் சேகரும் பார்த்திபனும் நிக்கறாங்க. அந்தப் படத்தை இங்கே அனுப்பிவைக்கச் சொல்லியிருக்கேன். அதில் பார்த்திபனைச் சுட்டிக் காட்டி இங்குள்ள ஹோட்டல்களில் விசாரிச்சுப் பார்க்கணும், தங்கியிருந்தானான்னு. ஏன், ஹோட்டல் ஹில்டனிலே கூட அவன் தங்கியிருந்திருக்கலாம். தன் காதலியைக் கள்ளத்தனமாகச் சந்திக்க வசதியாத்தான் இருந்திருக்கும். வேறு பெயரும் விலாசமும் தந்திருக்கலாம். ரிஜிஸ்டரில் அவன் பெயர் இல்லே. பார்த்துவிட்டேன்.''

''அது மட்டும் நிருபணமாகிவிட்டால்...?''

''சந்தேகத்தின் பேரில் அவனை லாக்அப்பில் போடலாம். அப்போ கூட கேஸ் இல்லே. காதலனும் காதலியும் ஒரே ஹோட்டலில் தங்கியிருந்தாங்க; கள்ளத்தனமாகச் சந்திச்சாங்க; பிரமீளாவின் தாயாருக்குப் பார்த்திபனைப் பிடிக்காது என்பது தவிர வேறு என்ன அழுத்தமான சாட்சியம் இருக்கு? இவன் அவளைக் கொன்றான் என்று நிரூபிக்கச் சாட்சியங்களை அப்புறம்தான் சேகரிக்கணும்.''

''அல்லது உருவாக்கணும்'' என்றான் அமிர்தலிங்கம்.

''ஓ! நீங்களும் கேட்டுக்கிட்டுத்தான் இருக்கீங்களா?'' என்றார் நடராஜன். ''நீங்க அந்த ஜபமாலையைச் சுழற்றுகிற வேகத்தைப் பார்த்து 'கௌ பாய்' ஆவதற்கு ஒத்திகை நடத்திக்கிட்டிருக்கீங்களோன்னு நினைச்சேன்!''

''நீங்க கோர்ட்டுக்குக் கேஸைக் கொண்டு போகும் போது நடத்திப் பார்க்கிற ஒத்திகையை விடவா?''

''தேவலாமே கோர்ட், கேஸ், எல்லாத்திலேயும் அடிபட்டு அனுபவப்பட்டவர்போல் பேசறீங்களே'' என்றார் நடராஜன். அமிர்தலிங்கத்தின் முகம் கடுகாய்ச் சிறுப்பது கண்டு மகிழ்ந்தவராகத் தொடர்ந்தார்: ''ஒண்ணு மட்டும் புரிஞ்சுக்குங்க ஸார்! நீங்க சொல்ற மாதிரி கேஸ் ஜோடிப்பது சுலபம்தான். ஆனால் ஜோடிக்கப்பட்ட கேஸைக் கோர்ட்டிலே நிலைநாட்டுவது ரொம்பக் கஷ்டம். சுமாரான சாமர்த்தியமே உள்ள வக்கீல் கூட ஜோடிக்கப்பட்ட கேஸை சுக்குநூறாக்கி விடுவார். அதனாலே பெரும்பாலும் நான் ஈடுபடுகிற வழக்குகளிலே எவ்வளவு தாமதமானாலும் பரவாயில்லே என்று உண்மைக் குற்றவாளியையே கண்டுபிடிச்சுவிடறதுதான் வழக்கம்.''

''தாமதமானால் பரவாயில்லேன்னு நீங்க சொல்றீங்க. ஆனால் அதனால் எத்தனை குழப்பம் பாருங்க. ஸைக்கோ ஸாரநாதன்தான் இந்தக் காரியங்களைப் பண்ணிக்கிட்டிருக்கான்னு ஊரிலே எல்லாரும் பீதியடைஞ்சு நடுங்கிக்கிட்டிருக்காங்க.''

''அதுக்கு நான் என்ன செய்ய?'' என்றார் டி. ஐ. ஜி. ''ஸைக்கோ ஸாரநாதன் என்ற பெயருக்கு அத்தனை மகிமை!''

அமிர்தலிங்கம் அப்போது குனிந்தும் நிமிர்ந்தும் அட்டகாசமாகச் சிரித்ததானது தம்மைக் கிண்டல் செய்யத்தான் என்று வைத்துக் கொண்டாலும் கூட அதியாகத்தான் பட்டது டி.ஐ.ஜி. நடராஜனுக்கு.

* * *

கானகத்தின் மரணம் பற்றிப் பேசிக்கொண்டே வந்த பத்மநாபனும் நடராஜனும் அவர்கள் பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அமிர்தலிங்கமும் பஸ் செல்லும் சாலை எத்தனை மனோரம்மியமான இயற்கை எழிலினூடே அமைக்கப் பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்கவேயில்லை. ஆனால் மற்றவர்கள் நன்றாகப் பார்த்ததுடன் ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டியும் மகிழ்ந்தார்கள்.

எனினும் ஆரம்பத்தில் இவ்வாறு இருக்கவில்லை. பில்லர்ராக்ஸைத் தாண்டி மேலே போனதும் கொஞ்ச தூரத்துக்கு இரண்டு பக்கங்களிலும் ஏக்கர் ஏக்கராகக் காடுகள் விறகு—கரிக்காகவும் செயற்கை நூலிழை தயாரிக்கும் தொழிலகத்தில் இயந்திரங்களின் அகரப் பசிக்குத் தீனியாகவும் அழிக்கப்படுவதைக் கண்டு கண்ணீர் விடாத குறையாக வருந்தினார்கள். மனிதன் தன் சுயநலனுக்காக வானளாவிக் கம்பீரமாய் நின்ற மரங்களைக்

கொடூர சிந்தையுடன் வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தான்.

இந்தக் கோரக் காட்சியைக் கடந்து அப்பால் போனதும் மலையும் மடுவும் வானமும் மேகமும் நிழலும் ஒளியும் பாறைகளும் நீரோடைகளும் கானகமும் வன விலங்குகளும் சேர்ந்து உருவாக்கிய ஒரு மாயாஜால உலகுக்குள் பிரவேசித்தார்கள். ஒரு பக்கத்து அழகைப் பார்த்து முடிப்பதற்குள் சாலையில் ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டுப் புது மாதிரியான அழகு தென்பட்டது. 'மீனுவை நான் புதுப் புதுக் கோணங்களில் பார்க்கும்போது புதிது புதிதாக அழகுகள் பளிச்சிடுவது போல' என்று எண்ணிக் கொண்டான் ரங்கன். இந்த எண்ணம் தோன்றியதும் சற்றுத் தொலைவில், ஆனால் பார்வையில் நன்றாகப் படுகிற மாதிரியும் பேசுவது தெளிவாகக் கேட்கும் தூரத்திலும் அமர்ந்திருந்த மீனுவை நோக்கிப் புன்னகை செய்தான். அவள் தன் முகம் சிவப்பதையும் புன்முறுவல் கிளர்ந்தெழுவதையும் தடுத்து நிறுத்த முயன்று படுதோல்வி கண்டாள். இளம் காதலர்களை இன்ப லோகத்துக்கு 'வருக, வருக' என்று அழைத்து இயற்கை, வரவேற்பு வளைவுகளை அமைத்தது போல் அப்போது பஸ் சென்ற சாலையானது தோற்றம் அளித்தது. இரு புறமும் விதவிதமான மரங்கள் தழைத்துச் சாலையில் நிழல் பரப்பித் தண்ணென்றிருந்த சூழலை மேலும் குளுமையாக்கியிருந்தன.

ரங்கன் தன் கையிலிருந்த சிறிய தோல் பையைத் தட்டிக் காட்டினான். அதனுள்ளே சிறிய செஸ் போர்டும் காய்களும் இருப்பது மீனுவுக்கு ஏற்கெனவே தெரியும். ஆதலால் சொன்னான்: ''பேரிஜம்மில் பஸ் ஒரு மணி நேரமாவது குறைந்த பட்சம் தாமதிக்கும். செஸ் ஆடலாம்.''

''ஏன் ஒரு தடவை தோற்றது போதாதா?'' என்று கேட்டாள் மீனு குறும்பாக.

''நீ ஒன்றும் என்னைத் தோற்கடிக்கவில்லை'' என்றான் ரங்கன். ''உன் அழகுதான் என்னை ஏமாற்றி விட்டது. உன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் காய்களை ஒழுங்காக என்னால் எப்படி நகர்த்த முடியும்?''

''நான் வேணுமானால் புடவைத் தலைப்பால் இப்படி முகத்தை மூடிக் கொண்டு ஆடுகிறேன்'' என்று கூறிய மீனு கண்களுக்குக் கீழே புடவைத் தலைப்பைக் கொண்டு சென்று மறைத்துக் காட்டினாள்.

''ஐயோ! இது அதைவிட ஆபத்து! அப்போ ஆட்டத்தைத்தான் கவிழ்த்தது உன் அழகு. இந்தக் கோலத்தில் நீ ஆளையே கவிழ்த்து விடுவாய்! அரேபியன் நைட்ஸில் வருகிற ராஜகுமாரி மாதிரி கண்களின் அழகை மட்டும் எடுத்துக் காட்டுவதாக அல்லவா இருக்கிறது இந்தக் கோலம்! தொலைந்தேன் நான்!''


தலைப்பை நழுவ விட்டு விட்டுக் கலகலவென்று சிரித்தாள் மீனு. கண்களில் நீர் முத்துக்கள் தோன்றி, பஸ்ஸின் உள்ளே புகுந்த ஒரே ஒரு ஒளிக் கிரணத்தைக் கவர்ந்து ஈர்த்துக் கொண்டு தகதகத்தன; உதிரும் வைரங்களாகக் கன்னங்களில் உருண்டன. அடி உதட்டின் ஓர் ஓரத்தை அவள் உள்ளுக்கு இழுத்துக் கடித்துக் கொண்டு வேறு புறம் பார்த்தாள். குனிந்து புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

'இந்தப் பெண் எதற்கு இப்போது கண்ணீர் வடிக்கிறாள்?' என்று புரியாமல் கலங்கிப் போய்விட்டான் ரங்கன். 'ஒருவேளை நான் அளவுக்கு மீறி உரக்கவே பேசிவிட்டேனோ? அது அவள் அம்மா காதில் விழுந்து அப்புறமாக மகளைக் கோபித்துக் கொள்ளப் போகிறாளோ? அதை எதிர்பார்த்துப் பயந்துதான் இப்போதே இவள் அழுகிறாளோ?' இவ்வாறெல்லாம் எண்ணிய ரங்கநாதன் அம்புஜத்தைக் கடைக்கண்ணால் பார்த்தான்.

ஆனால் அம்புஜம் இவர்களைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. இவர்களுடைய மனநிலையைப் புரிந்து கொள்ளாமலும் இல்லை அவள். 'ரொம்பத்தான் அசடு வழிகிறாள் இந்தப் பெண்' என்று தன் மகளைப் பற்றி எண்ணிக் கொண்ட அவள், இது பற்றித் தன் கணவரிடம்தான் பேச வேண்டுமே ஒழிய, இவர்களிடம் வாக்குவாதம் வளர்க்கக் கூடாது என்று கருதியவளாகப் பேசாதிருந்தாள். முதல் நாளிரவு தான், தன் கணவருடன் பேசிக்கொண்டிருந்ததை மீனுவும் தூங்குவதுபோல் பாசாங்கு செய்தபடியே கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும். அதனால் தான் இப்போது கண்ணீர் சிந்துகிறாள் என்று ஊகித்தாள் அம்புஜம். 'அப்போது நான் எழுப்பிய ஆட்சேபணைகளுக்கு மேலும் வலுவு கொடுத்து இன்றிரவு மீண்டும் அவரிடம் வாதாட வேண்டும்' என்று உறுதிப்படுத்திக் கொண்டாள். 'எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் கொடைக்கானலிலிருந்து கிளம்புகிறோமோ அவ்வளவுக்கு நல்லது.' அடாத கொலைகள் ஒரு புறம், தகாத காதல் மறுபுறம் — இவ்விரண்டிலிருந்தும் தன் குடும்பம் தப்பித்துக் கரை சேர வேண்டுமே என்று அம்புஜத்தின் மனம் கவலையில் ஆழ்ந்தது. (தொடரும்)

> முன் குறிப்பு: இந்தக் கதையின் முடிவைப் புரிந்து கொண்டவர்கள் எனக்குத் தெரிவிக்கவும்.


சிறப்புச் சிறுகதை



துணை

சுஜாதா

அந்தச் சிறிய ஸ்டேஷனில் அவன் ஒருவன் தான் இறங்கி யிருப்பான். ஸ்டேஷன்மாஸ்டர் பாயிண்ட் மாற்றிவிட்டு, மணியடித்துவிட்டுப் பச்சைக் கொடியை வீசிவிட்டு, அவன் டிக்கெட்டை வாங்கிக் கொண்டு விருவிரு என்று நடந்தார். அவன் அவசரமில்லாமல் ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தான். எதிரே மண் சாலே தெரிந்தது. சூரிய வெளிச்சத்தின் கடுமையில் மரங்களின் கீழ் குட்டை நிழல்கள் ஒளிந்து கொண்டிருந்தன. பூமி சமீபத்திய பகைமைக்குப் பிறகு பாளம் பாளமாக வெடித் திருந்தது. எதிரே மனிதர் எவரும் தென்படவில்லை. தூரத்தில் உஷ்ண அலேகள் தெரிந்தன.



அவன் தன் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு அந்த மண் சாலேயில் நடக்க ஆரம்பித்தான். அவனுக்கு இருபத்தி யொரு வயதிருக்கலாம். சன்னமாக மீசை வைத்துக் கொண்டு கண்களின் கீழ் கறுப்புத் தெரியப் புகை பிடிக்கும் பழக்கத்தால் உதடுகள் கறுத்திருக்க....

''தம்பி நீங்க எங்கே போறீங்க?'' என்று குரல் கேட்டுத் திரும்பினான். திரும்பியதும் தெரிந்தவரின் மீசைதான் அவனுக்குப் பிரதானமாகத் தென்பட்டது. அடர்த்தியான கறுத்த மீசை. கிராமத்துக் காவல் தேவன் போல் அந்த ஆசாமி நெற்றியில் பொட்டும் முக்கால்கைச் சட்டையும் உயரம் குறைந்த வேட்டியும் முரட்டுச் செருப்பும் நீண்ட கழியுமாக அவனைப் பார்த்துச் சிரித்தார். அவருக்கு முப்பத்தி ஆறு வயதிருக்கலாம். ஏதோ ஒரு கோணத்தில் அவர் அழகாகக்கூட இருந்தார்.

''பள்ளிப் பாளையம்'' என்றான்.

''நான்கூட அந்தப் பக்கம்தான் போகிறேன். நல்லது. பேச்சுத் துணையா இருக்கும்.''

''பள்ளிப்பாளையம் இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?''

''நாலு ஐந்து மைல். நீங்க முதல் தடவை போறீங்களா ?''

''ஆம்.''

அவர் இளைஞனை ஏற இறங்கப் பார்த்தார்.

''சமூக சேவகரா ?''

''ஆம்! என்ன வெய்யில் !''

'' என்ன சேவகம் பண்ணப் போறீங்க ?''

''பொதுவா சர்க்கார் கொள்கைகளைப் பரப்பறது; குடும்பக் கட்டுப்பாடு, கம்யூனிட்டி டெவலப்மெண்ட் அப்படி!''

அவர் சிரித்தார். அவர் செருப்பு சரக்கிட்டது.

'' ஏன் சிரிக்கிறீங்க ?''

''கிராமத்தை மாத்தப் போறீங்களா ?''

''மாத்த முயற்சிசெய்யப் போகிறேன்.''

''இதுக்கு உங்களுக்குச் சம்பளம் கொடுக்கிறாங்களா ?''

''இதிலே எனக்குப் பயிற்சி கொடுத்திருக்காங்க. ஸ்டைபெண்ட் மாதிரி தராங்க. நான் ஒரு பி. ஏ.''

''அப்படியா ! செய்யுங்க. முயற்சி பண்ணிப் பாருங்க.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க ?''

''பணம் சம்பளம் எதுவும் இல்லாமல் என்னுடைய சொந்த ஆசையினாலே இலவசமா, இப்ப நீங்க போறீங்களே, அதே பள்ளிப் பாளையத்தை நான் மாத்தப் பார்த்தேன்...கிராமத்தை மாத்த முடியாதுங்க!''

''அப்படியா ?''

''ஆரம்பத்திலேயே உங்களை 'டிஸ்கரேஜ்' பண்றேன்னு நினைச்சுக்காதீங்க.''

'டிஸ்கரேஜ்' என்கிற வார்த்தையில் இளைஞன் புருவம் சற்று உயர்ந்தது.


'' எனக்கு இங்கிலீஷ் தெரியும் தம்பி. என்னைப் பார்த்தால் நாட்டான் போல இருக்கிறதல்லவா ? பார்வையை நம்பாதீங்க. நான் வேறுவிதமானவன். கிராமத்தைப் பற்றி நிறையத் தெரிஞ்சவன். கிராமத்திலே ஊறினவன். கிராமத்து மூட ஜனங்களைப் பாதுகாத்தவன். அவங்களை ஒப்பேத்தறதுக்கு முயற்சி பண்ணினவன். அதனோட அமைப்பை — நூத்துக்கணக்கான வருஷங்களா அதில் படிந்திருக்கிற நம்பிக்கைகளை, பழக்கங்களை—மாத்த முயற்சி செய்தவன்...முடியலே!''

''அப்படியா? நீங்க...!''

''என் பேர் மாடசாமி. எனக்கு என்ன வயசிருக்கும்?''

''சுமார் முப்பத்து அஞ்சு.''

''தப்பு. என் வயசை உங்களாலே சொல்ல முடியாது.''



''நீங்க யார்? உங்க வேலே என்ன?''

''பள்ளிப் பாளையத்திலே கேட்டா நான் யாருன்னு சொல்லுவாங்க. சாமின்னு கேட்டுப் பாருங்க. அழுத பிள்ளை வாய் மூடும்.''

''பயமா ?''

''ஆம்! பயம்.''

''எதுக்காகப் பயம்?''

''அவங்களே மாத்த முயற்சி பண்ணினதுக்கு.... ம்ஹூம். அதில்லே. காரணம் வேறே! தம்பி! நீங்க சின்னப் பையன். கொஞ்சம் கிராமத்திலே ஜாக்கிரதையா இருக்கணும். அதனோட அமைப்பு விநோதமானது !''

''நீங்க முதல்லே சொன்னது எனக்குப் புரியலே. உங்ககிட்டே எதுக்குப் பயந்தாங்க? அவங்களே மாத்த என்ன முயற்சி பண்ணினீங்க ?''

''என்ன பண்ணினேன் ? கிணறு வெட்டினேன்! சுத்துச் சுவர் அமைச்சு மேலே கூரை போட்டு ராட்டினம் போட்டுக் கொடுத்தேன். செயற்கை உரத்தைப் பத்திச் சொல்லிக் கொடுத்தேன். சின்னதா ஒரு டிஸ்பென்சரி வெச்சேன். அதுலே அவங்களுக்கு சிகிச்சை தந்தேன். சின்னப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தந்தேன். அறிவு புகட்டினேன். பழைய உழவு முறைகளைக் கொஞ்சம் புதுசாக்கினேன். நடவு சொல்லிக் கொடுத்தேன். டெண்ட்டு சினிமாவுக்குப் போய்ப் பாழாகாதீங்கடான்னேன்.......''

''நல்லாத்தான் செஞ்சிருக்கீங்க... நானும் அதைத்தான் சொல்லித் தரப் போறேன்.''

''பிரயோசனமில்லே தம்பி. அவங்களே மாத்த முடியாது. அது உக்கிரமான கிராமம்! மாத்த முடியாது. சாமி ஆடுவாங்க. உடுக்கு அடிப்பாங்க, பெண்டாட்டியை அடிமையா நடத்துவாங்க. கூழ் குடிப்பாங்க. மழை பெய்யலேன்னு காவு வெட்டுவாங்க. சட்டை போடமாட்டாங்க. கிராமம் மாறாது!''

''உங்களுக்கு நிறைய எதிர்ப்பிருந்ததா?''

''எதிர்ப்புன்னு சொல்ல முடியாது. ஒரு விதமான...''

''எதனாலே ?''

''எதனாலேன்னு ஆதாரமாப் பேச முடியாது. ஒருவிதத்திலே ஒரு பெண்ணாலேன்னு சொல்லலாம்.''

''ஓ !''

''நீங்க 'ஓ'ங்கிறதைப் பார்த்தா...வேறே விதமா நினைக்கறீங்க.....''

'' நான் ஒண்ணுமே நினைக்கலே. நீங்க சொல்லுங்க.''

இளைஞனது ஆர்வம் இப்போது அதிகமாகியிருந்தது.

'' கொஞ்ச நாட்களுக்கு முன்னாலே போன வைகாசின்னு நெனைக்கிறேன். நான் அந்தக் கிராமத்துக்குப் போனேன். எனக்குக் கொஞ்சம் வசதிகள் இருந்தன. பணம் இருந்தது. பொழுது போகலேன்னு வெச்சுக்குங்களேன். பள்ளிப் பாளையத்தில் கொஞ்ச நாள் இருந்து பார்க்கலாம்னு வந்தேன். முன்னே வந்ததில்லே. நீங்க வந்த மாதிரிதான். பையைத் தூக்கிக் கொண்டு இதே பாதையிலேதான் நடந்தேன். உங்க பையிலே பணம் அதிகம் இருக்காது. என் பையிலே அதிகம் இருந்தது. பள்ளிப் பாளையத்திலே வந்து சேர்ந்ததும் ஊர்க் கோடியிலே சின்னதா ஒரு கோயில் சுத்தமாயிருந்தது. அதிலே போய்த் திண்ணையிலே உட்கார்ந்தேன். சின்னப் பையன் ஒருத்தன் அம்மணமா எதிரே வந்து நின்னான். என்னையே பார்த்தான். அது என்ன கோயில்னு கேட்டேன். மாடசாமி கோயில்னான்! அட, என் பேருகூட மாடசாமிதான். சரி, அங்கேயே இருந்துடலாம்னு துண்டை விரிச்சேன். அப்புறம் கிராமத்துப் பிள்ளைகளை எல்லாம் கூட்டி வைச்சுக்கிட்டுச் சில வித்தைகள் செஞ்சு காட்டினேன். புஸ்தகத்திலே படிச்சது. நிறைய பேர் கூடிட்டாங்க. முதல்லே அவங்களுக்கு ஒரு சின்னப் பாட்டு பாடிக் காட்டினேன். எல்லாரும் 'ஆ'ன்னு வாயைத் திறந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தாங்க. அப்புறம் ஒரு சின்னப் பாடம் சொல்லிக் கொடுத்தேன். எழுத்து என்றால் என்ன.... இப்படி..... அ ஆ... இது அ. இது ஆன்னு எல்லாரையும் சேர்த்து கத்த வைச்சேன். நீ யாருன்னு ஒரு ஆள் வந்து கேட்டான். சட்டை போட்ட ஆள். அவன்தான் கிராமத்து மிராசு. சரியான மைனர். புகையிலே, சங்கிலி, மல் ஜிப்பா, வண்டி கட்டி வாரா வாரம் டவுனுக்குப் போய் என்னவோ பாவங்களையெல்லாம் சேகரிச்சுண்டு வருகிறவன். நான் யாருன்னு அவன்கிட்டே சொல்லலே. 'இந்தக் கிராமத்துக்குச் சில நல்லதெல்லாம் பண்ண வந்திருக்கேன். உங்க மாதிரி பெரிய மனுசங்க ஒத்தாசை வேணும்' என்றேன். அவனுக்கு என்னைப் பிடிச்சுப் போச்சு. எல்லா வசதியும் செஞ்சு கொடுத்தான். ராத்திரி சாப்பாடு அனுப்பிச்சான். மறு நாள் அவர்களை எல்லாம் கூட்டி வைச்சுக் கொஞ்சம் பேசினேன். நீங்கள்ளாம் தெரிஞ்சுக்க வேண்டியது நிறைய இருக்கு. இந்த மாதிரி பிள்ளைங்களை அம்மணமா தெருவிலே உலாத்த விடாதீங்க. அவங்களுக்கு முதல்லே படிப்பு வேணும். தினம் ஒரு மணி நேரமாவது என்கிட்டே அனுப்புங்க. அப்புறம் உங்க வீட்டைச் சுத்தமா வெச்சுக்கறது எவ்வளவு முக்கியம்...என்று இப்படி...கதையெல்லாம் சொல்லி அவங்களைச் சிரிக்க வெச்சு, பாடி, குழந்தைகளோட விளையாடிப் படாதபாடுதான் பட்டேன்.

''வயலுக்குப் போய் 'ஏண்டா வெட்டிக்கு விஷயம் புரியாம முந்நூறு வருஷத்துக்கு முந்தி உழுதாப்பலே உழறீங்கள்?'னு முறைகளை மாத்தணும்னு சொன்னேன். வெளிநாடுகள்ளே நடக்கிறதையெல்லாம் சொன்னேன். ஓட்டுப் போடறதுன்னு என்ன, சூரியன் மறைஞ்சதும் இருட்டினதும் பெண்டாட்டி மேலே பாயக் கூடாதுன்னு எத்தனையோ சொல்லித் தந்தேன் தம்பி.

''அவங்களுக்கும் என் மேலே ஒருவிதமா பாசம் வந்திடுச்சு. என்னைப் பார்த்ததும் மரியாதையா ஒதுங்கிக்கிடுவாங்க. தச்சன் நாற்காலி பண்ணிக் கொடுத்தான். நாவிதன் கத்தியை நல்லா தீட்டிக் கொண்டு வந்து சரைச்சு விட்டான். கிணறு சுயமா வெட்டிக்கிறாங்க. வீட்டு வாசலைப் பெருக்கிறாங்க. எல்லாம் சரியாத்தான் மாறுதல் ஏற்பட்டது. அப்புறம்தான் வந்தது வம்பு.

''மைனர் இருக்கானே மிராசு, அவன் வீட்டிலே ஒரு பெண்ணை வெச்சுக்கிட்டிருந்

தான். அந்த மாதிரி வெச்சுக்கறது அவங் களுக்குத் தப்பாகவோ அநியாயமாகவோ படலே. அந்தப் பொண்ணு ரொம்பச் சின்னப் பொண்ணு. பத்தொன்பது இருபதுக்குள் தான் வயசிருக்கும். ஒரு நாள் எனக்குச் சாப் பாடு கொண்டு வந்தது. பெரிசா பொட்டு இட்டுக்கொண்டு. கண்லே மான் குட்டி மாதிரி பயம். உதட்டிலே வியர்வை. அய்யா அனுப் பிச்சாங்கன்னு சொல்லிச் சாப்பாட்டை எடுத்து வெச்சிட்டு எச்சிலே முழுங்கி முழுங்கி என்கிட்டே என்னவோ சொல்லத் துடிச்சுது. 'என்னம்மா'ன்னு கேட்டேன். 'சாமி, நீங்க சோசியம் பார்ப்பீங்களா'ன்னு கேட்டுது.

'' 'ஓ, பார்ப்பேனே'ன்னு விளையாட்டுக்குச் சொன்னேன்.

'' 'என் கையைப் பார்த்து எனக்கு எப்ப விடிவு காலம் வரும்னு சொல்லுங்க'ன்னது.

'' 'எதிலிருந்து'ன்னு கேட்டேன்.

'' 'அவர் என்னே வேலேக்காரியாச் சில நாள் வெச்சுக்கிறார். சில நாள் வேறுவிதமா நடத்த றார். சில நாள் கோபம் அதிகம் வந்து அடிக் கிறார். என்னேக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டார். ஆனா அவருக்கு நான் கால் பிடிச்சு விடணும். எண்ணெய் தேய்ச்சு விடணும். சாமி! சிலசமயம் என்னே மாட்டுச் சவுக்காலே கூட அடிப்பாரு. கொடுமைப் படுத்தறாரு. என் அப்பன் வீட்டுக்குப் போனா அங்கே சின்னம்மா கொடுமை. சாமி, நீங்க எவ் வளவோ தெரிஞ்சவங்க. கிராமத்திலே உங்களைத் தெய்வமா மதிக்கிறாங்க. எனக்கு ஒரு வழி சொல்லுங்க'ன்னாள்.

'' 'உனக்கு என்ன வேணும்'னேன்.

'' 'எப்படியாவது இந்தக் கிராமத்திலே யிருந்து தப்பிச்சுக்கணும். அவர்கிட்டே யிருந்து தப்பிக்கணும். டவுன்லே ஏதாவது பள்ளிக்கூடத்திலே பெருக்கற வேலே கெடைச்சாக் கூடப் போதும். எனக்கு வழி சொல்லுங்க!'ன்னா.

'' நான் 'பயப்படாதே. உனக்கு ஒரு வழி சொல்றேன்'னு அவளே அனுப்பி வைச்சேன்.

'' நான் அவளேப் பத்தி மேலே யோசிக்கக் கூட அவகாசம் இல்லே. இரண்டு நாள் கழிச்சு ராத்திரி கோயில்லே தூங்கிக்கிட்டிருந்தபோது அந்தப் பொண்ணு வந்து எழுப்பினா. விளக் கேத்திப் பார்த்தேன். 'சாமி! என்னேக் காப் பாத்துங்க' என்று நிலேகுலேஞ்சு நின்னாள். 'அவன் என்னே ரொம்ப ஒரு மாதிரியா நடத்தறான். இசையலேன்னு அடிக்கிறான். நான் இனிமே அங்கே போகமாட்டேன்'னு முதுகிலே தழும்பைக் காட்டினா. நான் 'பயப்படாதே'ன்னு ஆறுதல் சொல்றபோது அரிக்கேன் விளக்கோட, ஆளுகளோட மிராக வந்து நின்னான். 'சாமி! என்ன விஷயம்? ரா வேளேயிலே பெண்ணேக் கூட்டி வைச்சுக் கிட்டு' என்று ஆரம்பித்தான். 'அறிவு கெட்டவனே! அந்தப் பெண்ணே ஒரு மனுஷ ஜன்மமா மதி. அப்பதான் அவள் உன்கிட்ட வருவாள். அவளேக் கல்யாணம் செய்து கொள். அப்பதான் அவள் வருவாள். அது வரைக்கும் கோயிலேவிட்டு அவளே நகர விடமாட்டேன்'னேன்.

''அவன் 'சாமி! உனக்கு எதுக்கு இந்த வம் பெல்லாம்? வாடி.....'ன்னு அசிங்கமா வார்த்தை உபயோகித்தான். நான் 'அவளேத் தொடாதே'ன்னேன். அவன் என்கிட்டே வந்து, 'சோஷலிஸ்ட் சாமி! இதுவரைக்கும் மண்ணே உழறதைப் பத்தித்தான் பேசிவந்தே. இப்ப பெண்ணே.... அநாவசியத்துக்கு அடி வாங்காதே. அவள் அப்பனுக்கு நான் பணம் கொடுத்திருக்கேன். அதுக்கு அவள் எனக்கு உழைச்சாகணும்'ன்னான்.


''எனக்கும் அவனுக்கும் கைகலப்பு ஏற் பட்டு அநாவசியமா அவங்க என்னே அடிச் சாங்க. அந்தப் பெண்ணேக் காப்பாற்ற உடல் பலம் போறாமல் அவர்கள் அவளே இழுத்துப் போறதைப் பார்த்துக்கிட்டே நின்னேன்.

''விடியற்காலேயிலே மிராக வீட்டிலே கும்பலா யிருந்தது. என்னடான்னு விசா ரிச்சா. அந்தப் பொண்ணு இறந்து போயிட் டதாகச் சொன்னாங்க. ஏன்டான்னு அதை எல்லாம் கேக்காதீங்க சாமிங்கறான். வெளி யிலே வந்து மிராக நிக்கறான். 'ஏன்டா, கூட்டம் போடறீங்க. விட்டுட்டுப் போங்க டா'ங்கறான். என்னேப் பார்த்தான். எனக்கு வந்த ஆத்திரத்திலே அவன்கிட்டே போய் அவன் தோளேத் தொட்டு உரக்கச் சபிச் சேன். 'கேள்டா! பண்ணே! நீ அவளுக்குச் செஞ்ச கொடுமைக்கு நீ நாசமாய்ப் போய்டுவே. நசிச்சுப் போய்டுவே'ன்னு கத்தி னேன். அவன் 'சாமி, போய்ப் பள்ளிக் கூடத்து வேலேயைப் பாருங்க'ன்னு சிரிச்சான்.

''அதை எப்படி வேணு வெச்சுக்குங்க. தற்செயலான நிகழ்ச்சின்னு சொல்லுங்க. நாலு நாள்ளே..... நாலே நாளிலே மிராக டவுனுக்குப் போனவன் மாரடைப்பிலே இறந்து போயிட்டான். நம்பமாட்டீங்க. நடந்தது. என் சாபம் பலிச்சுடுச்சு!

''அது நடந்து மறு நாள் நான் காலேயிலே எழுந்து பார்க்கறேன். எனக்கு முன்னுலே தும் தும்னு உடுக்கு அடிக்கிறாங்க! சாமி ஆடறாங்க! பொங்கல் படைக்கிறாங்க.... 'அப்பனே, மாடசாமி! நாங்கள் என்ன குத்தம் செஞ்சோம்? என்ன பலகாரம் செய்ய

மஞ்சள் விளக்கு!



கிராமத்திலிருந்து வந்திருந்த ஐந்து வயது உறவுக் காரப் பையன் ஒருவன் நான்கு நாட்கள் என்னேடு சென்னையில் காரில் சுற்றினான். போலீஸ்காரர் தயவு இல்லாமல் பச்சை சிவப்பு விளக்குகளின் உத்தரவினு லேயே வண்டிகள் நிற்பதையும் ஓடுவதையும் கண்டு ஆச்சரியப்பட்டான். கடைசியில் ஊருக்குத் திரும்பும் போது இந்த விளக்குகளைப் பற்றிக் கிராமத்தில் சொல்லப் போவதாகச் சொன்னான்.

''என்ன சொல்லுவாய்?'' என்று கேட்டேன்.

''சிவப்பு விளக்கைக் கண்டால் வண்டியை நிறுத்த ணும். பச்சை விளக்கைக் கண்டால் ஓட்டணும்'' என்றான்.

''மஞ்சள் விளக்கைக் கண்டால்?''

''வண்டியை வெகு வேகமாக ஓட்டணும்!'' என்றான்.

-நாடோடி



''தமிழ்நாடு முழுவதும் குக்கிராமங்களில்கூட என் பெயரில் ரசிகர் மன்றம் ஏற்பாடு செய்து விட்டேன். இதற்காகவாவது மனம் இரங்கி சினிமாவில் நடிக்க சான்ஸ் கொடுங்கள், சார்! ப்ளீஸ் .....!''

ணும்? பொங்கல் படைக்கலாம்!' அப்படின்னு ஒருத்தன் கத்தறான்.

'' 'என்னடா இதெல்லாம்'னு கத்தறேன். டகர டகர டின்னுன்னு டேப் அடிக்கிறாங்க... 'எதுக்குடா இதெல்லாம்'னு கத்தறேன்.

'' 'மாடசாமி! எங்கள் தெய்வமே!'

''நான்தான் தெய்வமாம். கிராம தேவதையாம். நான் சபிச்சேனாம். நான் சபிச்சுத்தான் அவன் பூட்டானாம். எனக்குப் பரிகாரமாம்!

'' 'அடேய், முட்டாப் பசங்களா'ன்னு இரைஞ்சேன்.

'' 'சாமி! கடவுளே! நாங்கள் எல்லாம் முட்டாள்கள்தான். என்ன கோபம் உனக்கு? என்ன வேணும் உனக்கு?'

''சரக்குனு ஓர் ஆட்டின் கழுத்தை வெட்டி ரத்தம் குடிக்கிறான் ஒருவன். மறுபடியும் உடுக்கு அடிக்கிறாங்க! மாலையை வீசறாங்க! 'நான் என்ன சொன்னாலும் மன்னிச்சுடு சாமி உக்ரம் தணி'ன்னு லாவணி மாதிரி பாடறாங்க! நான் என்ன செய்யறது?

''குடம் குடமாத் தண்ணி கொண்டு வந்து எனக்கு முன்னாலே கழுவிக் கோலம் போடறாங்க!''

'' 'போங்கடா, ஒழிங்கடா'ன்னு கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே வந்து தலையைப் பிடிச்சுண்டு உக்கார்ந்துட்டேன்! வெளியிலே இன்னும் வாத்தியங்கள் முழங்கறது. நடமாட்டமா இருக்கு! அவங்க பேச்சுக் குரல் கேட்கிறது! 'அந்த வருஷத்துக்கு முன்னாலே அப்படித்தான் மூத்து மேலே வந்து ஆடறானு! பத்து மாசம் இன்னும் உக்கிரம் இருக்கும். தணியாது. விட்டுப் போகக் கூடாது. யாராவது சாமியைத் தொட்டால் அவன் நாசமாகிவிடுவான்!'

''கதவைத் திறந்தால் அப்படியே கம்முனு அடங்கி மண்டி போட்டுக்கறானுங்க! என்ன செய்வீங்க, தம்பி! சொல்லுங்க! என்ன சொன்னாலும் 'கடவுளே, கடவுளே!'ங்கறாங்க. தம்பி! நான்தான் கடவுளாம். மாடசாமிக் கடவுள்!

''அவர்கள் பாட்டும் சத்தமும் சகிக்காம ராத்திரி வெளியே வந்து கடவுளாகவே நடித்தேன். 'அடேய்! ஹிம்சை தாங்கலே. வீட்டுக்கு ஓடிப் போங்க'ன்னேன். 'அப்படியே சாமி'ன்னு ஓடுறாங்க. நான் கோயில் கதவை மூடிக் கொண்டு ராவோடு ராவா கிராமத்தை விட்டு ஓடி வந்துட்டேன். இன்னும் அந்தக் கதவு அப்படியே மூடியிருக்கும். மாடசாமி கோபம் குறைந்து கதவு திறக்க அவர்கள் காத்திருப்பார்கள்..... !

''அவ்வளவுதான் கதை. என்ன சொல்றீங்க?'' என்றார்.

இளைஞன் ''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே!'' என்றான்.

''தம்பி! இன்னும் ஒண்ணு மட்டும் சொல்றேன். அவங்க பாவலா பண்ணலே. அவங்க கண்ணிலே அசைக்க முடியாத நம்பிக்கையைப் பார்த்தேன். நான்தான் கடவுள்ங்கற மாதிரி. அதுதான் எனக்கு ஆச்சரியம். எனக்குச் சில வேளைகளிலே சந்தேகம்கூட வரது. அமானுஷ்யமா எனக்கு ஏதாவது அப்படி சக்தி இருக்கா என்ன? நான் சபிச்சுத் தான் அந்த மிராசு போய்விட்டானு! அவங்க நம்பிக்கையிலே ஏதாவது ஆதாரம் இருக்கா! நான் நிஜமாகவே உக்கிரமுள்ள கிராம தெய்வம் மாடசாமியோ?''

இளைஞன் சிரித்தான்.

'' இந்தக் கிராமத்தையா மாத்தப் போறீங்க?''

''முதல்லே அந்தக் கிராமத்தைப் பார்க்கணுங்க!''

''பாருங்க! பாருங்க! கிட்ட வந்துட்டோம்!''

தூரத்தில் பறை ஒலி கேட்டது.

''மாடசாமி கோயில் வாசல்லே பூசை நடக்குது! எனக்குப் பூசை! போங்க! போங்க!''

''நீங்க வல்லீங்களா?''

அவர் அவன் தோளில் கை வைத்து, ''நீங்க போங்க. நான் அங்கு வரமாட்டேன்'' என்றார். சட்டென்று கையை எடுத்துக்கொண்டார். ''அய்யய்யோ! உங்களைத் தொட்டு விட்டேனே! என் உக்கிர காலத்தில் உங்களைத் தொடக் கூடாதே நான்!'' என்று சிரித்தார்.

இளைஞனும் சிரித்தான்.

அவர் பிரிந்த பாதையில் வேறு வழி சென்றதைச் சற்று நேரம் பார்த்திருந்துவிட்டு, இளைஞன் கிராமத்தை நோக்கி நடந்தான். அவன் இதயத்தில் படபடப்பு அதிகமாகியது.

கிராமம்! மாடசாமி! உக்கிரமுள்ள தேவதை! மாடசாமி என்னைத் தொட்டார்! தொடப்பட்டவர் நசித்து போவார்!

சே! என்ன பத்தாம் பசலித்தனம்!

இளைஞன் எதிரே நீல வானத்தைப் பார்த்தான். சோம்பேறித்தனமாக மேலே பார்த்தான்.....

செங்குத்தாக அவன் தலைக்கு மேலே இரண்டு பருந்துகள் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தன!



காஷுவலோ-பகலோ-இரவோ
எப்பொழுதும்
பளிச்சென்று மிளிரவே.
கடாவ்
வாயில்கள்

இளைஞர் சமுதாயம்

ஆரம்பத்தில்
ஒரு பழைய ஜோக் !
முடிவிலே புதிய ஜோக் !

13. பெண்களுக்குப் பாதுகாப்பு

ஒரு பழைய ஹாஸ்யம்:

எஜமான் ஒரு நாள் வேலைக்காரன் மாரியப்பனை அழைத்தார். ''மாரியப்பா! அடுத்த தெரு ஐயாசாமியின் வீட்டுக்குப் போய், அவரை நான் கூப்பிட்டதாகச் சொல்லி அழைத்து வா. போ, சீக்கிரம்'' என்றார்.

மாரியப்பன் சற்றுத் தயங்கி நின்றான். ''ஏன் தயங்குகிறாய்? உம், போ!'' என்றார் எஜமான்.

''போறேன், எஜமான்...ஒரு வேளை அவரு வீட்டிலே இல்லாமற் போனா...?'' என்று இழுத்தாற்போல் கேட்டான் மாரியப்பன்.

''அவர் வீட்டுக்கு எதிர்த்தாற்போல் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறதே, தெரியுமா? அங்கே சீட்டாடிக் கொண்டிருப்பார். அங்கே போய்ப் பார்'' என்றார் எஜமான்.

மாரியப்பன் நின்ற இடத்தைவிட்டு நகராமலே மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான்.

''என்னடா யோசிக்கிறே. இன்னும் என்ன யோசனை?'' என்றார் எஜமான்.

''....ஒரு வேளை அங்கேயும் இல்லாவிட்டால்....?'' என்று கேட்டான் மாரியப்பன்.

''மளிகைக் கடைச் செட்டியார் வீட்டிலே இருப்பார். போய்ப் பார்!'' என்றார்.

மீண்டும் மாரியப்பன் தயங்கி நிற்கவே, ''என்னடா, இன்னும் என்ன சந்தேகம்?'' என்று கோபத்துடன் கேட்டார்.

''இல்லீங்க.... ஒரு வேளை அங்கேயும் இல்லாவிட்டால் என்ன செய்யறதுங்க ?'' என்று தயக்கத்துடன் கேட்டான்.

அவ்வளவுதான்; எஜமானுக்குக் கடுங் கோபம் வந்துவிட்டது. ''பேசாமல் வந்து விடு, முட்டாள்!'' என்று கத்தினார்.

மாரியப்பன் மிகவும் நிதானமாக, ''அதுக்கு ஏன் நான் போகணுங்க?'' என்று கேட்டான்.

எஜமான் அதற்கு மேல் என்ன பேச முடியும் ?

இதை வெறும் நகைச்சுவைத் துணுக்காக நினைத்துத் தள்ளிவிடுவதற்கில்லை. நம்மிடை வளர்ந்துவரும் சோம்பேறித்தனத்துக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. பரீட்சை நெருங்கும் வரை சோம்பேறித்தனமாக இருந்துவிட்டு, பிறகு அவசரம் அவசரமாக உருப்போடும் மாணவர்கள், கடைசி நிமிஷம் வரை வேலைகளை ஒத்திப் போடும் பெரியவர்கள் போன்றவர்கள் நமக்கு அத்துப்படிதான்.

கோவையில் உள்ள ''நண்பர்கள் சங்கம்'' சோம்பேறித்தனம் இல்லாமல் எந்தக் காரியத்தையும் ஏற்றுச் செயல்படும் முறையைத் தங்கள் சங்கத்தின் முக்கிய நோக்கமாகக் கொண்டு நடந்து வருகிறது.

இதுவரையில் நான் சந்தித்த இளைஞர் சங்கங்களில் கேள்விப்பட்டதையெல்லாம்விட இந்தச் சங்கத்தின் ஒரு நோக்கம் மிகவும் புதுமையா யிருந்தது.

''நாங்கள் எங்கள் சங்கத்தில் ஒரு முக்கியமான தொண்டை மேற்கொண்டு செய்து வருகிறோம். அந்தத் தொண்டின் மூலம், பெரியவர்களின் நன்மதிப்பையும், பாராட்டையும் இளைஞர்களாகிய நாங்கள் பெற முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. பெண்களுக்குப் பொது இடங்களில் பாதுகாப்பு அளிப்பது என்பதுதான் அத்தொண்டு. வாலிபர்கள் என்றால், பெண்களைக் கலாட்டா செய்வதில் விருப்பமுள்ளவர்கள் என்ற அபிப்பிராயத்தைப் போக்க வேண்டும் என்பது எங்கள் நோக்கம். அதாவது Eve Teasing என்ற துர்நடத்தையை நம் நாட்டை விட்டே ஓடச் செய்ய வேண்டும். வாலிபர்கள் கண்யமானவர்கள். பெண்களிடம் மிகவும் கண்ணியமாக நடந்து கொள்வார்கள்; தங்கள் கடமையில் கருத்தாயிருப்பார்கள். எதிலும் கட்டுப்பாட்டு உணர்ச்சியுடன் பெருந்தன்மையுடன் இருப்பார்கள் என்ற ஓர் உயர்ந்த கருத்தை எல்லாருடைய உள்ளங்களிலும் ஏற்படுத்த வேண்டும். இது எங்கள் சங்கத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று.'' இப்படி உணர்ச்சியுடன் பேசினார் சங்கச் செயலாளர் பி. ஏ. மணி.

அந்த இளைஞரின் பேச்சு என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டது. ''பெண்களுக்குப் பொது இடங்களில் பாதுகாப்பு அளிப்பதென்



பது நல்ல காரியம்தான். அதை மட்டும் இளைஞர் சங்கத்தின் தொண்டாகக் கருத முடியாதே...இன்னும் ஏதாவது...''

''....வைத்திருக்கிறோம். இளைஞர்களை நல்வழியில் திருப்புவதற்கு வேண்டிய கருத்துக்களைப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளின் மூலமே பரப்புவது என்பது எங்களுடைய அடுத்த திட்டம். அதாவது நல்ல கருத்துக்களை உபதேசமாகச் சொல்லி 'போர்' அடிக்காமல், நகைச்சுவையும், இன்னிசையும் கலந்த நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பரப்ப விரும்புகிறோம். அதற்கு அனுசரணையாக நாங்களே சில நாடகங்கள் தயாரித்து, நடத்தலாம் என்றிருக்கிறோம்.....''

''பெண்களுக்குப் பொது இடங்களில் பாதுகாப்பு அளிப்பது என்று கூறினீர்களே, திட்டத்தை எப்படிச் செயல்படுத்துகிறீர்கள்?''

''ஆலயத் திருவிழா, முக்கியமான பண்டிகை தினங்களில் பெண்கள் அதிகமாக வெளியே செல்லும் தருணங்களில் எங்கள் சங்க அங்கத்தினர்கள் இருபத்தைந்து பேர்களும் பாதுகாப்புப் படையாகச் செல்வோம். 'இளவட்டங்கள் பெண்களைச் சுற்றி வட்டமிடுகின்றனர்' என்ற தப்பான அபிப்பிராயத்துக்கு இடங்கொடாமல், கௌரவமானமுறையில் (அதாவது நடை, உடை, பாவனைகளில்) பரவலாகச் செல்லுவோம்.''

நண்பர்கள் சங்கத்தின் முதல் குறிக்கோளான 'சோம்பலுக்கு இடம் கொடேல்' பற்றி ஆரம்பத்தில் ஒரு பழைய ஜோக் சொன்னேன். மற்றொரு முக்கிய குறிக்கோளான பெண்களைச் சீண்டாமை பற்றி ஒரு புதிய ஜோக் சொல்லிக் கட்டுரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். ஆகவே சிரிக்கத் தயாராகி விடுங்கள்!

பஸ் ஸ்டாண்டில் சில வாலிபர்கள் கல்லூரி மாணவிகளை அடிக்கடி சீண்டி மனவருத்தம் அளித்து வந்தனர். ஒரு நாள் பொறுக்கமுடியாமல் போகவே ஒரு யுவதி இளைஞன் ஒருவனைப் 'பளார்' என்று கன்னத்தில் அறைந்துவிட்டாள்! அடுத்த கணம் என்ன நேருமோ, அடிபட்ட வாலிபன் என்ன செய்வானோ என்று எல்லாருக்கும் ஒரு கலக்கம்; அவனோ அடி வாங்கிய கன்னத்தை ஆசையுடன் தடவிக் கொடுத்துக் கொண்டே, ''அடாடா! ஏசுபெருமான் ஒரு கன்னத்தில் அடி விழுந்தால் இன்னொரு கன்னத்தைக் காட்டு என்று ஏன் சொன்னார் என்பது இப்போதல்லவா தெரிகிறது! என் பாக்கியமே பாக்கியம்!'' என்றானாம்.

— லோமாஸ்

வட்டமேஜை

ஈரோடு அரசாங்க மருத்துவ மனையில் நோயாளிகளுக்குக் கெட்டுப் போன பாலைக் கொடுத்து, நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகள் வாந்திபேதி கண்டு அவர்கள் உடல்நிலை மேலும் மோசமாயிற்று என்னும் செய்தி (தினமணி 15–6–72)யைப் படித்ததும் என் உடலும் உள்ளமும் பதறின. மருத்துவ மனையில் உணவுப் பண்டங்களைச் சுகாதார அதிகாரிகள் சோதித்த பின்பே நோயாளிகளுக்கு வழங்குவதுதான் எங்கும் நடைமுறை வழக்கம். ஈரோடு அரசாங்க மருத்துவ மனையில் இவ்வழக்கத்தைக் கடைப்பிடிப்பதில்லையா? ஒருவேளை கெட்டுப் போன பாலும் வீணாகக் கூடாது என்ற எண்ணமோ? ஆனால் முன்பு ஊட்டியில் விற்பனையாகாமல் தேங்கி நின்ற பாலை ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் அரசினர் அந்த ஏழைகளுக்குக் கூட வழங்காமல் சாக்கடையில் கொட்டினார்களே, அது ஏனோ?

மதுரை — 9
17–6–72 கே. வேதாந்தராமன்

கோயமுத்தூருக்குப் பக்கத்திலுள்ள சோமனூரில் எந்த ரயில் வண்டி நின்றாலும் இரு பக்கமும் திரும்பிப் பாருங்கள். ஒரே பெண்கள் கூட்டம். ஒவ்வொருவரும் இரண்டு மூன்று குடங்கள் வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். வண்டி நின்றவுடன் ஒவ்வொரு பெட்டியாக ஏறி அங்குள்ள குழாய்களில் தண்ணீர் பிடித்துக்கொண்டு செல்கிறார்கள். குடி நீருக்காகத்தான். சில சமயங்களில் ரயில் வண்டி தாமதமாக வரும் பொழுது சீக்கிரமே கிளம்பி விடுகிறது. அப்படி கிளம்பியபோது ஒரு வயதான அம்மாள் கீழே இறங்க முடியாமல் வண்டியிலேயே வந்து அடுத்த ஸ்டேஷனில் இறங்கிச்சென்றார். குடி தண்ணீருக்கே இந்த நிலைமை என்றால் எப்படி விவசாயம் செய்ய முடியும்? அதனால் அங்குள்ள சிறு விவசாயிகள் தங்களுக்குள்ள நிலங்களை விற்று பவர்லூம் தறி போடுவதில் முனைந்துள்ளனர். அதிலும் தரித்திரமே தாண்டவமாடுகிறது. இப்படி இருக்கும் போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயத்துக்கு மின்சாரக் கட்டணச் சலுகை என்று அறிவித்திருக்கிறார்கள். குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத ஊர்களில் இருநூறு யூனிட் மின்சாரம் ஒரு விவசாயிக்கு எப்படிச் செலவாகும்? இதில் எப்படி அந்த விவசாயிக்குச் சலுகை கிடைக்கும் என்பது மாண்பு மிகுந்தவர்களுக்கே வெளிச்சம். எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு அநாவசியமாகச் செலவிடும் பணத்தைக் குடிநீர் கிடைக்காத இடங்களில் குழாய்க் கிணறுகளை அமைத்து மக்களுக்கு உதவப் பயன்படுத்தலாமே.

ஈரோடு,
20–6–72 என்.என்.சுப்பிரமணியம்

கல்கி 18–6–72 இதழில், ''தெரிந்த விளையாட்டு; தெரியாத விவரம்'' பகுதியில் ''ஷா மட் (மன்னன் இறந்தான்) என்று அழுவாகும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ''ஷா — மாத்'' என்பதே சரியாகும். 'மாத்' என்றால் 'தோல்வி' என்று பொருள். 'ஷா மாத்' என்பது மன்னன் தோற்றான் என்பதைக் குறிக்கிறது.

விருதுநகர்
21–6–72 இ.வெங்கடகிருஷ்ணய்யங்கார்

ராஜஸ்ரீயின் உண்மையான விருப்பங்கள்

ராஜஸ்ரீயை ஒரு நிதியுதவி நிகழ்ச்சியில் கண்டபொழுது அவர் வாழ்க்கையில் உண்மையாக விரும்பும் சிலவற்றைப் பற்றித் தெரிவிக்குமாறு கோரினோம்.

'ஓ! என் விருப்பங்கள் ஏராளமானவை' என்று கூறிச் சிரித்தார். 'நான் மிகவும் விரும்பும் நகரம் சென்னை'.

'தீபாவளியின் வர்ண ஜாலங்களும் வெடிச் சப்தங்களும் எனக்கு மகிழ்ச்சியூட்டுபவை. ஜோஸியம் என்றாலோ, ஒரே மோகம். ஏனென்றால், அதுதானே நமது நண்பர்களை நன்கு அறிய உதவுகிறது.'

அவரது எழில் மற்றும் எடுப்பான தோற்றத்தின் ரகசியம் என்னவென்று கேட்டபொழுது அவர் கூறியதாவது: லக்ஸின் கவர்ச்சியூட்டும் தன்மைதான்'.



லக்ஸ் மிருதுவானது, எனக்குத் துடிப் பூட்டுகிறது. எல்லோருமே லக்ஸ் உபயோகிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.'



இந்துஸ்தான் லீவரின் ஒரு தரமான தயாரிப்பு.

செல்லாயி

குயில் ராஜேஸ்வரி

சிறப்புச்  சிறுகதை



"மவராசிங்களே! மக்களைப் பெத்தவங்களே! இதைப் பாருங்க அம்மா! குழந்தை காயத்தைப் பாருங்க அம்மா! மருந்துக்குக் காக போடுங்க அம்மா!" என்று கதறிக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்மணி. அவள் கையில் சில மாதங்களே ஆன பச்சிளம் குழந்தையொன்று வீறிட்டு அழுது கொண்டிருந்தது. அதன் காலில் முழங்காலுக்குக் கீழாகப் பெரும் அளவில் இரத்தம் கசியும் காயம் ஒன்று பார்ப்பவரைப் பதற வைக்கும் வகையில் இருந்தது.

காயத்தின் வேதனையோடு பசியின் கொடுமையும் சேர்ந்து கொள்ளவே குழந்தை கதறியவண்ணமாயிருந்தது. பெண்மணி, குழந்தையைச் சமாதானம் செய்ய முயலவே இல்லை. அருகில் பஸ்ஸுக்காக நின்றவர்கள் 'குழந்தை இப்படிக் கத்துகிறதே! தொண்டை என்னத்துக்காகும்' எனப் பதறினர். ஆனால் அவளோ, "பச்சைக் குழந்தை வலியால் துடிக்குது, பாருங்க!" என்று கூறி அவர்களது அனுதாபத்தைத் தொழிலுக்கு மூதலாக்க விரும்பினாள்.

அவள் உடுத்தியிருந்த புடவை நல்ல பச்சை நிறம். அளவுக்கு மீறி அதில் தூசி படிந்திருந்ததால் சாம்பல் நிறம் காட்டியது. பருவ எழில், அந்த அழுக்குப் படிந்த புடவையையும் மீறி, பனித் திரையைக் கிழித்துக் கொண்டு ஒளிவிடும் காலைக் கதிரவனைப்போல் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

எண்ணெய் போடாத செம்பட்டையான கூந்தல். அதனை வெகு அலட்சியமாக அள்ளிச் செருகியிருந்தாள். பெயருக்குக்கூட பிளாஸ்டிக் மணியோ, கண்ணாடி மணியோ கழுத்திலோ காதிலோ கிடையாது. அவள் குரலில் வேதனை கலந்த ஒரு பரிதாபம். கண்களிலோ கருணை கேட்கும் ஏக்கம். தோள்பட்டையில் கிழிந்திருந்த ரவிக்கை, அவளது வறுமையை எடுத்துக்காட்டியதோடு நில்லாமல், இளமையின் எழிலையும் வெளிப்படுத்தியது.

அவள் சாதாரணமாக, கையில் குழந்தை இல்லாமல் தெருவில் நின்று பிச்சை எடுத்தாலே யாரும் தாராளமாகச் சில்லறையை அவள் கையில் போட்டுவிடுவார்கள். ஆனால் அவள் தன் இளமைத் தோற்றத்தையும், ஏழைமைக் கோலத்தையும் மட்டுமே காட்டிப் பிச்சை எடுக்க ஏனோ முன்வரவில்லை. ஒருவேளை, பிச்சை எடுப்பதிலும் ஒரு முறை வேண்டும் என்று நினைத்தாளோ என்னவோ! குழந்தையைக் காட்டிப் பணம் கேட்டுக் கொண்டிருந்தாள் செல்லாயி.

வீட்டுக்கு எதிரில் உள்ள, பஸ் நிற்குமிடத்தில் தினசரி இந்தக் காட்சியைப் பார்த்து ரேணுவுக்கு அலுத்துவிட்டது என்றே சொல்லலாம். வாசல் பால்கனிக்கு வந்தால், செல்லாயியின் பரிதாபத் தோற்றம் கண்ணில் படும்; குழந்தையின் காயத்தைக் காட்டி அவள் ஓலமிடும் குரலும் காதில் படும்.

தினசரி குழந்தையின் காயத்தையும், பசியின் கொடுமையையும் காண்பித்துப் பணம் கேட்கிறாளே, இந்த வேதனையான நிலையிலிருந்து விடுபட வேண்டும் என்று அவள் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லையே என்று நினைத்து ரேணு வேதனைப்படுவாள். இது பல நாட்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

அன்று ஏதோ ரேணு படித்துக் கொண்டிருந்த பொழுது, "அம்மா! நாளைக்கு ஒரு நாள், நான் வேலைக்கு வரமாட்டேன் அம்மா. எனக்கு லீவு தாங்க" என்று பல்லைக் காட்டியவாறு எதிரே வந்து நின்றாள் வேலைக்காரி ரஞ்சிதம்.

"என்ன அப்படி முக்கியமான விஷயம்? வேலையை வேண்டுமானால், சீக்கிரம் செய்துவிட்டுப் போயேன்" என்றாள் ரேணு, நிமிர்ந்து அவளை நோக்கி.

"வேலையைச் செய்துவிட்டுப் போக முடியாதுங்க. நான் கூடவே இருக்க வேண்டிய கண்ணாலங்க அது."

"யாருக்குக் கல்யாணம் ரஞ்சிதம்?"

"நம்ம செல்லாயிக்கு!"

"எந்த செல்லாயி?" வியப்போடு வந்தன வார்த்தைகள் ரேணுவிடமிருந்து.

''அதான் அம்மா. நம்ம ஊட்டு முன்னே பஸ் ஸ்டாண்டண்டே பிச்சை எடுக்கமாட்டா, அந்தச் செல்லாயிக்குத் தான்!''

'' என்னது? அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகலியா?''

சிரித்துக் கொண்டான் ரஞ்சிதம். ''அதான் சொல்றேனுங்களே! இப்பதான் கண்ணாலம்!''

''அப்படீன்னு அந்தக் குழந்தை அவளுடையது இல்லையா?''

''அது எப்படிங்க? பிழைப்புக்காகக் கொண்டு வரும் வாடகைக் குழந்தைதானே !''

இதைக் கேட்டதும் ரேணுவுக்கு இன்னும் அதிர்ச்சியாயிருந்தது. ''யாரு ரஞ்சிதம், அவ கல்யாணத்தை நடத்தறது?''

''அனாதைங்களுக்கு நடத்த ஆளு ஏதம்மா? நம்ம வீட்டுப் பின்பக்கச் சேரியிலேதான் அது இருக்கு. நான்கூட அப்பப்போ ஆக்கறதை, கவரு பக்கமா கூப்பிட்டுக் கொடுப்பேன், பாவிப் பொண்ணு தனியா இருக்கேன்னு. நானே, உங்க புண்ணியத்திலே, நீங்க கொடுத்த இடத்திலே இருக்கேன். அவளை எப்படியம்மா இங்கே கொண்டு வந்து வைக்கிறது ?

''மூணு வருஷமா அதுவும், அதைக் கட்டிக்கிறவனுமா பணம் சேர்த்து வச்சிக்கிட்டுத்தான் இப்போ கண்ணாலம் கட்டறாங்க.... அந்தப் பொண்ணு கெட்டிக்காரி. இரண்டு நைலான் புடவை வாங்கி வைச்சிருக்கு. மனுசங்க இல்லையே. நாமும் விட்டுக்கொடுக்கக் கூடாதுன்னுதான் நான் போறேன்'' என விளக்கவுரை தந்தான் ரஞ்சிதம்.

'' தாராளமாகப் போய்விட்டு வா. வேலைக்குச் சீக்கிரம் திரும்பிவிடு. இந்தா இந்த ரெண்டு ரூபாயை என் ஆசீர்வாதத்தோடு 'அவர்கள் நன்றாக இருக்கட்டும்' என்று வாழ்த்திக் கொடு'' என்று அவனிடம் இரண்டு ரூபாய்களைக் கொடுத்தாள்.

''சொல்றேனுங்க'' என்று ரேணு கொடுத்த இரண்டு ரூபாய்களை வாங்கிக் கொண்டு சென்றான் ரஞ்சிதமும்.

திருமணத்துக்கு அடுத்த நாள், மஞ்சள் வேஷ்டியோடும், புடவையோடும் பிள்ளையையும், பெண்ணையும் தன் வீட்டு விருந்துக்கு அழைத்து வந்து விட்டான் ரஞ்சிதம். ஏழ்மை பிரதிபலிக்கப் பரிதாபமாக இறைஞ்சும் செல்லாயியின் குரலையே கேட்டிருந்த ரேணுவுக்கு, அவள் கலகலவென்று பேசியதும், உல்லாசமாக நகைத்ததும் சற்று விநோதமாகவே இருந்தது.

மறுநாள் பளீரென்று நைலக்ஸ் புடவை ஒன்றை உடுத்திக் கொண்டு கொண்டை போட்டுக் கனகாம்பரத்தைத் தலை நிறையச் சூட்டிக் கொண்டு கணவனுடன் செல்லாயி சென்றதைப் பார்த்த பொழுது ரேணுவால் அவள் மேல் வைத்த கண்ணை எடுக்க முடியவில்லை.

''சினிமாவுக்குப் போகுதும்மா புது ஜோடி. ஆசை இருக்காதா பின்னே? டிபன் செய்து கொடுத்தேன்'' என விவரித்தான் ரஞ்சிதம்.


ரேணு சிரித்துக் கொண்டாள்.

அடுத்த இரண்டு நாட்களுக்கெல்லாம், செல்லாயியின் இறைஞ்சும் குரலைக் கேட்டவுடன், பால்கனிக்கு ஓடி வந்து பார்த்தாள் ரேணு. செல்லாயிதான் ! அதே பழைய பச்சைப் புடவை ! காலில் காயத்துடன் வீறிட்டுக் கொண்டிருந்த குழந்தை அவள் கையில் இருந்தது.

''என்ன ரஞ்சிதம் இது? கல்யாணத்துக்குப் பிறகுகூட ஏன் இவள் பிச்சை எடுக்கிறாள்! அவள் கணவன், அவளுக்குச் சோறு போடமாட்டானா?'' என்று கேட்டாள் ரஞ்சிதத்தை நோக்கி.

''அதுக்கென்னம்மா பண்ணறது? வயத்துப் பொழைப்பாச்சே ! உங்க வீடுகளிலெல்லாம் படித்துவிட்டு வேலைக்குப்போற பொம்பளைங்க கல்யாணம் கட்டிக்கிட்டாலும் நின்னுடறாங்களா ?'' என்றான் ரஞ்சிதமும் நிதானமாக. ரேணுவுக்கு ஒரே திகைப்பு. என்ன சொல்லுவதென்றே புரியவில்லை.

மாதங்கள் உருண்டன. காலத்தின் மாறுதல்களும், முத்திரைகளும் ஏற்பட்டன, எட்டு மாதக் கர்ப்பிணியான



"நான் நேற்றுப் பிறந்தவ னில்லே என்று மார் தட்டிக் கொள்பவர்கள் பலர் இன்று தான் பிறந்தவர்கள் போல நடந்து கொள்கிருர்கள்!"

இதுரீஸ்-ஷா --பாபு



செல்லாயி, அருமாதக் குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு பிச்சை கேட்டுக் கொண்டு தான் இருந்தாள். காசு போடுபவர்கள் அவள் நிலேயையும், குழந்தையின் வயதையும் கணக்கா போட்டுப் பார்க்கப் போகிருர்கள்?

ஒரு நாள் செல்லாயியும் தாய் ஆனுள். ரஞ்சிதம்தான், உடன் பிறந்த சகோதரியைப் போல், அந்தருணத்தில் அவளுக்குச் செய்ய வேண்டிய உதவிகளே யெல்லாம் செய்தாள்.

ரேணுவின் வீட்டுப் பின்பக்கத்தில் ரஞ்சிதத் துக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில், ஒரு சிறு குழந்தையின் குரல் இரவெல்லாம் ஒலித்துக் கொண்டிருப்பதை ரேணுவும் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள்.

அன்று திடீரென்று அந்த இடத்தில் ஒரு கூச்சல்! வீட்டைப் பெருக்கிக் கொண் டிருந்த ரஞ்சிதத்தைப் பார்த்து, "என்ன ரஞ்சிதம் அங்கே? நீ போய்ப் பார்!" என்று படபடப்போடு கூறினுள் ரேணு.

"நல்லாச் சொன்னீங்களே! நான் இப்போ அங்கே போகக் கூடாது அம்மா. புருஷன் பெண்சாதி சண்டை அது" என்று நிதான மாகக் கூறினுள் அவள்.

"அப்படி என்ன சண்டை அவர்களுக்குள்?"

"பிச்சை எடுக்கக் குழந்தை இல்லே அம்மா. அந்தப் பக்கத்திலே இருந்த குடிசையிலே ஒரு குடிகாரன் இருந்தான். அவன் பணத்துக்குக் குழந்தையைக் கொடுப்பான். அவனுக்குப் பெண்சாதி கிடையாது. ஒரு நாளேக்கு இந்தக் குழந்தைக்கு ஐந்து ரூபாய் கொடுத் திடணும். இவங்க அந்தக் குழந்தையைக் கொணுந்து காயப்படுத்தி, அதைக் காட்டிப் பிச்சை கேட்பாங்க."

"என்னது, காயப்படுத்துவாங்களா, குழந் தையை? என்ன அக்கிரமம் இது?" என்று வீறிட்டாள் ரேணு.

"இது என்னம்மா பெரிய தப்பு? வயத்துப் பொழைப்பு நடக்கணும்னு ஏமாத்தினுத்தான் பணம் கிடைக்கும். கஞ்சிக்குத் இண்டாடுற வங்க செய்யறதுதான் ஏமாத்தலா? பெரிய மனுசங்க என்னவெல்லாமோ செய்யறுங் களே!"

அவள் ஏதோ நியாய விளக்கம் தந்தாள்.

"இந்தச் சண்டைக்குக் காரணம்தான் என்ன?"

"அதாம்மா. அந்தக் குடிகாரன் கடன் தலைக்கு மேல் போய்விட்டது என்று ராவோட ராவா ஓடிப் போயிட்டான். இப்போ குழந்தை இல்லே, பிச்சைக்குக் காட்ட. செல் லாயி வீட்டுக்காரரோ பிறந்த குழந்தையை எடுத்துக்கலாம்னு சொல்ருரு. இவ எப்படி அம்மா ஒப்புக்கவா? பெத்தவளாச்சே!"

பின் பக்கத்திலிருந்து செல்லாயியின் வீறிட்ட குரல் கேட்டது. "என்னன்னு ஐயா நெனெச்சுக்கிட்டே நீ? அந்தக் குடி காரன் பணத்துக்குத் தந்ததைப் போல் என் குழந்தையைத் தருவேனு? பத்து மாசம் சொமந்து, நோவுபட்ட எனக்குத்தானே தெரியும் புள்ளே அருமை! நான் உயிரோட இருக்கும் வரையிலே என் குழந்தையை இந்த அநியாயத்துக்குத் தரமாட்டேன். இன்னும் ஒண்ணும் சொல்லிப்புடறேன், கேட்டுக்கோ. இனிமே எந்தப் புள்ளையையும் வாடகைக்கு எடுத்து அந்த மாதிரி கொடுமைப்படுத்திப் பிச்சை கேட்டுத் துட்டு கொணரமாட்டேன். புள்ளையைப் பெத்தாத்தானே-தெரியுது! அந்த நோவு பட்டால்தானே அருமை புரியுது! ஐயோ தெய்வமே! தெரியாம அந்தக் குழந்தைங்களேக் கொடுமைப் படுத்திட் டேனே! அந்தப் பாவம் நான் பெத்த புள்ளே யைத் தாக்காமே இருக்கணுமே! மாரியத்தா! தெரியாமே செய்த பாவத்தை மன்னிச்சுடு! என் புள்ளேயே தண்டிக்காம விட்டுடு" எனக் கதறினுள். தொடர்ந்து அவள் கேவிக் கேவி அழுவதும் ரேணுவின் காதில் நன்ருக விழுந்தது.

அவள் கண்கள் தெய்வத்தின் திருவுரு வத்தை நோக்கின. புனிதத் தாய்மைக்கு இவ் வளவு துன்பத்தையும், வலியையும் ஏன் இரக்கம் சிறிதும் இல்லாமல் தெய்வம் வைத்து விட்டது எனப் பல முறை அவள் நினைத்த துண்டு. இன்றுதான் அதற்குப் பதில் கிடைத் தது. அந்தக் கஷ்டங்களும் வலியும் தானே பாசத்தை ஏற்படுத்தும் பிணைப்புகளாகின் றன? சுலபமாகக் கிடைத்த குழந்தையை எப்படி வேண்டுமானுலும் ஆட்டிய செல் லாயி, தான் நொந்து சுமந்து, பெற்ற பிள்ளே என்றதும் எப்படி நடுங்குகிருள், பதைக்கிருள்? தாயானுல்தான் அருமை தெரிகிறது. அத்துடன் பாசமும், இரக்கமும் பிறக்கின்றன என நினைத்த ரேணுவின் மனக் கண் முன் பச்சைப் புடவையுடன், குழந்தை யைக் கையில் ஏந்திப் பிச்சை எடுத்த செல்லாயியின் உருவமும், தாயாகக் குழந் தையை மார்புடன் அணைத்துக் கொண்டு வாடிட்ட செல்லாயியின் உருவமும் மாறி மாறி வந்தன.

அன்று வெறும் பணம் ஈட்டும் யந்திரமாக, பாசம், பச்சாத்தாபம் அறியாத பெண்ணுகச் செயல்பட்ட செல்லாயி, இன்று அன்னையாகிய தால் அன்பையும், அருமையையும் அறிந்து விட்டாள் என நினைக்கத் தோன்றியது ரேணு வுக்கு.

குடிக்காகக் குழந்தையை வாடகைக்குத் தந்த தகப்பன் அரக்கனு? பிள்ளேப் பேற்றின் நிலே அறியாததால் பணம் ஈட்டும் யந்திர மாகச் செயல்பட்ட செல்லாயி குற்றவாளியா?

சில நாட்களுக்குப் பிறகு செல்லாயியை அதே பஸ் ஸ்டாண்டில் பார்த்தாள் ரேணு. இப்பொழுது கீறிய காயத்துடன் இருந்த குழந்தையோடு அவள் பிச்சை எடுக்கவில்லே. குழந்தைகளுக்குத் தேவையான பலூன் விற்றுக்கொண்டிருந்தாள். அவள் அதை வருடுவதுகூடக் குழந்தையை வருடுவது போல் இருந்தது...தாய்மையின் முத்தி ரையோ இது?

மீண்டும் வருக!

பொறுப்பற்ற தந்தை, மனேநிடமும் தேக நிடமும் இல்லாத அன்னை, விவரம் தெரியாத பருவப் பெண்ணான தங்கை, இவர்களுக்கெல்லாம் தான் உழைத்துச் சம்பாதித்துப் போட வேண்டிய கடமை உள்ள ஒரு பெண் எத்தகைய நிலையில் இருப்பாள் என்பதைப் பார்க்க வேண்டுமானால் கலா நிலையம் அளிக்கும் "Welcome again" நாடகத்தைப் பார்க்க வேண்டும்.

பொறுப்பற்ற தந்தைக்குப் பிறந்த பொறுப்புள்ள பெண் கற்பகத்தின் பாத்திரத்தை ஷோபா ஏற்றுப் பொறுப்புடன் நடித்திருக்கிறார். நாமும் பொறுப்புடன் அவரைப் பாராட்டிவிடுவோம்.

வாழத் துடிக்கும் பருவப் பெண்ணின் கருகிப் போன ஆசாபாசங்களின் அவல நிலை ஷோபாவின் நடிப்பில் நன்கு வெளிப்படுகிறது. எரிச்சல் ஒரு சலிப்பு, வெறுப்பு, அவநம்பிக்கையோடு இயந்திரமாக ஆபீசுக்குப் போய் வரும் கற்பகத்தின் வாழ்க்கையில் திடீரென்று அவளையும் அறியாமல் தோன்றும் ஒரு பிடிப்புக்குக் காரணமான வாலிபன் ஜெயராமனை அவள் சில விநாடிகள்தான் சந்திக்கிறாள். அப்பொழுதே அவள் வாழ்வில் வசந்தம் பிறந்துவிடுகிறது. அவள் அடியோடு மாறி விடுகிறாள். நாடகக் கதையும் அடியோடு மாறிவிடுகிறது. இந்த மாற்றங்களுக்கு - அநாயாசமாக ஈடு கொடுக்கும் நடிகை ஷோபா இந்நாடகத்தில் முக்கிய ஸ்தானத்தைப் பெற்றுவிடுகிறார்.

அடுத்தபடி இந்நாடகத்தில் ரசிகப் பெருமக்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெறும் பாத்திரம் வேலைக்காரக் கிழவி தேவானை. அடேயப்பா! நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தன்னைவிட்டுப் பிரிந்த மச்சானைப் பற்றி வர்ணிக்கும்போது என்ன பரவசம்! எப்படியும் ஒரு நாள் அவன் தன்னை வந்து பார்க்கத்தான் போகிறான் என்று கூறும்போது எவ்வளவு திடமான நம்பிக்கை! பாத்திரத்துக்கு ஏற்ற இயல்பான பேச்சு, மேக்கப், நடை, உடை, பாவனை எல்லாம் பிரமாதம்! அந்தப் பாத்திரத்தை ஏற்றவர் நடிகை கௌசல்யா. Welcome again என்று அவரை வரவேற்கிறோம்.

கற்பகத்தின் ஆதரவற்ற குடும்பத்துக்கு ஆதரவாளனும், உற்ற நண்பனும், உதவியாளனும் விளங்கும் பாத்திரம், அப்பண்ணா - அவர் ஹோட்டலில் சரக்கு மாஸ்டர். அந்தப் பாத்திரத்தை ஏற்ற பூர்ணம் விசுவநாதன் தாம் நடிப்பிலும் மாஸ்டர்தான் என்பதை (சில காட்சிகளில் மட்டுமே தோன்றினாலும்) நிரூபிக்கிறார். ஆனால் தம் சரக்கு முழுவதையும் வெளியிட அந்த மாஸ்டருக்கு வாய்ப்பில்லை.

கல்லானாலும் கணவன் என்று நினைக்கும் உத்தம பத்தினியின் பாகம் மீனாக்ஷிக்கு மிகவும் பொருத்தம். ஈஸிசேரில் சாய்ந்துகொள்ளும்போதும், கணவனால் கொடுமைப்படுத்தப்படும்போதும், மகள் கற்பகம், தனக்கேற்ற வாழ்வை நிர்ணயித்துக் கொண்டுவிட்டதை அறிந்து மனத் திருப்தி அடைந்தபோதும் கடைசியில் கணவனோடு சேர்ந்தபோதும் அவர் நடிப்பு எந்தச் சந்தர்ப்பத்திலும் தொய்ந்துபோகவில்லை. நாடகத்தில் கற்பகம், தேவானை ஆகியவர்களோடு சேர்த்து எண்ணிப் பார்த்து மகிழ வேண்டிய பாத்திரம் மீனாக்ஷி.

சீட்டாடும் கும்பலை நேருக்கு நேர் காட்டாமல், ஒருவர் எவர்சில்வர் கூஜாவில் அடிக்கடி காப்பி வாங்கி வருவதைப் போல் காட்டினது மிகவும் நன்றாயிருந்தது. ஆனால் அதே சீட்டாட்டத்தை மேடையில் காட்டியபோது சுவாரஸ்யமாயில்லையே!

அதேபோல் சரக்குமாஸ்டர் அப்பண்ணாவிடம் ஒரு சர்வர் தன் காதல் அநுபவத்தைக் கூறியதும், அப்பொழுது மற்றொரு சர்வர் வேண்டாதவற்றை யெல்லாம் கூறி நாடகம் பார்க்கிறவர்களுக்கெல்லாம் சிரிப்பு மூட்ட முயன்றதும் கோபத்தைத்தான் கிளறியது.

நாடகத்தின் விறுவிறுப்பையும், சுவாரஸ்யத்தையும் நங்கூரம் போட்டு நிறுத்திய இன்னொரு அம்சத்தையும் சொல்லத்தான் வேண்டும்.

ஓடிப்போன பொறுப்பற்ற தந்தை மீண்டும் வந்து குடிபோதையில் ஆடித் திருவிளையாடல் புரிவது நன்றாயில்லை. அந்தப் பாத்திரம் நாடகத்தின் திரை மறைவிலேயே இருந்திருக்கலாம். கற்பகமும், அவள் தங்கை சசிகலாவும் அவரைப் பற்றிச் சொல்லி அனுப்பிக் கொள்வதே போதும்.

ஜெமினி மகாலிங்கம் கதாநாயகன். நாடகத்தில் இன்றியமையாதவர். அவருக்கு அதிக வேலையில்லை. ஆயினும் அவர் நடிப்பு கச்சிதம்.

நாடகத்தை எழுதியவர் ஜயஜனனி. டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செய்திருப்பவர் கௌசல்யா.

திருப்தி அளித்த நாடகம்.

- காந்தன்



நான் முதலில் கவனிக்கவில்லை. சில்லறையை வாங்கிக் கொண்டு அவன் திரும்புகிறபோதுதான் பார்த்தேன். ஷாக் அடித்தது போலிருந்தது. என் கண்களையே நம்ப முடியாமல் ஒரு தடவை இமைகளை மூடித் திறந்து பார்த்தேன்.

அவனேதான்; நம்பிராஜனேதான்!

பழைய குடுமியில்லை. பட்டை நாமமில்லை. பழுப்பு ஏறிய துணியில்லை. பஞ்சைத் தோற்றமில்லை. எல்லாம் மாறியிருந்தாலும் மாறாத ஏதோ ஒன்று என் கண்ணில் பட்டுவிட்டது. அதற்குள் அவன் திரும்பிவிட்டான். அப்படியே ஓடிப் போய் முன் பக்கமாக அவன் முகத்தை நன்றாகப் பார்த்திருக்கலாம். அவன் மீது பாய்ந்து, கட்டிப் பிடித்து அவனைத் திறை அடித்திருக்கலாம். 'என்னைத் தெரியவில்லையாடா?' என்று கேட்டிருக்கலாம்.


எல்லாம் செய்திருக்கலாம்தான்! எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து நான் மீண்டிருந்தால்! அதற்குள் நாலைந்து பேர் வெற்றிலை சீவல் கேட்டுக் கொண்டு வந்துவிட்டார்கள். அவனும் யாருடனோ பேசிக் கொண்டு காம்பவுண்டைத் தாண்டிப் போய்விட்டான். எதையோ கைநழுவ விட்டு விட்டு நிற்பதைப் போல நான் திகைத்து நின்றேன்.

கை மட்டும் யந்திரமாக வேலை செய்தது. மனம் அந்த நம்பிராஜனையே துரத்திக் கொண்டு போய்விட்டது.

கொள்ளிடக் கரையில் உள்ள கோவிந்தராஜபுரத்தைச் சேர்ந்தவன் என்று விசாரித்துத் தெரிந்து வைத்திருப்பவர்களுக்குக் கூட நான் இங்கே நாயராகத்தான் முழங்கினேன். ஆறு வருஷங்களுக்கு முன்னால் இதே வியாபாரத்தைச் செய்து கொண்டிருந்த நாயருக்கு நான் வாரிசு. அந்த நாயர்தான் எனக்கு வழிகாட்டி, குரு எல்லாம். ரஃபி மார்க்கிலுள்ள அந்தக் காம்பவுண்டுக்குள் நாயருக்கு இரண்டு மணி நேரம்தான் வேலை. இருபத்தைந்து முப்பதுக்கு வியாபாரம் ஆகிவிடும். அது போதும். அதிலேயே ஐந்தாறு ரூபாய் லாபம் கிடைக்கும். அப்புறம் கடையை ஒரு பெட்டிக்குள் கட்டிக் கொண்டு கன்னாட் பிளேஸ் பக்கம் போய் விடுவான். காலையிலும் மாலையிலும் கரோல்பாக் வட்டாரத்திலே வியாபாரம். சுகுமாரன் நாயர் சொந்த ஊர் ஷொரனூர்ப் பக்கம் போனபோது பதினையாயிரத்தோடுதான் போனான். இன்னும் இருந்தால் இந்த ஐந்தாறு வருஷங்களில் அதுவே முப்பதாக ஆகியிருக்கும். நாயரிடம் பசையிருப்பது அந்த வட்டாரத்தில் எல்லா

அப்பவே

அட்டைப்படக் கதை



சொன்ன


ஆள் அழகாக மாறியிருந்தான். நிறமே ஆப்பிள் கரப்பாக மாறியிருந்தது. அப்பாவைப் போல ஒரு வளர்த்தி. நல்ல காலம்; அவரைப் போல் கப்பைக் கால் மட்டும் இல்லை. ஆனால் மெல்லியதாக ஒரு சிவப்புக் கோட்டு நாமம் இருந்தது. அதற்குப் பொருத்தமாகக் கழுத்தில் ஒரு 'டை'. நம்பிராஜனேதான்; சந்தேகமேயில்லை. அந்த நடையைப் பார்த்தாலே தெரிகிறதே! உடையும் நிறமும் எவ்வளவுதான் மாறியிருந்தாலும் சொந்த ஊர் வாடை எங்கே போகும்? பார்க்கிற பார்வையிலேயே தமிழ் நன்றாகத் தெரியுமே!

''நாயர், தூள் பாக்கு வெச்சிருக்கியா?''
''நாயர், வெத்திலை சீவல் கொடு!''
''நாயர், ஒரு வில்ஸ் பாக்கெட்!''

ருக்கும் தெரியும். அஜ்மல்கான் ரோட்டில் வளையவரும் பஞ்சாபிப் பெண்ணழகிகளில் ஒருத்தியும் கிடைத்திருப்பாள். ஆனால் சுகுமாரன் நாயருக்குச் சொந்த ஊர் நினைவு வந்து விட்டது. சொந்த மண்ணையும் பெண்ணையும் எண்ணிக் கொண்டு இரண்டு பெரிய டிரங்குப் பெட்டிகளில் ஏதேதோ வாங்கி நிரப்பிக் கொண்டு ரயிலேறி விட்டான். அதுவரையில் உற்சாகமாக இருந்தவன், வண்டி புறப்படுகிற சமயத்தில் கொஞ்சம் கலங்கிவிட்டான்.

''ஹ்ஹூம். எல்லாத்தையும் விட்டுட்டுப் போறேன்! அதுக்கென்ன, நீயும் ஒரு நாள் இப்படிப் புறப்பட்டுப் போயித்தான் ஆகணும், கோபி. அதனாலியாக்கும் சொல்றேன். நாலு துட்டு சேரணும். நல்லபடியா இருந்துக்க!'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

அவன் காட்டிவிட்டுப் போன வழியில் தான் நான் இப்போது போய்க் கொண்டிருந்தேன். கருமாரன் நாயர் செய்தது போலவே நானும் இரண்டு மூன்று விதமான வியாபாரங்கள் செய்தேன். எல்லாவற்றிலும் கைமேல் பணமும் உண்டு; லாபமும் உண்டு. கைப் பணத்தை நான் எப்படிக் கட்டிக் காப்பேன்? அதனால் நம்பிக்கையான இடங்களில் ரகசியமாக லேவாதேவியும் உண்டு. பணமும் பத்திரமாய் இருக்கும். வட்டியும் கிடைக்கும். சிக்கனமாக இருப்பதிலும் சரி, அதே சமயத்தில் வயிற்றுப்பாட்டைப் பார்த்துக் கொள்வதிலும் சரி, கருமாரன் நாயர் சூராதி சூரன். மாதத்தில் முக்கால்வாசி நாட்களில் அவனுக்கு மதராஸி வீடுகளில் 'ஓசி'ச் சாப்பாடே கிடைத்துவிடும். சமயத்துக்கு ஒத்தாசையாக இருப்பது போல் இதற்கு அவன் சமயமும் தெரிந்து வைத்திருந்தான். அந்தக் கலையில் அவனிடம்தான் எனக்கும் சிட்சை. ஊரில் அம்மாகூட இப்படிச் செய்து போட மாட்டாள். இட்டிலி தோசை; வத்தல்—வடாம்; பொரிச்ச குழம்பு ஆமவடை உட்பட அவ்வப்போது கிடைத்துவிடும். குறித்த கெடுப்படி பணமோ வட்டியோ கொடுக்க முடியாதவர்கள் வீட்டில் இந்த உபசாரம் கொஞ்சம்



நாயர்

சிறப்புச் சிறுகதை

ஆர்வி

அதிசயமாகவே இருக்கும். இதை யமாப் பிப் பிடிப்பதில் கருமாரன் நாயர் வில்லாதி வில்லன்.

''அதுக்கென்ன, அடுத்த மாசமே குடுங்க. கொஞ்சம் சேர்த்துப் போட்டு மட்டும் குடுத்திடுங்க'' என்று அருமையாகவே பேசிவிட்டு அவர்கள் போட்டதைச் சாப்பிட்டுவிட்டும் வந்து விடுவான்.

முதலில் இதைக் கேட்கவே எனக்குக் கூச்சமாக இருந்தது.

''அட, நீ என்ன முகத்தைச் சுளுச்சிக்கிறே? உங்க ஓட்டலுங்களை விட வீடு என்ன கெட்டுப் போச்சா? வசதியான இடமா இருந்து, மனசுக்கும் புடிச்சதா இருந்தாத் தானே சாப்பிடப் போறோம்? கண்டதையா அப்படித் தின்னுப்புடுவாங்க?'' என்றான்.

அதுவும் நியாயமாகப் பட்டது எனக்கு.

கிட்டத்தட்ட நானும் நாயரைப் போலவே ஆறு வருஷங்களை இதே ஊரில் சௌகரியமாகவே ஓட்டிவிட்டேன். என் கையில் இருப்பது, வெளியில் கடன் கொடுத்திருப்பது எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் என்னிடம் இப்போது ஏழெட்டு ஆயிரமாவது தேறும். நாயரை விட எனக்குப் பணம் சேர்ந்தது இன்னும் சுருக்குத்தான். ஒருவன் போட்ட பாதையில் நடப்பது யாருக்குமே சுலபம்தானே?

எனக்குப் பணத்தைப் பற்றி இப்போது கவலை யில்லை. நம்பிராஜனைப் பார்த்தபிறகு எனக்கு ஊர் நினைவு வந்து விட்டது. என் அம்மாவின் நினைவு வந்து விட்டது. கேட்டவர்களுக்கு வெற்றிலையும் சீவலும் எடுத்துக் கொடுக்கும்போதே என் கண்களில் கண்ணீர் திரையிட்டது. அதற்கு மேல் அங்கே இருக்கப் பிடிக்காமல் எல்லாவற்றையும் பெட்டிக்குள் எடுத்து வைத்துக் கொண்டு, கரோல் பாக்குக்கே திரும்பி விட்டேன். நம்பிராஜனைப் பார்ப்பதென்றால் நாளை இந்நேரத்துக்குத் தான் பார்க்கலாம். அதுவரையில் எனக்கு இருப்பே கொள்ளாது போலிருந்தது. வந்தவனைக் கைநழுவ விட்டு விட்டு, இப்படித்

திரும்புகிறேமே என்று வழியெல்லாம் என் நெஞ்சு அழுது புலம்பிற்று.

ஏழு வருஷங்களுக்கு முன்னே என்னுடைய அம்மாவையும் இந்த நம்பிராஜனையும் விட்டுப் பிரிய நேர்ந்த காட்சி என் மனக் கண்முன்னே விரிந்து செல்ல, நான் பாதையின் ஓரமாக நடந்து சென்றேன்.

*　　　*　　　*

என் மனக் கண் முன்னால் எங்கள் ஊர் ஐயங்குளக்கரை சினிமாப் படம் மாதிரி தெரிந்தது.

குடி தண்ணீருக்கு ஊர்ப் பெண்கள் அங்கே தான் வர வேண்டும். குளக் கரையில் ஒரு பெரிய மணல் மேடு. நடுவில் ஓர் அரச மரம். காலை வேளை. சலசலக்கும் மரக் கிளையின் நிழலிலே நான் உட்கார்ந்திருக்கிறேன். என் கண்கள் குளத்துக்கு வரும் பாதையையே பார்த்துக் கொண்டிருக்கின்றன. சற்றைக்கெல்லாம் நாலைந்து பெண்கள் தூரத்தில் வருவது தெரிகிறது. அவர்களில் கனகாவும் இருப்பாள் என்று என் மனம் எதிர்பார்க்கிறது. என்னைப் பார்த்துவிட்டு அவள் ஓடிவிடாமல் இருக்க வேண்டுமே என்று நான் சற்று மறைவாக நகர்ந்து கொள்கிறேன். மொளுங்கு மொளுங்காக நான்கு பெண்கள் வருவது தெரிகிறது. அவர்களில் முதலில் வருகிறவள்தான் கனகா. நான் போட்ட கணக்குத் தப்பு. கனகா என்னைக் கண்டுகொண்ட பிறகும் தயங்கவில்லை. அலட்சியமாக, அட்டகாசமாகப் பாதை இறக்கத்தில் வந்துகொண்டிருக்கிறாள். அவர்கள் அருகில் நெருங்கியதும் நான் குபீரென்று ஆவேசத்துடன் துள்ளிப் பாய்கிறேன்.

அவர்கள் மிரண்டு விட்டார்கள். ஆத்திரமும் ரோசமும் பொங்க நான் அந்தக் கனகாவை நோக்கி முன்னேறுகிறேன். முதலில் மிரண்டவள் அதற்குள் சுதாரித்துக் கொண்டு என்னை ஏளனமாகப் பார்த்தபடி நிமிர்ந்து நிற்கிறாள்.

என் உடலில் மட்டுமல்ல; என் குரலிலும் ஒரு வெறி ஏறியிருப்பதை நானே உணர்கிறேன்.

''ஏவடி என்னைப் பத்தி நேத்துக் கேவலமாப் பேசினவ இங்கே?'' என்று எதிரே வழி மறித்துக் கொண்டு நிற்கிறேன்.

கனகாவைத் தவிர மற்றப் பெண்கள் மூவரும் பயந்து கூச்சலிட்டபடியே விலகி ஓடுகிறார்கள். கனகா மட்டும் ஒன்றும் புரியாமல் நிற்கிறாள். முதலில் திகைத்தவள் இரண்டடி பின்னால் வைத்துக் கொண்டே இப்படியும் அப்படியும் பார்வையை ஓட்டுகிறாள்.

''எவன் வந்தாலும் சரிதான் இன்னைக்கு. விடப் போறதில்லே. ரெண்டிலே ஒண்ணு பார்த்திட்டுத்தான் மறு வேலே!'' என்று கர்ஜனை செய்கிறேன்.

கனகாவின் முகத்தில் இப்போது உண்மையான பயம் தெரிகிறது. கோப வெறியில் என்ன செய்துவிடுவானோ என்று அஞ்சுகிறாள். அடுத்த கணம் வாயையும் மூக்கையும் சேர்த்து ஒரு குத்து விட்டிருப்பேன். பெண்ணாச்சே என்று கூட நான் பார்க்கவில்லை. அவள் ஓடப் பார்க்கிறாள். மிரட்டலோடு நானும் நின்றிருக்கலாம். நிற்காமல், பின் பக்கமாக இருந்த நீண்ட பின்னலைப் பிடித்திழுக்கிறேன். அவள் வெடுக்கென்று திமிறுகிறாள். பின்னல் முன் பக்கம் போய்விடுகிறது. சோளியின் கழுத்துப் பக்கம் என் கையிலே சிக்குகிறது. அவள் மீறிப் போன வேகத்தில் முதுகுப் பக்கம் கிழிந்து கையோடு நாறு நாறாக வந்து விடுகிறது. அவள் ஓடிய வேகத்தில் மணலில் இடறி விழுகிறாள். இதைப் பார்த்துவிட்டுக் கூட வந்த பெண்கள் எல்லாரும் 'ஐய்யோ முறையோ' என்று கூச்சலிடுகிறார்கள். கனகாவின் மேலாடை போன போக்கையும் இருக்கிற நிலைமையையும் பார்த்ததுமே எனக்கு வெறி நீங்கிப் பயம் பிடித்துக் கொள்கிறது. அக்கரையிலிருந்து அதட்டல் சத்தமும் பெரிதாகச் சேர்ந்து கொள்ளவே தலைகால் புரியாமல் ஓடுகிறேன். இந்த மாதிரி ஓட்டம் நான் இதுவரையில் ஓடியதேயில்லை. அப்படி ஓடுகிறேன். பின்னால் யார் யாரெல்லாமோ துரத்தி வருவது போல் ஒரு பிரமை. மைதானம் தாண்டிப் பெருமாள் கோவில் வாசல் வந்த பிறகுதான் திரும்பிப் பார்க்கிறேன். யாரையும் காணவில்லை. அவசரம் அவசரமாக உள்ளே ஓடுகிறேன்....

சந்நிதிக்கு இடது புறமாகத்தான் வழி. நேர் எதிரே கல் ஜன்னல். எட்டிப் பார்க்கிறேன். துவாரபாலகர் சிலைகளில் ஒன்று உயிர் பெற்று நிற்பதைப் போல் அர்ச்சகர் சுவாமி பட்டை நாமமும் பஞ்சகச்சமுமாக நின்று திருவாய்மொழி சொல்லிக்கொண்டிருக்கிறார். அவருக்குக் கிணற்றுச் சகடை உருளுவது போன்ற குரல். அவர் மடப்பள்ளிக்குப் போகிறார். நான் அவர் கண்ணில் படாதபடி வாகனப் படிச் சட்டங்கள் பகுதியில் நுழைகிறேன். சற்று உயரத்தில் புஷ்பப் பல்லக்கு வாகனம் இருக்கிறது. அதனுள் ஏறிப் பதுங்கிக் கொண்டு விடுகிறேன்.

எத்தனை நேரம் இங்கே ஒளிந்துகொண்டிருப்பது? புரியவில்லை. ஏதோ சந்தடி கேட்கிறது. நான் பூனை மாதிரி கண்களை மூடிக் கொள்கிறேன்.

''எங்கே போயிடப் போறான்? இங்கே தான் எங்கேயாவது ஒளிஞ்சிக்கிட்டிருப்பான். நல்லாத் தேடுங்க!'' என்று ஒரு குரல் கேட்கிறது. பலர் கும்பலாக வருவது தெரிகிறது. கண்ணை இன்னும் இறுக மூடிக்கொள்கிறேன்.

''பெருமாளே! ஒருத்தர் கண்ணிலும் படாமல் என்னைக் காப்பாத்தணும்!'' என்று முணுமுணுக்கிறேன். கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும் காதைத் தீட்டிக் கொண்டு கவனிக்கிறேன்.

உள்ளூற ஓர் அசட்டுத் துணிச்சல். அர்ச்சகர் சுவாமி கோவிலில் இருப்பதால் எதுவும் தலைக்கு மிஞ்சிப் போய்விடாது என்று ஒரு நம்பிக்கை. மிஞ்சிப் போகும்படி அவர் விடமாட்டார். அவரிடம் எல்லோருக்குமே ஒரு யோசனை. அப்படி ஒரு தோரணை அவருக்கு. பெரிய ஆகிருதி. ஆறடி உயரம். கொஞ்சம் சப்பைக் கால். இல்லாவிட்டால் இன்னும் கூட உயரம் தெரியும். ஒரு சத்தம் போட்டால் கோவிலே கிடுகிடாய்த்துப் போகும். எல்லாருக்குமே அவரிடம் மதிப்பும் மரியாதை

யும் உண்டு. சின்னவர்கள், குழந்தைகள் என்றால் அவருக்குக் கொள்ளை ஆசை. பழமாகக் கொடுப்பார்; பூவாகக் கொடுப்பார்.

நம்பிராஜன்தான் அவருடைய பிள்ளை. மற்ற மூன்று பேரும் அவருக்குப் பெண்கள். என்னோடு என் வகுப்பில்தான் நம்பிராஜன் படித்தான். எனக்கு அவனும் அவனுடைய தங்கை பத்மாவும்தான் பழக்கம். பத்மா எங்களைவிட வயதில் சின்னவள். இருந்தாலும் படுசுட்டி. வாயும் துடி; கையும் துடி. அவளிடம் கொஞ்சம் மிஞ்சிப் பேசினால் யாராயிருந்தாலும் மூக்கு உடைந்து போகும். அப்படி ஒரு பேச்சு. ஆனால் மனசும் கையும் ரொம்பப் பெரிசு. அல்பத்தனமே அவளிடம் கிடையாது. கோவில் காரியங்களில் நம்பி அப்பாவுக்கு உதவி செய்வான். பிரசாத விநியோகமும் அவன் செய்வதுண்டு. பெண்கள் அதற்கெல்லாம் வரமாட்டார்கள். ஆனால் கடைசிக் கட்டத்துக்குப் பத்மா வந்துவிடுவாள். சர்க்கரைப் பொங்கலோ, வடையோ, புளியோதரையோ, சுண்டலோ அள்ளி அள்ளித்தான் கொடுப்பாள். அர்ச்சகர் சுவாமிக்கே கொஞ்சம் பெரிய கை. பத்மாவின் கை அதைவிடத் தாராளம்.

''இந்தா கோபாலா! இன்னும் கொஞ்சம் வாங்கிக்க'' என்று எத்தனையோ நாள் எனக்கு அவள் பிரசாதம் கொடுத்திருக்கிறாள். நான் தின்ன முடியாமல் திணறியிருக்கிறேன்.

''நீ தின்னால் போதுமா? அம்மாவுக்கும் கொண்டு போய்க் கொடேன்'' என்று வாதாம் இலைகளைக் குடலையாகச் சுருட்டி அதில் அள்ளிக் கொடுப்பாள்.

நம்பிக்கு அதெல்லாம் போதாது. பத்மா விஷயம் தெரிந்தவள். அவள் சாதாரணமாகத்தான் கொடுக்கிறாளாக்கும் என்று நினைத்தேன். அப்புறம்தான் காரணம் தெரிந்தது. எங்களுக்கு அரை வயிற்றுச் சாப்பாட்டுக்கு மேல் வசதியோ, வழியோ இல்லை என்பதைத் தெரிந்து கொண்டுதான் அவள் கொடுத்து வந்திருக்கிறாள்.

பத்மா மாதிரி ஒரு தங்கை இல்லாமல் போனாளே என்று எனக்கு வருத்தம். நான் ஒரே பிள்ளையாக இருக்கும்போதே வீட்டில் இந்தப் பாடு என்றால் தங்கை வேறு இருந்து விட்டால் அம்மா என்ன பாடுபட வேண்டியிருக்குமோ என்று எண்ணிக் கொள்வேன்.

* * *

ஊரில் நாங்கள் கொஞ்சம் ஒதுங்கியேதான் இருந்தோம். அம்மா கல்யாணமாகி வந்த புதிதில் பாகப் பிரிவினை விஷயமாகக் குடும்பத்தில் ஏதோ மனக் கசப்பு. அப்பா சின்ன வயதில் இறந்து விட்ட பிறகு அம்மாவுக்குச் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் செய்துவிடப் பார்த்தார்களாம். அப்பா செத்தபோது வயிற்றிலிருந்த நான்தான் அவர்கள் திட்டம் பலிக்காமல் போவதற்குக் காரணம் என்று என்னைக் கண்டாலே உறவினர்களுக்கு ஆவதில்லை. நாங்களும் நெருங்குவதில்லை.

அப்பாவின் பங்கு வீண் வழக்குகளிலேயே பெரும் பகுதி கரைந்து விட்டது. பாக்கியிருந்ததெல்லாம் ஒருவேளைச் சாப்பாட்டுக்குத்தான் காணும். என்னை வளர்க்கவும், படிக்க வைக்கவும் அம்மா எத்தனையோ கஷ்டங்களை அநுபவிக்க வேண்டியிருந்தது

நானும் நம்பியும் ஸ்கூல் ஃபைனல் வந்து விட்டோம். எனக்கு வயது பதினேழு. நம்பியைவிட நான் கொஞ்சம் வளர்த்தி. எப்பொழுதும் எங்களைக் கோயிலில்தான் பார்க்கலாம். கோயிலில் விளையாடுவோம். அல்லது வேலைகள் ஏதாவது இருந்து கொண்டேயிருக்கும். பழங்காலத்துக் கோயில். அடிக்கடி ஏதாவது விசேஷமாக இருக்கும். கோயில் பூஸ்திதி இப்போது குறைவுதான். ஆனால் அர்ச்சகர் சுவாமி எதையும் குறைக்க மாட்டார். கோவிந்தராஜா தம் காரியத்தை எப்படியும் நடத்திக் கொண்டு விடுவார் என்று அர்ச்சகர் சுவாமி அடிக்கடி சொல்வது வழக்கம். அப்படித்தான் வருமானம் டில்லி, பம்பாய், கல்கத்தாவிலிருந்தெல்லாம் பெருமாளுக்கு வந்து கொண்டேயிருந்தது. எல்லாம் குறைவின்றி நடந்து கொண்டும் வந்தது.

ஊர்ப் பெண்கள் ஐந்தாறு பேராக ஐயங்குளத்துக்குப் போனபோது இந்தப் பத்மா ஒருத்தியிடம் ஏதோ சொன்னாளாம்:

''இந்த ஊரிலே எல்லாம் கோவிந்தராஜாவோட சொத்துத்தானும். நிலமாவும் நீச்சாவும் நகையாவும் நட்டாவும் இருந்ததாம். எல்லாத்தையும் கொஞ்சம் கொஞ்சமா அப்படி அப்படியே இருக்கிற பேர் பறிச்சுண்டுட்டாங்களாம். கோவிலுக்குக் குறைஞ்சு போச்சு; இருக்கிறவங்க கொழிக்கிறாங்க!''

பத்மா பேசினது கனகா என்கிற பெண்ணின் காதில் விழவே அவளுக்கு ரோஷம் வந்துவிட்டது. அவள் கோயில் தர்மகர்த்தா பெரிய உடையாருடைய தம்பி மகள். எங்கள் வகுப்பில் படித்தவள்; திமிர் பிடித்தவள்.

அவள் பதிலுக்கு அருகில் இருந்த பெண்களைப் பார்த்து, ''ஆமாடி ஆமா, இப்பக்கூட கோவில் சொத்து மடப்பள்ளி வழியா சில பேருக்கு மட்டும் பொட்டலம் பொட்டலமாக் கட்டிப் போகலியா — அதைப் போலப் போனா எந்தக் கோவில் சொத்துத்தான் குறையாது?'' என்று சொல்லியிருக்கிறாள்.

''சோறு கொடுத்திட்டதினாலே ஒண்ணும் சொத்துக் குறைஞ்சி போயிடாது. அதிலேயும் பிரசாதம்!''

''ஏன் குறையாதாம்? சொத்துத்தான் சோறா ஆக்கிப் போகுது.''

''அது கோவில் சொத்து இல்லே. மண்டகப்படிக்காரங்க கொடுத்துச் செய்யறது. மண்டகப்படி செய்யறதே எல்லாருக்கும் விநியோகம் பண்றதுக்குத்தான்!''

''அதான் சொல்றேன், அப்படி எங்கே எல்லாருக்கும் ஒழுங்கா விநியோகமாவுது? இலை இலையாக் குடலை கட்டி இஷ்டமானவங்களுக்கு மட்டுமில்லே கொடுத்துப் போவுது? கோவில்லேயே திங்கறதுக்கு இத்தினி, அப்புறம் கொண்டுக்கிட்டுப் போய்த் திங்கிறதுக்கு இத்தினின்னு யாரோட சொத்தை யாரு அள்ளி விடறது? மீந்திட்டா கோவிலைச் சேர்த்

துட்டுப் போகுது. எல்லாம் வெறும்னிட்டுச் செய்யற வேலைதானே?''

''மீந்து போனது கோவிலைச் சேராது. அதை அப்படியே கொண்டு போறதுக்குன்னே சில பேர் இருக்காங்க!''

''அப்படியும்தான் இருக்கும், அதிகாரிங்கன்னு இருந்தா. அதுக்காகத் தனக்குப் பிரியப்பட்டவங்களுக்கு ரகசியமாக் கொடுத்திடறது யார் செய்யற வேலை?''

''அதானே, அப்படிக் கொடுக்கணும் போலக் கரிசனமா இருந்தா, அதை அவங்க வீட்டிலேருந்து கொடுத்தனுப்பணும். இதையெல்லாம் கோவிலேருந்தியா கொண்டுக்கிட்டு வந்திடறது?'' என்று நடுவில் ஒருத்தி கனகாவுக்குச் சாதகமாகப் பேசியிருக்கிறாள்.

இன்னொருத்தியும் அவளோடு சேர்ந்து கொண்டு ''கொடுக்கட்டும்; சோறுதானே, தின்னுட்டுப் போகட்டும். குடலை குடலையா வாங்கிக் கட்டிக்கிட்டுப் போறானுமே ஒருத்தன், வெட்கம் கெட்டுப் போயி, அதைச் சொல்லு!'' என்று சொல்லி யிருக்கிறாள்.

இரண்டு பேர் சேரவே கனகாவுக்கு இன்னும் திமிர் ஏறியிருக்கிறது.

''அப்பன் இருந்தப்ப பொறந்தவனா இருந்தா, அவனுக்குச் சூடு சொரணை இருக்கும். மானம் மதிப்பு இருக்கும். அப்பன் செத்தப்பறம் பொறந்தவன் எப்படி இருப்பான்?'' என்று கேட்டிருக்கிறாள்.

அவன் எப்படி இருப்பான் என்று காட்டத்தான் நான் காலையில் ஐயங்குளத்தில் போய்க் காத்திருந்தேன். நிச்சயம் அவளுக்கு இப்போது புரிந்திருக்கும்!

அவளுக்கு என்றைக்குமே கொஞ்சம் இறுமாப்பு உண்டு. கர்வம் பிடித்தவள். ஆனாலும் அவள் என் வம்புக்கெல்லாம் வந்ததில்லை. எல்லாரிடமும் அவள் பேசுவாள். நம்பியிடம் இன்னும் சகஜமாகக்கூடப் பேசுவாள். அவள் தர்மகர்த்தா குடும்பத்துப் பெண். அவன் அர்ச்சகர் மகன்தானே? அந்தத் தோரணையாகவும் இருக்கலாம். ஆனால் என்னிடம் மட்டும் அவள் பேசுவதே யில்லை. உள்ளூற என்னிடம் பேச வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு இருந்தது எனக்குத் தெரியும். தனியாகப் போக நேரிட்டால் அவள் வேண்டுமென்றே திரும்பித் திரும்பிப் பார்ப்பாள். நான் முகத்தைக்கூடத் திருப்புவதில்லை. அது அவளுக்குக் கோபமாக இருக்கலாம். குதிரை வாகனத்தின்போது அவள் என்னை நெருக்கிக் கொண்டு கூட நின்றிருக்கிறாள். ஜாடையாகப் பேசப் பேச வந்திருக்கிறாள். நான் பேசாமல் இருந்ததில் அவளுக்கு ரோசமாக இருந்திருக்கலாம். எதுவாக இருந்தாலும் ஒரு பெண் இப்படி என்னைக் கேவலமாகவா பேசுவது?

அவள் வீட்டாரிடம் நானோ அம்மாவோ பேசுவதில்லை. தர்மகர்த்தா பெரிய உடையார் ஒரு மாதிரி; அவர் தம்பி ஒரு மாதிரி. எங்களுக்குச் சொத்தே தரக்கூடாது என்கிற கட்சியைத் தாண்டியவர் சின்ன உடையார். என் அப்பா வீட்டில் இருக்கிறபோதும் அந்த நாளில் அவர் தடியன் மாதிரி வந்து அம்மாவைப் பார்த்து, ''அண்ணி, அண்ணி'' என்று காரணமில்லாமல் பேச வருவாராம். பார்வையே சரியாக இருக்காதாம்.

விண்வெளிவீரரின் புதிய சேவை

அமெரிக்க விண்வெளி வீரரான ஜேம்ஸ் இர்வின் இனி தாம் விண்வெளிப் பயணங்களை மேற்கொள்ளப் போவதில்லை என்றுஅறிவித்ததைத் தொடர்ந்து இப்போது வேறொரு விதமான சேவையில் தாம் ஈடுபடப் போவதாகக் கூறியுள்ளார். ''ஏசுகிறிஸ்துவின் போதனைகளைப் பரப்பும் பணியிலேயே எனது பெரும்பாலான நேரத்தைச் செலவிட விரும்புகிறேன். விண்வெளிப் பயணம் என்னை ஆழ்ந்த மத நம்பிக்கைக் கொண்டவனாக மாற்றிவிட்டது'' என்று அவர் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

ஆதாரம்:
''நியூஸ்டைம்ஸ்''



அம்மா ஒரு நாள் அப்பாவிடம், ''அந்த மனுஷன் அண்ணி முறை கொண்டாடிக்கிட்டுப் பேச வர்றது எனக்குப் பிடிக்கல்லே. பேசணும்னு நீங்க வெளியே அழைச்சிட்டுப் போய்ப் பேசிட்டு வாங்க. வீட்டுக்குள்ளாறல்லாம் அவர் வரவாணும்'' என்றாளாம்.

இது எப்பவோ நடந்த சங்கதி. அதை அந்த மனுஷன் மறக்கவே யில்லை. அந்த வன்மத்தை அவர் இன்னமும் பாராட்டி வந்தார். இப்போது அது அவர் மகள் வாய் வழியாகவும் வெளி வந்திருக்கிறது. அப்பனுக்கு இருந்த எண்ணமும் புத்தியும் தப்பாமல் பெண்ணுக்கும் இருந்திருக்குமோ என்னமோ? நான் அவள் மனத்தைப் புரிந்துகொள்ள விரும்பாததனால் மூண்டு வந்த ஆத்திரமாகவும் அவளுக்கு இருக்கலாம். நான் என்ன கண்டேன்? குடும்பப் பகை ஒன்றுதான் எனக்குத் தெரிந்தது.

பின்னால் வரக் கூடியதைக் கொஞ்சமும் யோசியாமல் வயது வந்த பெண்ணை ஆத்திரத்தில் தொட்டு, துணியைக் கிழித்து விட்டோமே என்று நான் நடுங்கிச் செத்தே போனேன். கோயிலினுள் தபதபவென்று ஒரு சின்னப் படையே திரண்டு வந்துவிட்டது. உயிரோடு என் தோலை உரிக்கப் போவதாகவும், எங்களை ஊரை விட்டே துரத்தி, கூரையை நெருப்பு வைத்துக் கொளுத்தப் போவதாகவும் சபதம் கூறி முழக்கமிட்டது.

கோயிலுக்குள் நடப்பது எதுவுமே தெரியாமல் மடப்பள்ளியிலேயே ஈர விறகோடு போராடிக் கொண்டிருந்த அர்ச்சகர் சுவாமி கூச்சல் வலுக்கவே வெளியில் வந்து பார்த்திருக்கிறார். மூலைக்கு ஒருவராகப் பாய்ந்து ஓடுவதையும் மற்றும் சிலர் வாய்க்கு வந்த

படி பேசுவதையும் பார்த்து அவர் என்னமோ ஏதோ என்று திகைத்துப் போய் நின்றிருக்கிறார்.

''என்னடா இது கூட்டம், என்ன விஷயம்?''

''அந்தக் கோபாலன் பயல் இல்லே...''

''கோபாலனு? என்ன பண்ணினுன்?''

''சின்ன உடையார் மகளைப் பிடிச்சி...''

''ம்...பிடிச்சி?''

''இழுத்துக் கீழே தள்ளி, ரவிக்கையைக் கிளிச்சி...''

''எதுக்காக? எந்தக் கோபாலன்? தோப்புக் குத்தகை பாக்கருனே, அவனு?''

''அவன் இல்லீங்கய்யா.... இவன் அந்தச் சின்னம்மா மவன் கோபாலன். உங்க மவன் கூடப் படிக்கலே, அவன்!''

ஒருவன் இல்லாதது, நடக்காதது எல்லாம் சேர்த்து வர்ணிக்கிறுன். ஒருவன் சவால் விடுகிறுன். இன்னொருவன் ஊரே தங்க ளுடையது மாதிரி கர்ஜிக்கிறுன். ஆளுக்கு ஒன்று சொல்கிறார்கள். ஒரு பேச்சும் விளங்காதபடி தலைக்குத் தலை பேசுகிறார்கள்.

''ஏண்டா, அந்தப் பொண்ணு என்னடா செய்தா?''

''தண்ணிக்குப் போயிருக்கு. அதும்பாட்டுக்கு வந்த பொண்ணைப் பிடிச்சி இந்த வேலே செய்திருக்கான் பய மவன்.''

''ஏண்டா, சும்மா வந்த பொண்ணுக்கிட்டே எவனுவது வம்புக்குப் போவானுடா? ஏதானும் அவ பேசியிருப்பா. அவனும் பேசியிருப்பான். இந்தச் சின்னப் பசங்க சண்டைக்கா இத்தனை பேர் படையாகத் திரண்டு வந்தீங்க? இத்தனை பேரும் அவனை அடிச்சா என்னடா ஆகறது? உங்க மேசிரிட்டுக் கேசுக்கெல்லாம் பெருமாள் கோயில்தானு இடம்? வரட்டும்; நானே அவனை விசாரிச்சுக் கண்டிக்கிறேன். குத்தத்துக்குத் தக்கபடி தண்டனை பண்ணிப்புடுவம். போயிட்டு வாங்க. சின்னதைப் பெரிசு பண்ணுமே!'' என்று அதட்டுகிறார் அர்ச்சகர் சுவாமி.

''ஒரு பொண்ணைப் புடிச்சி மானபங்கப் படுத்தியிருக்கிறுன் ஒரு சுவவாலிப் பயல்— இதுவா சின்ன வெசயம்? சின்னப் புள்ளைங்க போடற சண்டையா ரவிக்கையைப் புடிச்சுக் கிளிக்கிறது?'' என்றுன் வைத்தி என்பவன்.

''சரி, கிழிச்சுப்புட்டான். அதுக்கு என்ன செய்யலாம்னு வந்திருக்கீங்க? காலைக் கையை உடைக்கப் போறீங்களா? சரி, ஒடைச்சிடுறீங்க. அப்புறம் அதுக்கு மேலே காலு ஒடிஞ்சா ஆஸ்பத்திரிக்குப் போய்க் கட்டுக் கட்டிப்புடலாம். தன்னுலே சேர்ந்து போவும். பட்ட காயம் ஆறிப் போயிடும்டா. அவன் ஆம்பிளே. அந்தப் பொண்ணுக்கு ஒரு பேரு வந்துட்டா அப்புறம் அது வெளியிலே தலைகாட்ட முடியுமாடா? சின்ன உடையாருக்கு நல்லது பண்ண வந்தீங்களா, தீம்பு பண்ண வந்தீங்களா? நாளைக்குக் கல்யாணம் ஆகவேண்டிய பொண்ணுச்சே, இப்படியெல்லாம் நடந்ததுன்னு எவண்டா அந்தப் பெண்ணைத் தேடி வந்து கட்டிக்குவான்? குட்டிகுலைச்சு நாய்த் தலையிலே வைச்சாப்பலே என்னடா காரியம் இது? அந்தப் பொண்ணேடை பேரைக் கெடுக்கவா பார்க்கிறீங்க? உங்களையெல்லாம் முதல்லே உள்ளே வர விட்டதே தப்பு. தர்மகர்த்தா உடையார்கிட்டே நான் பேசிக்கிறேன். இப்ப மரியாதையா எல்லாரும் வெளியே போயிடுங்க. போங்க சொல்றேன்!'' என்று பெரிய சத்தமாகப் போடுகிறார் அர்ச்சகர் சுவாமி.

மறு கணமே சத்தமெல்லாம் கப்சிப்பென்று அடங்கி விடுகிறது. எல்லாரும் போன சுவடு தெரியாமல் போகிறார்கள். நான் மூச்சுக் கூட விடாமல் அப்படியே முடங்கிக் கிடக்கிறேன். எத்தனை நேரம் கிடந்தேனே, தெரியவில்லை. கண்ணை விழிக்கிறேன். தலை மாட்டில் ஒரு சோற்றுப் பொட்டலம் இருக்கிறது. மணக்கிறது. நல்ல பசி. நான் தலையைத் தூக்கிப்பார்க்கிறேன். வெளியே இறங்கி வருகிறேன். கிணற்றடிக்குப் போய்த் தண்ணீர் இழுத்து முகத்தைக் கழுவிக் கொள்கிறேன். பொட்டலத்தைப் பிரிக்கிறேன். என் கண்ணிலிருந்து கண்ணீர் பெருகுகிறது. அப்படிப் பட்ட மணத்தை நான் இதுவரையில் அறிந்ததேயில்லை. அத்தனை ருசி. 'ததியோன்ன'மா அது? கருணையையும் அன்பையும் கலந்து பிசைந்த அமிருதம். கையைக் கழுவிக் கொள்கிறேன். அம்மா நினைவு வருகிறது. அவள் எப்படித் துடிக்கிறுளோ என்கிற கவலை வருகிறது. நான் வயிறாரச் சாப்பிட்டு விட்டேன். ஆனல் அம்மா? அதை நினைக்கவே வேதனையாக இருக்கிறது.

இப்போதுகூட நான் மதிலேறிக் குதித்துப் போய்விடலாம். ஆனல் வெளியில் யார் கண்ணிலாவது பட்டால் கட்டாயம் காலை முறித்து விடுவார்கள். தவிர, இந்த இடத்தை விட்டு எப்படி வெளியில் போவது? எங்கே போவது? மூளைதான் குழம்புகிறது. அழுகை வருகிறது. அத்துடன் தூக்கமும் வருகிறது. சோர்ந்து போய்ப் பழைய இடத்திலேயே உறங்குகிறேன்.

மணிச் சத்தம் கேட்டு விழிக்கிறேன். ஒரே இருட்டு. நம்பி வந்து என்னை மெல்ல எழுப்புகிறுன்.

''எப்படிடா இருக்கு?''

''குமுறிண்டு இருக்கு. உங்கம்மா பயந்திண்டே இருக்காங்க. நீ பத்திரமா யிருக்கிறதை எங்கம்மா அந்தப் பக்கம் போறுப்பலே போய்ச் சொல்லிட்டு வந்துட்டாளாம். அந்தப் பொண்ணு கூட வாயைத் திறந்து ஒரு குறையும் சொல்லலியாம். இருக்கிறவங்கதான் கூத்துக் கட்டி அடிக்க ரகளைப் பண்ணுறாங்க... அதனுலே மேலே என்ன செய்யப் போறே?''

''அதானே எனக்கும் தெரியலே.''

''ஒண்ணு செய்யேன். ஒரு வாரம், பத்து நாட்கள் போல எங்கேயாவது போயிடு. சூடு தணிஞ்சப்புறம் மெதுவா வந்துக்கலாம். ஸ்கூலுக்கு லீவு போட்டுடு. உங்கம்மாவை நாங்க கவனிச்சுக்கறேம்.''

''அது சரி; லீவும் போட்டுடறேன். ஆனு எங்கே போறது?''

''எங்கேயானும் போய்த்தானே ஆகணும்! இங்கேயே இருக்க முடியுமா? இப்ப இருட்டிப் போச்சு. எங்க பாட்டி புடவையையும் கைத்தடியையும் கொண்டு வரேன். கட்டிக்கோ. தடியை ஊனிக்கொண்டு நைஸா எங்க வீட்டுக்கு வந்துடு. நெல் மூட்டைக்கு நடுவிலே உட்கார்ந்திரு. நடு ராத்திரிக்கு மேலே

கிளம்பி டவுனுக்குப் போயிடலாம். என் கிட்டே நாலு ரூபாய் இருக்கு. செலவுக்குப் பணம் வச்சுக்க. சோமு இருக்கானே, அவன் உனக்குக் கொஞ்சம் இடம் தரமாட்டானா? நாளை ஒரு நாளைத் தள்ளு பார்க்கலாம்.''

''சரி, அப்படியே செய்யறேன்.''

அன்று இரவு அந்த ஊரை விட்டுக் கிளம்பியவன்தான். சோமு வீட்டில் மறுநாள்கூட இருக்க முடியாமல், கையில் மூன்றே ரூபாய் மிச்சத்தோடு, ரயில் டிக்கெட்கூட எடுக்காமல் மெயிலில் ஏறிவிடுகிறேன். சென்னைக்குப் போனதும் டில்லிக்குப் போகிற மிலிடெரிக்காரர்கள் சிலபேரைப் பார்க்கிறேன்.. கோவிந்தராஜா கோவிலுக்கு மண்டகப்படி செய்கிற ஒருவருடைய நினைப்பு வரவே அவர்களோடு சேர்ந்து புறப்பட்டு விடுகிறேன். நான் போய் இறங்கிய வேளை, எனக்குக் கண் கண்ட தெய்வமாக வந்து வாய்க்கிறான் சுகுமாரன் நாயர்.

சீன் முன் ஓடிய காட்சி அத்துடன் முடிகிறது.

''கரோல்பாக்கிலே நய்வாலாகல்லி எங்கே இருக்கு?'' என்று ஒரு குரல் யாரையோ விசாரிப்பது காதில் விழுந்ததும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

காரணம், அது நம்பிராஜன் குரல்தான்!

திரும்பிப் பார்த்தவன் என்னையும் நடு ரோட்டையும் மறந்து, ''நம்பீ!'', என்று பெரிதாகக் கத்திவிட்டேன்.

அவன் தயக்கத்துடனேயே என்னை நெருங்கி வந்தான். உற்றுப் பார்த்தான். உடனே ஓங்கி என் தோளில் அறைந்தான். மறு கணம் என்மீது தாவி என்னை அப்படியே இறுகத் தழுவிக் கொண்டான்.

''ஏண்டா பழி, இங்கேயா இருக்கே?''

''ஆமாண்டா. நீ எப்ப இங்கே வந்தே?''

''மூணு மாசமாச்சு. இருஷி பவன்லே வேலே. மோதிபாக்கிலே ஜாகை. ஒரு நண்பனோடு தங்கியிருக்கேன். இங்கே நம்ம ஊர்க் கோவிலுக்கு மண்டகப்படி செய்கிறவர் ஒருத்தர் இருக்கார். அவரைத் தேடிண்டு வந்தேன்.''

''நான் உன்னை மத்தியானமே கான்மன்லே பார்த்தேன். நீதானுன்னு கவனிச்சுப் பார்க்கறதுக்குள்ளே நீ யாரோடேயோ பேசிக்கிண்டே போயிட்டே. அதிலேருந்து மனசே சரியில்லே. மறுபடியும் உன்னை எப்பப் பார்க்கப் போறேனோன்னு கவலையோட வந்திண்டிருக்கேன். பாரேன், பெருமாளோட இருப்பை, உன்னை வழியிலேயே கொண்டு வந்து நிறுத்திப்புட்டாரே! இப்ப என் மனசு எப்படி இருக்கு தெரியுமா? சந்தோஷம் தாங்காமே அப்படியே வெடிச்சுப் போயிடும் போல் இருக்கு!''

''உனக்குச் சந்தோஷத்தாலே வெடிச்சுடும் போலிருக்கு. ஆனா ஊரிலே வேதனையாலே வெடிச்சுப் போயிண்டே இருக்காங்க ரெண்டு பேர், தெரியுமோ உனக்கு? படுபாவி, ஒரு பத்துப் பைசா கார்டுக்குக்கூடவா உனக்குப் பஞ்சமாப் போயிட்டுது?''

''என்னமோ போடலே. பணம்கூட அனுப்பணும்னுதான். என்னமோ அனுப்பலே. அது



மாட்டின் தீவனம்!

போஸ்டர் தாளைக் கிழித்துத் தின்னும் சென்னை மாடுகள் நமக்குத் தெரியும். அமெரிக்க மாடுகளே காகிதம் தின்றால் அதிசயம்தானே!

'மிசௌரி' பல்கலைக் கழக ஆராய்ச்சி ஒன்றின்படி செய்தித் தாள் அச்சாகும் 'நியூஸ் பிரிண்ட்' காகிதம் மாடுகளுக்கு நல்ல தீவனமாம்! இந்தச் செய்தித் தாள்களைச் சாப்பிடும் மாடுகள் கூடுதலான பால் கறக்குமாம்! இதற்காக இனி வைட்டமின், இரும்புச் சத்து முதலியவை கொண்ட தாள்களைத் தயாரிக்கப் போகிறார்கள்! இனி விற்காத பத்திரிகைகளும் பழைய இதழ்களும் மாட்டுத் தீவனமாகப் பயன்படும்.

- சம்பத்குமாரி

ஆதாரம்: 'ஹிம்மத்'

யாரு ரெண்டு பேரு? எங்கம்மா ஒண்ணு. இன்னொருத்தர் யாரு?''

''சொன்னா நீ நம்பவே மாட்டே!''

''நான் நம்பறேன், நம்பல்லே, நீ சொல்லேன்!''

''உனக்கே தெரியல்லியே?''

''ஊஹும்.''

''உனக்குத் தெரியாது. சொன்னாக்கூட உனக்கு ஆச்சரியமா யிருக்கும். எனக்கே அதைக் கேட்டதும் முதல்லே அப்படித்தான் இருந்தது....''

''யாரு, கனகாவைச் சொல்றியா?''

''அடப் பாவி, உனக்கு எப்படிடா தெரிஞ்சுது? எப்படிக் கண்டுபிடிச்சே?''

''நான் கண்டுபிடிக்கிறதாவது, மண்ணாங்கட்டி! எனக்கு வந்து அவளா இருந்தாத் தேவலாமேன்னு இப்பத்தான் படுறது. அவ மனசை நான் பிடிவாதமா தெரிஞ்சுக்கல்லியேன்னுதான் அவளுக்கு என்மேலே கோபம். அந்தக் கோபத்திலேதான் என்னை அப்படிக் கேவலமாப் பேசியிருக்காள். இத்தனை நாளாகியிருக்கு, அது எனக்குப் புரியறதுக்கு. நீகூட அன்னிக்கே சொல்லல்லியா, 'அவள் ஒண்ணும் பேசக்காணும், இருக்கிறவனுகதான் ரகளை செய்யறானுக'ன்னுட்டு... எம்மேலே அவளுக்கு ஆசை-எனக்குத் தெரியும். ஆனால் அவமேலே இருக்கிற ஆசை எனக்கே இப்பத்தான் தெரிஞ்சுது.''

''அப்ப என்ன செய்யப் போறே?''

''அப்பவே சொன்னான் நாயர், நானும் ஒரு நாள் புறப்பட்டுப் போய்த்தான் ஆகணும்னு. அந்த நாள் இப்ப வந்திட்டுது. போக வேண்டியதுதான்!'' என்றேன் நான்.

அம்மா

ரா. கணபதி

40. தீனரக்ஷகி, பதிதபாவனி!

> கெட்ட பிள்ளை பிறப்பதுண்டு. ஆனால் கெட்ட அம்மா என்ற ஒருத்தி ஒருபோதும் இருந்தது கிடையாது.
>
> — தேவீ அபராதக்ஷமாபண ஸ்தோத்ரம்

காசி யாத்திரை முடிந்து ஜயராம்பாடிக்குத் திரும்பிய அம்மாவுக்கு ரத்தக் கடுப்புக் கண்டது. அது ஒரு மாதிரியாகக் குணமாயிற்றோ இல்லையோ உடம்பெல்லாம் வேர்க்குரு போன்ற கொப்புளங்கள் தோன்றின. அவை மிகவும் எரிச்சல் தரும். மூன்று ஆண்டுகளுக்கு மேல் இவ்விதம் இம்சையுற்றாள் அம்மா. 'மாசு மறுவில்லாத சரித்திரம் பெற்ற, மாசு மறுவற்ற தேகம் கொண்ட மாதாவுக்கு ஏன் இப்படி வந்திருக்கிறது' என்று கலங்கிய ஒரு பக்தரிடம் அம்மா "பல பேர் இங்கே வந்து தங்களோட குறைகளைத் தள்ளிவிட்டுப் போறாளோன்னோ, அந்தக் குறைகள்தான் கொப்புள ரூபம் எடுத்திருக்குகள்" என்றாள்.

பக்தர் பலர் அம்மாவைத் தேடி ஜயராம்பாடிக்கு வந்து அவளுடன் தங்கியதால் சாரதை தன் மூத்த சகோதரர் பிரஸன்னரின் வீட்டில் இருப்பதற்குச் சௌகரியப்படவில்லை.

முன்பு தன் பங்குக்குத் தனி வீடு வேண்டாம் என்று அம்மா நிராகரித்தது நினைவிருக்கலாம். இப்போது சிஷ்ய கோடிகள் அம்மாவுக்கெனப் புண்ணிய புகுர் ஏரியின் மேற்குக் கரையில் பூமி வாங்கி வீடு கட்டத் தொடங்கினார்கள்.

புது வீடு கட்டுகையில் அம்மாவுக்கு ஒரு திருட்டு முஸ்லிம் அருமைப் பிள்ளையாக ஆனது இந்த அமர காவியத்தில் ஓர் அமிருதச் சுவையாகும்.

நீண்ட காலமாக ஜயராம்பாடியை அடுத்த சிரோமணிபூரில் முகமதியர் பலர் குடிசைத் தொழிலாகப் பட்டு உற்பத்தி செய்து வந்தனர். பட்டுப் புழுக்களின் உணவான மல்பரி அங்கு செழித்து வளரும். பட்டுப் புழுக் கூட்டை நுட்பமான இயந்திர உதவியின்றியே நூலாகப் பிரித்து நெசவு செய்வதில் இந்த முஸ்லிம்கள் கெட்டிக்காரர்கள். ஆனால் 'கும்பெனி' ஆட்சியில் இயந்திர முறையில் ஆலைகள் வைத்துப் பட்டு உற்பத்தி செய்ய ஆரம்பித்த பின் இந்தக் குடிசைத் தொழில் தலை தூக்க முடியாமல் படுத்துப் போயிற்று. இத்தொழிலில் ஈடுபட்டிருந்த குடும்பத்தினரில் பெரும்பாலோர் வேறு தொழில் கிடைக்காததால் திருடர்களாக மாறினர். மல்பரித் திருடர்கள் (துந்தே — தாகாத்) என்றே இவர்களுக்குப் பெயர் ஏற்பட்டது.

அம்மாவுக்காகப் புது வீடு எழுப்புகையில் இந்த துந்தே — தாகாத்துக்களில் சிலரையும் கொல்லத்து வேலைக்காக அமர்த்தினர், மனிதாபிமானம் மிக்க



ராமகிருஷ்ணமட சாதுக்கள். ஜயராம்பாடிவாசிகள் இதைக் குறித்து அஞ்சி ஆட்சேபம் தெரிவித்தனர்.

"நீங்க பயப்படாதேள். நான் பார்த்துக்கறேன்" என்றாள் அம்மா.

அம்மாவிடம் மாய மந்திரம் ஒன்று இருந்தது அல்லவா? அதைப் பிர

போகித்தாள். அன்பு என்கிற மந்திரம் தான்! கள்வரும் கனிந்தனர்! ஆதியிலேயே பகடித் தம்பதியிடம் அம்மாவுக்கு அநுபவம் உண்டே!

அம்மா கொல்லத்துக்காரர்களுக்குக் கூலி தவிர, அவல், பட்சணம் எல்லாம் கொடுப்பாள். சமுதாய விரோதிகளாகக் கருதப்பட்ட தங்களிடம் காட்டப்பட்ட அற்புத அநுதாபத்தைக் கண்டு மலைத்த திருடர்கள் அம்மாவிடம் தேவதா விசுவாசம் கொண்டனர். அக்கம்பக்கத்தில் வழக்கம் போலவே திருட்டுப் புரட்டுச் செய்தாலும் ஐயராம் பாடியில் அவர்கள் கைவரிசை காட்டவே இல்லை.

ஊராருக்கு மகிழ்ச்சியாயிற்று.

ஆம்ஜத் என்பவன் பலே திருடன். ஓடிசலாக, கன்னங்கரேலென்று இருப்பான். அன்று கந்தலைக் கட்டியிருப்பான். ஒரு நாள் இவன் வீடு கட்டும் இடத்தில் வயிறு ஒட்ட நின்று வேலை செய்வதைக் கண்டு வீட்டுக்கு அழைத்தாள் அம்மா. வராந்தாவில் அவனை உட்கார வைத்து இலை போட்டாள். மருமாள் நளினியைக் கூப்பிட்டுப்பரிமாறச் சொன்னாள். மடிக்காரியான நளினி பத்தடி தள்ளி நின்று கொண்டே ஆம்ஜத்தின் இலையில் உணவுவகைகளை எறிந்தாள். அம்மாவுக்குக் கோபம் வந்தது. ''அம்மாடி, இந்த மாதிரியா அன்னலக்ஷ்மியை விட்டெறியறது? சாப்பிடறவாளுக்கு எத்தனை அவமரியாதை? உன்னாலே முடியாதுன்னு வேண்டாம்; நானே பரிமாறுகிறேன்'' என்றாள். 'மானதன்' என்பது திருமாலின் ஆயிரம் நாமங்களில் ஒன்று. பிறரது மானத்தை மதிப்பவன் இறைவன்.

தெரியாத்தனத்தால் ஆம்ஜத், தான் உண்ட இடத்தைச் சுத்தம் செய்யாமலே போய் விட்டான். அம்மாவே முகம் கோணாமல் எச்சில் இட்டாள். ''அத்தை, விஷயம் தெரிந்தால் உன்னை ஊரார் ஜாதிப் பிரஷ்டம் பண்ணிப்பிடுவா'' என்றாள் நளினி.

அம்மா நிதானமாகச் சொன்னாள்: ''என்னை விட்டா வேறே யாரு இதைச் சுத்தம் செய்ய வருவா? எனக்கு ஒண்ணும் பேதகமாகப்படலே. ஷரத் எப்படியோ, அப்படியே ஆம்ஜத்தும் என் சாட்சாத் பிள்ளை.''

அம்மாவுக்கு ஜுரம் வந்தது. வராந்தாவுக்கு அடுத்த அறையில் அம்மா கட்டிலில் படுத்திருந்தாள். வராந்தாவுக்கு மூங்கில் சிம்புகள் அடித்திருந்தது. ஒரு நாள் காலை ஆம்ஜத் ஒரு தடியை ஊன்றிக்கொண்டு துயரத்தோடு தடுமாறி வந்தான். விரல் நுனியில் நின்றுகொண்டு மூங்கில் தடுப்புக்கு மேலாக அம்மாவை எட்டிப் பார்த்தான். ஜுர வேகத்தில் தலையைப் புரட்டிக் கொண்டிருந்த அம்மாவின் கண்களில் அவனது முகத்தின் மேல் பாதி பட்டுவிட்டது. ''குழந்தே ஆம்ஜத்! உள்ளே வாப்பா'' என்றாள்.

முகமெல்லாம் பல்லாக வராந்தாவைக் கடந்து வந்து அறைக் கதவருகே



நின்று கொண்டான் ஆம்ஜத். அம்மா விடம் வழக்கப்படி அக்கப்போர் தொடங்கி விட்டான். அவளும் காய்ச் சலைப் பொருட்படுத்தாமல் அந்த நச் சரிப்பைச் சந்தோஷமாகச் சகித்துக் கொண்டாள்.

பகலெல்லாம் ஆம்ஜத் அங்கேயே தான் இருந்தான். ''அவன் உடம்பு எப்படிக் காய்ஞ்சு கருவாடா இருக்கு! எண்ணெய் கொடுத்துத் தேய்ச்சுக்கச் சொல்'' என்று மருமானுக்கு உத்தர விட்டாள் அம்மா. ஆம்ஜத் எத் தனையோ காலத்துக்குப் பின் தைல ஸ்நானம் செய்து திரும்பினான். அன்று சம்பிரமமாகச் சாப்பாடும் அம்மா வீட்டு வராந்தாவிலேயே நடந்தது. அவனுக்குப் பீடா கொடுக்கச் சொல்லி அம்மாவின் ஆக்ஞை பிறந்தது. மாலை வீடு திரும்புகையில் அவன் பையில் பழ வகைகளுடனும், கையில் ஏதோ ஒரு புட்டியுடனும் சென்றான். அது என்ன புட்டி என்கிற பாவனையில் பார்த்துக் கொண்டிருந்த பிரம்மசாரியிடம் அம்மா சொன்னாள்: ''இந்த அசட்டுப் பிள்ளை லாகிரி வஸ்துக்கள் நிறையச் சாப்பிட்டு இவனோட மூளையே கொதிச் சுப் போயிருக்கு. ராவெல்லாம் தூக்கம் இல்லேன்னான். எங்கிட்ட நாராயண தைலப் புட்டி ஒண்ணு இருந்தது. அது மூளைக்கு ரொம்பக் குளிர்ச்சி. அதைத் தான் கொடுத்து விட்டேன்'' என்றாள்.

நாராயண தைலத்தை விடக் குளிர்ந்த அம்மாவின் இதய விசேஷத்தால் விரைவிலேயே ஆம்ஜத்தின் மூளைச் சூடு நீங்கி அவன் ஆரோக்கியம் பெற்றான்.

அம்மா என் என்னும் முன் என்னென்ன யாக நிற்பான் ஆம்ஜத். 'அம்மாவுக்கு' என்று சொல்லி விட்டால் புலிப்பாலையும் கொண்டு வந்து விடுவான். ஒரு முறை அம்மாவுக்குப் பசி அடியோடு மந்தித்துப் போனபோது அன்னாசிப் பழ ரசம் சாப்பிடுமாறு டாக்டர் கூறினார். அந்தக் காலத்தில் அந்தப் பகுதியில் அன்னாசி கிடைப்பது அரிதிலும் அரிது. ஆனால் என்ன மாயம் செய்தானோ அல்லது திருட்டுத்தான் செய்தானோ, ஆம்ஜத் ஒரு கூடை அன்னாசி கொண்டு வந்து விட்டான்.

அம்மா தன் இறுதிக் காய்ச்சலின்போது ஆம்ஜத்தைப் பற்றி விசாரித்தாள். ஏதோ ஒரு திருட்டு வழக்கில் நீண்ட காலமாக அகப்படாமல் தலை மறைவாக இருந்து விட்டுக் கடைசியில் சிக்கிவிட்டான் என்று யாரோ தெரிவித்தார்கள். ''த்ஸொ த்ஸொ!'' என்றாள் அம்மா. ''அவன் திருட்டுலே நிபுணன்னு எனக்குத் தெரியும்'' என்றாள். அதையும் அவளது தாயுள்ளம் ஒரு குற்றமாக நினைத்துப் பேசவில்லை. தன் பிள்ளை பொறியியல் நிபுணன், மருத்துவ நிபுணன் என்று ஓர் அன்னை சொல்கிற முறையில் பேசினாள் அம்மா!

அம்மாவின் மறைவுக்குப் பிறகு ஆம்ஜத் திருட்டு நடத்தியபோது, கத்திக் குத்துப் பெற்றான். அதுவே ஆருதரணமாகி அவனை அம்மாவிடம் அனுப்பி விட்டது!


41. தொல்லையும் துயரமும்

> அவதார புருஷர்களுக்கும் துக்கம் வரும், கோபம் வரும். மற்ற மநுஷ்யர்களுக்கு வழி காட்டவே இவை அவர்களுக்கும் ஏற்படும். ஆனால் இந்த உணர்ச்சிகளை அவர்கள் இச்சா மாத்திரத்தில் போக்கிக்கொண்டு விடுவார்கள்.
>
> — ஸ்ரீ காமகோடி பெரியவாள்

1916ம் ஆண்டு மே 15ந் தேதியன்று அம்மா புதுமனை புகுந்தாள். சாரதா தேவியின் அருளில் செயல்கள் பல நடைபெற்ற அற்புதக் கோயில் அது!

அம்மா கிருகப் பிரவேசம் செய்த போது அவளது அருமை 'சரத்' பிருந்தாவனத்தில் இருந்தார். அவர் திரும்பி வந்ததும் அம்மா அந்த வீட்டின் எதிர் காலத்தைக் குறித்து ஏற்பாடு செய்தாள். சியாமசுந்தரி தொடங்கி வைத்த ஜகத்தாத்ரி பூஜை தொடர்ந்து நடைபெறவேண்டும் என்று கருதிய அம்மா அந்த வீட்டை பேலூர் மட நிர்வாகத்தின் கீழ் ஒரு டிரஸ்டாக்கி, ஜகத்தாத்ரி பூஜைக் கென்றே நிவந்தம் செய்தாள். அதோடு சிறிது நிலமும் வாங்கி ஜகத்தாத்ரி பூஜைக்கு மூலதனமாக வைத்தாள்.


ராமகிருஷ்ண சங்கத்தில் அநேகர் ஏனோ தீர்க்காயுள் வரம் பெற்றிருக்கவில்லை. அம்மாவின் அருமந்த பாபுராம்-ஸ்வாமி பிரேமாநந்தர் — உலக யாத்திரையை முடித்து விட்டார். அப்போது அம்மா கல்கத்தா உத்போதனில் இருந்தாள். அவருக்கு உடல் நிலை மிக மோசமான அன்று காலையிலிருந்தே அம்மா சிவந்த கண்களுடன் துடித்துக் கொண்டிருந்தாள். பிற்பகல் அந்தக் கொடிய செய்தி வந்தது. ''பாபுராம்! உன்னை என் இருதயத்துக்கு ரொம்பப் பக்கத்திலே வெச்சிண்டிருக்கிறதாக நெனைச்சேனே! எப்படி என்னை ஏமாற்றிவிட்டு ஓடினே? பேலூர் மடம்



நான் பெருமையாகச் சொல்லவில்லை

என் எடை, பிறந்தபோது
இருந்ததைவிட இரு மடங்காகி
விட்டது, நான்காவது
மாதத்தில். பெரும் சாதனை!
இது அமுல்ஸ்ப்ரேயின்
சிறப்பைக் காட்டுகிறது.





அறிமுகப்படுத்திய இரண்டு ஆண்டு களுக்குள், அமுல்ஸ்ப்ரே, குழந்தை உணவு களுள், இந்தியாவிலேயே உச்ச விற்பனையை எய்திவிட்டது. பெரும் சாதனை! இது அமுல்ஸ்ப்ரே விடம் தாய்மார்களுக்குள்ள நம்பிக்கையையும், குழந்தைகள் அதை எவ்வளவு விரும்புகின்றன என்பதையும் காட்டுகிறது.


உங்கள் குழந்தைக்கு, பிறந்த முதல் வாரத்திலிருந்து அமுல்ஸ்ப்ரே தரலாம். அமுல்ஸ்ப்ரே எளிதில் சீரணிக்கக் கூடியது; சரிவிகித ஊட்டச் சத்துக்கள் நிறைந்தது. முழுமையான வளர்ச்சிக்காக, தரமுயர்ந்த அதிக புரதச் சத்துக்கள் கொண்டது..



அமுல்ஸ்ப்ரே

தாய்ப் பாலுக்குப்
பதிலாகப் புகட்டச் சிறந்தது

ASP/AS-19



சென்னை, அடிஸன்ஸ் பெயின்ட்ஸ் & கெமிகல்ஸ் லிமிடெட்டின் டைரக்டர் ஸ்ரீ எச். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி கீதாவுக்கும், சென்னை மில் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் டைரக்டர் ஸ்ரீ டி. வி. ஸ்ரீநிவாசன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி எஸ். பட்டாபிராமனுக்கும், சென்னை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கு உறவினர்களும், நண்பர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து மணமக்களை வாழ்த்திச் சென்றனர்.

வாழ்க மணமக்கள்!

என்கிறதே நீதானே? உன் சக்தியும் பக்தியும் புத்தியும்தானே அந்த மடத்தை நடத்திண்டு இருந்தது? அதை விட்டுட்டு எங்கே போனே?'' என்று தேவி கதறினாள். நடு ஹாலில் இருந்த ராமகிருஷ்ணர் படத்தில் தலையை முட்டிக் கொண்டு ''டாகூர்! அவனையும் எங்கிட்டேருந்து பறிச்சுண்டுட்டேளே!'' என்று புலம்பினாள்.

அம்மாவுக்கு உலக வாழ்க்கை அடியோடு வெறுத்துப் போக அப்போதும் விடவில்லை ராமகிருஷ்ணர். யோக மாயையை முடுக்கி விட்டார். ராதாராணிக்கு அம்மாவின் தேவை மிக அவசியமாகி விட்டது!

ஆஹா! ராது எப்படி மாறி விட்டாள்! குழந்தையாயிருந்தவள் இன்று பதினெட்டு வயது மங்கையாக மாறியது பெரிய விஷயமில்லை. அது இயற்கை எவருக்கும் நிகழ்த்தும் மாற்றம். ஆனால் அந்தக் கள்ளம் கபடமற்ற ராது, எப்போதும் சிரித்த முகத்துடன் எல்லோரிடமும் இனித்துப் பழகும் ராது— இப்போது எத்தனை அவ குணங்களுக்கு இருப்பிடமாகி விட்டாள்? எதிரிடை சக்திகள் பலவற்றின் நெரிசலில் தேன் கதலிக் கனி எட்டிக் காயாக மாறி விட்டது! முதலாவதாகக் கிராமாந்தரத்துக்கும் கல்கத்தா பட்டணத்துக்குமாக மாறி மாறி இருந்ததில் பலவிதக் கோளாறுகள் ஏற்பட்டன. கிராமத்துக் கட்டை என்று தன்னைப் பட்டணவாசிகள் எண்ணிவிடுவரோ என்ற எண்ணத்தில் தாழ்வு மனப்பான்மை கொண்டு அதன் விபரீத விளைவாக, அம்மாவைக் காண வருவோரை அவமதித்தாள். பிறக்கு முன்பே பிதாவை இழந்து, அன்னையையும் பைத்தியமாகப் படைத்திருந்த ராது அத்தையையே அம்மாவாகக் கருதியவள். அதேபோல் அடியார்களில் பலர் அவளை அம்மாவாகக் கொள்வது ராதுவுக்கு அசூயையை உண்டாக்கிற்று. அம்மாவுடைய தனிச் சலுகை அவளுக்குக் கிடைத்தாலும் அது போதவில்லை. மேலும் அதிகச் சலுகை பெறவேண்டுமென்பதால் ராது பதின்மூன்றும் வயதிலிருந்து தனக்கு ஓயாத வியாதிகளைக் கற்பித்துக் கொண்டு அம்மாவை அதன் மூலம் இழுத்து ஏகபோக்கியமாக்கிக் கொள்ளப் பார்த்தாள். எல்லோரிடமும் இன்முகமாக இருந்து துள்ளித் திரிய வேண்டிய பருவத்தில், தன்னை மூதேவியாக்கிக் கொண்ட மருமாளிடம் சாரதைக்கு விசேஷ ஈடுபாடு உண்டாகவில்லை. நேர்மாறாக ஏற்கனவே இருந்த தனிப்பாசமும் குறையலாயிற்று.

> குளத்தில் மீன்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும், ஓர் இரையைப் போட்டதும், நாலா பக்கங்களிலிருந்தும் அதனிடம் ஓடி வருகின்றன. அதுபோல நம் மனத் தடாகத்தில் பக்தி சிரத்தையைப் போட்டோமானால் பகவான் அதைத் தேடி ஓடி வருகிறான்.
>
> — பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

டாகூரிடம் அவள், ''அப்பனே! இந்தப் பெண்ணைக் கவனித்துக் கொள்ள யாருமில்லை. நான் இன்னும் கொஞ்ச காலம் மயக்கம் தெளியாமல் பாச பந்தத்தில் கட்டுண்டிருக்க நீதான் கிருபை பண்ணணும்'' என்று வேண்டும்படியாயிற்று. அம்மாவின் பாசம் கொஞ்சம் குறைவதாகத் தெரிந்ததால் ராதி இப்போது கணவனிடம் உள்ளத்தை உடும்புபோல் திருப்பினாள். பதினாறு வயதுப் பெண்ணான ராதி கணவன் வரவை எதிர்பார்த்து வாசல் கிராதியைப் பிடித்துக் கால் கடுக்க நிற்பது கண்டு நம் அம்மாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. ''கடைசியில் நான் வளர்த்த பெண் இப்படியா விசித்திரமாக உருவெடுக்க வேண்டும்? இப்படியும் ஒரு மோகமா?'' என்றாள், பொங்கும் இளமையிலும் தபஸ்வினியாகவே வாழ்ந்த தேவி.

ராதியின் வேட்கைத் துடிப்பும் தீவிரமும் அவளது கணவர் மன்மத நாத்துக்கே பிடிக்காமற் போயிற்று. அவர் வீடு திரும்பக் காலம் கடத்தியதால், அம்மாவிடம் ராது, ''நான் வியாதிப் பிண்டமாயிட்டேன். அவர் வேறே தகாத சகவாசம் வைச்சுண்டிருப்பார்'' என்றாள். அம்மாவின் காது கொப்புளித்தது.

மனோ வியாதியினால் உண்மையாகவே ராதுவின் உடலும் நலியலாயிற்று. தளதளப்பெல்லாம் போயிற்று. பலவீனம் காரணமாக எரிச்சலும், ஆத்திரமும், அதிகமாயின. மனோ வியாதி முற்றிற்று. தாயின் புத்திக் கோளாறு புத்திரிக்கும் வந்துவிடுமோ என்று பயப்படும்படியாயிற்று. இந்த லட்சணத்தில் அவளது உதரத்தில் ஓர் உயிர் வந்து கனத்தபோது ராதுவால் தாங்கவே முடியாமல் ஆயிற்று! 'ஏற்கனவே துர்க்குணி, அதிலும் கர்ப்பிணி' என்பார்களே, அது நூற்றுக்கு நூறு மெய்யாயிற்று. அம்மாவைப் பாடாகப் படுத்திப் பம்பரமாகச் சுழலவைத்தாள் ராதி. தன்னையன்றிப் போக்கிடமில்லாத அநாதை என்று அம்மாவும் அபரிமிதமான பொறுமை காட்டிச் சகித்துக் கொண்டாள்.

இப்போது ராதுவுக்கு எந்தச் சப்தமும் தாங்குவதில்லை. தெருவிலே வண்டி

ஓடினால் இவளது இதயம் சம்மட்டி போட்டதுபோல் அடித்துக் கொள்கிறது. இத்தனை பலவீனத்தில் பிடிவாதம் மட்டும் இரும்புத் தூண்போல் உறுதியாக இருந்தது. அவள் பேறுகாலத்தில் வைத்திய வசதி உள்ள கல்கத்தாவில் இருப்பதே நல்லதென்று அம்மா கருதினாள். ராதுவோ உத்போதன் இரைச்சல் தன்னைக் கொல்கிறது என்றாள்.

ராதுவின் விருப்பப்படி ஜயராம்பாடிக்குப் புறப்பட்டாள் அம்மா.

வழியில் விஷ்ணுபூரில் அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்கு உரியவர், ஒரு பிரபல சோதிடரை அறிமுகப்படுத்தினார். உடனே எல்லாருக்கும் சபலம் தட்டியது. ராதுவின் ஜாதகம் அவரிடம் காட்டப்பட்டது. ''கஷ்டப் பிரசவம் தான் ஆகும்'' என்று அவர் திருவாய் மலர்ந்தார்.

ராதியின் 'போட்டி'யான மற்றொரு மருமாள் மாகு தன் ஜாதகத்தைக் காட்டினாள். அவளுக்குச் சோதிடர் அவளிடம், ''உன் குழந்தைகளில் ஒண்ணு இன்னொண்ணைப் பார்க்காது'' என்றார்.

எல்லோருக்கும் எப்படி இருக்கும்? மாகுவின் முதற் குழந்தை நேதா அனைவருக்கும் செல்லம். இப்போது மாகுவும் (ராதியிடம் போட்டியிலோ என்னவோ) கருத்தரித்திருந்தாள். இந்தப் பிரசவத்துக்குள் நேதாவுக்கு.....?

அம்மாவே கதிகலங்கினாள். தன் குடும்ப விஷயத்தில் தீர்க்க திருஷ்டியை அவள் பிரயோகிப்பதில்லை. 'ஊருக்கெல்லாம் ஒளி தரும் சந்திரன் தன்னிடமுள்ள களங்கத்துக்கு ஒளி தந்து கொள்ளாததுபோல், மகாபுருஷர்கள் பிறருக்குச் செய்கிற அருளைத் தங்களுக்கே செய்து கொள்ள மாட்டார்கள்' என்றொரு சுபாஷிதம் உண்டு. அம்மா அப்படித்தான் இருந்தாள்.

அம்மா கோஷ்டியினர் அடுத்தபடியாகத் தங்கிய இடம் கோயால்பாரா ஆசிரமம். காட்டை அடுத்த அப்பகுதி மிகவும் அமைதியாக இருந்தது.

''அம்மா, ஜயராம்பாடிக்குப் போக வேண்டாம். எனக்கு இங்கேயே இரைச்சல் இல்லாம நிம்மதியாயிருக்கு'' என்றாள் ராது.

''அப்படியே'' என்றாள், வளைந்த படி எல்லாம் வளைந்து கொடுத்த தேவி.

நேதாவின் அம்மா மாகுவுக்கு, ராதுவைக் கவனிக்கிற அளவுக்கு அத்தை தன்னை இலட்சியம் செய்யவில்லை என்ற எண்ணம் அதிகரிக்கலாயிற்று. இந்தத் துர் எண்ணத்துக்குத் தூபம் போட்டாள் அக்காள் நளினி.

இந்தச் சிறிய பெண்களைக்கூட அம்மா மதித்து, எத்தனையோ விஷயங்களில் ஆலோசனை கேட்டிருக்கிறாள். உதாரணமாக இம்மூன்று மருமாள்களின் புக்ககங்களுக்கும் பொங்கல் முதலிய விசேஷங்களில் சீர் அனுப்புகையில் வித்தியாசம் இருக்கக் கூடாது என்பதால் அவர்களையே கலந்து கொண்டு பொருட்களை வாங்குவாள். 'ஒன்றும் தெரியாத இந்தப் பட்டிக்காட்டுக் குட்டிகளிடம் அம்மா இப்படி யோசனை கேட்கிறாளே' என்று எண்ணிய சிஷ்யரிடம் அம்மா அமரவாசகங்களைச் சொன்னாள்: ''சகலமான பேரையும் நன்றாகக் கவனித்து, மதிப்புத் தரணுமப்பா. எல்லார் அபிப்பிராயத்தையும் கேட்டறியணும். இதிலே மற்றவாளுக்குக்கொஞ்சம் அதிகமாகவே சுதந்திரம் தந்து நாம் பின்னாடி ஒதுங்கிண்டு பார்க்கணும். ஏதாவது எக்கச்சக்கமா தப்பு நடந்துட்டா, ஒதுங்கின இடத்திலிருந்து ஓடி வந்து சரி பண்ணணும். நம்மையே தாழ்த்திண்டுகூடப் பிறத்தியாருக்குச் சுதந்திரம் தரணும்.''

பட்சபாதம் என்பது அருகிலேயே வர முடியாத, தருமத் துலாக் கோலாகிய அம்மா ஒரு நாள் பகலுணவு கொண்டு இளைப்பாறும்போது, நளினியும் மாகுவும் அவளை மாக்கு மாக்கென்று தாக்கினார்கள்.

''இந்த ராதுவுக்கு என்ன உடம்புக்கு? சும்மா மாய்மாலம் பண்றா! அதை வெச்சுண்டு, நீயும் அவளையே சீராட்டிப் பாராட்டிண்டு இருக்கே, அதனாலேயே அவள் பாழாப் போயிண்டிருக்கா. உடனுடத்தவள் மாகுவும் பிள்ளைத்தாச்சிதானே? அவள் தேமேனு இல்லே? ராதுவுக்கு நீ கொடுக்கிற இடம் தான்! உனக்கு ஒரு கண்ணுலே வெண்ணெய்; ஒரு கண்ணுலே சுண்ணாம்பு'' என்று பொரிந்து தள்ளினாள் நளினி.

'எண்ணமில்லார் சொல்லே மிகவும் சுடும்' அன்றோ! நளினியின் அக்கிரமமான குற்றச்சாட்டில் அம்மாவின் நளின உள்ளம் வெந்துவிட்டது. வாயே திறக்காமல் சிலையாக இருந்தாள்.

அம்மா எதற்கும் வாய் திறவாததில் நளினிக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. ஒரு பல்லக்கைக் கொண்டு வந்தாள்.

''ஏ மாகு, மூட்டை முடிச்செல்லாம் எடுத்து பல்லக்கிலே வை. வாஞ்சையே இல்லாத இந்த அத்தை கிட்டேயும், பித்துச் சித்தி கிட்டேயும் அவதிப்படறதை விட, அங்கே அப்பன் வீட்டிலேயே போய் இளையாள்காரிகிட்ட அவதிப்படறது சிலாக்கியம்'' என்று கத்தினாள்.

அம்மா பேசாமல் தான் இருந்த இடத்திலேயே சுருட்டிக் கொண்டாள். அம்மாவுக்கு அறுபத்திநாலு வயசாகி

SISTA'S-DI-531 A tam





விட்டது. உண்ட களைப்பும், நேற்று முளைத்த சிறுக்கிகளிடம் வார்த்தை வாங்கிக் கொண்ட வேதனையும் அவள் வாயை அடைத்து அவளைக் கீழே சாய்த்தன.

வாசலிலிருந்து தனிவியின் பிளிறல் கேட்டது. ''ஏ சனியனே, மாகு! உனக்கு வெட்கமில்லை? இங்கே அலட்சியத்துக்கு ஆளாயிண்டேதான் கிடக்கப் போறியா? 'ஏன் போறேன்?'னு ஒரு வார்த்தை கேட்காதவர் விட்டிலேயே தண்டசோறு தின்னுண்டு கிடக்கப் போறியா என்ன?''

விசுக் விசுக் என்று மாகு வாசலுக்குப் போகும் ஓசை கேட்டது. அதைவிடப் பரிதாபம், ''பாட்டி, பாட்டி'' என்று கதறும் நேதாவையும் அவள் கரகரவென்று இழுத்துப் போனாள்!

பிற்பகலில் கடிதங்களுடன் வந்த பிரம்மசாரி வரதனிடம் அம்மா, ''என் மகனே வரது! இப்போ நீங்கள்ளாம் எனக்குச் செஞ்சு தந்திருக்கிற வசதியிலே நூற்றில் ஒரு பங்கு தட்சிணேசுவரத்திலே கிடையாது. அப்போ நான் உழைச்ச உழைப்பும் சொல்லி முடியாது. ஆனால் அந்தப் பிரபுவின் பிரேமையில், எனக்கு ஒரு குறை தெரியலையடா, கண்ணு! இப்போ நான் படற அவஸ்தை தாளல்லையடா! இந்த மருமான்களுக்காக என் பொழுது, பணம், தேக சிரமம் எல்லாம் வீணாறது போறுதுன்னு, என் ஜபத்தையும், தபத்தையும்கூடப் பாழாக்கிக்க வேண்டியிருக்கு. அந்தப் பெண்கள் ரொம்பப் பேசிப்பிட்டா அப்பனே! எனக்கு அதையெல்லாம் பற்றிக்கூட இல்லை. என் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணாமல் குழந்தை நேதா ஒரிடத்துக்கும்போகாது. அதைக்கூடத் தடுத்து இழுத்துண்டு போனாளே மாகு! யார் தலையிலே எப்படி எழுதியிருக்கோ, அப்படித்தானே நடக்கும்? நான் என்ன பண்ணலாம்!'' என்றெல்லாம் சொல்லி வருந்தினாள்.

அவர்கள் அந்தப் பாடுபடுத்தியும் தினம் அவர்கள் க்ஷேம லாபத்தை வரதன் மூலம் அறிந்து வந்தாள். அம்மாவை அப்படி அபசாரமாகப் பேசியபின் க்ஷேமமும் லாபமும் ஏது? நேதாவுக்கு ஜுரம் வந்தது. அம்மாவுக்கு ராதுவைவிட்டு எப்படிப் போவது என்று புரியவில்லை. இருந்தாலும் டாக்டருக்கு அவனே ஏற்பாடு செய்தான்.

மறு தினம் எப்படியும் தானே போக வேண்டும் என்று தீர்மானித்தாள் அம்மா. அம்மாவை முந்திக் கொண்டான் காலன். அநுதாபமற்ற சுற்றத்திடை அன்பே உருவாக மூன்றாண்டுகள் அம்மாவை வளைய வந்த மோகன நேதாவை டிஃப்தீரியாக் காய்ச்சல் பறித்துக் கொண்டு போய்விட்டது. ஜோஸியர் சொன்னது பலித்துவிட்டது!

கண்களிலிருந்து கண்ணீர் வற்றாத அருவியாக வடிய அம்மா நீண்ட நேரம் அமர்ந்திருந்தாள்.

இரவு டாகூருக்கு நிவேதனம் செய்ய வேண்டுமே! அம்மாவிடம் சொல்வதா, வேண்டாமா என்று தயங்கித் தயங்கி வந்து நின்றான் ஒரு சீடப் பிள்ளை.

''என்னப்பா?'' என்றாள் தேவி.

''டாகூருக்கு.....''

அம்மா அமைதியாக எழுந்திருந்தாள். அசாதாரணமான நிம்மதியுடன் பதிக்கு நிவேதனம் செய்தாள்.

பிறகு தன் அறையில் வந்து முடங்கிக் கொண்டாள்.

சிறிது பொழுதுக்குப் பிறகு அவளுக்கு என்ன தோன்றியதோ, அடுக்களைக்குச் சென்று எட்டிப் பார்த்தாள். அவள் நினைத்தது சரிதான்! அவள் உண்ணாததால் எவருமே உண்ணவில்லை. அங்கே நேதாவை அக்னிதேவன் உண்டு முடித்தானோ இல்லையோ, இங்கே அம்மா மற்றவர்களின் பொருட்டு மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு, ஒரு அப்பத்தை விண்டு வாயில் போட்டுக் கொண்டாள். ''இருக்கிறவா க்ஷேமமாக இருக்கட்டும்'' என்றெண்ணி ஒரு வாய் பாலைப் பருகினாள். அதன்பின் மற்றவர்கள் உணவு கொண்டனர்.

42. சோதனையின் சிகரம்

சினம் கொள்வார் தம்மைத் தாமே தீயார் சுட்டுச்
செத்திடுவார்; ஒப்பாவார்.....
சினம் பிறர்மேல் தாம்கொண்டு கவலையாகச்
செய்த(து) எண்ணித் துயர்க் கடலில் விழுந்து சாவார்
மகாளி பராசக்தி துணையே வேண்டும்.

பாரதியார் சுயசரிதை

சினத்தின் வயப்படாமலிருப்பதற்கு மாகாளி பராசக்தியின் துணையை வேண்டினார் கவி. அந்த மாகாளி பராசக்தியே பொறுமையவதாரமான சாரதையாக வந்து வாழ்ந்தது. ஒரே ஒரு முறை தன்வயமிழந்து சினம் கொண்டதையும், பிறகு வெந்து நொந்ததையும் என்னென்பது?

சாரதா தேவியின் பொறுமையை மிக மிகச் சோதிக்கலானாள் ராது. கருவுற்றபின் ராதுவின் முரட்டுப் பிடிவாதம் எல்லை கடந்து சென்றது.

ராதுவுக்குப் பேற்றுக் கால அறிகுறிகள் ஏற்பட்டன. அப்படியே மூர்ச்

> மூங்கிலில் நெருப்பு மூட்டினால் அது நிலைத்து ஜொலிப்பதில்லை. அது அணையாமல் நாம் தூண்டிக் கொண்டே இருக்க வேண்டும். நம் மனம் என்கிற மூங்கிலில் தெய்வ சிந்தனை நிலைத்து ஜொலிப்பதில்லை. அது அணைந்து விடாமல் நாம் இடைவிடாத சிரத்தையின்மூலம் தூண்டிக் கொண்டே இருக்கவேண்டும்.
>
> —பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

சித்துப் போனாள். கல்கத்தாவிலிருந்து டாக்டர் வைகுந்தர் வந்தார். அம்மா டாகூரே கதி என்று குலை நடுங்கி உட்கார்ந்து விட்டாள். டாகூரும் அப்போதைக்குக் கைகொடுத்தார். ராதுவுக்கு சுகப்பிரசவமாயிற்று. ஆண் குழந்தை பிறந்தது. கொயால்பாரா காட்டிலே பிறந்த அந்தக் குழந்தைக்கு பன பிஹாரி (வன விஹாரி) என்று அம்மா பெயரிட்டாள். 'பனு' என்று சுருக்கி அதைக் கொஞ்சினாள்.

பிரசவமான பின் ராது சவம் போலானாள். முன்னிலும் துர்ப்பலமானாள். தன்னால் ஆடையும் அணிய முடியவில்லை என்று சொல்லிக் கொண்டு அந்தக் குழந்தை போலவே அவளும் கிடந்தாள். அந்த அதிசயமான பெண்ணுக்கு—அனைவருக்கும் அம்மாவான சாக்ஷாத் சாரதையின் ஸ்வீகாரப் பெண்ணுக்கு—தாய்ப்பாசம் என்பதே இல்லை. ஆதியில் தம்பி அபயனை எடுத்து வளர்த்து, மத்தியில் அவன் மகள் ராதியை எடுத்து வளர்த்த அம்மா, இப்போது முடிவில் அவள் மகன் பனுவையும் வளர்த்தாள்.

ராது எத்தனையோ மரியாதைக் குறைவாகப் பேசியதை யெல்லாம் பொறுத்து வந்த அம்மா, இன்று அவள் ஒரு வார்த்தையைச் சொன்னவுடன் பொறுக்கமுடியாமல் தவித்தாள். 'அபின்' என்பது தான் அந்த வார்த்தை. ராது தனக்கு அபின் வாங்கித் தருமாறு அம்மாவைக் கேட்டாள். தூய அன்னையிடம் வளர்ந்த அந்தப் பெண்ணுக்கு எப்படியோ இந்த தீய பழக்கம் சில நாட்களாகவே இருந்திருக்கிறது. இப்போது கறி காய் நறுக்கிக் கொண்டிருந்த அம்மாவிடமே தவழ்ந்து வந்து (தனக்கு நடக்கச் சக்தி இல்லை என்று அவளுக்கு ஒரு கற்பனை!) அபின் வாங்கித் தருமாறு நச்சரித்தாள்.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை இகழ்வாரைப் பொறுத்து' வந்த அம்மாவுக்கு இப்போது ராது தன்னைத் தானே இழிவுபடுத்திக் கொள்வதைப் பொறுக்க முடியவில்லை. அந்த பூமி தேவியும் பொங்கிவிட்டாள். "போறுமடியம்மா! உன்னோடு எனக்குப் போறும்! இன்னும் எத்தனை நாள் இப்படியே பண்ணிண்டிருக்கப் போறே? எழுந்திரு, சுருசுருன்னு ஓடி ஆடி வேலை பண்ணு. உனக்காக நான், என் மற்ற குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமையைத் தொலைச்சதும், என் பூஜை புரஸ்காராதிகளைத் தொலைச்சதும் போறும். சகல நினைகலையும் இனியும் பக்கிரியாக என்னாலே முடியாது" என்று சொல்லிக் கொண்டு காய்கறி நறுக்கிக் கொண்டே இருந்தாள் அம்மா.

சேலை கட்டிக் கொள்வதற்கும் நடப்பதற்கும் கூடத் தனக்குச் சக்தி இல்லை என்று கருதிய ராது அப்போது ஒரு பெரிய பேரிக்காயை எடுத்து ராட்சஸ பலத்துடன் சுழற்றி, தேவியின் நடு முதுகில் படுமாறு ஓங்கி எறிந்தாள். அது குறி தவறாமல் அம்மாவின் மீது திம்மென்று விழுந்தது.

அம்மா சுருண்டு விழுந்தாள். முதுகில் அடிபட்டு வீங்கிச் சிவந்தது. இதயத்தில் அதைவிடப் பெரிய அடி!

முதுகை அழுந்தத் தேய்த்துக் கொண்டே பூஜை அறைக்கு ஓடினாள் தேவி. ராமகிருஷ்ணரின் சித்திரத்துக்கு முன் கைகுவித்து, "என் டாகூர், ராதி அறியாக் குழந்தை! நீங்க இதை அபசாரமா எடுத்துக்கப் படாது" என்று கண்ணீர் வழிய மன்றாடினாள்.

தனக்குச் சிறிய தலைவலி வந்தால் கூடப் பொறுக்காத டாகூர், தன் முதுகு சிவந்தது கண்டு ராதுவிடம் சினந்து விடுவாரோ என்று அம்மாவுக்கு அச்சம். அவரது கோபத்துக்கு மருந்து யார்? அவளேதான். வேத வாக்கின்படி சிவாதானே "ருத்ரஸ்ய பேஷஜீ"? ராதுவை அம்மா வாரி மடியில் போட்டுக்கொண்டு, தன்னுடைய பாத தூளியை எடுத்து அவளது தலையில் தேய்த்தாள். "ராதி! இந்தக் கட்டையைப் பற்றி அந்த மகாப் பிரபு ஒரு கடுஞ் சொல் சொன்னதில்லை. நீ இந்த சரீரத்துக்கு எத்தனை வலி உண்டாக்கி விட்டே? ஆமாம், உன்னைச் சொல்லி என்ன? உனக்கெப்படி என் மதிப்புத் தெரியும்? நானே மனசு வெச்சு வந்து உங்களுக்கெல்லாம் மத்தியிலே வாழுறதாலே என்னை இத்தனை லேசா நினைச்சுட்டேள்! ராதி, நான் எதையாவது அபசாரமாக எடுத்துண்டேனோ, அப்புறம் மூணு லோகத்திலேயும் உனக்குப் புகல் கிடையாது; மும்மூர்த்திகளும் உன்னைக் காப்பாற்ற முடியாது." இப்படிச் சொன்ன தேவி, மீண்டும் கைகுவித்து, "டாகூர், இவள் பண்ணினதை அபசாரமா நினைக்காதேள். அறியாக் குழந்தை, அறியாக் குழந்தை" என்று விம்மினாள். ராதுவும் விக்கினாள்.

உடல் வீங்கித் துடித்த போதும், 'இந்தக் கட்டை!', 'இந்தச் சரீரம்!' என்று அதனிடமிருந்து அம்மா பிரிந்திருந்தே பார்க்கிறாள். தனக்கு இழைத்த தவற்றைத் தான் பொருட்படுத்தாவிடினும், டாகூர் தண்டிப்பார் என்று அஞ்சும் அம்மா அந்த டாகூரும் தானேயல்லவா என்ற உணர்விலும் ஊறியிருக்கிறாள்! மகா துயர சம்பவத்திலும் இப்படியொரு மகிமை!

மகாலட்சுமியே ஓர் அடியாரின் குற்றத்தைக் கூறினாலும், திருமால் அதை ஏற்க மாட்டாராம் என்றார் ஆழ்வார். அம்மாவோ, டாகூரிடம், ''ராது செய்த குற்றத்தைப் பொருட்படுத்தாதீர்கள்'' என்று மன்றாடியும் அவரால் ராதுவை மன்னிக்க முடியவில்லை. ராது அவரது அடியார் அல்ல; யோகமாயை அல்லவா? அம்மாவை உலகில் கட்டிப் போடவே வந்தாள் அவள். அம்மா அவளுக்கு அத்தனை ஊழியம் செய்தும் அவள் இப்படி அட்டூழியம் செய்த பின், டாகூர் அம்மாவை அவளிடமிருந்து — அதன் மூலம் உலகிடமிருந்து — விடுவிக்கத் திருவுளம் பற்றி விட்டார்! அன்றிலிருந்து அம்மாவின் மனம் ராதுவிடமிருந்து கழலத் தொடங்கி விட்டது.

ராதுவும் அப்போதைக்கு அழுதாளே தவிர, மீண்டும் தனது சொரூபத்தைக் காட்டத் தொடங்கி விட்டாள். கோயால்பாரா வாசத்தை முடித்து ஜயராம்பாடிக்குக் கிளம்பினார்கள். வண்டியில் போகும்போது, தனக்கு இடைஞ்சலாக அம்மா இடத்தை அடைத்துக் கொண்டு அமர்ந்திருப்பதாகக் குற்றப் பத்திரிகை படித்தாள் ராது. அம்மா வண்டியின் ஓட்டுக்கு வந்து ஒடுங்கி அமர்ந்த பின்னும் அந்த மூடப் பெண் — எழுதவே கை கூசுகிறது—தேவியைக் காலால் உதைத்து, ''வண்டியிலேருந்தே இறங்கித் தொலை'' என்றாள்.

''வண்டியை விட்டுப் போறேன்; சம்ஸார சகடத்தை விட்டும் கழன்று போகிறேன். ஆனால் அப்புறம் உனக்காகப் பிராயச்சித்தம் செய்யறது யார்?'' என்றாள் தேவி. அம்மாவுக்கு ராது தவறு இழைத்தால் அதற்கான கழுவாயாக அந்த அம்மாவே தவமிருந்திருக்கிறாள்! இப்படி எந்த இதிஹாஸ புராணத்திலாவது கண்டதுண்டா?

ஜயராம்பாடியில் ஒருநாள் பிச்சி மாமி, மாப்பிள்ளை ஏரியில் விழுந்து விட்டதாகக் கற்பனை செய்து கொண்டு, தானும் ஏரிக்குள் இறங்கித் தேடினாள். பிறகு ஈரம் சொட்டச் சொட்ட அம்மாவிடம் வந்து, ''பாவி! இன்னிக்கு உன் வயிறு குளிர்ந்ததா? மன்மதத்தை ஏரியிலே அமுக்கிக் கொன்னூட்டியே, உன் க்ஷாத்திரம் தீர்ந்ததா?'' என்றாள்.

ராதுவுக்குக் களத்ர தோஷம் உண்டு என்று முன்னரே அம்மா அறிந்திருந்ததால் ஸௌரபாலா சொன்னதைக் கேட்டதும் அம்மாவுக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. அருகிலிருந்தவர்களை ஏரிக்கரைக்கு ஓடச் சொன்னாள். அதற்குள் யாரோ மன்மதநாத் பக்கத்திலேயே தான் மளிகைக் கடையில் சீட்டாடிக் கொண்டிருக்கிறார் என்று உறுதிப்படுத்தினார்கள்.

அம்மாவுக்கு நிம்மதி பிறந்தது.

ஆனால் பிச்சி மாமிக்குத் தான் 'தோல்வி' அடைந்து விட்டதால் அம்மாவின் மேல் ஆத்திரம் அதிகரித்தது. அம்மாவைப் பற்றியும் அவளது தெய்விகப் பெற்றோரான ராம முகர்ஜி, சியாமசுந்தரி பற்றியும் எழுதக்கூடாத நாராசப்பழிகளை அள்ளி வீசினாள். ராதுவைத் தன்னிடமிருந்து பிரித்து அம்மா அவள் மேல் ஏகாதிபத்தியம் செய்வதாகச் சொல்லம்புகளைத் தொடுத்தாள்.

''ஸௌரபாலா! என் அம்மாவைப் பற்றி, என் அப்பாவைப் பற்றி இப்படிப் பேசினால் பொறுக்க மாட்டேன். இருந்தாலும் இதெல்லாம் புத்தி பூர்வமான பேச்சில்லை என்று கோபத்தை அடக்கிண்டு இருக்கேன். உன் பெண்ணை நான் பெட்டியில் வைச்சுப் பூட்டியிருக்கவில்லை. இந்தப் பிருகிருதியையும் ஒரு உருவமாக்க முடியுமான்னு பாடுபட்டேன். அவ்வளவே! நான் மனசு வைச்சேன்னா இப்பவே கற்பூரம் மாதிரி மறைஞ்சு போயிடுவேன். ஆனால் உங்களுக்குச் செய்ய வேண்டியது இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கு'' என்றாள் அம்மா.

''பின்னே ஏண்டி, ராதுவுக்கு அபின் கொடுத்துப் பழக்கப்படுத்தினே? அவ மூளையைக் கெடுத்து, உடம்பைக் கெடுத்து, உன் கட்டை விரல் கீழேயே அவளை நசுக்கி வைக்கணும்னு தானே?'' என்றாள் பிச்சி.

இது பைத்தியத்தின் பேச்சாகவா இருக்கிறது? ராது உடல் நலக் குறைவு இருப்பதாக மிகைப்படுத்தியது போல், ஸௌரபாலாவும் வேண்டுமென்றே தன் புத்திக் கோளாற்றை மிகைப்படுத்திக் காட்டி, பிறர் கண்டனத்திலிருந்து தப்பிக்க முயன்றாளோ என்று தோன்றுகிறது.

கடைசியில் அவள் அம்மாவின் கண்டனத்துக்கே ஆளானதும், அதற்காக அம்மா தன்னையே தண்டித்துக் கொண்டதும் தான் மகா பரிதாபம்!

(அடுத்த இதழில் முடியும்)


போஸ்டர்
கலர்கள்
வாட்டர் ப்ரூஃப்
டிராயிங் இங்க
மற்றும் இன்ஸ்ட்ரு-
மெண்ட் பாக்ஸ்.
camel
camlin
வாட்டர் கலர்
டியூபுகள், கட்டிகள்.
camel
கலைஞர்களின் ஆயில்
கலர்கள், மாணவர்களின்
ஆயில் கலர்கள்
உங்கள் வாழ்க்கைக்கு வண்ணப் பொலிவைக்
கூட்டுங்கள்...
கேமல்
ஆர்ட் கலர்களை
உபயோகியுங்கள்
கேம்லின் பிரைவேட் லிட்.
ஆர்ட் மெடீரியல் டிவிஷன்
(கலைப் பொருள்கள் பிரிவு)
ஜே.பி. நகர், பம்பாய்-59.
ஏ.என்ஸ். இந்தியா.
PRATIBHA 1711-29 Tam

தலைமுறை வேற்றுமை ஒரு தலைவலியா?



[''ஏன்தான் இப்படி யெல்லாம் நடந்து கொள்கிறீர்களோ! அந்தக் காலத்திலே...'' என்று ஆரம்பித்துப் பெற்றேர் தங்கள் மக்களிடம் இளம் பருவத்துச் சாதனைகளை விவரிப்பது சகஜம். இளவட்டங்கள் முதியோரையும் பெரியவர்கள் இன்றைய இளைஞர்களையும் புரிந்துகொள்வது சிரமமாகத்தான் இருக்கிறது. ஸ்ரீமதி லீலா ரத்னம் அளிக்கும் விளக்கம் இரு தலைமுறைகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகளால் எழும் பிரச்னைகளைத் தீர்க்க உதவும் பாலமாக அமைந்துள்ளது.]

லீலா ரத்னம்! 'ஜெனரேஷன் காப்' என்ற சொல் அடிக்கடி அடிபடுகிறதே இன்று. — அதாவது தலைமுறைக்குத் தலைமுறை ஏற்படும் வேறுபாடு அல்லது வித்தியாசம் — அது இன்று ஒரு பெரும் பிரச்னையாகி விட்டது போல் தோன்றுகிறதே? இதற்கு முந்தின தலைமுறைகளிலும் இந்தப் பிரச்னை எழுந்திருக்கும், இல்லையா?

சிறுவர்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் எந்தக் காலத்திலும் ஒரே மாதிரியாகத்தான் இருந்து வந்திருக்கிறார்கள். பெற்றோர்கள் கடைப்பிடிக்கும் வழிமுறைகள்தாம் இன்று மாறுதல் அடைந்துள்ளன. தலைமுறை வேறுபாடுகள், அவற்றால் எழும் பிரச்னைகள் அந்தக் காலத்திலும் இருந்திருக்கின்றன. இரு வேறு தலைமுறைகளுக்கிடையே உள்ள இடைவெளி அல்லது வித்தியாசத்தை இன்று பெற்றோர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அந்தக் காலத்தில் அவ்வளவாக உணர்ந்ததில்லை.

எப்படி என்று விளக்க முடியுமா?

குழந்தைகள் இன்று பெற்றோர்களிடம் மனம் விட்டுப் பேசுகின்றன. தங்கள் கருத்துக்களை இளைஞர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். ஏன், எதற்காக என்று கேள்விகள் கேட்டுத் தங்கள் ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்ளுகின்றனர். நம் பாட்டனர் காலத்தில் நமது பெற்றோர்கள் இப்படியெல்லாம் கேட்கவே பயப்படுவார்கள். மீறிக் கேட்டாலும் 'எல்லாம் அப்படித்தான். சொன்னபடி செய். எதிர்த்துக் கேட்காதே' என்ற ரீதியில்தான் பதில் வந்திருக்கும். அந்தக் காலத்தில் தந்தையின் எதிரில் வந்து நிற்கவே நடுங்குவார்கள் பிள்ளைகள். பெற்றோரிடம் பிள்ளைகளுக்கு இப்போது அந்தப் பய உணர்ச்சி இல்லை.



நம் கருத்துக்களை இளைஞர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து முரட்டுப் பிடிவாதம் பிடித்தால்?

அப்படி அவர்கள் எதிர்ப்பதற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டு உணர வேண்டும். அவர்களுக்கு நாமே உதவ முற்படவேண்டும். நாமும் முரட்டுத்தனமாக அவர்களை எதிர்க்கும்போதுதான் விஷயம் விபரீதமாகிவிடுகிறது. அவர்களுடைய பிரச்னைகளை நாம் அனுதாபத்துடன் அணுகி, அவர்களுக்கு ஓரளவு விட்டுக் கொடுத்து, அவர்கள் தவருன வழியில் சென்றால், 'நாம் செய்வது தவறு' என்று அவர்களே உணரும்படி செய்வதுதான் முறை.

இளம் தலைமுறையினருக்குப் பூரண சுதந்திரம் வழங்க வேண்டும் என்கிறீர்கள்; அப்படித்தானே?

சுதந்திரம் வழங்க வேண்டியதுதான். ஆனால் அளவுக்கு மீறின உரிமையை அல்ல. அவர்கள் செய்யும் தவறுகளை நாம் திருத்துவதற்குப் பதில் அவர்கள் தாங்களாகவே திருத்த நாம் உதவ வேண்டும். நம்முடைய முடிவுகளை அவர்கள் மீது திணிப்பது முறையாகாது. நம்முடைய கருத்துக்களைத் தங்களுடைய சொந்தக் கருத்துக்களாகவே அவர்கள் எண்ணும்படி செய்வது சிறந்த உபாயம்.

பெற்றோர்கள் எந்த வகையில் தவிறுன உபாயங்களைக் கையாளுகிறார்கள்?

பிள்ளைகளை நாம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. அவர்களுடைய ஆசாபாசங்கள், விருப்பு, வெறுப்புக்களைப் பெரியவர்கள் ஓரளவு புரிந்து கொண்டு மதிப்புக் கொடுக்க வேண்டும். உதாரணமாக ஒரு பையன் என்ஜினீயராக விரும்பினால், அவனைச் சட்டக் கல்வி பயிலும்படி பெற்றோர்கள் வற்புறுத்துவது சரியாகாது. 'என் தாத்தா லாயர், என் அப்பா பாரிஸ்டர், நானும் வக்கீல். எனவே நீயும் வக்கீலாகத்

தான் வேண்டும்!' என்று மகனின் விருப்பத்துக்கு மாறாகத் தமது கருத்தினைத் தகப்பனார் வற்புறுத்தும்போது நிலைமை மோசமாகிவிடுகிறது. ஒன்று அவன் தன் விருப்பத்துக்கு மாறான கல்வி பயின்று, தொழில் புரிந்து தோல்வி காண்கிறான். அல்லது மிகவும் முரடனாயிருந்தால் எதிர்க்கிறான். வீட்டை விட்டே வெளியேறவும் துணிகிறான். நமது கருத்தைப் பலவந்தமாகப் பிள்ளையின் மீது சுமத்தாமல், பக்குவமாகவும் நயமாகவும் எடுத்துச் சொன்னால் ஒருவேளை மனம் மாறி அவன் நம் கருத்துக்கு இசையக் கூடும்.

மாணவர் ஆசிரியர் இருவருக்குமிடையே உள்ள வேறுபாடும் இத்தன்மையதுதானா? முன்பெல்லாம் மாணவர்களிடையே இவ்வளவு போராட்ட உணர்ச்சி இருந்ததில்லையே?

முன்பெல்லாம் — அதாவது கடந்த தலைமுறைகளில் மாணவர்கள் ஆசிரியரைக் கண்டு அஞ்சினர். இன்று அந்த அச்சமில்லை. தொல்லை கொடுக்கும் மாணவர்கள் ஒரு சத விகிதமே. மற்றவர்கள் அவர்களைப் பின்பற்றுபவர்களே. தொந்தரவு கொடுக்கும் ஒரு சத வீதம் மாணவர்களை எளிதில் கண்டு பிடித்து விடலாம். மனத் தத்துவ ரீதியில் அவர்களிடம் சுமுகமாகப் பேசிச் சிக்கல்களைத் தீர்க்க முயலலாம்.

குறிப்பிட்ட இன்ன வயதில்தான் இதுபோன்ற எதிர்ப்பு, மறுப்பு, போராட்ட உணர்வுகள் தலை தூக்குகின்றன என்று கூற முடியுமா?

பதினைந்து வயது முதல் இருபது, இருபத்திரண்டு வயது வரை என்று கூறலாம். ஒரு சிரமமான கட்டம். வீட்டில் கிடைக்காத சுதந்திரத்தைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அடைய விரும்புகின்றனர் சிலர். வீட்டில் உள்ள கடுமையான அடக்குமுறை, அவர்கள் வீட்டை விட்டு வெளிப்பட்டதும் பீறிட்டு வெளிப்படுகிறது. அந்த வயதில் அவர்களை நல்ல முறையில் உருவாக்கும் பொறுப்பு பெற்றோரையும் ஆசிரியர்களையும் சார்ந்தது. பார்க்கப் போனால், பெற்றோரை விட ஆசிரியர்களின் பொறுப்பே அதிகம் எனலாம். வீட்டில் அவர்கள் தங்கியிருப்பதெல்லாம் காலையில் 2, 3 மணி நேரம். மாலையில் அநேகமாக வீட்டில் இருப்பதில்லை. இரவில் படிப்பும் பின்னர் உறக்கமும். எனவே ஆசிரியர்களுடன் பழகும் நேரமே அதிகம். ஆசிரியர்கள் போதிய கவனம் செலுத்தினால், மிகவும் அழகான பொறுப்புள்ள சமுதாயம் உருவாகும். இதனால் பெற்றோரின் பொறுப்பை நான் குறைத்து மதிப்பிட்டு விட்டதாக ஆகாது.

ஆடைகள் விஷயத்திலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன அல்லவா?

இதைப் போய் ஒரு பெரிய பிரச்னையாக்கி விடுகிறார்கள் சிலர். இளைஞர்களும் யுவதிகளும் தனித்தன்மையோடு — மற்றவர்களினின்றும் வேறுபட்ட முறையில் விளங்க ஆசைப்படுகிறார்கள். அது இயல்புதானே? அது விஷயத்தில் பெற்றோர் அதிகமாகக் கண்டிப்புச் செய்ய வேண்டியதில்லை. அடக்கி ஆட்கொள்ள முயன்றால் இளம் வயதுக்குரிய துடிப்பு வேறு ஏதாவது ஒரு வகையில் பொங்கி எழும். இக்காலத்தில் இளைஞர்கள் முறைப்படி இறைவனைத் தொழுவதில்லை. அதனால் அவர்களை நாஸ்திகர்கள் எனக் கருதுவது தவறு. இருபத்தைந்து வயது ஆனவுடன் அவர்களே மாறி விடுவார்கள். இருபத்தைந்து முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் அதிகம் பேர் நீண்ட கிருதாவோ, முடியோ வைத்துக் கொள்வதில்லை. பல வண்ணங்களில் பூப்போட்ட சட்டை அணிவதில்லை. பதினைந்து முதல் இருபத்தைந்து வரைதானே அந்த ஆசையெல்லாம்? பெரியவர்கள் சற்று விட்டுப் பிடிக்கலாமல்லவா? பாப் இசை, கோஷ்டி கானம் இவையெல்லாம் அவர்களுக்குப் பிடிக்கிறதென்றால், அந்த வயதுக்குரிய உணர்வு அவை என்று அனுதாபத்துடன் புரிந்து கொள்ள வேண்டும்.

திசை தவறிச் செல்லும் சில இளம் பருவத்தினரின் போக்கை மாற்ற வழி என்ன?

புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்விக்கு வழி செய்துள்ள அரசு, நமது தொன்மையான நாகரிகம், பண்பாட்டுச் சிறப்புக்களை மாணவ சமுதாயம் உணரும் வகையில் அதற்கென்றே சில வகுப்புக்களை நடத்தினால் நல்லது. இளைஞர் சங்கங்கள் நிறைய உருவாகி அவை நல்ல முறையில் செயல்படுவதன் மூலம், இளம் வயதினரின் துடிப்பும் உற்சாகமும் சேவையாக உருப்பெறும். இளைஞர் சங்கங்கள், அணிகள் அல்லது குழுக்கள் பாட திட்டத்திலேயே இடம் பெறுவது நல்லது. பேட்டி: 'பாணன்'

நம் நாட்டில் சோஷலிசம் பேசும் ஒவ்வொரு அமைச்சருக்கும் ஆண்டுக்குப் பன்னிரண்டு லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் வருகிறது. என்னால் இதை நிரூபிக்க முடியும். ■

தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பு திரு. எல். என். மிச்ராவின் டெலிபோன் பில் தொகை 12 நாளைக்கு மட்டும் ரூ. 32,000. ■


காலஞ்சென்ற நேருஜி தினமும் 4, 5 மணி நேரம் பாராளுமன்றத்தில் இருப்பது வழக்கம். அவருடைய மகள் திருமதி இந்திரா வாரத்துக்கு 2, 3 மணி நேரம் பார்லிமெண்டுக்கு வருவதே பெரிய காரியம்! ■

என் வாழ்நாளிலே நான் கண்டறியாத அளவுக்கு, ஏன், வரலாற்றிலே நான் படித்திராத அளவுக்கு இன்று நம் மக்களிடையே அடிமைத்தனம் குடி கொண்டிருக்கிறது. சுதந்திர பாரதத்தின் சுதந்திரப் பிரஜைகள் தங்கள் அறிவை அச்சத்துக்கு அடிமைப்படுத்தி யிருக்கிறார்கள். ■

(லட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் 25-6-72 அன்று சுதந்திரக் கட்சியின் புதிய தலைவர் திரு பிலுமோடி அவர்கள் தெரிவித்த கருத்துக்கள். —பி. ருக்மிணி)



நாம்
ஓடோனில்
உபயோகிக்கிறோம்
கண்ணு...



ஓடோனில் ஏர் ப்யூரிஃபையர், கக்கூஸ், பாத்ரூம், போலுள்ள இடங்களின் துர்நாற்றங்களை உடனடியாகப் போக்கி, தூய்மையாகவும் நன்மணத்துடனும் வைத்திருக்கிறது. பல மலர்களின் மணங்கள் உண்டு—லாவெண்டர், ஜாஸ்மின், மோக்ரா ... முதலியன—விரும்பியதை வாங்கலாம்.

பல சைசுகளிலும், வகைகளிலும் கிடைக்கிறது.

BALSARA

பல்சாரா
—சிறப்பாக வாழ
சொகுசான வசதிகள்

பல்சாரா & கம்பெனி
பிரைவேட் லிட்.,
43, ஹேடோஸ் ஸ்ட்ரீட், பம்பாய்-1

AIYARS-BLS. 90 TM

தன்மீது விழுந்த கணவரின் கையை அருவருப்போடு எடுத்துத் தள்ளி வைத்தாள் நிலவுமதி. தூக்கத்தில் புரண்ட கோபாலன், மீண்டும் ஒரு கையைத் நிலவுமதியின் மீது போட்டு அணைத்துக் கொண்டார். தன்னை அருவருக்கத்தக்க ஒரு பாம்பு சுற்றி வளைப்பது போல் பதறினாள். மெதுவாக அவருடைய கையைத் தன் உடல் மீதிருந்து எடுத்துப் பக்கத்தில் வைத்துவிட்டுப் படுக்கையிலிருந்து எழுந்து மாடி வராந்தாவுக்கு வந்தாள்.

அப்போதைய மன நிலையில், என்ன செய்வதென்றே தோன்றாமல் சற்று நேரம் வராந்தாக் கிராதியைப் பிடித்துக் கொண்டு அர்த்த மற்றுக் கீழே தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மனத்தை அழுத்திக் கொண்டிருந்த வேதனை, அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. திரும்பி மாடி அறைக்குள் நுழைந்து கணவரின் பக்கத்தில் கட்டிலில் படுக்க அவளுக்கு மனம் இல்லை. வராந்தாவின் விளக்கைப் போட்டாள். சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பெரிய கண்ணாடியில் அவளுடைய உருவம் தெரிந்தது. கலைந்திருந்த தலை முடியைக் கோதிவிட்டாள். தன்னுடைய முழு உருவத்தையும் ஒரு முறை கூர்ந்து கண்ணாடியில் பார்த்தாள். தன்னுடைய பருவமும், அழகும் வீணாகிக் கொண்டிருக்கின்றன என்னும் நினைவில் எழுந்தது பெருமூச்சு. முப்பது வயதை அடைந்த பிறகும் கட்டுக் குலையாத தன் அழகைப் பார்த்துக் கொண்டாள். மார்பில் கிடந்த புடவைத் தலைப்பைச் சரி செய்வதாகப் பாவனை செய்து கொண்டு ஒரு முறை, புடவைத் தலைப்பைத் தூக்கி மீண்டும் மார் பின்மீது போட்டாள். அப்போது தெரிந்த பெண்மையின் பூரிப்பைத் தானே பார்த்து அனுபவித்துக் கொண்டாள். கண்ணாடியில் தெரிந்த தன்னுடைய முழு உருவத்தையும் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்தாள் —

நல்ல உயரம். சுருண்ட தலை முடி. எடுப்பான மூக்கு. பளபளக்கும் கண்கள். நன்கு வளைந்த அடர்த்தியான புருவங்கள். உயரத்துக்கு ஏற்ற சற்றுப் பரந்த தோள்கள். தோள்களின் அளவுக்கேற்ற மார்பகம். இவ்வளவையும் கம்பீரமாகத் தாங்கி நிற்கும் குறுகிய இடை — இயற்கை தன்னுடைய கடைசல்



திறமையை அவளுடைய தந்த நிற உடலில் காட்டியிருந்தது.

கையில்லாத சோளி அணிந்திருந்ததால் புஜங்கள் விளக்கொளியில் பளபளத்தன. வலது கையினுல் இடது புஜத்தை வருடினுள். தன்னைத் தானே வருடிக் கொள்வதில்கூட ஒருவித சுகத்தை உணர்ந்தாள்.


அறைக்குள் கோபாலன் புரண்டு படுத்த தால் கட்டில் முனகியது. நிலகவதி மீண்டும் கண்ணுடியில் பார்த்தாள். பணியாமல் நெற்றியிலும் கன்னத்திலும் புரண்டு கொண் டிருந்த தலை முடியை ஒதுக்கிவிட்டுக் கொண் டாள். வராந்தாவிலிருந்த விளக்கை அணைத்து விட்டுப் படுக்கை அறைக்குச் சென்றவள், அறை விளக்கை ஏற்றுமலேயே அடுத்த அறைக்கதவை ஓசைப்படுத்தாமல் திறந்தாள். அது அவள் படிக்கும் அறை. அறைக்குள் நுழைந்து அறைக் கதவைச் சாத்திவிட்டு விளக்கை ஏற்றினுள். 'மேஜையின்மீது ஸ்டெ தாஸ்கோப்பும், இரத்த அழுத்தம் பார்க்கும் கருவியும் இருந்தன. அவைகளுக்குப் பக்கத்தி லிருந்த சிறு கோமாளிப் பொம்மையைக் கையில் எடுத்துப் பார்த்தாள். அது டாக்டர் சந்தானம் கொடுத்தது. அவனைப் பார்த்து அந்தப் பொம்மை முறைத்துக் கொண் டிருந்தது.

சந்தானத்தின் களை பொருந்திய முகம் நினைவில் நிழலாடியது. அன்று மாலை நடந்து விட்ட சம்பவமும் நினைவில் உறுத்திக் கொண் டிருந்தது. அவனுடைய கைபட்ட இடங் களில் இன்னும் ஒருவித உணர்வு குறுகுறுத் துக் கொண்டிருந்தது. அந்த நினைவை நெஞ்சிலிருந்து விலக்கிவிட நினைத்தாலும், உள்ளூற அந்தரங்கத்தில் ஆசையின் போக்கு வேறுவிதமா யிருந்தது. அந்த நிகழ்ச்சியை நினைக்கக் கூடாது என்று எண்ணிக்கொண்டே அந்த நினைவின் இனிமையில் லயித்தாள்.

அவனுடைய கலகலப்பான பேச்சும், நெருங்கி ஆசாபாசத்தோடு பழகும் தன்மை யும் அவளை மிகவும் கவர்ந்திருந்தன. ஒரு குழந்தையைப் போல் அவன் சிரிப்பதும், பார்ப்பதும் அவளுள்ளே ஒருவித உணர்வைத் தூண்டிவிட்டிருந்தன. அவனை ஒரு குழந்தை யாகப் பாவித்துக் கொஞ்ச வேண்டும் என்னும் தவிப்பு அவளுக்கு அடிக்கடி தோன்றிக்கொண் டிருந்தது. எவ்வளவுதான் மனத்தை அவ னுடைய நினைவிலிருந்து வலியப் பிரித்துத் தூர ஒட்டினுலும், அது தினமும் அவளை மீறிக் கொண்டு அவனிடமேதான் ஓடிக் கொண் டிருந்தது.

தன்னுடைய மன ஓட்டத்தில் எவ்வித விரசமோ, குற்றமோ இல்லை என்று நிலகவதி தன்னைத் தானே சமாதானப்படுத்த முயன்று லும், அவ்வித நெருக்கமான அபிமானம் சந்தானத்தின் மீது தோன்றியிருந்தது நியாயந்தானு என்னும் ஆராய்ச்சியில் அவள் மனம் சில நேரங்களில் ஈடுபட்டபோது, சஞ்சலம் அடைந்தாள்.

ஒரு சமயம் அவனோடு பேசிக் கொண் டிருந்தபோது, தன்னையும் மறந்து அவ



னுடைய அழகைப் புகழ்ந்துவிட்டாள். அதற்குப் பிறகு அன்று முழுவதும் தான் பேசிவிட்டதை எண்ணி எண்ணி அவள் தவித்த தவிப்பு.... அவன் ஏதாவது தவருக எண்ணி விருப்பாஞே! அவள் புகழ்ந்தபோது அவனுடைய முகத்தில் தோன்றிய மலர்ச்சியை அவள் கவனிக்கத் தவறவில்லை.

அவள் மீது சந்தானத்துக்கு அளவு கடந்த மதிப்பும் மரியாதையும் உண்டு. இரண்டு ஆண்டுகளுக்கு முன்வரை அதே மருத்துவக் கல்லூரியில் அவளுடைய மாணவஞக இருந்தவன்தான். இப்போது, அவன் அந்த மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த ஆஸ்பத்திரியில் அவளுக்குக் கீழ் பணியாற்றும் ஒரு டாக்டர். மேலதிகாரி என்ற நிலையில் இலகவதி அவனிடம் நெருங்கிப் பழகும் முறையிலும், பேசும் விதத்திலும் என்ன குறிப்பை அவன் உணர்ந்தான் என்பதை அவளால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனல் அவளுடைய மனம் மட்டும் அடிக்கடி படபடக்கிறது. அவளுக்கும் அவனுக்கும் கிட்டத்தட்ட ஏழு வயது வித்தியாசம் இருக்கும். அந்த வித்தியாசந்தான் அவளுடைய மன ஓட்டத்துக்கும், உள்ளூறத் தோன்றும் பரபரப்புக்கும் கவசமாக இருக்கிறது. உலகத்தின் பார்வைக்குக் கவசம் கிடைத்துவிட்டாலும், தன் மனத்தை அந்தக் கவசத்தால் கூட முடியுமா ?

சந்தானம் அன்பளிப்பாகக் கொடுத்த கோமாளிப் பொம்மையைக் கையில் வைத்துப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அறைக் கதவின் பக்கத்தில் காலடி ஓசை கேட்கவே, பதற்றத்தோடு திரும்பிப் பார்த்தாள். கோபாலன், கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து கொண்டிருந்தார். பரபரப்போடு கோமாளிப் பொம்மையை மேஜையின் மீது வைத்துவிட்டு, பக்கத்தில் கிடந்த ஒரு புத்தகத்தைப் படிப்பது போல் பாசாங்கு செய்தாள்.

'' இன்னும் தூங்காமல் என்ன செய்கிருய்?'' கோபாலனின் கேள்வியில் கவலையும், கனிவும் இருந்தன. இலகவதி, பதில் ஒன்றும் கூருமல் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மணி பதிஞென்றுக்கு மேலாகிவிட்டது'' என்ருர் கோபாலன்.

''கொஞ்சம் படிக்க வேண்டியிருக்கிறது. நாளை வகுப்பில் புதுப் பாடம் நடத்தவேண்டியிருக்கிறது'' என்று இலகவதி கூறியதும் கோபாலன், அறைக் கதவைச் சாத்திவிட்டுப் படுக்கையை நோக்கி நடந்தார். இலகவதியின் பார்வை மீண்டும் கோமாளிப் பொம்மையின் மீது விழுந்தது. நினைவு, சந்தானத்தை நோக்கி ஓடியது.

கோபாலனுக்குத்தாம் அவள்மீது எவ்வளவு பொறுமை ! செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து ஆகியவைகளை ஒப்பிட்டால், கோபாலனின் கால் தூசிக்குக்கூட ஈடாக மாட்டான் சந்தானம். அவனிடம் அவருக்குப் பொருமை. அவனைப் பற்றிய பேச்சு வந்தாலே அவருடைய கண்களில் சிந்தும் வெறுப்பு, பார்க்கப் பயங்கரமா யிருக்கும்.

''சேச்சே, இவருக்குத்தான் எத்தனை கீழ்த்தரமான எண்ணம்.'' — இலகவதியின் வாய் முணுமுணுத்தது. நாலைந்து நாட்களுக்குமுன் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது —

'' ஹலோ, டாக்டர்... நான் சந்தானம் பேசுகிறேன். நீங்கள் உடனே வரமுடியுமா?''

''என்ன ?''

''இரட்டைக் குழந்தைகள். க்ராஸில் விழுந்துவிட்டது. ஸிஸேரியன்தான் செய்ய வேண்டும்.''

''நீயே பார்த்துக் கொள்ள முடியாதா ?''

''நோ, டாக்டர்! கொஞ்சம் காம்ப்ளி-கேஷன். எல்லாம் தயார் செய்துவிட்டேன். இரத்தம்கூடத் தயார். அனெஸ்தெடிஸ்ட் டாக்டர் சாமியும் தயாராயிருக்கிருர்.''

''ஆல் ரைட்.... பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்.''

மிகுந்த சலிப்புடனும், எரிச்சலுடனும் போனைக் கீழே வைத்தாள் டாக்டர் இலகவதி. கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி மூன்ருக ஐந்து நிமிடங்கள் இருந்தன. கண்ணாடி முன் நின்று கலைந்திருந்த தலை முடியை வாரிஞள். அந்த அறையில் ஒரு சோபாவில் சாய்ந்து கிடந்த கோபாலன், அவளைக் கவனிப்பதைக் கண்ணாடி வழியாகப் பார்த்தாள்.

''யாரது?'' — கோபாலன் கேட்டார். காதில் விழாதமாதிரி இருந்தாள் இலகவதி.

''போனில் பேசியது யார்?'' — கோபாலன் மீண்டும் கேட்டார்.

''சந்தானம்.''

''என்னவாம்?''

''ஒரு ஸிஸேரியன் கேஸ்.''

''ஏன், அவனே செய்து கொள்ள வேண்டியதுதானே! துணைக்கு ஆள் வேணுமா? கோழைப் பயல்.''

''சந்தானம் கெட்டிக்காரன்தான். இருந்தாலும் எனக்கு அஸிஸ்டெண்ட்தானே.? அதனுல்தான் கூப்பிடுகிருன்'' என்ருள் இலகவதி. அவள் சந்தானத்தைப் புகழ்ந்தது கோபாலனுக்குப் பிடிக்கவில்லை என்பது அவருடைய பார்வையில் தெரிந்தது. அவர் முகத்தைச் சுளித்தார்.

''இல்லையென்ருல் புரட்டிவிடுவாஞே....? ஆள்தான் வெள்ளைப் பாச்சா மாதிரி வெள்ளை வெளேரென்று இருக்கிருனே தவிர லாயக்கில்லாத பயல்'' என்ருர்.

இலகவதியின் முகம் வெறுப்பில் கருங்கியது. சந்தானத்தை ஏசுவதில் கோபாலன் அடையும் திருப்தியை நினைந்து உள்ளூறக் கசந்தாள். சந்தானத்தின் சிவந்த மேனி, கோபாலனிடம் ஏற்படுத்தியிருந்த பொருமையை நினைத்துப் பார்த்தாள்.... வெள்ளைப் பாச்சாவாம், பயலாம்....!

இலகவதி தலை முடியை வாரிவிட்டுக் கொண்டை போட்டவாறே கண்ணாடி வழியாகக் கோபாலனைப் பார்த்தாள்.

கறுத்த மேனி. பருத்த உடல். முகத்தில் அம்மைத் தழும்புக் குழிகள். தடித்த உதடுகள். சிறுத்த கண்கள். சப்பை மூக்கு...


கோபாலன் கண்ணாடி வழியாகத் தன்னைக் கூர்ந்து பார்ப்பதைக் கண்ட இலகவதி, அவசரமாகக் கண்ணாடியை விட்டு விலகிச் சென்ருள். ஆஸ்பத்திரிக்குப் போகத் தயாராக

மைக்ரோஃபைன்ட்
ஆஸ்ப்ரோ

அதிவேகமாகக் கரைந்து, அதிவேகமாகக் கிரகிக்கப் படுகிறது. அதனுல்தான் அது அதிவேகமாக வலியைப் போக்கி விடுகிறது—

சாதாரண வலிநிவாரண மாத்திரைகளைவிட இருமடங்கு அதிக வேகத்துடன் வலியைப் போக்கி விடுகிறது.







சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, ஆஸ்ப்ரோவின் நுண்ணிய அணுக்கூறுகள் அதிவேகமாகக் கிரகிக்கப் படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. உங்களுக்கு அதிவேக நிவாரணம் அளிக்கின்றன

கீழ்க்கண்டவைகளுக்கு மைக்ரோ:.பைன்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: தலைவலி • உடல் வலி • ஜலதோஷம் • ஃப்ளு • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப் பட்டால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி

ஆஸ்ப்ரோ மட்டுமே மைக்ரோ:.பைன் செய்யப் படுகிறது, அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக.


நிகோலஸ் (N) தயாரிப்பு

A.G.57 TM

40=150

அதிசயம் ஆனால் உண்மை

உங்கள் பஜாஜ் ஃப்ளோரசென்ட் ட்யூப் உறுப்புக்களுடன் சேர்த்து
6 மாதங்களில் அதன் விலையை திருப்பித் தருகிறது!



எப்படி?

[illegible] ஒரு 40 வாட் பஜாஜ் ஃப்ளோரசென்ட் ட்யூப் 150 வாட் சாதாரண பல்பிற்கு ஈடான வெளிச்சத்தைத் தரும்போது, நீங்கள் ஒவ்வொரு மாதமும் மின்செலவில் மிச்சப்படுத்துகிறீர்கள்! 6 மாதங்களில் பஜாஜ் ட்யூபின் விலைக்கு சமமான மிச்சம். அதற்குப் பிறகு? எல்லாம் அதிகப்படியான மிச்சம்தான். ஒவ்வொரு ஆறுமாதங்களுக்கும் ரூ. 48.50 வரையிலும் மிச்சப்படுத்தலாம். மேலும் அதிக வெளிச்சம், சீரான மின்வெளிச்சம், குறைவான கண் அசதி, எல்லாமே இலவசம் தான்.

பஜாஜ் ஃப்ளோரசென்ட் ட்யூப் வாங்குங்கள் — அதன் விந்தை செயலை பாருங்கள்.

bajaj

பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
45-47, வீர் நரிமான் ரோடு, பம்பாய் 1
இந்தியாவெங்கிலும் கிளைகள்

அவன் வந்தபோது கோபாலனும் தயாராக இருந்தார்.

''நீங்கள் எதற்கு? நானே காரை எடுத்துக் கொண்டு போகிறேன்'' என்றாள்.

''உன்னை ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டுப் போகிறேன். காண்ட்ராக்ட் விஷயமாக ஒருவரைப் பார்க்க வேண்டியிருக்கிறது'' என்று கூறிக் கொண்டே வாசலை நோக்கி நடந்தார் கோபாலன்.

காரில் கோபாலனுக்குப் பக்கத்தில் இலகவதி உட்கார்ந்திருந்தாள். கோபாலன் காரைச் செலுத்தினார். வெய்யில் முகத்தில் படவே, ஸன் ஷேடைத் தாழ்த்தினாள். தெருவில் பலர் அவர்களைக் கவனிப்பதையும் பிறகு, பேசிக் கொள்வதையும் கவனித்தாள். கோபாலன் அந்த ஊரில் செல்வாக்குள்ள ஓர் இன்ஜினீயர். அவருக்கு வாய்த்த மனைவி திறமையும் அழகும் வாய்ந்த ஒரு டாக்டர். அந்த ஜோடியைப் பற்றித் தெருவில் வியந்து பேசுகிறார்களோ அல்லது அவளுடைய அழகையும் அவருடைய உருவத்தையும் ஒப்பிட்டுத் தெருவில் பலர் கேலி செய்கிறார்களோ என்று இலகவதி சந்தேகித்தாள். சிலர் அவர்களைப் பார்த்துச் சிரிப்பதாகத் தோன்றியது. சிலர் பரிதாபமாக அவர்கள் இருவரையும் பார்ப்பதாகக்கூட நினைத்து மனம் பொருமினாள். திரும்பி, கோபாலனைப் பார்த்தாள். அவர் காரைச் செலுத்துவதிலேயே கவனமா யிருந்தார்.

ஆஸ்பத்திரி வாசலில் காரை நிறுத்தியதும், ''எப்போது திரும்புவாய்?'' என்று கேட்டார் கோபாலன்.


''நிச்சயமாகச் சொல்ல முடியாது.''

''போன் பண்ணு. காரைக் கொண்டு வருகிறேன்.''

''வேண்டாம். இங்கிருந்து யாராவது வருவார்கள். அவர்களோடு வந்துவிடுவேன்'' என்று கூறிவிட்டு வேகமாக ஆஸ்பத்திரிக்குள் சென்று விட்டாள் இலகவதி. ஆஸ்பத்திரியின் உள் வாசலில் அவளை டாக்டர் சந்தானம் விரைந்து வந்து சந்திப்பதையும், அப்போது அவன் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியையும், இலகவதி சிரித்துக் கொண்டே அவனோடு பேசியபடி மாடிக்குச் செல்வதையும் பார்த்துக் கோபாலன் சங்கடப்படுகிறார் என்று இலகவதி உணர்ந்து கொண்டாள். உள்ளூற அவளுக்கு வெறுப்புத் தோன்றியது. கோபாலன் காரைத் திருப்பிய வேகத்தில் சக்கரங்கள் தரையோடு உராய்ந்த கொடூரமான ஒலியிலும், காரின் வேகத்திலும் அவருடைய மன எரிச்சல் பிரதிபலிப்பதைப் புரிந்து கொண்டாள்.

பக்கத்து அறையிலிருந்து கோபாலனின் குறட்டை ஒலி ஒரே சீராக வரத் தொடங்கியது. இலகவதி படிப்பறை விளக்கை அணைத்துவிட்டு மீண்டும் வராந்தாவுக்கு வந்தாள். கீழே அல்சேஷன் நாய் எதையோ பார்த்துவிட்டு உறுமும் குரல் கேட்டது. குழந்தை இல்லாமல் தவிக்கும் அவளுக்குப் பொழுது போவதற்காகக் கோபாலன், மிகுந்த விலை கொடுத்துக் கொடைக்கானலில் இருந்து அந்த நாயை வாங்கி வந்தார். வீட்டுக்குள் நாய் எவ்வளவுதான் வளைய வளைய வந்தாலும், மடியின் மீது புரண்டாலும் குழந்தைக்கு ஈடாகுமா ?

கபர்தார்! கார் வாங்கப் போகிறீர்!



ஒருவர் பழைய கார் வாங்குவதற்காக டில்லிக்குப் போனார். வெளிநாட்டுக் கார் ஒன்றைப் போய்ப் பார்த்தார். முன்புறம் 'பானட்'டைத் திறந்தார். ''இந்த வண்டியை வாங்கி என்ன பிரயோஜனம்? வண்டிக்கு இன்ஜின் இல்லையே?'' என்றார்.

பிறகு வண்டியின் பின் பக்கம் போய் 'டிக்கி'யைத் திறந்தபோது அங்கு என்ஜின் இருக்கக் கண்டார். அப்பொழுது அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டுச் சொன்னார்: ''மலிவாக இந்த வண்டி கிடைத்தால் வாங்கலாம். ஓர் இன்ஜின் 'ஸ்பேர்'க் கிடைக்கிறது. அதை முன் பக்கம் பொருத்தி ஓட்டலாம்!''

ஆதாரம்: அம்ருத். நகல்: பி.ஆர்.ராஜாராம்.

உறுமும் நாயைச் சமையல்காரன் மாணிக்கம் அதட்டி அடக்கும் குரல் கேட்டது. பௌர்ணமி கழிந்து மூன்று நாட்களாகிவிட்டதால் சந்திரன், ஆகாயத்தில் மூளியாகத் திரிந்து கொண்டிருந்தது. கீழே தோட்டத்தின் ஒரு மூலையிலிருந்த குடிசைக்குள்ளிருந்து குழந்தையின் அழுகுரல் கேட்டது. அது தோட்டக்காரனின் குடிசை.

''சனியன், சனியன். தூங்கவே விடாது. சதா குடிவெறிதான்.'' தோட்டக்காரனின் மனைவி கறுப்பாயியின் குரல் தெளிவாகக் கேட்டது. சற்று நேரத்தில் குழந்தையின் அழுகுரல் நின்றுவிட்டது. கறுப்பாயி குழந்தைக்குப் பால் கொடுக்கிறாள். அதனால்தான் அதன் அழுகை நின்றுவிட்டது.

கறுப்பாயி, குழந்தைக்குப் பால் கொடுப்பதை அடிக்கடி இலகவதி பார்த்திருக்கிறாள். கறுப்பாயிக்கு உடலை மீறிய மார்புகள். அதனால்தான் குழந்தை அவளிடம் அதிகமாகப் பால் குடித்துக் கொழுத்துப் போயிருந்தது. குழந்தைக்குக் கறுப்பாயி பாலூட்டுவதே அழகாயிருக்கும். பெண்மையின் பூரணத்துவம் அந்தப் பணியில்தான் இருக்கிறது என்று பறைசாற்றுவது போலிருக்கும், அவள் பாலூட்டும் விதம். அந்தக் காட்சி, இலகவதியின் நெஞ்சில் குறுகுறுப்பை உண்டாக்கும். அதைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுவாள்.

தோட்டக்காரனின் குழந்தை கரிக்கட்டையா யிருந்தாலும் அதனுடைய பிஞ்சுக் கைகளும், கால்களும் கவர்ச்சியாயிருந்தன. பல முறை அந்தக் குழந்தையை வாங்கித் இலகவதி கொஞ்சி யிருக்கிறாள். அவளுடைய ஆர்வத்தின் இறுக்கம் தாங்காமல் குழந்தை அழும்போது இலகவதிக்கு வெறி ஏறிவிடும். அழ அழ அதை முத்தமிட்டுக் கன்னங்களைக் கன்ன வைத்துவிடுவாள்.

''அம்மாவுக்குக் குழந்தை பிறந்தால், தங்க நிறத்தில் இருக்கும். இந்தக் கறுப்புக் குழந்தையையே இப்படிக் கொஞ்சுகிறீர்களே?

அழகான உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால்....?''

கறுப்பாயி அடிக்கடி இப்படிச் சொல்வதுண்டு. அப்போதெல்லாம் இலகவதியிடமிருந்து ஓர் ஏக்கப் பெருமூச்சு வரும். கறுப்பாகவோ, சிவப்பாகவோ அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தால் போதும். அந்த ஏக்கம் அவளைப் பாடாய்ப் படுத்துகிறது. நாய்களையும், பூனைகளையும் எத்தனை நாளைக்குத்தான் கொஞ்சிக் கொண்டிருப்பது.

ஒவ்வொரு பிரசவத்தின்போதும் தாயிடமிருந்து குழந்தையை வெளியே எடுக்கும் போது, அதனுடைய அழுகுரலைக் கேட்கும் போது, டாக்டர் இலகவதியின் மனம் தவிக்கும். பிஞ்சுக் குழந்தையின் ஸ்பரிசத்தினால் ஒருவித உணர்வு உடலில் பரவிச் சிலிர்க்க வைக்கும். குழந்தையின் முதல் அழுகுரலைக் கேட்டுப் பூரிப்படையும் தாயின் ஆர்வமிக்க பார்வையும், குழந்தையை மார்போடு அணைத்துப் பாலூட்டும் காட்சியும் இலகவதியின் மனப் புண்ணைக் கிள்ளிக் கிளறிவிடும். தாயின் மார்பில் ஒட்டிக் கொண்டு குழந்தை பாலைச் சப்புக்கொட்டும் ஒலியைக் கேட்கும் போதெல்லாம் இலகவதியின் மார்பில் இனம் புரியாத உணர்வு தோன்றிக் கிளர்ச்சியூட்டும்.

அந்த ஆஸ்பத்திரியில் பிள்ளைப் பேற்றுப் பிரிவுக்கு அவள்தான் தலைமை மருத்துவர். மருத்துவக் கல்லூரியில் அந்தத் துறையின் பேராசிரியரும் அவள்தான். டாக்டர் இலகவதி என்றால் நூற்றுக்கணக்கான தாய்மார்கள் அவளை நினைந்து மானசீகமாக வணங்கும் அளவுக்கு அந்த வட்டாரத்தில் பெரும் புகழும், அபிமானமும் பெற்றவள். தினமும் எத்தனையோ . வயிறுகளிலிருந்து விளைச்சலை அறுவடை செய்யும் அந்தப் புகழ்பெற்ற டாக்டரின் வயிற்றில் இன்னும் ஒரு வித்துக்கூட முளைவிடவில்லை. எவ்வளவு பரிதாபம்! சில வேளைகளில் மருத்துவத் தொழிலையே விட்டு விடலாமா என்றுகூட நினைப்பாள். அவள் பார்க்கும் ஒவ்வொரு பிரசவத்தின் போதும் அவளிடம் தோன்றும் ஏக்கமும், மற்றத் தாய்மார்கள் மீது எழும் பொறாமையும் அவளைப் பெரிதும் பாதித்தன. பிரசவ வேதனையை விடக் கொடியதாயிருந்தன.

ஒருநாள் ஆஸ்பத்திரியில் சந்தானத்தோடு பேசிக் கொண்டிருந்தபோது சொன்னாள்:

''பொழுது போவதே கஷ்டமாக இருக்கிறது. ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குப் போகவே பிடிக்கவில்லை.''

''உங்களுக்குப் பொழுது போவதில் என்ன சங்கடம்? வீட்டில் எவ்வளவோ வைத்திருக்கிறீர்களே, விதம் விதமான நாய்கள், பூனைகள், ரேடியோகிராம், டேப்-ரிகார்டர்...''

''அவை மட்டும் இருந்து விட்டால் போதுமா?''

அவளுடைய ஆற்றாமையை உணர்ந்து கொண்ட சந்தானம், ''குழந்தைகள் இருந்தால் ஒரு நொடியில் பொழுது கழிந்துவிடும்'' என்றான்.

இலகவதி ஒரு பெருமூச்சு விட்டாள். ''அதற்கெல்லாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும்'' என்றாள்.

''என்னைத் தத்து எடுத்துக் கொள்ளுங்களேன்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான் சந்தானம்.

இலகவதி சற்றுத் திகைப்புடன் அவனை உற்றுப் பார்த்தாள். அவன் குழந்தைத்தனமாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

குழந்தைக்காக ஏங்கும் ஒரு பெண்ணின் தவிப்பின் கொடுமையை அவன் உணரவில்லையோ?

அவனுடைய களையான முகத்தையும் கவர்ச்சியான கண்களையும், சிறு குழந்தையைப் போல் சிரிப்பதையும் கண் கொட்டாமல் பார்த்தாள். அவனைப் போல் ஓர் அழகான குழந்தை தனக்குப் பிறந்திருந்தால்...?

அந்தக் கற்பனையின் இனிமையால் அவளுள்ளே உணர்ச்சிப்பெருக்கெடுத்தது. அவனை ஒரு குழந்தையைப் போல் வாரி எடுத்துக் கொஞ்ச வேண்டும் என்னும் வெறி மனத்தில் கொந்தளித்தது.


உண்மையிலேயே அவனை ஒரு குழந்தையாகத்தானா அவள் மனம் பாவிக்கிறது? அவனும் அவளை ஒரு தாயாகவா, நினைத்துப் பழகுகிறான்? அவனுடைய பார்வையும், பேச்சும், பழக்கமும் அந்தப் புனித உணர்வையா காட்டின?

சில சந்தர்ப்பங்களில் அவனுடைய பார்வை புடவை சரிந்து விழுந்தபோது அவளுடைய வாளிப்பான அங்கங்களில் பட்டு ஆழப் பதிந்ததை அவள் கவனித்திருக்கிறாள். அந்தப் பார்வையின் அர்த்தம்தான் என்ன? தற்செயலாகப் பதியும் சாதாரணப் பார்வையாக அதை நினைத்துக் கொள்ளவும் அவளால் இயலவில்லை. ஒருவேளை, குழந்தைக்காக ஏங்கும் பெண்மையின் பலவீனத்தைச் சாதகமாக்கிக் கொள்ள நினைக்கும் ஆண்மையின் பேராசையாயிருக்குமோ?...

பெண்களுக்கே இயல்பான சந்தேக எண்ணம்தான் அவளை அப்படிச் சந்தேகிக்கத் தூண்டியதோ என்னவோ? ஆப்பரேஷன் தியேட்டர்களிலும், நோயாளிகளைச் சோதிக்கும்போதும் பலமுறை அவளைத் தீண்டியிருக்கிறான். தொழில் முறையில் ஏற்படும் தவிர்க்க முடியாத ஸ்பரிசத்தினால் அவள் கிளர்ச்சியடையா விட்டாலும் அவனுடைய நிலைமை என்ன என்பதை அவள் உணர முடியவில்லை.

அன்று மாலையில் உணர்ச்சி வசப்பட்டு நிகழ்ந்து விட்ட சம்பவம் அவளுக்கு உண்மையைப் பலப்படுத்தினாலும், அதைப் பற்றிய நினைவு அவள் மனத்தில் கசப்பை மூட்டவில்லை.

அன்று மாலை இலகவதி ஆப்பரேஷன் தியேட்டரை விட்டு வெளியே வந்தபோது சந்தானமும் அவளைத் தொடர்ந்து வந்தான். அவளுடைய தனி அறைக்குள் இருவரும் சென்றதும் அவள் தன்னுடைய வெள்ளைக் கோட்டுப் பைக்குள் கையை விட்டுத் துழாவினாள். அவளுடைய முகத்தில் களைப்பும், மிகுந்த சோர்வும் தெரிந்தன. வியர்வைத் துளிகள் நெற்றியில் முத்து முத்தாக நின்றன. இரண்டு மணி நேரமாகத் தியேட்டருக்குள்ளிருந்து ஒரு சங்கடமான சிஸேரியன் ஆப்பரேஷன் செய்த களைப்பு!



"ஏன் ஸார்! இங்கே ஒரு பிள்ளையார் கோயில் இருந்ததில்லையோ.....?"
"இருந்தது; பாதசாரிகளுக்கு இடைஞ்சலாக இருந்ததால் அதை இடித்தாகி விட்டது!"

"என்ன டாக்டர் வேண்டும்?" — சந்தானம் கேட்டான்.

"கர்சிப்" என்று சொல்லிக் கொண்டே மற்றப் பைகளில் தேடினாள்.

"நான் தரட்டுமா?" என்று சந்தானம் கேட்டான்.

"இருக்கா?" என்று கேட்டுக் கொண்டே கையை நீட்டினாள். எம்ப்ராய்டரி போட்ட அழகான கைக்குட்டையை அவளிடம் கொடுத்தான். அதை வாங்கி நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். மின்சார விசிறியின் விசையை அழுத்தினான் சந்தானம். காற்றுப் பட்டதும் நிலகவதியிடம் சிறிது தெம்பு தோன்றியது. அறையின் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கண்ணாடியின் முன் நின்றவாறு வெள்ளைக் கோட்டைக் களைந்தாள். விலகிய சேலையைச் சரி செய்து மீண்டும் மார்பு மீது போட்ட போது அவளுடைய கண்கள் கண்ணாடியில் தெரிந்த சந்தானத்தைப் பார்த்தன. அவன் பார்க்கிறான் என்ற உணர்வு அவளிடம் நாணத்தை உண்டாக்கியது. கலைந்திருந்த முடியை விரல்களினால் கோதிவிடக் கையை உயரே தூக்கியபோது மீண்டும் ஒரு முறை மார்புச் சேலை விலகியது. பரபரப்புடன் சேலையைச் சரிசெய்துகொண்டு திரும்பினாள். சந்தானம் அவசரம் அவசரமாகப் பார்வையை வேறு திசையில் செலுத்தி எங்கோ பார்ப்பதாகப் பாசாங்கு செய்ததைக் கண்டு கொண்டாள். மின்சார விசிறிக்கு அடியிலிருந்த சோபாவில் சாய்ந்தாள்.

வெளியே வராந்தாவில் பேச்சுக் குரல் கேட்டது.

"டாக்டரம்மா இல்லையென்றால் ரொம்பச் சங்கடப்பட்டிருக்கும். சிக்கலான ஆப்பரேஷன் இல்லையா? தாய்க்கும் குழந்தைக்கும் ஆபத்து இல்லாமல் காப்பாற்றி விட்டார்கள்!" "இதுமாதிரி நூற்றுக்கணக்கான பிரசவங்களைப் பார்த்துவிட்டார்கள். டாக்டரம்மாவுக்குக் கைராசி உண்டு. எந்தச் சிக்கலான பிரசவத்தையும் சமாளித்து விடுவார்கள்."

"தங்கமான குணம். எப்போதும் சிரித்த முகம்தான்... எத்தனை குழந்தைகள்?"

"அந்த யோகம்தான் டாக்டரம்மாவுக்கு இல்லை. ஊருக்கெல்லாம் பிரசவம் பார்க்கிறார்கள். ஆனால் கடவுள், அவர்களை மலடாகப் படைத்து விட்டார். ஐயோ பாவம்."

வெளி வராந்தாவில் நர்ஸ் யாருடனோ பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட நிலகவதியின் மனம் குமுறி அழுதது. "ஐயோ, நான் மலடு இல்லை. அவர்தான்... அவர்தான்..." என்று வாய் விட்டு வராந்தாவில் போய் நின்றுகொண்டு அலற வேண்டும் என்னும் வெறி தோன்றியது. தன்னுள்ளே தோன்றிய உணர்வுகளின் தீவிரம் தாங்காமல் அவள் உடல் நடுங்கியது.

அவளுடைய முகத்தில் தோன்றிய உணர்ச்சிக் கொந்தளிப்புகளைக் கண்டு சந்தானம் துணுக்குற்றான். பரிதாபத்தோடு அவளைப் பார்த்தான். பிறர் தன்னைப் பரிதாபத்தோடு பார்க்கிறார்கள் என்னும் உணர்வு அவளை வதைத்தது. தாங்க முடியாத மன வேதனையால் கண்களை மூடிக் கிடந்தாள். நெஞ்சில் நிரம்பிய உணர்வுகளால் அவளுடைய மார்பு விம்மித் தணிந்து கொண்டிருந்தது. அவளைச் சற்று நேரம் கண் கொட்டாமல் பார்த்தான்.

அவளுடைய அழகையும் திறமையையும் நினைந்து வியந்து கொண்டிருந்தான்.

குழந்தை இல்லாதது இவளுக்கு ஒரு குறையா? அழகும் குணமும் மிகுந்த திறமையும் கொடுக்காத நிறைவையா ஒரு குழந்தை கொடுத்துவிடப் போகிறது? குழந்தை பிறந்திருந்தால் இவ்வளவு அழகோடு கட்டுக் குலையாமல் இவளால் இருக்க முடியுமா?...

சந்தானத்தின் கண்கள் கள்ளத்தனமாக அவள் மேனி முழுதும் மேய்ந்தன. அவளிடமிருந்து வந்த விம்மல் ஒலியைக் கேட்டுத் திடுக்கிட்டான். நிலகவதியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கன்னத்தை நனைத்துக்கொண்டிருந்தது. சந்தானம் பதறியவாறு எழுந்து அவள் பக்கத்தில் போய் நின்றுகொண்டு, "டாக்டர்... டாக்டர்...." என்றான்.


அவனுடைய கனிவான குரல் அவளை இன்னும் நெகிழ வைத்தது. கைகளால் முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள். அவளுடைய கைகளைப் பற்றி விலக்கி, "அழாதீர்கள் டாக்டர்...ப்ளீஸ் டோன்ட்...ப்ளீஸ்" என்று கூறிக் கொண்டே அவளைப் பரிவோடு பார்த்தான். அவனுடைய ஸ்பரிசமும், பரிவும் அவளை நிலைகுலைய வைத்தன. அவனுடைய உள்ளங்கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதாள். அந்த அழுகையில் அவள் மனத் துயரம் கரைந்து கொண்டிருந்தது. கண்ணீர் அவனுடைய கைகளை நனைத்தது. செய்வதறியாது திகைத்து நின்றான் சந்தானம். தன்னுடைய கைகளில் ஒரு குழந்

தையைப் போல் விழுந்து கிடக்கும் அவளுடைய கோலம் அவன் மனத்தை ஈர்த்தது. விரைந்து மேஜையின் மீது கிடந்த கைக்குட்டையை எடுத்தான். தனது கையில் பதிந்திருந்த அவளது முகத்தைத் தொட்டு நிமிர்த்தினான். கைக்குட்டையால் அவளுடைய கன்னத்தில் வடிந்திருந்த கண்ணீரைத் துடைத்தான். அவனுடைய செயலை மறுக்காமல் ஒரு குழந்தையைப் போல் குழைவோடு அவனைப் பார்த்தாள். நிமிர்ந்திருந்த அவளுடைய முகத்தைத் தன்னுடைய கையினால் ஏந்தியவாறு ஆவலோடு பார்த்தான். இருவருடைய பார்வையும் ஒன்றோடொன்று கலந்து குழம்பிக் கொண்டிருந்தது. அவளுடைய கன்னத்தைத் தீண்டிக் கொண்டிருந்த அவனுடைய கரம் நடுங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் அவளுக்கிருந்த தவிப்பையும், ஏக்கத்தையும், அந்தச் சூழ்நிலையில் அவளுடைய அறிவை, உணர்வு சூறையாடிக் கொண்டிருக்கும் வேகத்தையும் அவனால் நன்கு உணர முடிந்தது. ஒரு கணம் அவனும் தன் வசமிழந்தான். அவளுடைய தோள்களை இரு கைகளாலும் பற்றினான். ''டாக்டர் ...டாக்டர்...'' என்று அவன் காதுக்குள் முனகினாள்.

அவளுடைய குரல் எங்கோ பாதாளத்துக்குள்ளிருந்து கேட்பதுபோல் அவன் காதில் ஒலித்தது. அவளுடைய ஸ்பரிசமும், மெல்லிய இரகசியக் குரலும் அவனைப் பரவசமூட்டின. ஒரு கணம் மெய் மறந்து கண்களை மூடினாள். சந்தானத்தின் கரங்களின் அழுத்தத்தை உணர்ந்தாள். அந்த வேளையில் அவளுக்கு அப்படி ஓர் ஆறுதல் தேவையாகத்தானிருந்தது. அறிவை மயக்கிக் கொண்டிருந்த அந்தச் சூழ்நிலையிலிருந்து விடுபட்டுவிட வேண்டும் என்னும் உணர்வை இழந்து, அதிலேயே அமிழ்ந்து நிலைமறந்து விட வேண்டும் என்னும் பரிதாப நிலைக்கு உட்பட்டிருந்தாள்.

அப்போது வாசலில் காலடி ஓசை கேட்கவும் சந்தானம் பதறித் துள்ளி விலகினான். அவளும் தன்னைச் சமாளித்துக் கொண்டாள். பணியாள் இரண்டு கோப்பை தேநீருடன் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான். தேநீர்க் கோப்பைகளை மேஜையின் மீது வைத்து விட்டு அவன் வெளியேறிய பிறகு அவர்கள் இருவரும் சற்று நேரம் பேச முடியாமல் தவித்தார்கள். குற்ற உணர்வு இருவரையும் அழுத்திக் கொண்டிருந்தது. அவள் தலையை நிமிர்த்தமுடியாமல் மேஜையின் மேலிருந்த தேநீர்க் கோப்பைகளை வெறிக்கப் பார்த்தாள். சந்தானந்தான் முதலில் பேசினான்.

''டீயைச் சாப்பிடுங்கள். களைப்புத் தீரும்'' என்றான். அவள் பேசாமல் உட்கார்ந்திருந்தாள். ஒரு கோப்பையை எடுத்து அவளிடம் நீட்டினான். அவனை நிமிர்ந்து பார்க்காமலேயே தேநீரை வாங்கினாள். அவனைப் பார்க்கும் தெம்பு அவளுக்கு இல்லை. தேநீரைப் பருகி விட்டுக் கோப்பையை மேஜையின் மீது வைத்தாள். அவளிடமிருந்து காலிக் கோப்பையை வாங்கிக் கொண்டே, ''உங்களுக்கு இன்று மனசு சரியில்லை'' என்றான். அவனை நிமிர்ந்து பார்த்தாள். ஒரு கணத்துக்கு மேல் அவனுடைய கண்களைச் சந்திக்கும் திராணி இல்லாமல் பார்வையைத் திருப்பினாள். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.



அவளிடம் கைக்குட்டையை நீட்டினான். ''கண்ணீரை நன்றாகத் துடைத்துக்கொள்ளுங்கள்'' என்றான். அவள் கைக்குட்டையை வாங்கி முகத்தைத் துடைத்துக்கொண்டாள்.

அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். எதுவும் நடக்காததைப் போல் அவன் பேசிய விதமும் அவளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. இருந்தாலும் அவள் இன்னும் நிதானம் அடையவில்லை.

ஆண்கள் எவ்வளவு விரைவில் சமாளித்துக் கொள்கிறார்கள்... எதுவும் நடந்ததாகவே அவன் காட்டிக் கொள்ளாமல், சர்வ சாதாரணமாகப் பழகும் விதத்தை நினைத்து வியந்தாள்.

''ஐயாம் ஸாரி சந்தானம்... எப்படியோ அழுகை வந்து விட்டது.... ஐயாம் வெரி ஸாரி'' என்றாள் இலகவதி, தரையைப் பார்த்துக்கொண்டே.

அன்று மாலையில் நடந்துவிட்ட உணர்ச்சிப் போராட்டங்களையும், ஸ்பரிச உணர்வுகளையும் எண்ணியபோது இலகவதியின் உடலும் உள்ளமும் பரபரத்தன.

அவன் என்ன நினைத்திருப்பான்?... ஒரு கணத்தில் நிதானத்தை இழந்துவிட்டானே! அவன் தவறாக எண்ணியிருப்பானோ? அவனுடைய பார்வையில் அவள் கண்ட உணர்வுகளுக்கு அர்த்தம் என்ன?... அவனுடைய தோள்களைப் பற்றிய அவளுடைய துணிச்சலுக்கு என்ன பொருள்?....

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு தன்னுடைய உள்ளத்தில் ஏற்பட்ட சலனத்தை நினைத்துச் சஞ்சலமடைந்தாள். ஒருவிதப் பாசமும், தவிப்பும் அவளை அவனோடு அந்தரங்கத்தில் பிணைத்து வைத்திருப்பது போல் உணர்ந்தாள். அந்த உறவில் தாய்மையின் தூய்மை இருப்பதாக எவ்வளவுதான் கற்பனை செய்து பார்த்துக்கொண்டாலும் அது ஒரு பாசாங்கு தான் என்னும் எண்ணம் மேலோங்கியது. தன்மீதே அவளுக்கு நம்பிக்கை இல்லை.

படுக்கை அறையிலிருந்து போன் மணி அடிக்கவே சிந்தனையிலிருந்து விடுபட்டாள். எழுந்து சென்று போனை எடுக்கமனமில்லாமல் வராந்தா சோபாவில் சாய்ந்து கிடந்தாள். தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட கோபாலன் போனை எடுத்துப் பேசினார். சிறிது நேரத்தில் வராந்தாவுக்கு வந்தார்.

''இன்னும் தூங்காமலா இருக்கிறாய்?... ஏதோ அவசரமாம். ஆஸ்பத்திரியில் கூப்பிடுகிறார்கள்'' என்றார்.

''யார்?''

''யாரோ... குரல் அடையாளம் தெரியவில்லை. வழக்கமாக அந்தக் கோழைப் பயல் சந்தானம்தான் பதறிப்போய்க் கூப்பிடுவான். இது வேறு யாரோ?'' என்றார் கோபாலன். அவருடைய பேச்சு இலகவதிக்கு எரிச்சலை மூட்டியது. வெறுப்பினால் முகத்தைச் சுளித்தாள். ''என்னால் இப்போது போக முடியாது. அங்கு வேறு யாராவது அஸிஸ்டெண்ட் இருந்தால் பார்த்துக் கொள்ளட்டும்'' என்றாள் சலிப்புடன்..

கோபாலன் சிறிது நேரம் வியப்புடன் நின்றார். பிறகு போனை நோக்கி நடந்தார். சற்று நேரத்துக்குப் பிறகு வராந்தாவுக்கு வந்தார்.

''ராமசாமியாம். உன்னுடைய அஸிஸ்டெண்டாம். உனக்கு உடம்பு சரியில்லையென்று சொல்லிவிட்டேன்'' என்று கூறிக் கொண்டே இலகவதியின் பக்கத்தில் அமர்ந்தார் கோபாலன்.

''பன்னிரண்டு மணியாகி விட்டதே. ஏன் தூங்கவில்லை?'' என்று கனிவோடு கேட்டார் கோபாலன். அவள் பதில் சொல்லாமல் கிடந்தாள். பரிவோடு அவளது புஜங்களை வருடினார். அவள் கட்டையாகக் கிடந்தாள்.

எந்த நேரமானாலும் ஆஸ்பத்திரியிலிருந்து அவசரம் என்று போனில் கூப்பிட்டால் தயங்காமல் செல்லும் இலகவதி, அன்று போக மறுத்துவிட்டதை நினைத்து வியந்தார்.

போய்த்தான் என்ன கண்டாள்? அகால வேளைகளில் எல்லாம் அக்கறையோடு சென்று மற்றவர்களுக்குப் பிரசவம் பார்த்துப் பார்த்து அவள் கண்டதென்ன? தனக்கென்று ஒருகுழந்தையைப் பெறும் வாய்ப்பில்லையே..?

கோபாலன் மிகுந்த வாஞ்சையோடு அவளை அணைத்துக் கொண்டார். அவள் எவ்வித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் கட்டையாகக் கிடந்தாள்.

''உன் உடம்புக்கு என்ன?'' – கோபாலன் கேட்டார். அவள் பதில் சொல்லவில்லை. இந்த மாதிரி அடிக்கடி அவள் சோம்பிக் கிடந்ததை அவர் கவனித்திருக்கிறார். அவளுடைய உற்சாகத்துக்காக அந்தப் பெரிய வீட்டில் அவர் எதையெல்லாமோ வாங்கிப் போட்டிருந்தார். அவளுடைய கண் கலங்கி விடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை காட்டினார். அவருக்குத் தெரியும், அவளுடைய மன வேதனையின் காரணம். ஆனால் அது அவரால் தீர்த்து வைக்க முடியாத ஒரு குறையாக இருக்கும்போது அவரால் என்ன செய்ய முடியும்?

கொஞ்ச காலத்துக்கு முன் இருவரும் பரிசோதனை செய்து கொண்டபோது, பரிசோதனையின் முடிவைத் தெரிவித்த குறிப்பை அவரிடம் இலகவதி காட்டினாள். அவருடைய உடலில்தான் கோளாறு என்பதையும் அவரால் அவளுக்குக் குழந்தையைக் கொடுக்க முடியாது என்பதையும் அவர் தெரிந்து கொண்டபோது அவர் பட்ட வேதனையையும் உள்ளுக்குள்ளேயே அனுபவித்துக்கொண்ட அவமானத்தையும் இலகவதி உணர்ந்தாளோ இல்லையோ?

என்னதான் இலகவதியின் வாழ்க்கையில் வசதியையும் இன்பத்தையும் கொடுத்தாலும் ஒரு பெண்ணுக்கு இயல்பாகத் தேவைப்படும் தாய்மை நிறைவைத் தம்மால் கொடுக்க முடியவில்லையே என்று மறுகினார். திருமணமாகி இரண்டு ஆண்டுகள் வரை மண வாழ்க்கையின் இன்ப லாகிரியில் திளைத்த இலகவதி, குழந்தை விரைவில் உண்டாகிவிடக் கூடாது என்று கவலைப்பட்டாள் ஆனால் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை தோன்றியபோது வைத்தியப் பரிசோதனையின் முடிவு அவளை அதிர வைத்தது. கோபாலன் இந்த நினைவில் படு வேதனையை உணராமல் அவரிடம் அவ

காட்டும் அலட்சியமும், உள்ளார்ந்த வெறுப்பும் அவரை வதைத்தன.

தம்மிடம் பேசப் பிடிக்காதவளாகக் கிடந்த நிலகவதியிடம் மீண்டும் பேச மனமின்றி அவளை வராந்தாவின் சோபாவிலேயே விட்டு விட்டுப் படுக்கை அறைக்குள் நுழைந்தார் கோபாலன்.

சற்று நேரம் நிலகவதி கண்களை மூடிக் கிடந்தாள். அவளையும் மீறிக் கண்ணீர் கசிந்தது. நினைவில் மீண்டும் அன்று மாலை நடைபெற்ற சம்பவம் வட்டமிட்டது.

தான் செய்துவிட்ட காரியத்தை நினைத்து மனம் கூசினாள். ஆனால் அது அவளுடைய சக்தியையும் மீறி நடைபெற்றுவிட்ட ஒரு சம்பவம். உளப் பூர்வமாக அதற்கு அவள் பொறுப்பல்லவென்றாலும் அந்த அளவுக்கு அறிவை இழந்து உணர்ச்சியின் பிடிக்குள் சிக்கிவிட்ட தன்னுடைய இயலாத்தனத்தை நினைத்து மறுகினாள்.

என்னதான் பழியைச் சந்தானத்தின் மீது சுமத்த நினைத்தாலும் அவனுடைய கைகள் அவளைத் தீண்டியபோது, அவளுடைய உடலும் உள்ளமும் மறுப்புக் காட்டாமல் அவனுடைய செயலுக்கு இசைந்திருந்ததை அவளால் மறுக்க முடியவில்லை. அந்தக் கணத்தில் அவனுடைய குரலும், ஸ்பரிசமும் அவளை ஆட்கொண்டது உண்மைதானே. யதார்த்த நிலையை ஒதுக்கிவிட்டு வேறு விதமாகக் கற்பனை செய்வதிலோ அல்லது பழியை மாற்றான் மீது சுமத்துவதிலோ என்ன திருப்தியை அடைந்துவிட முடியும்? மனம் ஆன, தானே பழிக்கு உடந்தையாக இருந்துவிட்டு மனம் ஆகாத சந்தானத்தின் மீது பழியைச் சுமத்த முயலும் தன்னுடைய மனத்தின் விதண்டாவாதத்தை நினைத்துச் சிரித்தாள்.

ஒரு நாள் கோபாலன் சொன்னாரே, 'நாம் இருவரும் விவாகரத்துச் செய்துகொள்வோம், எனக்கு ஆட்சேபனை இல்லை' என்று. அப்படி விவாகரத்து ஏற்பட்டிருந்தால் சந்தானத்தின் இன்றைய செயலுக்கு யார் மீதும் பழி போட வேண்டிய அவசியம் இல்லையோ?...

இந்த மனம் தேடிப் பிடிப்பதெல்லாம் செய்யும் காரியத்துக்குச் சட்ட பூர்வமான அனுமதி ஒன்றை மட்டும்தான்.

கோபாலன் படுக்கையில் புரளும் சத்தம் கேட்டது. சன்னல் வழியாகப் பார்த்தாள். படுக்கை அறையின் மங்கிய விளக்கொளியில் கோபாலன் கட்டிலில் குப்புற விழுந்து கிடப்பது தெரிந்தது. விவாகரத்தைப் பற்றி அவர் சொன்னது இப்போது நினைவில் வந்து தூண்டியது. அன்று அவர் சொன்னபோது கேட்கக் கூடாததைக் கேட்டு விட்டது போல் பதறினாள். 'இதென்ன பேச்சு' என்று கடிந்து கொண்டாள். ஆனால் இன்று அந்தப் பேச்சைப் பற்றிய நினைவு ஆறுதலாயிருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் வீட்டுப் பசு கத்திக் கொண்டிருந்தது.

"அடங்குவதற்குக் கூப்பிடுகிறது" என்றான் தோட்டக்காரன்.

"மிருக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் ஊசி போட்டால் சரியாகி விடும்" என்றார் கோபாலன். முதலில் நிலகவதிக்கு அவருடைய பேச்சுப் புரியவில்லை. பிறகு செயற்கை முறையில் பசுவுக்குச் சூல் உண்டாக்குவதைத் தான் அப்படிச் சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டாள்.

அன்று இரவு கோபாலனும் நிலகவதியும் படுக்கை அறையில் இருந்தபோது பசுவுக்கு ஊசி போடுவதைப் பற்றிப் பேசினார்கள். அப்பொழுது கோபாலன் "இது மாதிரி மனிதர்களுக்குச் செய்கிறார்களா?" என்று கேட்டார்.

"அமெரிக்காவில் செய்கிறார்கள். ஆனால் அமெரிக்க நீதிமன்றம் அந்தக் குழந்தையை அந்தப் பெண்ணின் கணவனுக்குப் பிறந்ததாக ஏற்க மறுக்கிறது. அந்தக் குழந்தையை 'இல்லெஜிடிமேட்' என்றுதான் நீதிமன்றம் கருதுகிறது" என்றாள் நிலகவதி.

"அந்தக் குழந்தையை ஏற்பதில் என்ன குற்றம்? குழந்தை உண்டாவதற்கான வழியை அனுமதிக்கும்போது அதை 'லெஜிடிமேட்'டாக ஏற்பதில் என்ன தவறு? ஒரு குழந்தை தன்னுடையதா இல்லையா என்று கூறும் உரிமை கணவனுக்குத்தான் இருக்க வேண்டுமே தவிர, நீதிமன்றத்துக்கு இதில் என்ன அருகதை இருக்கிறது?"

"சட்ட நீதியில் திருப்தி அடையும் மனம் தர்ம நீதியில் திருப்தியடைய மறுக்கிறதே."

"அந்த அளவுக்கு நம்முடைய மனங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சட்ட நீதி என்பதெல்லாம் நம்முடைய மனத்தை நாமே



தகுந்த ஆள்!

நாட்டுக்கு உழைத்த நல்லோருள் ஒருவராகிய சர் சி. சங்கரன் நாயர் ஒரு காலத்தில் வைசிராயின் நிர்வாகக் குழுவில் அங்கத்தினராயிருந்தார். அரசினருடன் நெருங்கிப் பழகப் பழக அவர்கள் மீது அவருக்கு ஆத்திரமும் வெறுப்பும் உண்டாயின. முடிவில் தம் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். அப்போது லார்ட் செம்ஸ்போர்ட் வைசிராயாக இருந்தார். அவர் சர் நாயரை நோக்கி, "நீர் வகித்து வந்த பதவியில் யாரை நியமிக்கலாம்? இது சம்பந்தமாக எனக்கு ஆலோசனை கூற முடியுமா?" என்று வினவினார்.

சற்றுத் தொலைவில் ஒரு சேவகன் நின்று கொண்டிருந்தான். சர் நாயர் அவனைச் சுட்டிக் காட்டி, "அதோ, அங்கு நிற்கிறானே ராம்பிரசாத், அவனை நியமிக்கலாம்" என்றார்.

லார்ட் செம்ஸ்போர்ட் வியப்புடன், "என்ன, அவனையா?" என்றார்.

"ஆம், அவனுக்கென்ன? உயரமாயிருக்கிறான். அழகாயிருக்கிறான். தன் வேலைக்குரிய உடையை நன்றாக உடுத்திக் கொள்கிறான். நீர் என்ன சொல்கிறீரோ, அதற்கெல்லாம் 'ஆமாம்' போடுவான். மொத்தத்தில் பார்த்தால், 'சிறந்த' நிர்வாகக் குழு அங்கத்தினராக விளங்குவான், அவன்" என்றார்.

வைசிராய் வாய் திறக்கவில்லை.

ஆதாரம்: பவன்ஸ் ஜர்னல்

தகவல்: சபரி

ஏமாற்றிக் கொள்ளப் பயன்படுவதுதான். இலகா! நான் ஒன்று சொல்லட்டுமா? உனக்குக் குழந்தை பிறப்பதற்காக நாம் இருவரும் விவாகரத்துச் செய்து கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை."

இலகவதி பதற்றத்துடன் கோபாலனைப் பார்த்தாள். அருவருப்பான சொல்லைக் கேட்டுவிட்டதைப் போல் முகத்தைச் சுளித்தாள். "சீச்சீ, இதென்ன பேச்சு?" என்றாள்.

"இல்லை இலகா! நான் மனப்பூர்வமாகத்தான் சொல்கிறேன். குழந்தை ஏக்கம் உன்னை மிகவும் பாதித்து விட்டது."

"இப்படியெல்லாம் பேசாதீர்கள்" என்று கடிந்து அவருடைய பேச்சை அடக்கினாள்.

இது இரண்டு ஆண்டுகளுக்குமுன்பு நடைபெற்ற சம்பவம். இப்போது அந்தப் பேச்சிலும், அது பற்றிய சிந்தனையிலும் நியாயம் இருப்பதுபோல் இலகவதிக்குத் தோன்றியது.

சந்தானத்தைப் பற்றிய விஷயம் சட்டரீதியாகக் குற்றம். ஆனால் அவள் விவாகரத்து செய்து கொண்டால் குற்றம் நீங்கிவிடும். அவனைக் கணவனாக ஏற்பதைச் சட்டம் தடுக்காது. ஆனால் தர்மம்....?

அந்தத் தர்மம் எல்லாம் பழைய காலத்தைச் சேர்ந்தவை. இப்போது ஒத்து வருமா? திருமணம் என்பது பிரிக்க முடியாத ஒரு புனிதத் தொடர்பு என்று அன்றைய மக்கள் எண்ணியதால் அன்றைய தர்மம் மற்ற குறைபாடுகளை எவ்விதத்திலும் நிவர்த்தி செய்து கொள்ள அனுமதித்தது. ஆனால் இன்றையச் சட்டம் திருமணத்தை ஓர் ஒப்பந்தமாகக் கருதிவிட்ட பிறகு, இன்று ஓர் ஆணும் பெண்ணும் எப்படியும் நடந்து கொள்ளலாம் ; அதற்குச் சட்டபூர்வமான அனுமதி மட்டும் இருந்து விட்டால் போதும். தர்மத்தைப் பற்றி அக்கறை இல்லை.

மறு நாள் காலையில் இலகவதி ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டபோது உற்சாகத்தோடு இருந்தாள். வழக்கத்துக்கு மாறாகச் சற்று அதிகப்படியாக அலங்காரம் செய்து கொள்வதில் முனைந்தாள். உள்ளத்திலிருந்த பரபரப்பு, செயலிலும் தெரிந்தது. இதையெல்லாம் கவனியாதவரைப் போலிருந்தார் கோபாலன். வழக்கம் போல் அவளைக் காரில் அழைத்துச் சென்று ஆஸ்பத்திரியில் இறக்கி விட்டுச் சென்றார்.

ஆஸ்பத்திரிக்குள் நுழையும்பொழுதே இலகவதி பரபரப்படைந்திருந்தாள். சந்தானத்தைத் தேடிக் கண்கள் அலைந்தன. தன்னுடைய வார்டை நோக்கிச் சென்றபோது, வராந்தாவில் எதிரே சந்தானம் வந்ததைக் கண்டதும் நெஞ்சுக்குள் ஒருவித உணர்வு புரண்டது. அவன் உற்சாகத்துடன் அவளை நோக்கி வந்தான். அவனிடம் என்ன பேசுவதென்றே தோன்றாமல் தவித்தாள்.

"டாக்டர்! என்னைக் கோயமுத்தூருக்கு மாற்றிவிட்டார்கள்" என்றான் சந்தானம்.

"இஸ் இட்...?" — வியப்புடன் அவனைப் பார்த்தாள் இலகவதி.

"இன்று காலையில்தான் சூப்பிரண்டெண்டெண்ட், டிரான்ஸ்பர் ஆர்டரைக் கொடுத்தார்" என்றான்.

"கோயமுத்தூரில் சீஃப் கைனகாலஜிஸ்ட் வேகன்ஸி இருக்கிறதாம். என்னைக்கூட அதற்குப் போகிறாயா என்று சூப்பிரண்டெண்டெண்ட் கேட்டார்" என்றாள் இலகவதி.

"ஓ... நீங்களும் கோயமுத்தூருக்கு வந்து விடுங்களேன்" என்றான் சந்தானம் உற்சாகத்துடன். அவனுடைய கண்களில் தெரிந்த ஆர்வத்தையும், சொற்களிலிருந்த பரபரப்பையும் இலகவதியால் புரிந்துகொள்ள முடிந்தது. அவளுடைய முகத்தில் மந்தகாசமான புன்னகை தவழ்ந்தது. இருவர் பார்வையும் ஒரு கணம் முட்டி மோதித் திணறிக் கொண்டன.

"ஓ.பி.டியூட்டி முடிந்து நீ போவதற்குமுன் என்னைப் பார்த்துவிட்டுப் போ" என்றாள்.

"சரி" என்று தலையை ஆட்டிவிட்டுச் சென்றான், சந்தானம்.

இலகவதியின் உள்ளம் அலைபாய்ந்தது. உடல் பரபரத்தது. சந்தானம் கோயமுத்தூருக்குப் போகிறான் என்னும் செய்தி அவளிடம் புத்துணர்வை ஊட்டியிருந்தது. தன்னுடைய அறைக்குள் சென்று, லெட்டர் பேப்பரை எடுத்து, கோயமுத்தூர் ஆஸ்பத்திரிக்குச் சென்று தான் பணியாற்றத் தயார் என்று எழுதினாள். அதை உடனே சூப்பிரண்டெண்டிடம் சேர்ப்பித்துவிட நினைத்தாள். பிறகு, அதை வேலை முடிந்து வீட்டுக்குப் போகும் போது கொடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்து, அந்தத் தாளை மடித்து மேஜையின் மீது வைத்து, காற்றில் பறந்துவிடாமலிருக்க ஒரு பாரத்தையும் அதன் மீது வைத்தாள்.

அன்று ஆஸ்பத்திரியில் அவளால் நிதானமாகப் பணி புரிய முடியவில்லை. மனம் பல நினைவுகளால் புரண்டு கொண்டிருந்தது.

சந்தானத்திடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்பதைப் பற்றிய சிந்தனையில் இருந்தாள்.

"'சந்தானம்! நானும் உன்னோடு கோயமுத்தூருக்கு வந்துவிடப் போகிறேன்' என்று சொல்லவா....."

"அப்படி வேண்டாம். பின்னே எப்படிப் பேச்சைத் தொடங்குவது ?

"'நான் விவாகரத்துப் பண்ணப் போகிறேன்' என்று சொன்னால்...

"அப்படிப் பளிச்சென்று சொல்லக்கூடாது. 'சந்தானம், நேற்று நாம் இருவருமே நார்மலில் இல்லை. ஆனால் உன்னை.... உன்னைப் புரிந்து கொண்டேன்' என்று ஆரம்பிக்க வேண்டும்.

"'ஆனால், உன்னைப்போல் நான் சுதந்திரமானவளல்ல.... சீக்கிரம் விடுதலை பெற்று விடுவேன். சட்டபூர்வமாக விவாகரத்து வாங்குவதில் சங்கடமில்லை' என்று மெதுவாகச் சொல்ல வேண்டும்."

அவனைச் சந்திக்கும்போது எப்படிப் பேச வேண்டும், எப்படி இருவரும் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதை மனத்திலேயே ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தாள். அவனோடு கோயமுத்தூரில் இருப்பதாக மனம் கற்பனை செய்வதில் முனைந்தது. அந்தக் கற்பனைச் சுகத்தில் நேரத்தைக் கடத்தினாள்.

நேரம் ஆக, ஆக அவளுடைய பரபரப்பு அதிகரித்தது.

மத்தியானம் பன்னிரண்டரை மணிக்குத் தன்னுடைய அறைக்குள் நுழைந்த இலகவதி, பேஸினில் அவசரம் அவசரமாக முகத்தைச் சோப்பினால் கழுவினாள். கண்ணாடி முன்னால் நின்று கலைந்திருந்த அலங்காரங்களைச் சரி செய்தாள். சோபாவில் அமர்ந்தாள். அந்த இடத்தில் முந்திய தினம் நடந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டாள். சந்தானம் தீண்டிய தோள்களில் உணர்வு குறுகுறுத்தது; உடல் சிலிர்த்தது. அவனை உடனே காண வேண்டும் என்னும் தவிப்பு வெறியாகவே மாறியது. இருப்புக் கொள்ளாமல் சோபாவிலிருந்து எழுந்து அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள். அடிக்கடி பெருமூச்சு சீறிக் கொண்டிருந்தது.

பக்கத்து அறைக்குள் நாலைந்து பேர் சிரித்துப் பேசிக் கொண்டு நுழையும் சத்தம் கேட்டது. அந்த அறை, டாக்டர்கள் ஓய்வெடுத்துக் கொள்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

"கன்கிராஜுலேஷன்ஸ்... கல்யாணத்துக்கு முன்பே எங்களுக்கு விருந்து கொடுத்து விட வேண்டும்."

"அதெப்படி? எல்லாரும் கல்யாணத்துக்கு வாருங்கள். அங்கேதான் விருந்து."— இது சந்தானத்தின் குரல்.

இலகவதி பரபரப்படைந்தாள். நெஞ்சு படபடவென்று துடித்தது.

"பெண் ஏற்கனவே உறவா அல்லது...."— யாரோ கேட்டார்கள்.

"மாமா பெண்தான். ஒரு வருஷத்துக்கு முன்பே முடிவாகிவிட்டது."

"ஒரு வருஷமாய் ஏன் தள்ளிப் போட்டாய்?"

"கொஞ்ச நாட்கள் சுதந்திரமா இருப்போமே என்றுதான்" என்று கூறிச் சிரித்தான் சந்தானம்.

இலகவதி சோர்ந்து போய்ச் சோபாவில் விழுந்தாள். கண்கள் இருளுவதுபோல் இருந்தன. பக்கத்து அறையில் சந்தானத்தைக் கேலி செய்து கொண்டிருந்தார்கள். சந்தானமும் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தான்.

"ஹனிமூனுக்கு எங்கே?"

"ஊட்டிக்குப் போகலாம் என்றிருக்கிறேன்."

"கோயமுத்தூரில் வீடு பார்க்க வேண்டாமா?"

"பார்க்கச் சொல்லி மாமாவுக்குக் கடிதம் எழுதிவிட்டேன்."

"பலே ஆளய்யா நீ. இன்று காலையில் தான் கோயமுத்தூர் டிரான்ஸ்பர் ஆர்டரே வந்தது. உடனே வீடு பார்க்கச் சொல்லிக் கடிதம் போட்டுவிட்டாய்."

"சின்ன வீடாகப் பார்க்கச் சொல்லு. அப்பொழுதுதான் நெருக்கமாக இருக்க முடியும்."

"சேச்சே, பெரிய பங்களாவாகப் பாரப்பா. அப்போதுதான் வீட்டுக்குள் ஓட்டப் பாடிக் கொண்டு ஓடி ஆட முடியும்."

பதிலுக்குச் சந்தானம் சிரித்தது இலகவதிக்கு நன்றாகக் கேட்டது. சற்று நேரத்தில் பக்கத்து அறையிலிருந்து எல்லாரும் வெளியேறும் சத்தம் கேட்டது. இன்னும் சிறிது நேரத்தில் சந்தானம், இலகவதியின் அறைக்கு வந்து விடுவான். இனி அவன் வந்து ஆகப் போவதென்ன?....

இலகவதி அவசரமாக எழுந்தாள். அவன் வருவதற்குள் போய்விட வேண்டும் என்று நினைத்தாள். அவன் கோயமுத்தூருக்குச் செல்லச் சம்மதம் தெரிவித்து எழுதிய கடிதம் மேஜையின் மீதிருந்ததைக் கண்டாள். அதை எடுத்துக் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் போட்டாள். கைப் பையை எடுத்துக் கொண்டு வாசலை நோக்கி நடந்தாள். அப்போது சந்தானம் உள்ளே நுழைந்தான்.

"எக்ஸ்க்யூஸ் மீ டாக்டர்! கொஞ்சம் நேரமாகிவிட்டது. நண்பர்கள் மறித்துக் கொண்டார்கள்" என்று கூறிக் கொண்டே வந்தான். அவனைக் கண்டதும் இலகவதிக்குப் பேசத் தோன்றவில்லை.

"என்னுடைய கல்யாண அழைப்பிதழ். இருச்சியில்தான். நீங்கள் கட்டாயம் வர வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே அழைப்பிதழை நீட்டினான் சந்தானம். பதில் ஏதும் சொல்லாமல் அதை வாங்கிக் கொண்டாள். அவள் உற்சாகமற்று ஊமையாக நிற்பதைக் கண்டு சந்தானம் திகைத்தான். முந்தின நாள் அந்த அறையில் நடைபெற்ற சம்பவம் அவன் நினைவில் வந்து அவனுக்குத் துணிச்சலை ஊட்டியது.

"நான் நாளையே கோயமுத்தூருக்குப் போகிறேன். நீங்களும் அங்கேயே டிரான்ஸ்பர் வாங்கிக் கொண்டு வந்து விடுங்களேன்" என்றான். ஆவலோடு அவளைப் பார்த்தான்.



பிரசித்தி பெற்ற வங்க நாவலாசிரியர் விமல் மித்ராவை ஒருவர் கேட்டார்: "நீங்கள் எப்படி எந்த வயதிலிருந்து எழுத ஆரம்பித்தீர்கள்?"

கிடைத்த பதில்: "நான் சிறுவனாக இருந்த பொழுது அப்பாவிடம் 'எழுதப் போகிறேன்' என்றேன். 'சும்மா உட்கார்' என்றார். பள்ளியில் படித்தபோது, ஆசிரியரைக் கேட்டேன், 'எழுதட்டுமா' என்று. 'சும்மா உட்கார்' என்றார். பெரியவனாகி வேலைக்குப் போனேன். அங்கு போய் மேலதிகாரியை 'நான் எழுதட்டுமா?' என்று கேட்டேன். 'சும்மா உட்கார்' என்றார். கல்யாணம் ஆன பின் மனைவியிடம் கேட்டேன். 'சும்மா இருங்கள்' என்றாள். குழந்தைகள் பிறந்தார்கள். அவர்கள் வளர்ந்ததும் கேட்டேன். "அப்பா! சும்மா இருங்கள்!" என்றார்கள். என் வாழ்க்கையில் யாரும் எழுதச் சொல்லவே யில்லை. இவையெல்லாம் சேர்ந்துதான் என்னை ஊக்குவித்தன. என் மனத்தில் இருப்பதை எழுதித்தான் ஆக வேண்டும் என்று உற்சாகப்படுத்தி எழுத வைத்தன!"

ஆதாரம்: அம்ருத் - தகவல்: பி.ஆர்.ராஜாராம்.

அவனுடைய பார்வையும், பேச்சும் அவளைப் பொசுக்கிக் கொண்டிருப்பதாக உணர்ந்தாள்.

'கோயமுத்தூருக்கு நான் இனி எதற்கு? என்னை என்னவென்று நினைத்தான்?.... ராஸ்கல்....'

இலகவதி கோபத்தை உள்ளூற அடக்கிக் கொண்டாள்.

''நான் அந்த யோசனையைக் கைவிட்டு விட்டேன்.''

''ஏன் டாக்டர்... கோயமுத்தூர் பிடிக்க வில்லையா உங்களுக்கு?'' — வியப்புடனும், சற்றுப் பதற்றத்துடனும் கேட்டான் சந்தானம். அவனுடைய குரலில் தொனித்த ஏமாற்றத்தை உணர்ந்தாள். அந்த இடத்தை விட்டும், அவனுடைய பார்வையிலிருந்தும் விலகிச் சென்றுவிடத் துடித்தாள்.

''ஆல்ரைட், மிஸ்டர் சந்தானம்! எனக்கு அவசர வேலை இருக்கிறது'' என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினாள். சந்தானம் திகைத்துப் போய் நின்றான்.

இலகவதி வீட்டுக்குத் திரும்பும்போது, களத்தில் எல்லாவற்றையும் இழந்து அவமானப்பட்டுத் திரும்பும் போர்வீரனைப்போல் சோர்ந்து போயிருந்தாள்.

அன்று இரவு பத்து மணி ஆகியும் கோபாலன் வீடு திரும்பவில்லை. இலகவதி மாடி வராந்தாவில் உட்கார்ந்திருந்தாள். அவள் உள்ளத்தில் ஏமாற்றமும், வெறுப்பும், கோபமும் குமைந்து கொண்டிருந்தன.

''நீங்களும் கோயமுத்தூருக்கு வந்துவிடுங்களேன்.........''

எவ்வளவு துணிச்சலோடு கேட்டான். அவன் கேட்கும்படியாகத்தானே முந்தின நாள் அந்தச் சம்பவம் நடைபெற்றது. அவன் கேட்டதில் என்ன தப்பு? சட்டபூர்வமான அனுமதி அவனுக்குக் கிடைப்பதற்கு முன்பே அவனோடு பழகியதால்தானே அவன் துணிந்து இன்று கோயமுத்தூருக்குக் கூப்பிட்டான்? தர்ம நீதியைத் தவிர வேறு எந்தச் சட்டம் அவன் அப்படிக் கூப்பிடுவதைத் தடுக்க முடியும்?

எவ்வளவு மட்டமாக அவன் என்னைப் பற்றி எடை போட்டிருந்தால், அப்படிக் கேட்டிருப்பான். இப்படி அவமானப்படும்படியாக எனக்கு என்ன ஆகிவிட்டது....

கோபாலனின் முகம் நினைவில் வட்டமிட்டது. எவ்வளவு பெருந்தன்மையுடன் அன்று சொன்னார்: ''நாம் இருவரும் விவாகரத்து செய்து கொள்வோம்.....''

அவர் மட்டும் இல்லையென்றால் இலகவதியின் வாழ்க்கை இன்று எப்படி இருந்திருக்கும்?

மருத்துவக் கல்லூரியில் அவள் மூன்றாவது ஆண்டில் படித்துக் கொண்டிருந்தபோதுதான் அவர்கள் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது.

அப்போது கோபாலனின் மனைவி, மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் புற்றுநோய் சிகிச்சைக்காகப் படுத்திருந்தாள். அவளைக் கவனிக்க வந்த டாக்டர் சங்கருடன் இலகவதியும் மருத்துவக் கல்லூரி மாணவி என்ற முறையில் வந்து கொண்டிருந்தாள். அப்போது இலகவதியின் குடும்பம் மிகுந்த வறுமையில் உழன்று கொண்டிருந்தது. இலகவதியால் மருத்துவக் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்து படிக்க முடியாத நிலைகூட ஏற்பட்டுவிட்டது. அவளுடைய குடும்பத்தில் அவள் இரண்டாவது குழந்தை. அவளுடைய ஒரு தம்பி என்ஜினியரிங் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். இன்னொரு தம்பி, ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தான். அவளுடைய அக்காளுக்கு வயது இருபத்தேழாகியும் கல்யாணம் ஆகவில்லை. அவளுடைய அப்பா பக்கவாதத்தினால் படுக்கையில் கிடந்தார். இவ்வளவு பிரச்னைகளையும் தீர்க்க முடியாமல் குடும்பம் திணறிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் கோபாலனின் மனைவி இறந்துவிடவே, டாக்டர் சங்கரின் முயற்சியால் இலகவதியை இரண்டாவது முறையாகக் கோபாலன் மணந்துகொண்டார். கோபாலனின் கரிய பருத்த உருவத்துக்கும் இலகவதியின் தந்தக் கடைசல் அழகுக்கும் பொருத்தமில்லை. என்றாலும் தன்னுடைய குடும்பத்தின் பொருளாதார நிலையை உத்தேசித்துச் செல்வந்தரான கோபாலனை மணக்கத் இலகவதி சம்மதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்தத் திருமணத்தின் மூலமாகத் இலகவதியின் அக்காவுக்கு நல்ல இடத்தில் திருமணம் நடந்தேறியது. தம்பிகள் இருவரும் படித்துப் பட்டம் பெற்றுப் பெரிய பதவிகளில் இருக்க முடிந்தது. இலகவதி, டாக்டராகப் பதவி பெற்றுப் பேரும் புகழும் அடைய முடிந்தது. அந்தச் சமயத்தில் கோபாலன் இல்லையென்றால், அவளுடைய குடும்பம் சீரழிந்து சிதறிப் போயிருக்கும்.

அப்போது கோபாலனின் பணத்துக்காகத் தான் அவரை மணக்க இசைந்தாள் இலகவதி.

புவனேசுவரிக்குப் புதிய ஆலயம்

சென்னையில் அசோக்நகர் (கோடம்பாக்கம் புதூர்) நாள்தோறும் அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு பேட்டையாகும். அங்கு ஸ்ரீ புவனேசுவரி வழிபாட்டை வளர்த்து வரும் புதுக்கோட்டை ஸ்ரீ சாந்தாநந்த சுவாமிகளின் சங்கற்பப்படி அம்பிகைக்கு வேத ஆகம சாஸ்திரப்படி ஆலயம் நிர்மாணிக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. ஸ்ரீ மாதா புவனேசுவரியோடு, மகா கணபதி, வேல் முருகன், ராமபிரான், ஆஞ்சநேயர், நவக்கிரகம் ஆகிய மூர்த்திகளையும் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இது ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி ஆசாரியர்களின் ஆசி பெற்ற திட்டமாகும். அம்பிகைக்கு ஆலயம் அமைப்பது பெரிய பணி; அரிய பணி. இதில் ஆஸ்திகர் அனைவரும் கலந்து கொண்டு புண்ணியம் பெற வேணும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: காரியதரிசி, புவனேசுவரி மண்டலி, லலிதாபவன், ஏ-47, பத்தாவது அவின்யூ, அசோக் நகர், சென்னை—83.


மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்
ஓ ஓ பி நீலம் உடனடியாக முற்றிலும் கரைந்துவிடும் வெள்ளைத் துணிகள் ஒரே சீராக பால்போல் பளிச்சிடுகின்றன. உங்கள் சட்டைகள், புடவைகள், பெட்ஷீட்டுகள் மற்ற துணிகள் எதையும் வெள்ளை வெளேர் என்று ஆக்க மிகவும் சிக்கனமான வழி இது. நீலப்புள்ளி விழாது, மஞ்சள் திட்டு தெரியாது.
ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவுத் தயாரிப்பு. இந்தியாவின் மிக நவீன அல்டிராமரைன் தொழிற்சாலையில் உருவானது.
தயாரிப்பாளர்:
அல்டிராமரைன் & பிக்மென்ட்ஸ் லிமிடெட், அம்பத்தூர், சென்னை 53
OOB
BLUE
BEST ULTRAMARINE
MADE IN INDIA BY
ULTRAMARINE & PIGMENTS LTD.
UPL/6546

> லண்டனில் ஓடிக்கொண்டிருந்த 'ஃப்ளீட்' என்ற ஆறு இப்பொழுது சாக்கடையாகத் தரைக்கு அடியில் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த ஆற்றின் பெயரில் வந்ததுதான் பத்திரிகை அலுவலகங்கள் நிறைய உள்ள 'ஃப்ளீட்' தெரு. டிட்பிட்ஸ் -- பாலி

மணந்த பிறகு என்ன குறையைக் கண்டாள்? அவள் எதிர்பார்த்ததைவிட மண வாழ்க்கையில் எல்லாவிதத்திலும் திருப்தியை அடைந்தாள். பங்களாவும் காரும் போக வாழ்க்கையும் அவள் எதிர்பாராத அநுபவங்கள்தாம். ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கும் தவிப்புக்குக் கோபாலன் மீது காரணத்தைப் புகுத்தி அவரை வெறுப்பதில் என்ன நியாயத்தை உணர்ந்துவிட முடியும்? அதற்குக்கூட அவர் குறுக்கே நிற்க விரும்பாமல், "விவாகரத்து வேண்டுமானாலும் செய்து கொள்வோம்" என்று கூறும் அளவுக்கு அவளுக்காக விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மையை அவள் எண்ணிப் பார்த்தபொழுது மனம் நெகிழ்ந்தாள்.

உடலைப் பரிசோதனை செய்து பார்க்கப் போய்த்தானே அவர்மீது குறை காண்கிறாள். ஆனால், குறை அவளுடையதாயிருந்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும்.... இப்போது, அவரை அவள் ஒதுக்குவதைப் போல், அவர், அவளை ஒதுக்கிவிட நினைப்பாரா? அப்படி ஓர் ஈனத்தனமான செயலை அவர் கற்பனைகூடச் செய்ய மாட்டார். எவ்வளவு பரந்த மனமிருந்தால் விவாகரத்துக்கு மனப்பூர்வமாகச் சம்மதம் தெரிவித்திருக்க முடியும்? அவள்மீது அவர் கொண்டிருந்த அன்பையும், ஆசையையும், அவளுக்காக அவர் வாழ்ந்த விதத்தையும் கணக்கிடும் போது: அவர் விவாகரத்தைப் பற்றிச் சொன்னது எவ்வளவு பெரிய தியாகம். அவளைவிட்டு ஒரு நாள் பிரிந்திருந்தால்கூடத் துடித்துப் போய்விடுவாரே......

பக்கத்து அறையில் ப்ரிஜ் திறக்கப்படும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டாள். கோபாலன்தான் ப்ரிஜைத் திறந்தார். அவர் வீட்டுக்குள் வந்ததுகூடத் தெரியாத அளவுக்கு நினைவுச் சுழலில் ஆழ்ந்திருந்து விட்டாள். கார்ச் சத்தமோ, அவர் மாடிப்படி ஏறிவந்த சத்தமோ எதையுமே அவள் காதுகள் உணரவில்லையே. படுக்கையறையில் இலகவதியைக் காணாதவர் சன்னல் வழியாகப் பார்த்திருப்பார். தினமும் அவள் இப்படி வராந்தாவில் தனிமையில் மணிக்கணக்காகச் சிந்தனையில் மூழ்கியவாறு இருப்பதை அவர் அறிவார். இப்போது அவளைத் தொந்தரவு செய்ய மனமில்லாமல் வராந்தாவுக்கு வராமல் படுக்கை அறைக்குள்ளேயே இருந்து விட்டார்.

கண்ணாடி உரசும் சத்தம் கேட்டது. இலகவதி சன்னல் வழியாகப் பார்த்தாள். கோபாலன், ப்ரிஜிலிருந்து ஒரு பாட்டிலை எடுத்துக் கண்ணாடித் தம்ளரில் விஸ்கியையோ அல்லது பிராந்தியையோ ஊற்றிக் கொண்டிருந்தார். கொஞ்ச நாட்களாக அவருக்கு இந்தப் பழக்கம் வந்திருக்கிறது. அதன் காரணத்தையும் இலகவதி அறிவாள். அவர்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் பிளவை மது போதையிலும்தான் அவர் மறக்க முயன்று கொண்டிருந்தார். அதைக் குடித்துவிட்டால் எவ்விதக் கவலையும் இன்றி இரவு முழுதும் அவர் பிரேதமாகத் தூங்கிவிடுவார். அவள், அவரிடம் காட்டிய அலட்சியமும், வெறுப்பும் அவரை அவ்வளவு தூரம் பாதித்துவிட்டன.

இலகவதி பரபரப்புடன் எழுந்து படுக்கை அறைக்குள் சென்றாள். அப்போது கோபாலன் கட்டிலில் அமர்ந்தவாறு தம்ளரிலிருந்த பானத்தை உறிஞ்சத் தம்ளரை வாய்ப்பக்கம் கொண்டு போனார். இலகவதி விரைந்து அவருடைய கையைப் பற்றினாள். அவர் திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தார். அவள் மந்தகாசமாகச் சிரித்தாள். அவள் அப்படிச் சிரித்துப் பார்த்துப் பல நாட்களாகிவிட்டன.

"என்ன?"

"இதை ஏன் குடிக்கிறீர்கள்?"

"தூங்குவதற்கு."

"இது இல்லாமல் தூங்க முடியாதா?"

"முன்பெல்லாம் இது இல்லாமலே தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது நீ பக்கத்திலிருந்தாய்...." என்றார் கோபாலன். அவர் குரல் கரகரத்தது. இலகவதியின் கண்கள் கலங்கின. அவள் பற்றியிருந்த கையிலிருந்து தம்ளரை மறு கைக்கு மாற்றி, குடிக்க முனைந்தார். அந்தக் கையையும் அவள் பற்றித் தம்ளரைத் தன் கையில் வாங்கிக் கொண்டு அவருக்குப் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள்.

"நீயும் வேண்டுமானால் குடி" என்றார்.

"எனக்கு எதற்கு?"

"உன்னுடைய துக்கம் குறையும். தூக்கம் வரும்."

"குடிப்பது தவறில்லையா?"

"சட்டப்படி இல்லை."

"சட்டப்படி இல்லாவிட்டாலும்...."

"தர்மத்தை இப்போது யார் பார்க்கிறார்கள்? நீயும் குடிக்கலாம். உன் துக்கம் குறையும்."

"எனக்கு என்ன துக்கம்?"

"குழந்தை இல்லையே என்ற ஏக்கந்தான்."

"எனக்குக் குழந்தை இருக்கிறது."

"எங்கே?" என்று திகைப்புடன் கேட்டவாறு அவளை வியப்புடன் பார்த்தார் கோபாலன்.

"இதோ!" என்று அவருடைய நெஞ்சில் தன் கையை வைத்து அழுத்திக் காட்டிக் கொண்டு, அவருடைய மார்பில் சாய்ந்தாள் இலகவதி. அவருடைய கரங்கள் அவளைச் சுற்றி வளைத்து அணைக்கத் தொடங்கின. இலகவதி தன்னுடைய கையிலிருந்த கண்ணாடித் தம்ளரைப் பக்கத்து ஸ்டூல் மீதிருந்த பூச்செடி மீது கவிழ்த்துக் கொண்டிருந்தாள்.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

புதிய பார்லே மாரி பிஸ்கெட்டுடன்

காப்பியின் சுவையை அனுபவிப்பீர்



க்ளுகோ, மொனகோ
மற்றும் சுவைமிக்க இதர
பிஸ்கெட்டுகளின்
தயாரிப்பாளர்களான பார்லே
உங்களுக்கென பிரத்யேகமாக
வழங்குகின்றனர்—
காப்பியின் சுவைக்குச் சுவையூட்டும்—

பார்லே

மாரி

பிஸ்கெட்டுகள்

அருமையான ருசியுள்ளவை-:பாயில்-ஸீல்டு பேக்குகளில்

everest/1060g/PP tam